T. 1285.

பரம இச்சாஞான தீபிகை

எனும்

# காரிய சித்தாந்தம்

இது ஞானியார் ஸ்வீடன்பர்க்

லத்தீன் பாஷையில் எழுதிய

“வெளிப் படுத்தின விசேஷ விளக்கம்”

எனும் நூலிலிருந்து எடுத்த

பரமஇச்சாசத்தி, பரமஞானசத்தி

எனும் நூலிலிருந்து

முன் “நியு ரிபார்மர்” பத்திராதிபரான

D. கோபால செட்டியாரால்

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு

அவரால்

லண்டன் ஸ்வீடன்பர்க் சொசையடியாருக்காக

சென்னையில்

பிரசுரம் செய்யப்பட்டது.

சென்னை

பி. ஆர். ராம அய்யர் அண்டு கம்பெனியார்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

All Rights Reserved] 1928 [விலை ரூபாய் ஒன்று.

*Published by*

D. GOPAUL CHETTY

*Madras.*

# முகவுரை.

ஸ்வீடன் தேசத்தில் திருவருள் பெற்று அரும்பெறல் அனுபூதிமானாகிய ஸ்வீடன்பர்க் என்பவர் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தனர். அவர் ஈசுவர விசாரணையில் வைராக்கிய முடையவராய் ஞானக் கண் திறக்கப்பெற்று அரனருளால் உலகத்தில் இதுகாறும் வெளியிடப்படாத அநேக தெய்வ உண்மைகளை உலகினர் அறிந்து உய்யும்பொருட்டு திருவாய் மலர்ந்தருளினர். அவைகள் உலகினர் அதிசயக்கத்தக்கதாயிருக்கின்றன. அவரிட கொள்கைகளெல்லாம் சைவ சித்தாந்தத்தை தழுவியே நிற்கின்றன. அவர் இயற்றிய பல தத்துவ நூல்களில் இச் சாஸ்திரமாகிய, பரம இரகசிய ஞானதீபிகை கீர்த்திபெற்ற ஒன்று. இந்நூலில் அவர் அனுக்கிரகம் செய்த தத்துவஞானத்தின் சங்கிரகம் அமைந்திருப்பதின்பொருட்டும், பூர்வீககால முதல் அத்தகைய ஞானத்தில் பாண்டித்தியம் பெற்று கீர்த்தி நிறைந்த நம் தேசத்திலும் கூட அறிந்திராத அநேக ஞான உண்மைகள் கூறியிருப்பதின் பொருட்டும், நம் இந்திய சகோதரர்களும் அதன் பயனை அடையும்பொருட்டும், முதலில் லத்தீன் பாஷையில் வரைந்துள்ள இந்நூலை தமிழில் மொழி பெயர்த்துள்ளேன். இந்நூலை கவனித்து வாசித்து அதன் உண்மைகளை அறிந்துகொண்டால் அதன் சிறப்பு நன்கு விளங்கும். உண்மைகள் யாவர் மாட்டுளதெனினும், அவரிடமிருந்து நாம் அறிதல் நமது கடமை.

கடவுளானவர் ஒருவரே. அவர் வெளியிட்ட வேதமும் ஒன்றே. ஒவ்வொரு சமயத்தாருக்கும் ஒவ்வொரு கடவுளும், ஒவ்வொரு வேதமும், இருப்பதாக நினைத்தல் தவறு. "பூர்வ வேதம்" என்று ஓர் வேதம், பூர்வத்தில், எகிப்து, பினிஷியா, சிரியா, பாபிலோன், இந்தியா முதலிய பல தேசங்களில் பரவியிருந்தது. மற்ற தேசத்தார் கடவுளை எதிர்த்து அடாது செய்து அவைகளை இழக்

தனர். இந்தியாவில் மட்டும் அது போக்கடிக்கப்படவில்லை. இழந்துபோன தேசத்தார்களுக்கு, அவரவர்கள் ஞான பரிமாணத்தை அனுசரித்து தெய்வீக வெளிபாடுகள் பின்னர் தோன்றின. அங்ஙனமாயினும், பூர்வீக எகிப்து தேசத்து சாஸ்திரங்களிலும், பூர்வ பிரிடேன் தேசத்து, பூர்வ கேல்திய தூரு மதத்திலும், யுதேயா தேசத்து "ஜோஹார்" எனும் வேதத்திலும், சிவஞான போதத்தின் சில உண்மைகள் காணப்படுகின்றன.

இந்நூலில் இறைவனிட இச்சா சத்தியையும், அவரிட ஞான சத்தியையும் குறித்து பேசப்படுகின்றன. இவ்விருவகை தெய்வீக சத்திகளைக் குறித்து நம்மிட இந்து சாஸ்திரங்களில் கூறப்பட்டிருப்பினும் அவைகளை இப்பெரியோராகிய ஸ்வீடன்பர்க் வியாக்கியானம் செய்து விவரித்தவாறு, நம் நூல்களில் காண்பதறிது.

பரமஇச்சா சத்தியை பேசுங்கால், ஸ்வீடன்பர்க் இந்நூலில் அன்பைக் குறித்த தன்னிட சித்தாந்தத்தை வெளியிடுகிறார். அச்சித்தாந்தமானது சுருங்கச் சொல்லில், அன்பு உயிரென்றும், உயிர் அன்பென்றும், கடவுள் அன்பென்றும், அன்பே கடவுளென்றும், அன்பானது சிருட்டிக்கப்பட்டதென்றும், உலகத்தில் சலனத்தை உண்டாக்கக் கூடியதென்றும், மனிதனுனவன் அன்பினிட அங்ககிரமத்தோடு நிர்மித்த சரீரமென்றும், ஏற்படுகிறது.

இந்த பிரதிஞ்ஞைகளின் உண்மை அன்பின் சுபாவத்தை அனுசரித்திருக்கிறது. அவைகளின் ஆழ்ந்த கருத்தை அறியும் பொருட்டு மேல் கூறியதில் சிலவற்றை யோசிப்போம். இந்நூலில் முதல் பிரிவில் அன்பானது மனிதனிட உயிரென்று கூறப்பட்டிருக்கிறது. இதன் கருத்தை வெளியிடல் இந்நூலின் சிறந்த எண்ணம். "அவன் என்னை நேசிக்கிறான்" "ராமன் அதை நேசிக்கிறான்" "நான் மனைவியை நேசிக்கிறேன்" என சொல்லுவதால் மனிதர்களுக்கு அன்பு என்னவென்று ஒருவாறு தெரிவதாகவே கொள்ளலாம். அன்பானது சர்வ வியாபகமானது. அது பிரபஞ்சத்தையே நேசிக்கக்கூடும். அப்படி உலகினர் அன்பு என்கிற பதத்தை உபயோகித்தாலும், அது என்னவென்று

யாருக்கும் தெரியாது என்று அவர் சொல்லுகிறார். ஆதற்குக் காரணம், அன்பின் சுபாவத்தை யோசிக்குங்கால், அதைப்பற்றி நாம் திட்டமான அபிப்பிராயம் கொள்ள முடியாதென்பதாயிருக் கிறது. நாம் அன்பை உணர்ச்சியாகவும், ஓர் கருத்தாகவும், ஊக்க மாகவும், மனோசலனமாகவும், மட்டும் அறிந்துகொள்ளுகிறோம். அதாவது அதை ஓர் குறிப்பிட்ட ஆசையின் நிலையாகமட்டும் அறி கிறோம். இவ்வித அபிப்பிராயம் அதை அறிந்துகொள்ளுதற்கு தடையாயிருக்கிறது. ஒருவனுக்கு, அன்பின் சுபாவத்தைப்பற்றி ஒரு திட்டமான அபிப்பிராய மில்லாவிட்டால், அது சூனிய மென்றும், சில புலன்களிலிருந்தும் அல்லது சம்பாஷணையி லிருந்தும் வரப்பட்டதென்றும், இம்மாதிரியாக, தன்னை அசைக்கிற ஏதோ ஒன்று என்றும் தீர்மானிக்கிறான். உலகினர் அன்பானது, நம்மைவிட்டு நிற்கும் ஓர் புறம்பான பொருள் என்று நினைக்கிறார் கள். இப்பெரியோர் அது இழுக்கென்றும், அது நம்மிலே இருக்கப் பட்ட ஒன்றென்றும், கூறுகிறார். அது மனிதனிட முழு சரீரத் திற்கும், எல்லா சிந்தைகளுக்கும் பொதுவான உயிரென்று சொல்லு கிறார். அதாவது மனிதனிடவும், அவன் சரீரத்தினிடவும், அவன் மனதினிடவும் அந்தரங்கமானதும் சர்வ வியாபகமானதுமான உயி ரென்கிறார். ஒருவன் அன்பின் ஆசைகளை நீக்கி, அதனால் உண்டா கும் பலனை யோசித்தால், அன்பு உயிரென்று அவனுக்கு தெரிய வரும். அன்பின் ஆசை நீங்கினபோது, நாம் ஒன்றையும் நினைக்க முடியாது. அது குளிர்பட்டால் சிந்தையும், பேச்சும், செயல்களும் சோர்வடைகின்றன. அது சூடுபட்டால், அவைகள் மறுபடியும் தீ மூட்டப்படுகின்றன.

மனிதனிட உயிர் அன்பு என்று ஒருவனுக்கு தெரியா விட்டால், அந்த உயிரானது இந்திரிய ஞானமென்றும், செயல் என்றும், சிந்தை என்றும் அவன் நினைப்பான். அம்மாதிரியாகவே, உலகத்தில் அநேக தத்துவ சாஸ்திரிகள் நியாயம் காட்டியிருக்கிறார் கள். ஸ்வீடன்பர்க் இவைகள் எல்லாம் கடந்து, சிந்தையின் சுபாவத்தை ஆழ்ந்து ஆலோசித்து முடிவு அல்லது நோக்கத்தினிட தத்துவ ஞானத்தை அடைந்து, முடிவு-காரண-காரியமெனும் ஓர்

சித்தாந்தத்தை விரித்துரைக்கலாயினர். அதற்கு அன்னுவய சாஸ்திரமென்று பெயரிடலாம். இந்திரிய ஞானமும், செய்கையும், சிந்தையும், மனிதனிட உயிராகாது. ஆனால் சிந்தையானது உயிரின் முதல் காரியசித்தி. இந்திரிய ஞானமும் செயலும் இரண்டாவது காரியசித்தி. சிந்தை என்று சொல்லியதால், அது அதிக உள்ளானதும் அதிக வெளியானதும் நிலையானதுமாயிருக்கிறது. முடிவுகளை பார்க்கும் மிகவும் அந்தரங்க சிந்தை உயிரின் உண்மையான முதல் காரியசித்தி. இங்கே காரியமென்றதால் காரணத்தையும் கவனித்து அதன் சம்பந்தத்தை யோசித்தல் வேண்டும். அவ்வித சம்பந்த சிம்பாஷணையால் தத்துவ சாஸ்திரிகளுக்குள் அநேக பேதங்கள் உண்டாயின. பல சமயங்களும் ஏற்பட்டன. காரியம் என்பதில் முடிவும், காரணமும் அடங்கியிருக்கிறது. ஆகையால் முடிவு - காரணம் - காரியம் போக்கை கவனிக்க வேண்டும். இதுதான் உலகத்தினிடவும், மனிதனிட உயிரினிடவும் போக்கு. ஒரு எண்ணத்தை செய்து முடிக்கவும் அல்லது ஓர் முடிவை அடையவும் செய்யும் ஓர் முயற்சியின் பலன் காரியம். அது வழி வகைகளின் தெரிவையும் உபயோகத்தையும் அகப்படுத்துகிறது. காரியமாயிருக்கிற பலனை விளைவிக்கிற முடிவை அடைய வழி வகைகளின் பொருந்துதலாய் அது இருக்கிறது. நாம் ஒன்றை செய்ய வேண்டுமானால், அப்பொருள் செய்யப்பட வழி வகைகளை நினைக்கிறோம். இதுதான் காரணம். செய்யப்பட்ட பொருள் காரியம். இவ்வகை தொழில் நம்மிட வாழ்விலும் பிரபஞ்சத்திலும் எக்காலமும் நடந்துகொண்டே யிருக்கிறது. ஆகையால் முடிவு-காரண-காரிய சித்தாந்தம் மிகவும் முக்கியமானது. அதை அனுசரித்துதான் பிரபஞ்ச சிருட்டியும் உண்டாகிறது.

உயிரானது அன்பென்று நாம் நினைத்தால், நாம் பின்னிட்டு அது எக்கருத்தில் என்றும், எப்படி அன்பானது ஒரு காரிய சித்தியை உண்டாக்குகிறது என்கிற விசாரணை ஆரம்பிக்கிறது. இதற்கு உத்திரம் அவர் நூல்களில் காணலாம். இது ஓர் உணர்தற்கரிய விஷயம்.

இந்திரிய ஞானமும் செயலும் எப்படி உயிரின் இரண்டாவது காரியசித்தி என்பதும் ஆழ்ந்த ஞானமுள்ளவர்களுக்குதான் வெளிபடும். இதுவும் இந்நூலிலே விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலில் முதல் இரண்டு பிரிவுகளை மட்டும் ஒருவன் நன்கு அறிந்தால் அநேக இரகசியங்கள் அறிந்ததாகும்.

அன்பானதை, அபிப்பிராயத்தில் அல்லாமல், உணர்ச்சியாக நாம் அறிந்திருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்துகொண்டு, அன்பின் சுபாவத்தைத் தெரிவிக்கும்பொருட்டு, பயிர் செழிப்பில் சூரியனிட சூட்டின் காரியத்தை, மனிதனிட முயர்ச்சிகளில் அன்பின் போக்குடன் ஸ்வீடன்பர்க் ஒப்பிடுகிறார். அவர் "அன்னுவயம்" என்று கூறுகிற சூட்டுக்கும் அன்புக்கும் உள்ள சம்பந்தத்தை இது ஏற்படுத்துகிறது. இந்த மூலதாரமான வழியாய் அவரிட "அன்னுவய சித்தாந்தத்தை" ஆரம்பிக்கிறார். கடைசியாக அவர் தத்துவ சித்தாந்தத்தில் மிகவும் பேர் பெற்ற "அன்னுவயவாதம்" என்பதை உலகினர் இதுவரையில் வெளியிடாதவாறு வெளிபடுத்துகின்றனர். முன் சொல்லிய முடிபு-காரண-காரிய போக்கைக் கொண்டு நீலகண்ட சிவாச்சாரியார் கூறியதும் அவர் விரிக்காமல் விட்டுவிட்டதுமான அபூர்வ பரிணாமத்தை உலகினர் நன்மைக்காக வெகு ஆச்சரியமான வழியில் வியாக்கியானம் செய்து விவரித்திருக்கின்றனர். இந்த இரண்டு சித்தாந்தங்களும் முடிவற்ற கடவுள் எப்படி உலகத்தை சிருட்டித்தார் அல்லது பிரபஞ்சமானது எப்படி அவரிடமிருந்து வந்தது என்கிற உணர்தர்க்கரிய விஷயங்களை தெளிவாய் விளக்குகின்றன. அவர் அவ்வாறு விளக்காவிட்டிருந்தால் அவ்விஷயங்களைக் குறித்து மனிதருக்கு மங்கலான அபிப்பிராயமே நின்றுபோயிருக்கும். ஆகையினால் பிரபஞ்சசிருட்டி விஷயம் இந்நூலில் சொல்லியபடி வேறு எங்கும் விவரமாய் காணமுடியாது.

இம்மாதிரியாகவே, கடவுள் எப்படி அன்பு என்றும், அன்பு என்பது எப்படி கடவுளாகிறதென்றும் வெகு தெளிவாக சொல்லுகிறார். இவ்வித பிரமேயங்கள் நம்மிட சாஸ்திரங்களிலிருந்தாலும் அவைகள் எங்கும் விரித்துச் சொல்லப்படவேயில்லை. திருமூலர்

அன்பே சிவமென்றார். அதை விவரித்து எழுதினவர் ஒருவருமில்லை.

இங்ஙனம் இப்பெரியோரின் ஒவ்வொரு சித்தாந்தத்தையும் விவரித்து கூறல் இம் முகவுரையில் முடியாத காரியம். ஆயினும் சில பிரமேயங்களை மாத்திரம் இவ்விடம் கூறுவாம். இந்நூலில், பரம இச்சாசத்தியாயிருக்கிற உயிரானது ஓர் உருவமென்றும், அந்த உருவம் உபயோகத்தின் உருவமென்றும் மனிதனும் சுவர்க்கலோகமும் அவ்வித உருவத்திலிருக்கின்றன வென்றும், எல்லா பொருள்களும் அவ்வித உருவத்துக்கு சாய்கின்றன வென்றும், மனிதன் எவ்வளவு தூரம் உபயோகத்தின் அன்பிலிருக்கிறானோ அவன் அவ்வளவு தூரம் இறைவனிலிருந்து அவனையும் அயலானையும் நேசித்து மனிதனாயிருக்கிறானென்றும், அப்படிக்கன்றி தன்னையும் உலகத்தையுமே நேசிப்பவர்கள் மனிதர்களல்லவென்றும், அவர்கள் கடவுளை அறியமாட்டார்களென்றும், அவர்கள் உன்மத்தர் என்றும், உபயோகத்தை நேசிப்பவர்களுக்கு சதாகால வாழ்வு உண்டென்றும், வேதத்தில் நேசித்தலென்பது உபயோகங்களைச்செய்தலென்றும் மிகவும் தெளிவு படுத்தியிருக்கிறார்.

சீனாய் மலையின்பேரிலும் திருவண்ணாமலையிலும் நெருப்பு ஸ்தம்பமாக இறைவன் நின்றதினால் ஏற்படும் தத்துவரகசியமாகிய அன்பு சூட்டை விளைவிக்கும் எனும் இரகசியம் இதில் விவரிக்கப் பட்டிருக்கிறது. மேலும் நம்பெரியோர்கள், யாருக்கும் வெளிவிடாமல் இரகசியமாய் வைத்திருக்கும் மூன்று சிதம்பர இரகசியங்களும் இந்நூலில் வெகு விவரத்துடன் முதல் முதல் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவைகள் மேல் நாட்டு நவீன சாஸ்திரங்களை (Science) அனுசரித்து அறிவுக்கு எட்டும்படி விரித்துரைக்கப் பட்டிருக்கின்றன. அவைகளை வாசித்தால், ஸ்வீடன்பர்க் சுவாமியார் இறைவன் அருளினாலேயே வெளியிட்டனர் என்று நமக்கு ஞானம் உதித்து அவரை குருவாக ஏற்றுக்கொள்ள மனம் தூண்டும். இந்நூலில் 79-வது பக்கம் முதல் 116 பக்கம் வரையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சிதம்பர இரகசியமாகிய, "இறைவன் இருதய கமலத்தில் வீற்றிருக்கிறா" ரென்பது, எந்த வேதத்திலும் ஆகமத்

திலும் உலகில் வேறு எந்த சாஸ்திரத்திலும் இவ்விதமாய் சொல்லப்படவில்லை என்பது எனது துணிபு.

மேலும் உலகத்தில் ஜனங்களுக்கு கடவுள் என்றாலும், ஆன்மா வென்றாலும் என்ன வென்று ஓர் திட்டமான அபிப்பிராயம் கிடையாது. புதைப்பொருளான அபிப்பிராயங்களைக் கொண்டு மயங்குகிறார்கள். தத்துவதிரயங்களைக் குறித்து இந்நூலில் கூறியவாறு வேறு எவ்விடத்திலும் காணலறிது. மேலும் பிரானிவர்க்க சாஸ்திரத்தை (Physiology) அனுசரித்து அவர் வெளிப்படுத்திய ஆன்மாவும் கடவுளும் சரீரமும் எப்படி வேலை செய்கின்றன என்று அவர் சொல்லும் விவரணங்கள் தெய்வீகமாயிருக்கின்றன.

மேலும், இந்நூலில் மனிதன் அன்பு ஞானத்தின் மூலமாய் பரிபக்குவமடையும் விதமும், அன்பையும் தருமத்தைப் பற்றியும், ஞானத்தையும் விசுவாசத்தைப் பற்றியும், இப்பெரியாரின் தருமத்தைக் குறித்து நூதன சித்தாந்தமும், மனிதன் உயிரோடிருக்கும் போதும் இறந்த பிறகும் அவன் நிலைமையும், கடவுளுடன் ஆன்மாவின் ஐக்கியத்தைப் பற்றியும், கடவுளானவர் தன்னிட தெய்வீக சந்திகளால் சுவர்க்கலோகத்திலும் உலகத்திலுமுள்ள எல்லா பொருள்களையும் இறுதியானவைகள் வரையில் சிலது உயிரோடிருக்கவும், சிலது இருக்கவும், சிலது நிலைக்கவும் உயிர்ப்பிக்கும் இரகசியமும், கடவுளானவர் கால இடவரைக்குட்படாமல் எப்படி சர்வ வியாபகமாய் இருக்கிறாரென்கிற இரகசியமும், இன்னும் அனேக இரகசியங்கள் வெகு தெளிவாய் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. சிருட்டியைக் குறித்து தேவர்கள் கொள்ளும் அபிப்பிராயம் அனுபந்தமாக இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதினாலும் நமது அறிவு வெளிச்சமடைகிறது.

இந்நூலில் கர்த்தர் என்று சொல்லிய இடங்களில் தெய்வசத்தி அதாவது சித்சத்தி என்று மட்டும் அருத்தம் கொள்ளுகிறது. வேறு ஒன்றுமில்லை. இப்புத்தகம் எழுதிய கிரந்த கர்த்தாவே அதற்கு அந்த அருத்தம் தானென்று இந்நூலில் 89-வது பக்கத்தில் கூறியிருக்கின்றனர்.

ஆகையினால், தத்துவ ஞானத்தை நாடும் ஒவ்வொருவரும் இந்நூலை வாசித்து, அதன் பயனை அடைந்து, நன்னெறியில் நின்று இறைவன் அருள் பெறுவார்களென்று எல்லாம் வல்ல பரமனைப் பிரார்த்திக்கிறேன்.

ராயப்பேட்டை
சென்னைப்பட்டணம்
1928-ஞு ஏப்பல்மீ 30வ

D. கோபால் செட்டி.

## முகவுரை குறிப்பு

இந்நூலில் ஓரத்திலுள்ள எண்கள்
ஸ்வீடன்பர்க் அகராதியில்
உபயோகப்படுத்தப்பட்ட உட்பிரிவுகளைக்
காட்டுகின்றன.

# விஷய அட்டவணை.

## பரம இச்சாசத்தி.

பக்கம்


| | | |
|---|---|---|
| I. | மனிதனிட அதே உயிராயிருந்தாலும், அன்பு என்னவென்று, உலகத்தில் கிரகிக்கப்படுகிறதில்லை. ... ... ... ... | 1 |
| II. | அவர் உயிராகவே இருப்பதாலும், மனிதர்களும் தேவர்களும் (உயிரை) ஏற்பவர்களாக மாத்திரம் இருப்பதாலும், கடவுள் மாத்திரம் அன்பாகவே இருக்கிறார். ... ... ... | 3 |
| III. | பரம இச்சாசத்தியாக இருக்கும் உயிர், ஓர் உருவமாக இருக்கிறது. ... ... | 4 |
| IV. | அந்த உருவம், தன்னிட முழு விசாலத்திலும் உபயோகத்தின் ஒரு வடிவமாக இருக்கிறது. .. | 5 |
| V. | முக்கியமாக, மனிதன் அவ்வித வடிவத்திலிருக்கிறான். ... ... ... ... | 8 |
| VI. | சாதாரணமாக, மனிதன் அவ்வித வடிவத்திலிருக்கிறான். ... ... ... | 14 |
| VII. | பரலோகம் அவ்வித உருவத்திருக்கிறது. ... | 17 |
| VIII. | உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் அம்மாதிரியான உருவத்திற்குச் சாய்கின்றன. ... | 18 |
| IX. | எத்தனை ஆசைகளிருக்கின்றனவோ, அவ்வளவு அநேக உபயோகங்களிருக்கின்றன. ... | 20 |
| X. | ஆசைகளின் வகுப்புகளும் இனங்களும், இனங்களின் வித்தியாசங்களும் அனந்தமிருக்கின்றன; உபயோகங்களின் சங்கதியும் அப்படியே. ... | 22 |

பக்கம்

XI. ஆசைகளிடவும் உபயோகங்களிடவும் மாற்றல்கள் இருக்கின்றன. ... ... ... 26

XII. ஒவ்வொரு உபயோகமும், சமுதாய உபயோகத்திலிருந்து தன்னிட உயிரை அடைகிறது. உபயோகத்தின், ஆவசியகமானதும், உபயோகமானதும், இன்பமானதுமான பொருள்கள், உபயோகத்தின் லக்ஷணத்துக்கும், அதன் ஆசையின் லக்ஷணத்துக்கும் தகுந்தபடி, அதிலிருந்து, பாய்கிறது. ... ... ... ... 29

XIII. உபயோகத்தின் அன்பில் ஒரு மனிதன் எவ்வளவு தூரம் இருக்கிறானோ அவ்வளவு தூரம் அவன் கர்த்தரிலிருந்து, அவ்வளவு தூரம் அவரையும் அயலானையும் நேசித்து, ஒரு மனிதனாயிருக்கிறான். ... ... ... ... 33

XIV. தங்களையே எல்லாப் பொருள்களுக்கும் மேலாயும், உலகத்தைத் தாங்களேயாகவும் நேசிக்கிறவர்கள் மனிதர்களு மல்ல, கடவுளில் அவர்களிருக்கிறது மில்லை. ... ... ... 40

XV. உபயோகமானது தன்னிட ஆசை அல்லது தொழிலாக இருந்தாலொழிய, ஒரு மனிதன் நல்ல ஸ்திதியிலுள்ள மனதுடைய வனல்ல. ... 42

XVI. ஒவ்வொரு மனிதனும் ஒரு ஆசையாயிருக்கிறான். ஆசைகளும், முன்னமே பிறந்தவர்கள் அல்லது அனந்த காலம் வரையில் பிறக்கப் போகிறவர்கள் நானாவிதமாயிருப்பதுபோல, நானாவிதமாயிருக்கின்றன. ... ... ... 46

XVII. உபயோகத்தின் பொருட்டு கொள்ளும் தன்னிட ஆசையை அனுசரித்து, மனிதனுக்குச் சதாகால வாழ்நாள் உண்டு. ... ... ... 49

XVIII. மனிதனிட சித்தம் அவனிட ஆசையா யிருக்கிறது. ... ... ... ... 55

பக்கம்

XIX. வேதத்தில், அன்பு வைத்தல் என்றால் உடயோகங்களைச் செய்தல் என்று அருத்தம் கொள்ளுகிறது. ... ... ... 59

XX. அன்பு சூட்டை உற்பத்தி செய்கிறது. ... 64

XXI. தானே உயிராயிருக்கிற பரம இச்சாசத்தி, சூட்டின் வழி வகையால், அவைகளில் உள்ள ஒவ்வொரு பொருளுடனும் எல்லா பொருள்களுடனும், ஞான ஜீவ உருவங்களை உற்பத்தி செய்கிறது. ... ... ... ... 67

---

## பரம ஞானசத்தி.

---

பக்கம்

I. சுவர்க்க லோகங்களிலுள்ள பரமஞானசத்தி, தேவர்கள் கண்களுக்கு முன்பாக ஒளிபோல் தோன்றுகிறது. ... ... ... 73

II. கடவுளானவர் மனிதனில் அவனிட சித்தமாயிருக்கிற அன்பின் *ஆசயத்தை சிருட்டித்து, பின்னிட்டு,அவனில் அதை உருவாக்கி, அவனிட புத்தியாயிருக்கிற ஞானத்தின் ஆசயத்தை அத்துடன் சேர்க்கிறார். ... ... ... 79

1. அன்புக்கும் ஞானத்துக்கும் ஆசயங்களாயிருக்கிற அந்த உருவங்கள் மனிதனில் முதலில் கருப்பையில் கர்ப்பம் தரிக்கும்போதும் ஆரம்பிக்கும்போதும் இருக்கின்றன. ... ... 81

2. அவைகளிலிருந்து, சரீரத்தின் சிரசிலிருந்து பாதத்தின் உள்ளங்கால் வரையிலும் கூட ஒவ்

---

* 79–வது பக்கத்தில் "ஆசயத்தை" என்பதற்குப் பதிலாக "ஆசையை" என்று தப்பிதமாய் இருக்கிறது.

பக்கம்

வொரு பாகமும் இடைவிடாமல் உற்பத்தி செய்யப்பட்டு, உண்டாக்கப்படுகிறது. ... 82

3. இந்த உற்பலங்கள் அன்னுவய சாஸ்திர சட்டங்கள்படி உண்டாகின்றன, ஆகையால், சரீரத்தின் உள்ளானதும் புறம்பானதுமான பாகங்கள் அன்னுவயமாயிருக்கின்றன. ... 84

III. அந்த இரண்டு ஆசயங்களுக்குள்ளே உட்பெருக்கின் மூலமாய், கருப்பப்பையில் கர்த்தரால் மனிதன் நிருமாணமாவதைப் பற்றி. .. ... 88

1. கருப்ப உற்பத்தியில் கடவுளானவர், தாயின் கருப்பையில் மனிதனோடு தானே சேர்ந்து, அவனை உருவாக்குகிறார். ... ... 89

2. ஒன்றில் அன்பினாலும், மற்றொன்றில் ஞானத்தினாலும், அந்த இரண்டு ஆசயங்களிலும், அவரே கூடுகிறார். ... ... ... 91

3. அன்பும் ஞானமும் ஒருமித்தும், பொருந்தியும், ஒவ்வொரு பொருளையும் எல்லாப் பொருள்களையும உருவாக்குகின்றன ; ஆகிலும், அந்தப் பொருள்களில் அவைகள் வேறு வேறானதாயிருக்கின்றன. ... ... ... 92

4. எல்லாவற்றிலும் தாழ்ந்தது அல்லாமல், அதிகமாய் உயர்ந்த இரண்டும் கடவுளின் வாசஸ்தானங்களா யிருக்கிறபடியினால், ஒன்று மற்றொன்றுக்குள்ளாக, மூன்று அந்தஸ்துகளாக இந்த ஆசயங்கள் வகை யறுக்கப்பட்டிருக்கின்றன. ... ... ... ... 95

5. ஒரு ஆசயமானது வரப்போகிற மனிதனிட சித்தத்துக்கும் மற்றது அவனிட புத்திக்குமாக இருக்கிறது ; என்றாலும், அவனிட சித்தத்திலிடவும் புத்தியினிடவும் எதுவாகிலும் அந்த நிருமாணத்தில் இருக்கிறதில்லை. ... 100

பக்கம்

6. கருவுக்கு அது தெரியாதாயினும், அதில் பிறப்பதற்கு முன் உயிரிருக்கிறது. ... 102

IV. கருப்பையில் மனிதன் நிருமாணத்துக்கும், அவனிட சீர்திருத்தத்துக்கும், பரிபக்குவத்துக்கும் இடையில் ஒரு சாயலும் ஒப்புமிருக்கிறது. ... 102

V. பிறந்த பிறகு மனிதனில் சித்தமானது அன்பின் ஆசயமாகிறது, புத்தியானது ஞானத்தின் ஆசயமாகிறது. ... ... ... ... 104

VI. இருதயம் சித்தத்தோடும், சுவாசாசயங்கள் புத்தியுடனும் அன்னுவய மிருக்கிறது. ... ... 107

VII. மனிதனில் சரீரத்தினிடவும் ஆன்மாவினிடவும் சேர்க்கையானது, அவனிட இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் சலனங்களின் பலனுயிருக்கிறது; அந்த சலனங்கள் நிற்கும்போது பிரிவு சம்பவிக்கிறது. ... ... ... 116

1. ஒரு மனிதனிட சூக்கும சரீரமுள்ள ஆன்மா சமமாய் ஒரு மனிதனுயிருக்கிறான். ... 117

2. அது சமமாய் ஒரு இருதயத்தையும், ஆதலால் ஒரு நாடியையும், அத்துடன் சுவாசாசயங்களையும், ஆகையினுல் சுவாசத்தையும் உடைத்தாயிருக்கிறது. ... ... ... 119

3. அதன் இருதயத்தின் துடிப்பும், அதன் சுவாசாசயங்களின் சுவாசமும், உலகத்திலுள்ள ஒரு மனிதனில் இருதயத்தின் துடிப்பிலும், சுவாசாசயங்களின் சுவாசத்திலும் பாய்கின்றன. ... ... ... ... 123

4. ஜடமாயிருக்கிற சரீரத்தின் உயிரானது, அந்த உட்பெருக்கினுல் நிலைத்து ஜீவிக்கிறது, அது நீக்கப்படுதலால், இம்மாதிரியாக பிரிவினையால் விட்டுப்போகிறது. ... ... 126

பக்கம்


5. மனிதன் அப்போது ஸ்தூலத்திலிருந்து பூரமார்த்தமாகிறான். ... ... ... 129

VIII. உலகத்தில் மனிதனைப் பிறந்திராத எந்த தேவனும் சூக்கும சரீர ஆன்மாவும் இருக்கிறதுமில்லை, இருக்கப்போகிறதுமில்லை. ... 133

1. மனிதனில் ஒரு தேவதா சம்பந்தமான மனது இருக்கிறது ... ... ... 134

2. அவ்விதமான மனது *மனிதனில் தவிர உருவாக்க முடியாது. ... ... ... 136

3. ஒரு தேவதா சம்பந்தமான மனதை மனிதனில் தவிர ஜனிப்பிக்க முடியாது, ஜனிப்பிக்கைகளினால் பெருக்கவும் முடியாது. ... 139

4. இதிலிருந்து மானிட சூக்கும சரீரிகளும் தேவர்களும், சதாகாலம் நிலைத்து உயிரோடிருக்கிற சக்தியை அடைகிறார்கள். ... 140

5. இதனாலும் கூட சூக்கும சரீரமுள்ளவர்களையும் தேவர்களையும் மானிட வர்க்கத்தோடு சேர்க்கப்பட்டு ஒன்றுபட செய்யலாம்; ஏனென்றால், சேர்க்கை யிருக்கிறது; சேர்க்கையிருக்குமிடத்தில் இடையிலுள்ள பொருளொன்று கூட இருக்க வேண்டும். ... ... 141

6. சிருஷ்டியின் நோக்கமாயிருந்த தேவதா சம்பந்தமான சுவர்க்கலோகம் வேறு எவ்வழியிலும் நிலைக்கவில்லை ... ... ... 141

IX. பரம இச்சாசக்தியானது தெய்வீக நன்மை, பரம ஞான சக்தியானது தெய்வீக உண்மை. ... 141

X. அன்பினிடவும் ஞானத்தினிடவும் ஐக்கியம் பரஸ்பரமாயிருக்கிறது. ... ... ... 144


136–வது பக்கத்தில் "மனதினில்" என்பதை "மனிதனில்" என்று வாசிக்கவும்.

பக்கம்

1. சித்தத்தின் உயிரே புத்தியின் உயிரோடு சேர்கிறது. ... ... ... ... 147

2. அந்த சேர்க்கையானது பரஸ்பரமானது; அதன் குணம் என்னமாயிருக்கிறது ... 148

3. புத்தியினிட உயிரானது சித்தத்தினிட உயிரைப் பரிசுத்தம் செய்கிறது; அது அதை பூர்ணமாக்கி, உன்னத ஸ்திதிக்கும் கூட கொண்டு வருகிறது. ... ... ... 149

4. சித்தத்தின் உயிரானது புத்தியின் உயிரோடு ஒவ்வொரு இயக்கத்திலும் ஒத்துஉழைக்கிறது. மற்ற பக்கத்தில், புத்தியின் உயிரானது சித்தத்தின் உயிரோடு ஒவ்வொரு இந்திரிய ஞானத்திலும் ஒத்து உழைக்கிறது. ... ... 153

5: அம்மாதிரியே குரலினிடவும் அதன் பேச்சினிடவும் சப்தத்தில். ... ... ... 155

6. நல்லவர்களோடும் தீயவர்களோடும், ஒரு வித்தியாசத்தோடு, விஷயம் அம்மாதிரியே யிருக்கிறது. ... ... ... ... 157

7. சித்தத்தின் உயிராயிருக்கிற அன்பானது, மனிதனிட எல்லா உயிரையும் உண்டாக்குகிறது. ... ... ... ... 160

XI. கர்த்தரிடமிருந்து கர்த்தருக்கு அன்பு தருமத்திலும், ஞானமானது பக்தியிலும் ஜீவிக்கிறது... 162

A. அன்பையும் தருமத்தையும் குறித்து :—

1. உபயோகங்களிடத்து அன்பு, தருமம். ... 164

2. கர்த்தரானவர் அது புறப்படுகிற உற்பத்தி ஸ்தானமாயிருக்கிறார்; அயலானவன் அது நோக்கப்படும் பொருளாயிருக்கிறான். ... 166

பக்கம்

3. உபயோகத்தி விருப்பதால், கர்த்தரிடத்து அன்பு தருமத்தில் ஜீவித்திருக்கிறது ... 167

4. உபயோகமென்பது, ஒருவன் தன்னிட கடமையை நிறைவேற்றுவதிலும், தன்னிட தொழிலை நடத்துவதிலும், நேர்மையாயும், விசுவாசமாயும், நிஷ்கபடமாயும், நீதியாயும் இருப்பதிலும் அடங்குகிறது. ... ... 169

5. தருமத்தின் உபயோகங்களாயிருக்கிற பொது உபயோகங்களிருக்கின்றன. ... ... 172

6. உபயோகங்கள், நரகத்திலிருந்துவரும் தீமைகளுக்கு விரோதமாய் சண்டை செய்கிறவர்கள் தவிர, வேறுயாரிடத்திலும் தருமத்தின் உபயோகங்களாகிறதில்லை. ... ... 173

7. ஏனென்றால், இவைகள் கர்த்தரிடத்து அன்புக்கும் அயலானிடத்து தருமத்துக்கும் விரோதமாயிருக்கின்றன ... ... ... 175

8. ஒருவனிட சொந்த நன்மையை அவைகளின் முதன்மையானதும் இறுதியானதுமான நோக்கமாக செய்யப்படும் உபயோகங்கள் தரும உபயோகங்கள் அல்ல ... ... ... 176

B. ஞானத்தைப்பற்றியும் விசுவாசத்தைப் பற்றியும் :—

1. விசுவாசமென்பது உண்மையைக் காட்டிலும் வேறொன்றுமில்லை. .. ... ... 177

2. அது உணரப்பட்டு அன்பு பாராட்டப் பட்டால், உண்மையானது, உண்மையாகிறது ; அது அறியப்பட்டு சிந்திக்கப்பட்டால் விசுவாசம் என்று சொல்லப்படுகிறது. ... ... ... 179

3. விசுவாசத்தின் உண்மைகள் ஒரு விஷயத்தில் கர்த்தரையும், மற்றதில் அயலானையும் எதிர்பார்க்கின்றன. ... ... ... 181

பக்கம்

4. உண்மைகள், எப்படி கர்த்தரை சமீபிக்கப்பட வேண்டுமென்றும், கர்த்தர் பின்னிட்டு மனிதன் மூலமாய் எப்படி உபயோகங்களைச் செய்கிறரென்றும், கற்பிக்கின்றன. ... ... ... 183

5. ஒவ்வொரு மனிதனும் ஞானமானதும் சன்மார்க்கமானதும் தேசாசாரமானதுமான உண்மைகளால் கற்பிக்கப்படுகிறன். ... ... 185

(1) ஞானமானதும், சன்மார்க்கமானதும், தேசாசாரமான உண்மைகள் எவைகளாயிருக்கின்றன. ... ... ... ... 185

(2) ஞானமுள்ள மனிதன் சன்மார்க்கமானவனுகவும், தேசாசாரமானவனுகவும் கூட இருக்கிறன். ... ... ... ... 187

(3) ஞானமானது சன்மார்க்கமானதிலும் தேசாசாரமானதிலும் இருக்கிறது. ... ... 190

(4) இவைகள் பிரிக்கப்பட்டால், கர்த்தருடன் ஐக்கியமில்லை. ... ... ... 191

6. விசுவாசமானது உண்மைகளைத் தெரிந்துகொண்டு நினைப்பதிலும், தருமமானது அவைகளை மனங்கொண்டு செய்தலிலும் இணங்கியிருக்கிறது. ... 192

7. ஆதலால், மனிதனேடு இருக்கும் கர்த்தரின் இச்சாசக்தி உண்மைகளை இச்சித்து செய்வதில் அமைந்திருக்கிற தருமத்தில், இருக்கும்போது, கர்த்தரின் ஞானசக்தி, உண்மைகளை தெரிந்து கொண்டு நினைக்க இருக்கிறதாகிய விசுவாசத்தில் மனிதனுடன் இருக்கிறது. ... ... 194

8. தருமத்தினிடவும் விசுவாசத்தினிடவும் ஐக்கியம் பரஸ்பரமாயிருக்கிறது. ... ... ... 196

XII. கர்த்தரானவர், தன்னிட இச்சாசக்தியினுலும் ஞானசக்தியினுலும், சுவர்க்கலோகத்திலுள்ள எல்லா

பக்கம்

பொருள்களையும், உலகத்திலுள்ள எல்லாபொருள்களையும், அவைகளின் இறுதியானவைகள் வரையில், சில வற்றை உயிரோடிருக்கவும், சில வற்றை, இருந்து, ஜீவிக்கவும் செய்து, உயிர்ப்பிக்கிறார். ... 196

1. கர்த்தரானவர் தேவதாசம்பந்தமான சுவர்க்கத்தில் சூரியனாகயிருக்கிறார். ... ... 198

2. அந்த சூரியனிலிருந்து எல்லா பொருள்களின் உற்பத்தியுமிருக்கிறது. ... ... 200

3. அந்த சூரியனிலிருந்து கர்த்தரிட சந்நிதி எங்குமிருக்கிறது. ... ... ... 202

4. எல்லா சிருட்டிக்கப்பட்ட பொருள்களும் கர்த்தராயிருக்கிற உயிரோடேயே இசைய சிருட்டிக்கப்பட்டிருக்கின்றன. ... ... 206

5. உயிரினிட ஆன்மாக்களும், உயிருள்ள ஆன்மாக்களும், முளைத்து வளரும் ஆன்மாக்களும், கர்த்தரிடமிருந்து வரும் உயிரால், உபயோகங்களின் வழிவகையாலும், அவைகளுக்குத் தக்கபடிக்கும் உயிர்ப்பிக்கப்படுகின்றன. ... 210

கர்த்தரால் உண்டாகும் பிரபஞ்ச சிருட்டியைக் குறித்து தேவதா சம்பந்தமான அபிப்பிராயம். ... 215

# பரம இச்சாசத்தி.

# பரமஇச்சாசத்தி

I. மனிதனிட அதே உயிராயிருந்தாலும், அன்பு என்ன வென்று, உலகத்தில் கிரகிக்கப் படுகிறதில்லை.

அன்பு என்பது என்ன வென்கிற பிரதிதின கேள்வியினால் இது விசதமாகிறது. அது தெரியாமலிருப்பதற்குக் காரணம், அது சைதன்னியத்துக்குப் புலப்படாமலிருக்கிறதுதான்; சைதன்னியமானது பரஞ்சோதியின் ஆசயமாயிருக்கிறது; ஒரு மனிதன் தான் நினைப்பதை அறிந்திருப்பதால், இந்த ஒளியில் வரப்பட்டது, உள்ளுக்குள்ளாய் காணப்படுகிறது; ஆகையால், இது அல்லது அது தன்னிட சைதன்னியத்தின் ஒளியில் இருப்பதாகவும், இது அப்படி யிருப்பதை தான் பார்ப்பதாகவும் கூட அவன் கூறுகிறான்; மேலும் அவன் கடவுளிடமிருந்து தெளிவிக்கப்பட்டு, பிரகாசம் அடைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறான். ஸ்தூல ஒளி இணங்கும் ஞான ஒளி கூட இருக்கிறது. இதனால்தான் தன் சைதன்னியத்தைப் பற்றி அது பார்க்கிறதாக, அவன் சொல்லுகிறான்; அதே காரணத்தைக் கொண்டு, புத்தியுள்ளவன், கடவுளால் தெளிவிக்கப்பட்டு, பிரகாசம் செய்யப்பட வேண்டுமென்று, அதாவது அறிந்து கொள்ள வேண்டுமென்று, பிரார்த்திக்கிறான். அன்பு அல்லாமல், சைதன்னியம், சிந்தனையால்

வெளியாகிறபடியினால், ஒரு மனிதனுனவன் அன்பைக் குறித்து, யாதொரு அபிப்பிராயமும் கொள்ள முடியாது. அப்படியிருந்தும், அன்பானது சிந்தனையின் ஆன்மா அல்லது உயிராயிருக்கிற தென்பது உண்மை. சிந்தனையி லிருந்து அன்பு நீக்கப்பட்டால், சூடு நீக்கப்பட்ட புஷ் பத்தைப்போல, அது குளிர்பட்டு, இறக்கிறது; ஏனென்றால் அன்பானது சிந்தனையை தீமூட்டி உயிர்ப்பித்து, உற்சாகப் படுத்துவதால் தான். அன்புக்கு சேர்ந்த ஏதோ ஒரு பிரியம் இல்லாமல், நீர் நினைக்க முடியுமாவென்று உம்மிட சிந்தனையை ஒன்றிலே செலுத்தி, நீர் தியானம் செய்தால், அது முடியாதென்று நீர் கண்டு கொள்வீர். அப்படி யிருப்பதால், சைதன்னியத்துக்கும் அதிலிருந்து வரும் சிந்தனைக்கும், அன்பானது உயிரென்று விசதமாகிறது; எல்லா இந்திரிய அறிவுக்கும், ஒவ்வொரு இயக்கத்துக்கும் உயிராயிருப்பதால், சைதன்னியத்துக்கும் அதிலிருந்து வரும் சிந்தனைக்கும் உயிராயிருக்கப்பட்டது முழு மனித னிட உயிராயும் கூட இருக்கிறது; ஆகையால், அது இந்திரிய அறிவும், இயக்கமும் தோன்றும் அவயவங் களின் உயிராயிருக்கிறது. மற்ற ஆந்திரிகங்களுக்கும் கூட அது உயிரென்று பின் தொடரும் பக்கங்களில் விளங்கும்.

இன்னும் மானிட அன்பு, சர்வவியாபக உயிராயிருப் பதால், அன்பு என்பது என்ன வென்று தெரியாமலிருக் கிறது. சமஸ்தம் என்பது அதின் பகுதிகளிலிருந்து கூறப்படுவதுபோல, அதிக தனித்த பொருள்களிலிருந்து சர்வவியாபக மென்று சொல்லப்படுவதால், சர்வவியாபக உயிர் என்பது மிகவும் தனித்தபொருள்களில் உள்ள உயிராயிருக்கிறது. இவ்விதமாக சர்வவியாபக மாயிருப் பதை ஏகமாக தான் அறியப்படுகிறது. அதின் உருப்பு களின் வேறுபாடுகளை அறியாத ஏகம் தெளிவற்றது. அதை

கண் கூசச்செய்யும் மிகவும் பிரகாசமான ஒளியுடன் உவமிக்கலாம். சர்வவியாபகக் கடவுளும் கூட இம்மாதிரி தான் உலகத்தில், அதிக தனித்த பொருள்களிலு மிருக்கிறார். ஆகையால், திறந்த கண்ணின் முன்தோன்றா மல், மூடிய கண்ணின் முன் மாத்திரம் தோன்றும்படி மனிதர்களுக்கு அவ்வளவு மறைவாய் கூட இருக்கிறது. ஏனென்றால், உலகத்திலுள்ள ஒவ்வொன்றும் பரமஇச்சா சத்தி, பரமஞானசத்தியின் காரிய மாயிருப்பதாலும், ஞான மானது அதின் மிகவும் தனித்த பொருள்களில், மேற் கூறியபடி கண்களைச் கூசச்செய்கிற அந்த மிகவும் பிரகாச மான பரஞ்சோதியாய் இருப்பதனாலாகும்.

**II. அவர் உயிராகவே இருப்பதாலும், மனிதர்களும் தேவர்களும் (உயிரை) ஏற்பவர்க ளாக மாத்திரம் இருப்பதாலும், கடவுள் மாத்திரம் அன்பாகவே இருக்கிறார்.**

இது முன்னமே அநேக முகாந்திரங்களைக் கொண்டு, திருஷ்டாந்தப் படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு பின் தொடருவது மாத்திரம் சேர்க்கப்பட வேண்டியிருக்கிறது— அதாவது, பிரபஞ்சத்துக்குக் கடவுளானபடியினால், கடவு ளானவர் சிருட்டிக்கப்படாதவரும், முடிவற்றவராயு மிருக்கிறார் ; ஆனால் மனிதர்களும் தேவர்களும் சிருட்டிக் கப்பட்டவர்களாயும் முடிவுள்ளவர்களாயு மிருக்கிறார்கள் என்பது. சிருட்டிக்கப்படாததும் முடிவற்றதுமானது தானே அதே தெய்வ மாகிறது ; இதிலிருந்து மனிதன் உருவாக்கப்பட முடியாது. அப்படி கூடுமானால், அவனே தெய்வ மாகிறான். கடவுளிருக்கக் கூடியதும், தன்னிட மிருந்து சூரியனாக, இம்மாதிரி தன்னிடசொந்த இச்சாசத்தியி லிருந்து சூட்டினாலும் ஒளியினாலும், தன்னிட உயிரை

செலுத்தக் கூடியதுமான சிருட்டிக்கபட்டதும், முடிவு முள்ள பொருள்களிலிருந்து அவன் உருவாக்கப்படலாம். ஒப்பீடாய் பேசுங்கால், பூமியின் உற்பேதங்கள் பூலோக சூரியனிட சாரத்தினுலேயே உருவாக்க முடியாமல், சூரியன் தன்னிட உஷ்ணத்தினுலும் ஒளியினுலும் காரியப் பட்டு, தன்னிட உயிரைச் செலுத்தக் கூடிய நிலத்திலுள்ள சிருட்டிக்கப்பட்ட பிரதான வஸ்துக் களிலிருந்து உருவாக் கப்படுவதுபோல், அது இருக்கிறது. இதனுலே, மனிதர் களும் தேவர்களும் தாங்களே உயிர் அல்லவென்றும், ஆனுல் உயிரை ஏற்பவர்களென்று மாத்திரம் விசதமாகிறது; ஒரு தகப்பனிடமிருந்து, ஒரு மனிதனிட சருப்ப உற்பத்தி என்பது, உயிர் உற்பத்தி அல்லவென்றும், ஆனுல், ஸ்தூல லோகத்தின் நிபந்தனைகளுக்குப் பொருந்தியிருக்கும் இறு தியான உருவம் வரைபில் அதன் ஒழுங்குபடிக்கும் அளவு படிக்கும், உயிரை ஏற்றுக்கொள்ள தகுதியான, நூல் அல்லது தொடக்கத்துக்கு செய்வதுபோல் கருப்பையில். பதார்த்தங்களும் பிரதான வஸ்துக்களும் படிப்படியாய் சேர்க்கப்படுகிற, உயிரை ஏற்றுக் கொள்ள சக்தியுள்ள முதன்மையானதும் மிகவும் சுத்தமுமுள்ள ஆகிருதி உற்பத்தி என்று கூட ஏற்படுகிறது.

## III. பரம இச்சாசத்தியாக இருக்கும் உயிர், ஓர் உருவமாக இருக்கிறது.

உயிராகவே இருக்கிற பரமஇச்சாசத்தி, அன்பு மாத்திரமல்ல. ஆனுல் அது வெளிப்படும் தெய்வம்; அந்த தோன்றும் தெய்வம் கடவுளே. அன்பு சூடாகவும், அறிவு ஒளியாகவும் தோன்றுகிற பரலோகத்திலிருக்கும் தேவர் களுக்குக் காணப்படும் சூரியனில் நிஜமாகவே கடவுள் இருக்கிருர்; என்றுலும், அறிவுடன் அன்பானது, அந்த

சூரியன் புறம்பு இருக்கிற கடவுளாகவுமிருக்கிறது. தூரம் என்பது தோற்றமாக மாத்திரமிருக்கிறது; ஏனென்றால், தெய்வம் இடவரைக் குட்பட்டதல்ல. ஆனால் மேற் சொல்லியபடி அவருக்குத் தூரம் பாழ். தூரம் என்பது இருப்பதாக தோன்றுவதின் காரணம், பூலோக சூரியனி லிருக்கும் நெருப்பைவிட அதே அதிக வெப்பமானதா யிருப்பதால், அது அவனை நாசப்படுத்து மாகையால், பரம இச்சாசத்தி கடவுளிடமிருக்கிறபடி, எந்த தேவ தூதனும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பது தான்; அதன் வெப்பத் தினால் அவர்கள் சேதமாகாதபடி பின் கூறியதுடன், மெல் லிய முகிலினால் மூடப்பட்டிருக்கிற தேவர்களிடம், பதமிடப் பட்டு வசதி செய்யப்பட்டு வருகிறவரையில், முடிவற்ற திரிபு களினால் அது படிப்படியாய் குறைக்கப்படுகிறது. சூரியனாகி கடவுளுக்கும், தேவர்களிருக்கும் பரலோகத்துக்கும் மத்தியில் இருக்கும் தூரமென்று சொல்லக் கூடிய தோற்றத் துக்கு இது தான் காரணம். அப்படியிருந்தும் கடவுளே பரலோகத்தி லிருக்கிறார். ஆனால் ஏற்றுக் கொள்ள சரிப் படுகிற மாதிரியிருக்கிறார்.

இடவரைக்குள்பட்ட மனிதனிட சந்நிதியைப் போல கடவுளிட சந்நிதி இல்லை. ஆனால் அது இடவரையில் லாத சந்நிதி. அது அதிக பெரியதிலும் சின்னஞ் சிறியதி லும் இருக்கும்படியான சுபாவமுடையதா யிருக்கிறது; இம்மாதிரியாக அவர் மிகவும் பெரிய பொருள்களிலும் சின்னஞ் சிறிய பொருள்களிலும் இருக்கிறார். தன்னிட சிந்தனையின் அபிப்பிராயங்களிலிருந்து அவன் இலகுவாய் இடம் என்பதை நீக்கக் கூடாதபடியினால், ஒரு மனிதன் இதை அறிந்து கொள்வது பிரயாசமானதென்று எனக்குத் தெரியும்; ஆனால் தங்கள் அபிப்பிராயங்களில், இடம் என்பது உள்பொருளா யில்லாத தேவர்களால் அது

தெரிந்து கொள்ளக்கூடும்; இதில்தான் பரமார்த்த சிந்தனை ஸ்தூல சிந்தனையினின்று வித்தியாசப்படுகிறது. ஆகையால், சூரியனாக கடவுளிடமிருந்து வரும் அன்பு கடவுளாகவே இருக்கிறபடியினாலும், அந்த அன்பு, உயிராகவே இருக்கிறபடியினாலும், உயிராயிருக்கபட்ட அன்பே மனிதனென்றும், இம்மாதிரியாக, மனிதனிலிருக்கும் பொதுவானதும் சிறப்பானதுமான ஒவ்வொன்றையும் முடிவற்ற உருவத்தில் அது அடக்கிக் கொண்டிருக்கிறது என்று ஏற்படுகிறது. கடவுளிடமிருந்து வரும் எல்லா பொருள்களின் உயிரைப்பற்றியும், அவரிட பூர்வ விவேகத்தையும், சர்வ வல்லமையையும் சர்வ வியாபகத்தையும் சர்வ ஞானத்தையும் குறித்தும்கூட முன்னமே கூறியவைகளிலிருந்து இவைகள் ஆவசியகமான அனுமானங்களா யிருக்கின்றன.

IV. அந்த உருவம், தன்னிட முழு விசாலத்திலும் உபயோகத்தின் ஒரு வடிவமா யிருக்கிறது.

அன்பின் பதார்த்தங்கள் உபயோகங்களாக யிருப்பதின் நிமித்தம், அன்பின் வடிவம், உபயோகத்தின் ஒரு வடிவமாயிருப்பதால், இது பலனாக ஏற்படுகிறது; ஏனென்றால், அன்பு நன்மைகளைச் செய்ய மனம் கொள்ளுகிறது. நன்மைகள் உபயோகங்களல்லாமல் வேறொன்றுமில்லை. பரம இச்சாசத்தி (மற்ற எல்லாவற்றையும்) கடந்து நிற்பதால், அதனிட உருவம், அதன் முழு விசாலத்திலும் உபயோகத்தின் ஒரு வடிவமாயிருக்கிறது. பரலோகங்களில் தேவர்களோடும், பூலோகத்தில் மனிதர்களோடும், அன்பினால் அவருடன் ஐக்கியப்பட்டவர்களோடும், இருப்பவர் கடவுளே என்பதும், தேவர்களும் மனிதர்களும், சிருட்டிக்கப்பட்டவர்களாகவும் முடிவுள்ளவர்களாய், அவர் முடிவற்ற

வரும் சிருட்டிக்கப்படாதவருமாக இருந்தாலும், அவர்களில் அவரிருக்கிறாரென்பதும், கடவுளிட போதனையால், இடம் என்பதைப்பற்றிய ஸ்தூல அபிப்பிராயத்தினின்று மனிதனனவன் நீக்கக் கூடாதவனாயிருக்கிற வரையிலும், அதனால் பரமார்த்த சாரத்தைக் குறித்த ஒளியில் ஏற்றுக் கொள்ளக்கூடாத வரையிலும் ஸ்தூல மனிதனால் கிரகிக்க முடியாது. இது, இதையே யோசிக்குங்கால், மிகவும் உயர்ந்த பரமண்டலத்தின் தேவர்களுக்கும், மிகவும் தாழ்ந்த பரலோகத்தின் தேவர்களுக்குமாகிய ஒவ்வொரு தேவலோகத்தானுக்கும், மேலும், விவேகிகள் அவிவிவேகிகளாகிய எல்லா மனிதர்களுக்கும் பொருந்திய வெளிவரும் தெய்வமேயாகும். ஏனென்றால் கடவுளிடமிருந்து புறப்படும் தெய்வம், ஆதியானதிலிருந்து இறுதியானது வரையில் தெய்வமாக இருக்கிறது. இறுதியானவைகளென்பவை, புலால், என்பு எனப்படும் பொருள்களாகின்றன. ஆன்மாவிற்கில்லாத புலாலும் என்புகளும் தான் உடைத்தாயிருப்பதாக அவர் சொன்னபோது, இவைகளெல்லாம் கூட கர்த்தரால் தெய்வமாக்கப்பட்டதென்று, தன்னிட சீஷர்களுக்குக் கற்பித்தார் (லூக்கா. XXIV. 39). மேலும் மூடப்பட்ட கதவுகளின் மூலமாய் அவர் உள்ளே பிரவேசித்து அகோசரமானார். அவரிடம் மனிதனில் இறுதியானவைகள் கூட தெய்வீகமாக்கப்பட்டதென்றும், ஆதலால் மனிதனிட இறுதியானவைகளோடு அன்னுவயம் உண்டென்றும் இது தெளிவாய் சாட்சியமிடுகிறது.

2. ஆனால், உண்மையானதும் ஒரே உயிராக இருக்கப்பட்ட வெளிவரும் தெய்வம், சிருட்டிக்கப்பட்டதும் முடிவுள்ளதுமானவைகளில் எப்படியிருக்கக்கூடுமென்று, இப்பொழுது காண்பிக்கப்படும். அந்த உயிரே மனிதனுடன் சேருகிறதில்லை. ஆனால் அவன் தொழில் படும் காரியங்

களுடன் மாத்திரம் சேருகிறது. அவைகளையே யோசிக்குங்கால், உபயோகங்களே பரமார்த்தமான வைகளாயிருக்கின்றன ; அவயவங்களாகவும், அங்கங்களாகவும், அந்திரங்களாகவு மிருக்கிற உபயோகங்களின் வடிவங்கள் ஸ்தூலமாயிருக்கின்றன. அப்படியிருந்தும் எந்த அவ்யவத்திலும், அங்கத்திலும், அந்திரத்திலும் வடிவத்தில் உபயோகமாயில்லாத ஓர் அணுவும், ஓர் அணுவின் அதிக சிறிய பாகமுமில்லாதபடி, அவைகள் உபயோகங்களின் கோவையாயிருக்கின்றன. தெய்வ உயிர், ஒவ்வொரு தொடர்ச்சியிலும் உபயோகங்களோடேயே சேருகிறது ; இந்த வழியாய் ஒவ்வொரு வடிவத்துக்கும் உயிரைக் கொடுக்கிறது ; இந்த காரணத்தினால் தன்னிட ஆன்மா என்று கூறப்படும் உயிரை மனிதன் உடைத்தாயிருக்கிறான். இந்த உண்மையானது, நிஜமாகவே, மனிதனிட கிரகிப்புக்கு எட்டாததாக தோன்றுகிறது. ஆனால் அது தேவர்களிட கிரகிப்புக்கு எட்டாமல் இல்லை. என்றாலும், பார்க்க இஷ்டமுள்ளவர்களால், அது, ஒரு கிராதிவழியாய் பார்ப்பதுபோல, பார்க்கக்கூடாதபடி மானிட அறிவுக்கு அவ்வளவு கடந்து இல்லை ; பகுத்தறிவுடன் தெளிவிக்கப்பட்ட என்னிட அறிவுக்கு கடந்து அது இல்லை.

## V. முக்கியமாக, மனிதன் அவ்வித வடிவத்தி லிருக்கிறான்.

மனிதனிலிருக்கும் ஒவ்வொரு பொருளையும், சாரீர சாஸ்திரத்தை ஒத்துமட்டு மல்லாமல் பகுத்தறியும் கண்ணோடு கூட பார்க்கப் பட்டவர்களால் மாத்திரம் இது அறியக்கூடும். அதே காலத்தில் பகுத்தறியும் கண்ணோடு அவைகளைப் பார்க்கிறவன், எல்லா தனித்த பொருள்களும், அவைகளின் வாஸ்தவிய விசித்திரங்களும், காரியத்திலிருந்

துய், காரியத்துக்காகவும் உருவாக்கப்படுகிற தென்றும், ஒவ்வொரு பாகமும் அணுவும் சாதாரணமாக ஒரு தொழிலை உடைத்தாயிருக்கிற தென்றும், பொது நன்மையா யிருக்கிற பொது காரியம் உண்மையான விசித்திரத்தை அதில் தானுக்வே நினைக்கிறதென்றும், மற்ற பக்கம் பார்க் கும் கால், நிஜமான விசித்திரம், பொதுவாயிருக்கிறதில் தன்னையே நினைக்கிறதென்றும், அறிந்து கொள்வான். இதன் பயனாக, சிரசு முதல் உள்ளங்கால் வரையில், சரீரத்தி லுள்ள எல்லா பொருள்களும், ஒன்றாகவும், வெவ்வேறு தொழில்களையுடைய அநந்தம் பாகங்களரல் அமைந்திருக் கிறானென்கிற உண்மையை மனிதன் அறியாதபடி அவ் வளவு அளவுக்கு ஒன்றா யிருக்கின்றன. இந்த விஷயத்தைத் திருஷ்டாந்தப்படுத்த புப்புசங்களிடவும் (நுரையீரல்களிட வும்) சுவாசக் குழனிடவும் கட்டடத்தை, பகுத்தறியும கண்ணோடு பார்த்து, அதன் உபயோகங்களை யோசிக்கிறது, பிரயோஜனமுள்ளதா யிருக்கும்.

2. முதலாவது, புப்புசங்கள். அதன் மிகவும் சாதா ரண உபயோகம், குரல்வளை, சுவாசக்குழல், சுவாசக் குழலின் கிளை, அவைகளின் கிளைகள் மூலமாய், இவை களிட இதழ்களின் பொக்குகளில் காற்றை ஏற்றுக் கொள்வதில் அடங்கி யிருக்கிற, சுவாசம் வாங்கி விடுதலா யிருக்கிறது; இந்த வழி வகையால், அவைகள் ஒன்று விட்டு ஒன்றாய் விரிந்து சுருங்குகின்றன. இந்த வழியாய் கூட, அங்கங்கள் சேர்ந்து உண்டான முழு சரீரத்திலும், அதன் எல்லா உறுப்புகளிலும், அந்யோந்ய அசைவுகளை அவைகள் செய்விக்கின்றன. ஏனென்றால், இருதயமும், புப்புசங்களும், முழு தேகத்தில் உண்டாகிற எல்லா சாதா ரண சலனங்களுக்கும், இரண்டு மூலங்களாக இருக்கின் றன; அதன்பயனாக, அதன் எல்லா பாகங்களும், பொது

வாகவும் சிறப்பாகவும், தங்களிட சுறு சுறுப்புகளேயும், பிராணுதாரமான தொழில்களேயும் செய்ய தூண்டப்படு கின்றன. அன்றியும், அவைகள் பெரிய மூளேயால் நடத் தப்படுகிற அசைக்கிற தன்னிஷ்டமான உயிரை, சிறிய மூளேயின், அதிகாரத்தின் கீழ் ஓடுகிற, அசைக்கிற சகஜ மான உயிருடன், சேர்க்கின்றன. மேலும் அதன் பயன், இச்சையானது தன்னிட தொழில்களே இணக்கமாயும், எவ்விடத்திலும் தகர்வில்லாமல் செய்யும்படி சரீரத்தின் எல்லா அங்கங்களேயும், முக்கியமாய் தசைநார்கள் என்கிற சலனமுடைய பாகங்களே, இணங்கச் செய்வதாயிருக்கிறது. அவைகளின் இன்னமொரு உபயோகமானது, பேச்சின் எல்லா தொனிகளோடும், பாட்டின் எல்லா ராகங்களோடும், ஒத்து உழைத்தல் மாத்திர மல்லாமல், ஒரு கருப்பையி லிருந்தது போல, அவைகளே உற்பத்தி செய்கிறதுமாய் கூட விருக்கிறது. அசுத்தங்களிலிருந்து நீக்கி அவைகளே தள்ளவும், உள் சுவாசிக்கும் காற்றிலிருந்து, அவ்வளவு ஆகாரமாக, அதற்குப் புதிய அம்சங்களேக் கொடுக்கவும், இம் மாதிரியாக, நாளத்திலோடும் கருத்த இரத்தத்தை நாடியி லோடும் சுத்த இரத்தமாக மாற்றி, இருதயத்தின் இடது அறையில், புதிதாக்கிய தென அதை மறுபடியும் அனுப் பவும், இருதயத்தின் வலது பக்கத்திலிருந்து சரீரத்தின் எல்லா இரத்தத்தையும் ஏற்றுக் கொள்ளுகிற வேலேயும் கூட அவைகளுக்குண்டு. இம்மாதிரியாக, புப்புசங்கள் இரத்தத் தின் வடிகட்டும் கருவிபாகவும், சுத்தம் செய்பவைகளாகவும், பூர்வஸ்திதிக்குக் கொண்டு வருபவைகளாகவும், பழுது பார்க்கப்பட்டவைகளாகவும், காற்றைச் சுத்தம் செய்பவை களாகவும்கூட சேட்டிக்கின்றன. ஒவ்வொரு சிறு துவாரமும், இதழும், புப்புசங்களின் எல்லா வேலேகளிலும் அல்லது பலன்களிலும், ஏறக்குறைய அன்னியோன்னிய

மாய்க் கூடி வேலை செய்கையில், பொதுவாகவும் சிறப்பாகவும், இவைகளுடன், புப்புசங்களிட அநேக இதர உபயோகங்கள் இருக்கின்றன.

3. இரண்டாவது, சுவாசக்குழல். அதன் உபயோகங்களாவன :—(1) காற்றும், புப்புசங்களின் சுவாசமும் போகவும், திரும்பிப் போகவும், வழி கொடுக்கவும்; சுவாசம் வாங்குதல், விடுதலாகிய புப்புசங்களிட சிறப்பான வெவ்வேறு சலனங்களின் மாதிரிகளுக்கு தானே ஒத்திருக்கவும். (2) தீங்கானது யாதொன்றும் பிரவேசிக்காதபடி, நுரையீரல்களுள் போக இருக்கும் காற்றைச் சுத்திகரிக்கவும், வெளிப்படும் காற்றில் ஆவிகளை ஏற்றவும், இம்மாதிரியாகச் சிதைந்து, ஆவியாய்ப் போனவைகளை எடுத்துக்கொண்டு சுவாசம் விடவும், மேலும் பொதுவாக இருமியுமிழ்தலினால் நுரையீரல்களை பிசுபிசுப்பான கோழைகளினின்று தெளிவிக்கவும். (3) குரல்வளைக்கும் வாயிற் கபாடத்துக்கும் துணைகவும் சாய்மானமாகவும் உதவவும்; பின் கூறியவைகளிடவும், அவைகளின் நடுக்கமுள்ள அசைவுகளுக்கும், சைகைக்கும் அசைப்புக்கும் பொருந்தி யிருக்கவும். காற்று அவைகளின் மேல்விழ அதன் கால்வாயின் சுவர்களை ஒழுங்கு படுத்தவும்; அதின் பேரில் காற்று தாக்கும்போது ஜவ்வானது அதிர, அதை நீட்டவும், இம்மாதிரியாக, குரல்வளையும் தொண்டைக் குழியும், பாட்டாக அல்லது பேச்சாக விஸ்திரிக்கும் அல்லது மாற்றும் முதலான சப்தத்தை உற்பத்தி செய்யவும்; மேலும், ஆவியால் நிறைந்திருக்கும் இமத்தினல், ஓயாமல் குரல்வளையை ஈரமாக்கவும். (4) விழுங்கும் தொழிலில் அடுத்த அன்னவாகிக்கு உதவி செய்யவும். (5) நுரையீரல்களின் மாறி மாறி வரும் சுவாச சம்பந்தமான சலனங்களை அடுத்த பாகங்களிலும் இவைகளின் மூலமாய், தூரத்திலிருப்

யதும், இறுதியானதுமான பாகங்களிலும் பரப்பவும்; அதாவது அன்னவாகியிலும் இதன் மூலமாய் ஈரல்தாங்கியோடு அன்னாசயத்துள்ளும், ஆகையால் வயிற்றினிட ஆந்திரிகங்களுள்ளும், அத்துடன் மேலேறும் காரோடிட் என்கிற சுத்த இரத்தமுள்ள நாடிக்கும், கீழிறங்கும் மிடற்றுக் குறிய கருத்த இரத்தமுள்ள நாளத்துக்கும், விலாவெலும்புகளிடையில் விடப்பட்ட நரம்பும், (Vagus) என்கிற நரம்புகளாகிய பெரிய (Sympathetic) நரம்புகளுக்குள்ளும்; இம்மாதிரியாக சரீரத்தின் அசைக்க சக்தியுள்ள உயிரைப் புதிதாக்கவும். (6) தன்னிட சொந்த தொனிக்கின்ற சலனங்களையும், குரல்வளையின் சலனங்களையும் இரண்டையும் அடுத்த பாகங்களுக்கு அறிவிக்கவும் இவைகளின் மூலமாய் மிகவும் உயர்ந்ததும தாழ்ந்ததுமான பாகங்களுக்குத் தெரியப்படுத்தவும், தலைக்கும் மூளைக்கும் மேல் ஏறுகிற நாடியிலுள்ள சுத்த இரத்தத்தையும், கீழ் இரங்குகிற நாளத்திலுள்ள கருத்த இரத்தத்தையும் திடப்படுத்தவும், பொது மாறுதலினால் அவைகளைப் பலப்படுத்தி உற்சாகப்படுத்தவும், இவ்விதமாக சரீரத்தின் இந்திரிய சம்பந்தமுள்ள உயிரைப் புதுப்பிக்கவும்.

இது வல்லாமல், சுவாசக்குழலிலிருந்தும், அதே காலத்தில் இங்கே பிரித்துக் கூறியிராத குரல்வளை, வாயிற் கபாடங்களின் எலும்புகளிலிருந்தும், சாரீர சாஸ்திரம், பிரத்தியட்ச ரூபகாரம் இவைகளின் உபயோகங்களோடும் கூட, அறிவு கொடுக்கப்பட்டு உணர்வு பெற்ற மனது, பிரகுருதியானது நாதங்களை எப்படி விகர்ப்பித்து, அதன் சலனங்களை உச்சரிக்கிறதென்று கற்பிக்கப்பட்டு, அறிந்து கொள்ள வழிகாட்டப் படலாம். அது எவ்வளவு உள்ளானதாயும் இரகசிய மானதாயும் இருந்தாலும், நாதசாஸ்திரத்திலாவது, சங்கீதசாஸ்திரத்திலாவது, இன்னிசையிலா

வது ஒன்று மில்லை; உள்ளுக்குள்ளான பொருள்களி லிருந்து, பிரகிருதியின் வெளியே, பரமார்த்தமானவைகள் ஒன்றுபடுத்தி, இங்கே கொண்டு வந்து, இந்த இரண்டு அங்கங்களுக்கும், அதே காலத்தில் காதுக்கும், கொடுத்தது தவிர, எவ்வளவு ஆழமாய் மறைந்திருந்து, கம்பீரமாயிருந் தாலும், எந்த தொடர்ச்சியான சரீரத்தின் அசைவுகளிலும் நடுக்கங்களிலும், சேர்ந்திருக்கும் பருமம் அல்லது காற்றின் மாறுதல்களிலும் ஒன்று மில்லை.

4 சிரசு, சரீரம் இவ்விரண்டின் உள்ளடங்கியுள்ளவை களின் மற்றவைகளில் அப்மாதிரியான விவரணங்கள் மறைந்திருக்கின்றன; உள்ளுக்குள்ளே மறைத்து வைக்கப் பட்டு, கண்பார்வைக்கு எட்டாமல், இருக்கிறவைகள் இன்னும் ஏராளமாயிருக்கின்றன; ஏனென்றால், ஒரு வஸ்து எவ்வளவு உள்ளாக இருக்கிறதோ, அது அவ்வளவு பரி பூரணமானது. சுருக்கச்சொல்லில், ஒவ்வொரு அவயவம், அங்கம், எல்லா ஆந்திரிகங்கள் இவைகளின் பரம உயிர், அல்லது உயிரின் பரிபூரணம், முழுமைக்கும் பொது வாயிராத, அவைகளில் எதற்கும் சிறப்பானது ஒன்று மில்லை என்பதிலும், அப்படி இருப்பதால் ஒவ்வொரு பொருளிலும், முழுமனிதனிட அபிப்பிராயம் இருக்கிறது என்பதிலும், அடங்கியிருக்கிறது. இந்த இரகசியம் அடியில் வருமாறு சித்தாந்தமாக ஏற்படுகிறது:—சூக்கும லோகத் திலும், ஸ்தூல லோகத்திலும் இரண்டிலும் யாதொனிலும், மனிதனானவன் எல்லா உபயோகங்களின் சரீரமென்றும், அதிலிருக்கும் பிரபஞ்சத்தின் அபிப்பிராயத்திலிருந்து ஒவ் வொரு உபயோகமும் மனிதன் போலாகிறது; ஆனால் உபயோகம் எப்படி இருக்கிறதோ, அதனிடதொழிலும் பொதுவாக அப்படியிருக்கிறது. கர்த்தரிடமிருந்து வரும் உயிர் மட்டின்றி, எல்லா காரியங்களின் சரீரமாயிருக்கக்

கொள்ள, கர்த்தரிடமிருந்து வரும் உயிரை ஏற்றுக் கொள்பவன் என்கிற உண்மையிலிருந்து, மனிதன் இந்த சிறப்பு தன்மை யடைகிறான். ஏனென்றால், உயிரின் எல்லாமும், அவரிட மிருந்து வருகிற தன்னிலேயே உயிரை உடைய கர்த்தர் மட்டும் மனிதனாகிறார். அந்த உபயோகத்தின் உருவம், கடவுளிடத்தில் முடிவற்றதாயிருந்தா லொழிய, அது எந்த மனிதனிலும் முடிவுள்ளதாயிருக்க முடியாது.

## VI. சாதாரணமாக மனிதன் அவ்வித வடிவத்தி லிருக்கிறான்.

மிகவும் பொதுவான அருத்தத்தில், மனிதன் என்பதால் முழு மானிடவருக்கம் என்று அருத்தம் கொள்ளுகிறது; பொதுவான அருத்தத்தில், சமுதாயமாய் எண்ணப்பட்ட, ஒரு இராஜ்ஜியத்தின் ஜனங்களென்று அறியப்படுகிறது; இதற்கும் குறைந்த பொது அருத்தத்தில் ஒரு தனித்த நகரின் குடிகளென்றும், விசேஷித்த அருத்தத்தில், ஒரு வீட்டில் வசிக்கப்பட்டவர்க ளென்றும், அப்படியிருக்கையில், ஒருவரைக் குறித்த தனித்த அருத்தத்தில், ஒவ்வொரு மனிதனும் என்று அருத்தம் கொள்ளப்படுகிறது. கடவுளிட நோக்கத்தில், முழு மானிடவர்க்கமும், ஒரு மனிதனைப்போ லிருக்கிறது; மேலும், ஒரு இராச்சியத்திற்கு சேர்ந்தவர்கள் ஒரு மனிதனைப்போல இருக்கிறார்கள்; அம்மாதிரியே, ஒரு மாகாணத்திற்கும், ஒரு நகரத்துக்கும், ஒரு வீட்டுக்கும் கூட சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். சமுதாயமாய் மனிதர்களே இம்மாதிரி காணப்படுகிறார்க ளென்பதல்ல; ஆனால் அவர்கள் செய்யும் உபயோகமான காரியங்கள் அம்மாதிரி தோன்றுகின்றன. அவர்களின் உபயோகங்கள் நல்ல உபயோகங்களாக இருக்கப்பட்டவர்கள், அதாவது அவைகளைக் கடவுளிடமிருந்து செய்கிறவர்கள், சமுதாயமாய், பூரணமும் அழகுமுள்ள

ஒரு மனிதனைப்போல் காணப்படுகிறார்கள். பலன்களின் நிமித்தம் உபயோகமானவைகளைச் செய்கிறவர்கள் அதாவது, வேறுவார்த்தைகளில், வீடு, நகரம், மாகாணம், இராச்சகியம், அல்லது ஒரு உலகம் இவைகளின் உபயோகங்களாக இருப்பதால், பலன்களை இச்சிப்பவர்கள், இவர்கள் தான். மற்றபடி, உபயோகங்களுக்காக அல்லாமல், தங்களுக்கே ஆகவும், அல்லது உலகத்துக்காகவும் மாத்திரம், உபயோகமானவைகளைச் செய்கிறவர்கள் கூட, கடவுள் முன்பாக ஒரு மனிதனைப்போல் தோன்றுகிறார்கள்; ஆனால் நிறைவற்றதும் அவலட்சணமான ஒரு மனிதனைப் போல காணப்படுகிறார்கள். உலகத்திலுள்ள மனிதர்களை உபயோகத்தை அனுசரித்து வெவ்வேறாயும், மனித வடிவமாக பொருந்த செய்த உபயோகங்களை அனுசரித்து சமுதாயமாயும், கடவுள் மதிக்கிறாரென்று இவைகளால் வெளிப்படையாய்த் தெரிகிறது. உபயோகங்கள் என்பதனால், ஒரு மனிதனிட உத்தியோகம், தொழில் வேலை இவைகளுக்குச் சேர்ந்த ஒவ்வொரு கருமத்தினிட உபயோகங்கள் என்று அருத்தம் கொள்ளுகிறது. இந்த உபயோகங்கள் கடவுளின் நோக்கத்தில் நல்ல தொழில்களேயாகின்றன.

ஒரு இராஜ்ஜியத்திற்கு சேர்ந்தவர்கள் எல்லாம், உபயோகங்களை நேசிப்பதை அனுசரித்து ஒரு மனிதனைப் போல் கடவுள் முன்பாக காணப்படுகிறபடியினால், ஆங்கிலேயர்களெல்லாம் கடவுள் முன்பாக ஒரு மனிதனைப்போல் தோன்றுகிறார்களென்று விசதமாகிறது; அம்மாதிரியே, டச்சுக்காரர்களும், ஜர்மனியர்களும், சுவிஸ் என்பவர்களும், தானியர்களும், பிரஞ்சிக்காரர்களும், போல்ஸ்களும், ருசியர்களும் கூட தோன்றுகிறார்கள்; ஆனால் ஒவ்வொரு தேசத்தாரும் உபயோகங்களை அனுசரித்துத் தோன்றுகிறார்கள். உபயோகங்களாயிருப்பதால், தங்களிட உத்தியோகங்க

ளிட உபயோகங்களை நேசிக்கிற, இராச்சியங்களிலுள்ளவர்கள், ஒரு மானிட தேவனைப்போல், சமுதாயமாய் தோன்றுகிறார்கள்; அது அப்படி யிருக்கையில், உபயோகங்களிலிருந்து பிரிக்கப்பட்ட இன்பங்களுக்காக மாத்திரம் தங்கள் தொழில்களின் உபயோகங்களை நேசிக்கிறவர்கள், சமுதாயமாய் ஒரு மானிட பேயைப்போல் தோன்றுகிறார்கள். தொழிலுக்காகத் தொழிலையும், சம்பத்தையும் நேசித்து, அதே காலத்தில் கடவுளை எதிர்பார்க்கிற வர்த்தகர்கள், மானிட தேவனிலிருக்கிறார்கள்; ஆனால் இவைகளுக்காக மாத்திரம் சம்பத்தையும் தொழிலையும் நேசிக்கிற வர்த்தகர்கள், மானிட பேயிலிருக்கிறார்கள். எல்லா தீங்குகளுக்கும் வேராயிருக்கிற, அதிக பொருளாசை, முன் சொன்னவர்களை அல்லாமல் பின் சொன்னவர்களைப் பிடித்துக் கொள்ளுகிறது; ஏனென்றால், சம்பத்தை மட்டும் நேசித்து, அதிலிருந்து அதிகமாகும் உபயோகங்களில் ஒன்றையும் நேசிக்காதிருத்தல், அல்லது செல்வத்தை முதன்மையாகவும், தொழிலை இரண்டாவதாகவும் நினைத்தல், உலோபமாகிறது. இந்த வருணனையுள்ள ஜனங்கள் ஒரு இராச்சியத்திற்கு நிஜமாகவே உபயோகமா யிருக்கிறார்கள்; ஆனால் அப்படி யிருப்பது அவர்கள் இறந்தபோது தான்: ஏனென்றால், அவர்கள் செல்வம், அப்பொழுது தான், வர்த்தகரிட ஜன சம்பந்தமான உபயோகங்களுக்காக எங்கும் பிரவகிக்கிறது. அவர்களிட செல்வமானது பிறகு செய்கிற உபயோகம் அவர்களிட சொந்த ஆன்மாக்களுக் கல்லாமல், இராச்சியத்திற்கு லாபகரமா யிருக்கிறது. * ஒரு வார்த்தை

---

* இந்த குறி, கையில் எழுதப்பட்டதின் இடது பக்கத்திலிருக்கிறது: "அவன் அங்கே செல்வத்தை சேர்த்து, பணக்காரனாவதால், தன்னிட சொந்த ஆன்மாவுக் கல்லாமல், இராச்சியத்திற்கு, அவன் நிஜமாகவே நன்மை செய்கிறான்."

யில் சொன்னால், செல்வத்துக்காக மட்டும் தொழிலின் வழியாக செல்வத்தைச் சேகரித்தல் யூதர்களிட வியாபாரமாகிறது; ஆனால் தொழிலுக்காக, தொழிலினால் செல்வத்தைச் சேகரித்தல், டச்சுக்காரர் வியாபாரமாகும். ஐசுவரியம் பின் சொன்னதை பழுதாக்குகிறதில்லை; ஆனால் முன் கூறியதை பழுதாக்குகிறது.

## VII. பரலோகம் அவ்வித உருவத்திலிருக்கிறது.

முழு பரமண்டலமும், மானிட சரீரத்தின் எல்லா அவயவங்களிடவும், அங்கங்களிடவும், ஆந்திரிகங்களிடவும் உபயோகங்களுக்குத் தக்கபடி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும், குறிப்பிட்ட பிரஜைகள் எந்த மாகாணத்திலிருக்கிறார்களென்றும், உதாரணமாக கண்கள், காதுகள், நாசித்துவாரங்கள், வாய், நாக்கு இவைகளின் மகாணங்களிலும் எந்த கூட்டங்களிருக்கிறதென்றும், மேலும், கல்லீரல், கணையம், மூத்திர பிண்டங்கள், மூத்திர நாளங்கள், பிறப்பிக்கிற அங்கங்கள் இவைகளின் மாகாணங்களில் எந்தக் கூட்டங்களிருக்கிறதென்றும், பரலோகத்திலுள்ள தேவர்களுக்குத் தெரியுமென்றும், தெய்வலோக இரகசியம் என்கிற நூலில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாகாணங்களிலுள்ள எல்லாக் கூட்டங்களும், மனிதனில், மேல் சொன்ன அவயவங்கள், அங்கங்கள், அந்திரங்களின் உபயோகங்களுக்கு முழுமையும் காரண காரிய சம்பந்தத்திலிருந்து இந்த அன்னுவயத்தால் முழு பரலோகமும், கடவுள் முன்பாக ஒரு மனிதனைப்போல், தோன்றுகிறது; பரலோகத்தின் ஒவ்வொரு மாகாணத்திற்கும், ஒரு மாகாணத்தின் ஒவ்வொரு கூட்டத்துக்கும், அதே மாதிரிதான். அந்த காரண காரிய சம்பந்தத்தில் எல்லா தேவர்களும், மானிட

சூக்கும தேகிகளும், எல்லா விஷயத்திலும் உலகத்திலுள்ள மனிதர்களைப்போல், மனிதர்களாயிருக்கிறார்கள். உருவாயும் உயிராயுமிருக்கிற கர்த்தரிடமிருந்து புறப்படும் தெய்வ சத்தி, முன் அநேக சந்தர்ப்பங்களில் கூறியபடி, மிகவும் பெரியதிலும் சிறியதிலும் இருக்கும் மனிதன் என்பது இதற்குக் காரணமாயிருக்கிறது.

இந்த அன்னுவயம் தெய்வலோக ரகசியம் என்கிற புஸ்தகத்தில் பின் வரும் பிரிவுகளில் பொதுவாகவும் விவரமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது: செ. 3021, 3624—3633, 3636—3643, 3741—3745, 3883—3896, 4039—4055, 4218—4228, 4318—4331, 4403—4421, 4523—4533, 4622—4633, 4652—4660, 4791—4805, 4931—4953, 5050—5061, 5171—5139, 5377—5396, 5552—5573, 5711—5727, 10,030.

நரகம்கூட அந்த உருவத்திலிருக்க, அங்கிருக்கும் ஒவ்வொருவனும் வேலை செய்ய பலாத்காரம் பண்ணப்படுகிறான்; ஆனால் அங்கே வசிப்பவர்கள் அந்த உபயோகங்களை அன்பினால் செய்யாமல், சாப்பாடு, உடுப்பு குறைபாட்டால் செய்கிறபடியினால், அவர்கள், நிஜமாகவே, ஒரு மனிதனைப்போல தோன்றுகிறார்கள்; ஆனால் மானிடப் பேய் போலக் காணப்படுகிறார்கள். இவர்களைக் குறித்து சற்று மேலே பார்க்கவும்.

## VIII. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் அம்மாதிரியான உருவத்திற்குச் சாய்கின்றன.

உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் என்பதனால், பூமியின்மேல் நடப்பவைகளும், அல்லது நகருகிறவைகளும், பரலோகத்தில் பறக்கிறவைகளும், நீரில் நீந்து

கிறவைகளுமாகிய, உயிருள்ள பொருள்கள் என்று அருத்தம் கொள்ளப்படுகிறது. செடிகளும்கூட, அதாவது, பூண்டுகள், புஷ்பங்கள், செடிகள், புற்களுடன் மரங்களும், அருத்தம் கொள்ளப்படுகிறது. நீரும், மண் பதார்த்தங்களும், அவைகளின் பிறப்புக்கும், விளைவிற்கும், மூலங்களாயிருக்கின்றன.

உயிராகவே இருக்கிறதும் கர்த்தராகவு மிருக்கிற பரம இச்சா சக்தி, அந்த உருவம் மனிதனு யிருக்கிற எல்லா உபயோகங்களின் ரூபங்களிட ரூபத்தில் இருக்கிறதென்பது, பிரபஞ்சத்தினிடவும், சுருக்கமாய் பூமியினிடவும், அவைகளிலிருக்கிற எல்லாப் பொருள்களிடவும், சிருட்டியிலிருந்து பார்ப்பதைக் காட்டிலும், நன்றாய் எந்த வழியிலும் பார்க்க முடியாத உண்மையா யிருக்கிறது. ஏனென்றால், சிருட்டியில், உபயோகத்துக்காக அல்லாமல், பூமியின் பேரில் எந்தப் பொருளுமில்லை.

ஸ்தாவரவர்க்கம் முழுவதும் உபயோகங்களால் நிறைந்திருக்கிறது; அங்கே அதில் உபயோகத்திற்கல்லாத, தூசியின் சிறிய நூண்பொடியாவது, தூசியின் பிண்டமாவது அதில் கிடையாது. விருக்ஷவர்க்கம் முழுமையும், உபயோகங்களால் நிறைந்திருக்கிறது; உபயோகத்துக்கு இல்லாத ஒரு மரமும், செடியும், புஷ்பமும், புல்லின் இலையாவது அங்கே கிடையாது; உண்மையாக ஒவ்வொன்றும், உபயோகத்தின் வடிவமாயிருப்பதால், ஒரு மரம், செடி, புஷ்பம் அல்லது புல் இலைகளில் உபயோகத்துக்கு அல்லாதது ஒன்று மில்லை. பிராணிவர்க்கம் முழுமையும் கூட, உபயோகங்களால் நிறைந்திருக்கிறது. உபயோகத்துக்கு அல்லாமலும், மேலும் அதன் உபயோகத்தின் உருவமாயுமில்லாமல், ஒரு புழு முதல் சிங்கம் வரையில் அங்கே ஒரு தனித்த பிராணியும் கிடையாது. பூமியிலுள்ள எல்லா

இதர பொருள்களோடு, சூரியன் வரையில், அம்மாதிரி தான். சுருங்கச் சொல்லில், சிருட்டியினிடவும், சிருட்டிக்கப்பட்ட பொருள்களினிடவும், ஒவ்வொரு விவரமும், உபயோகமாயிருக்கிறது; உண்மையில், முதலானதிலிருக்கும் உபயோகத்திலிருந்து இறுதியானவைகளி லிருக்கும் உபயோகம் வரையில், இம்மாதிரியாக இடைவிடாமல் உபயோகத்திலிருந்து உபயோகத்துக்கு ஏறி, இவ்வித உபயோகங்கள் ஒரு தொடர்ச்சி யாயிருக்கின்றன. கர்த்தராகிய சிருட்டித்தவரும், உருவமாக்கினவரும் எல்லா உபயோகங்களின் முடிவற்ற சரீர மென்றும், தன்னிட சாரத்தில் அன்பென்றும், தன்னிட உருவத்தில் அந்த சரீரம் இருக்கப்பட்ட மனிதனென்றும், இது தெளிவாகக் காட்டுகிறது. மேற் கண்டயோசனைகளை எல்லாருக்கும் பொதுவான அறிவின் தீர்ப்புக்கு உள்படுத்த ஒருவன் இஷ்டப்பட்டால், இந்த பதார்த்தங்களெல்லாம், இறந்துபோன சூரியனிடமிருந்து, ஆதலால் இறந்துபோன சுபாவமானதென்று நினைக்கும்படி அவ்வளவு விவேகமில்லாமல் யார் இருக்கிறான்?

## IX. எத்தனை ஆசைகளிருக்கின்றனவோ, அவ்வளவு அநேக உபயோகங்களிருக்கின்றன.

பரமஇச்சாசத்தி உயிரே என்றும், அதனால் மனிதனிட அன்பு அவனிட உயிரென்றும் அநேக ரூபகாரங்களால் உறுதிப்படுத்தப்படுகிறது; ஆனால், மனிதனிட ஆன்மா ஆசை தவிர வேறு அல்லவென்பது, இதன் பயனாக இறந்த பிறகு ஒரு மனிதன் ஆசையாகிறானென்பதுமாகிய உண்மை —அதாவது நல்ல உபயோகத்தின் ஆசையாயிருந்தால் பரலோகத்தின் தேவனாகவும், தீங்கான உபயோகத்தின் ஆசையாயிருந்தால் நரகத்தின் பேயாகவும்—இந்த விஷயத்தைக்

குறித்து மிகவும் கவனிக்கத்தக்க சாட்சியமாயிருக்கிறது. இந்தக் காரணத்தால் மூழுபரலோகமும், ஆசையின் வகுப்புகளுக்கும் இனங்களுக்கும் தக்கபடி, கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது ; அப்படியிருக்கையில், நரகமானது, அம்மாதிரி, ஆனால் எதிராய் விபாகிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீர் சூக்கும லோகத்திலுள்ள ஆசைகளைப் பற்றியாவது அல்லது கூட்டங்களைப் பற்றியாவது பேசுங்கால், அது ஒரே பொருளாகிறது. ஆசைகள் என்பதால், அன்பின் தொடர்ச்சிகளும் உற்பவங்களும் என்று அருத்தம் கொள்ளப்படுகிறது. அன்பை ஒரு ஊற்றுக்கும், ஆசைகளை அதிலிருந்து வரும் சிற்ருறுகளுக்கும் ஒப்பிடலாம். அதை இருதயத்துக்கும் ஒப்பிடலாம். அப்படிச் செய்கையில், ஆசைகளை அதில் எழுந்து, அதிலிருந்து தொடர்ந்த இரத்தக் குழாய்களுக்கு ஒப்பிடலாம். இருதயத்திலிருந்து இரத்தத்தைக் கொண்டுபோகிற இரத்தக் குழாய்கள், அதன் விரிவுகளாக இருக்கிறதென, ஒவ்வொரு விஷயத்திலும் ஒத்திருக்கிற தென்பது அறிவுக்கு எட்டிய சங்கதி ; இருதயத்திலிருந்து சுத்த இரத்தக் குழாய்கள் மூலமாயும், சுத்த இரத்தக் குழாய்களிலிருந்து கெட்ட இரத்த குழாய்களுக்கும், மறுபடியும் இருதயத்துக்கும், இரத்த சுற்றோட்டமிருக்கிறது. ரூபங்களாக உபயோகங்களை விளைவித்து, அவைகள் அன்பில் எழுந்து அதிலிருந்து தொடர்ந்து வருவதால், ஆசைகளின் சங்கதியும் அம்மாதிரி தான்; இவைகளில், உபயோகங்களின் முதலானதிலிருந்து இறுதியானது வரையில் சென்று, இவைகளிலிருந்து தாங்கள் உற்பத்தியான அன்பிற்கு திரும்புகின்றன. இவைகளினால் ஆசையானது, அதன் சாரத்தில் அன்பென்றும், அப்படி யிருக்கையில், உபயோகமானது அதன் வடிவத்தில்

2) அன்பு என்றும், இவைகளால் விசதமாகிறது. ஆசை

களின் நோக்கங்கள் அல்லது முடிவுகள் உபயோகங்களென்றும், ஆகையால் இந்த பதார்த்தங்கள் உபயோகங்கள் என்பதும், அவைகள் மூலமாக தங்கள் உழைப்புகளையும், கடமைகளையும், தொழில்களையும் நிறை வேற்றுகிறதும், அவைகளில், ஆதியிலிருந்து இறுதியான நோக்கத்துக்கும், இறுதியிலிருந்து முதன்மையான நோக்கத்துக்கும் அவைகள் செல்லுகிற ஆசைகளின் பிரதிமைகளாயிருப்பதால், அவைகள் இருக்கிற அதே ரூபங்கள் காரியங்களென்பதும், இதன் பலனாக இருக்கிறது. இவைகளிலிருந்து அன்பு தனியாய் சூனியமென்றும், உபயோகத்தின் ஏதுவினால் அது ஒரு பொருளாகின்றதென்றும், உபயோகத்தின் ஆசை ஒரு வடிவத்திலிருந்தாலொழிய, ஒரு அபிப்பிராயமே தவிர வேறொன்றுமில்லை என்றும், உருவத்திலுள்ள உபயோகத்தின் ஆசை சத்துவம் தவிர வேறு ஒன்றுமில்லை என்றும் அப்படியிருக்கையில் அந்த ஆசையானது தொழில் படுங்கால், முதலில் ஒரு பொருளாகிறதென்றும், இவைகளிலிருந்து யார் அறிந்துகொள்ள மாட்டார்கள்? கருதிய இந்த தொழில், அதன் சாரத்தில் ஆசையாயிருக்கிற உபயோகமாகவே இருக்கிறது. இப்பொழுது, ஆசைகள் உபயோகங்களின் சாரங்களாயிருப்பதாலும், உபயோகங்கள் அவைகளின் பதார்த்தங்களாயிருப்பதாலும், எத்தனை ஆசைகள் இருக்கிறதோ அவ்வளவு உபயோகங்களிருக்கின்றது என்று ஏற்படுகிறது.

X. ஆசைகளின் வகுப்புகளும் இனங்களும், இனங்களின் வித்தியாசங்களும் அனந்தமிருக்கின்றன; உபயோகங்களின் சங்கதியும் அப்படியே.

இது மானிட சரீரத்தினின்றும், மானிட வர்க்கத்தினின்றும், தேவதா சம்பந்தமான பரலோகத்திலிருந்தும், பிராணிவர்க்கம், விருக்ஷவர்க்கம், இவைகளில் இரண்டிலிருந்தும், இது விசதமாகிறது. இவைகள் ஒவ்வொன்றிலும், கணக்கற்ற வகுப்புகளும், இனங்களும், ஆசைகள் அல்லது உபயோகங்களின் வித்தியாசங்களும இருக்கின்றன. ஏனென்றால், பொருள்கள் ஒரே தன்மையானதாயில்லாமல், வேவ்வேறாயிருக்கிறது. இவைகளும் கூட வேறுபடுத்தப் படுகிறதினால், இந்த வேற்றுமை, எவ்விடத்திலும் வகுப்புகள் என்றும், இனங்களென்றும் விசேஷித்தறியப்படுகிறது. முடிவற்ற பொருளிடமிருந்து உண்டாகிறபடியினால், வித்தியாசங்களும் தாமே முடிவற்றதாயிருக்கின்றன. சிருட்டி நாள் முதல், எந்த இரண்டும் ஏற்றக் குறைச்சலில்லாமலிருக்கிறதும், அனந்த காலம் வரையில் அப்படியிருக்க கூடாததுமான, மானிட வதனங்களிலிருந்து, இதுதான் சங்கதி என்று, ஒவ்வொருவனும் தெரிந்து கொள்ளலாம். மானிட சரீரத்தில் எந்த மற்றதோடும் ஒரே தன்மையுள்ளதான, எல்லாவற்றிலும் சிறிய பொருள்கூட இல்லை. ஆசைகளுக்கும் அதன் உபயோகங்களுக்கும் சங்கதி அம்மாதிரி தான். ஆசை என்பதும் அன்பு என்பதும் என்னவென்று கேட்கும்படியாக, ஆசைகளோடும், அதனால் அவைகளின் உபயோகங்களோடும் சங்கதி ஒருமாதிரி என்று தெரிந்து கொள்ளாமல் மனிதனானவன் அவ்வளவு முழுமையும் பேதமையானவனாயிருக்கிறான்; ஆகையால், உயிராகவே இருக்கிற பரம இச்சாசத்தியிலிருந்து, அங்கே எல்லாம் ஆசைகளாயிருக்கிற பரலோகத்திலிருந்து மாத்திரம் மேற் சொல்லியது திருஷ்டாந்தப்படுத்தக் கூடும். அங்கே, உயிராயிருக்கிற பரம இச்சாசத்தி இரண்டு இராச்சியங்களாக பேதம் காட்டப்படுகிறது; ஒன்றில், •கர்த்தரிடத்து அன்பு

அரசு புரிகிறது ; மற்றதில், அயலானிடத்து அன்பு ஆட்சி செய்கிறது. 'கர்த்தரிடத்து அன்பு என்பது, அவைகளின் உற்பத்திஸ்தானத்தைக் குறித்த உபயோகங்களை அகப் படுத்துகிறது, அயலானிடத்து அன்பு பதார்த்தத்தைக் குறித்த உபயோகங்களை ஏற்றுகிறது. உயிராகவே இருக் கிற பரம இச்சாசத்தி, மாகாணங்களென்றும், இவைகள் மறுபடியும் கூட்டங்கள் கூட்டங்களாகவும், குடும்பங்கள் வீடுகளாகவும் கூப்பிடக் கூடிய குறைந்த இராச்சியங்களாக இன்னும் விசேஷித்தறியப்படுகின்றன. பரம இச்சாசத்தியின் பேதங்கள், வகுப்புகளாகவும் இனங்களாகவும், இவைகளை மறுபடியும், வித்தியாசங்கள் என்பதால் அருத்தம் கொள்ளு கிற அவைகளின் பாகங்களாகவும் பரலோகங்களில் இவ்வி தமாய் இருக்கின்றன. ஒவ்வொரு தேவனும் ஆசையும், உபயோகமாகவும் கூட இருப்பதால், ஆசைகளும், உப யோகங்களும் கூட இம்மாதிரி வேறுபடுத்து படுகிறது என்பது ஏற்படுகிறது.

2) நரகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் பரலோகத்தி லுள்ள பொருள்களுக்கு எதிரிடையாயிருப்பதால், அப் படியே அன்பு கூட இருக்கிறது. மரணமாகவே யிருக்கிற பிசாச சம்பந்தமான அன்பு, அதில் தன்னைத் தானே நேசித்தல் ஆட்சி செய்கிற ஒன்றும், மற்றொன்றில் உல கத்தை நேசித்தல் ஆட்சி செய்கிறதாகிய மற்றொன்றுமாகிய இரண்டு இராச்சியங்களாக அங்கே கூட வகையறுக்கப் பட்டிருக்கிறது. தன்னைத் தானே நேசித்தல், தன்னிட மிருந்து வரும் உற்பத்தி ஸ்தானமாக தீங்கான உபயோகங் களைச் சேர்க்கிறது ; உலகத்தை நேசித்தல், பதார்த்தத்தைக் குறித்த தீங்கான உபயோகங்களைக் கலக்கிறது. தன்னிட மிருந்து செய்யப்படுகின்றபடியினால் இந்த உபயோகங்கள் தனக்காககூடச் செய்யப்படுகின்றன ; ஏனென்றால், எல்லா

அன்பும், அது வருகிறதிலிருந்து வட்டம்போல் அதற்கே திரும்புகிறது. அந்த பிசாசு சம்பந்தமான அன்பு கூட மாகாணங்களாவும், இவைகள் மறுபடியும் கூட்டமாகவும், இம்மாதிரியே இன்னும் பலவிதமாய் விசேஷித்து அறியப் படுகிறது.

மானிட சரீரத்தில் அதைப்போன்ற ஆசைகளிடவும், உபயோகங்களிடவும்கூட வேறுபாடுகளிருக்கின்றன; ஏனென்றால், மேற்கூறியபடி மனிதனைச் சேர்ந்த எல்லாப் பொருள்களுக்கும் பரலோகத்திலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் காரணகாரிய சம்பந்தம் இருக்கின்றது. இருதயமும் சுவாசாசயங்களும் பரலோகத்தின் இரண்டு இராச்சியங்களுக்கு ஒத்திருக்கின்றன; கைகால்களும், தொழில்படும் அங்கங்களும், ஆந்திரிகமும் பரலோகத்தின் மகாணங்களுக்கு ஒத்திருக்கின்றன; ஒவ்வொரு கால்போன்ற அவயவம், தொழில் படும் அங்கம், ஆந்திரிகம் இவைகளின் அங்க சம்பந்தமான கட்டடம், பரலோகத்திலுள்ள கூட்டங்களுக்கு ஒத்திருக்கின்றன. இந்தப் பொருள்கள், பொதுவாயும் சிறப்பாயும் உபயோகங்களாக இருப்பதாலும், அன்பாயிருக்கிற உயிரிலிருந்து உபயோகங்கள் ஜீவிக்கிறபடியினாலும், அவைகளின் உயிரை, உபயோகத்தின் ஆசை என்பதைத் தவிர வேறொன்றாகச் சொல்ல முடியாது. முன்னமே சொல்லியபடி, பரலோகத்தைப்போல், இது ஒரு மனிதனாக கர்த்தர் முன்பாக இருப்பதால், மானிட சரீரத்திலும், பரலோகத்திலும் கூட அது இருப்பதுபோல், அம்மாதிரியேகூட முழு மானிடவர்க்கத்திலும் அது இருக்கிறது. பூமியின் பிராணிகளும், செடிகளும் அதைப் போன்று வகுப்புகளாகவும் இனங்களாகவும், இவைகளின் வித்தியாசங்களாகவும் விசேஷித்து அறியப்படுகிறதென்று, நன்றாய்த் தெரிந்திருக்கிறது. பிராணிவர்க்கத்தில்கூட

3) “ இரண்டு சர்வ வியாபகமானவைகளிருக்கின்றன; ஒன்றில், பூமியின் மிருகங்களும், மற்றதில், பரலோகத்து பட்சிகளு மிருக்கின்றன. மேலும் விருக்ஷ வர்க்கத்திலும் இரண்டு சர்வ வியாபகமானவைகளிருக்கின்றன ; ஒன்றில், பழம் கொடுக்கும் மரங்களும், மற்றதில், விதையை உற்பத்தி செய்யும் செடிகளுமிருக்கின்றன. முன் சொன்னது பின் சொன்னதுமாகிய இரண்டிலுமிருந்து, ஆசையின் வகுப்புகளும், இனங்களும், இனங்களின் வித்தியாசங்களும் அனந்தம்” இருக்கின்றதாக அறியக் கூடும். முன்னமே சொல்லிய படி ஸ்தூலமான ஆசைகள் பிராணிகளின் ஆன்மாக்களாக இருப்பதாலும், ஆசைகளுக்குச் சேர்ந்த உபயோகங்கள் செடிகளின் ஆன்மாக்களாக இருப்பதாலும், விஷயம் உபயோகங்களுக்கும் அதைப் போன்று இருக்கிறது.

## XI. ஆசைகளிடவும் உபயோகங்களிடவும் மாற்றங்கள் இருக்கின்றன.

தொடர்ச்சியான மாற்றங்களும் வேறான மாற்றங்களு மிருக்கின்றன ; இவைகள் இரண்டும், சகஜ உலகமானலும் சூக்கும உலகமானலும், அவைகளில் ஒவ்வொரு உருவத்திலுமிருக்கின்றன. ஒவ்வொருவனும் தொடர்ச்சி மாற்றங்கள் தெரிந்திருக்கிறான் ; ஆனல் சிலருக்கு மட்டும் பின்ன மாற்றங்கள் தெரியும் ; பின் கூறியவைகள் தெரியாதவர்கள், பதார்த்தங்களின் காரணங்களை பரிசீலனம் செய்யும் போது, கைகளால் இருட்டில் தடவுகிறவர் போலிருக்கிறார்கள். இரண்டு வித மாற்றங்களும் மோட்சலோகமும் நரகமும் (கெ. 38.) என்கிற நூலில் விவரணமாய் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்த தொடர்ச்சியான மாற்றங்கள், வெளிச்சத்தின் மாற்றங்கள் இருட்டுக்கும், சூடு குளிர்ச்சிக்கும், அபூர்வம் அடர்த்திக்கும் செல்லு

வதுபோல் இருக்கின்றன. பரலோகத்திலுள்ள ஒவ்வொரு கூட்டத்திலும், வெளிச்சம், சூடு, ஞானம், அன்பு இவைகளின் திட்டங்கள் இந்த சுபாவமுள்ளதா யிருக்கின்றன. கூட்டத்தின் மத்தியிலுள்ளவர்கள், அதற்கு மையத்திலிருந்து, தூரத்திற்குத் தக்கபடி, வெளிச்சக் குறைவு இருக்கிற இறுதியிலுள்ளவைகளில் இருக்கப்பட்டவர்களை விட மிகவும் தெளிந்த வெளிச்சத்தி லிருக்கிறார்கள். கூட்டத்தின் மத்தியில் அல்லது மையத்தில் இருப்பவர்கள், ஞானத்தின் வெளிச்சத்திலிருப்பதாலும்; இறுதியானவைகள் அல்லது சுற்றளவுகளில் இருக்கப்பட்டவர்கள், ஞானத்தின் இருட்டில் இருந்து அவிவேகிகளாயிருப்பதாலும், விஷயம் ஞானத்துக்கும் அதைப் போன்று இருக்கிறது. கூட்டங்களில் அன்பு விஷயமும் அதைப் போன்று தானிருக்கிறது. ஞானத்தை உற்பத்தி செய்கிற அன்பின் ஆசைகளும், அங்கே வாசம் செய்பவர்களின் உயிரை உருவாக்குகிற உபயோகங்களின் ஆசைகளும், நடு அல்லது மையத்திலிருந்து, இறுதியானவைகள் அல்லது சுற்றளவுகளுக்குத் தொடர்ச்சியாய் குறைகின்றன. இவைகள் தொடர்ச்சியான மாற்றங்களா யிருக்கின்றன.

2) ஆனால், பின்ன மாற்றங்கள் முழுமையும் வேறானதாயிருக்கின்றன; இவைகள், ஒரு சமதளத்தில் சுற்றுமுள்ள பக்கங்களுக்கல்லாமல், மிகவும் உயரமானதிலிருந்து மிகவும் தாழ்ந்ததற்குச் செல்கின்றன; ஆகையால், அவைகள் கீழே இறங்கும் மாற்றங்கள் எனப்படும். மறுபடியும், இறுதியான காரியத்துக்குக் கூட காரணமாகிற, நிமித்த காரணங்களைப்போலவும், காரியங்களைப்போலவும், அவைகள் வேறானதாயிருக்கின்றன. முடிவான காரியத்துக்குக் கூட மறுபடியும் உற்பத்தி செய்கிற சக்திகளாகிற, காரிய சக்திகளுக்கு அவைகள் உற்பத்தி செய்கிற சக்தியின்

சம்பந்தத்தில் நிற்கின்றன. சுருங்கச் சொல்லில், ஒரு பதார்த்தம், இன்னொரு பதார்த்தத்திலிருந்து, இம்மாதிரியாக, முதலானதிலிருந்து அல்லது மிகவும் உயரமானதிலிருந்து, நிர்மாணம் நிற்கும் இறுதியானது அல்லது மிகவும் தாழ்ந்ததற்கு, ஏற்படும் நிர்மாணங்களின் திட்டங்களாயிருக்கின்றன. ஆகையால், இந்த திட்டங்கள், முந்திய பொருள்களாயும், பிந்திய பொருள்களாயும் மிகவும் உயர்ந்தவைகளாயும், மிகவும் தாழ்ந்த பொருள்களாயுமிருக்கின்றன. எல்லா சிருட்டியும் இந்த திட்டங்களின் வழி வகைகளால் உண்டாகின்றன; எல்லா உற்பவமும் அவைகளின் பயனாகவுமிருக்கின்றது; அதற்குச் சமமாக சகஜ உலகத்தில் எல்லாம் ஒன்றாய் திரளுகையும் அவைகளின் பயனுயிருக்கிறது. மிசரமான சுபாவமுடைய எதையாவது நீர் விபாகித்தால், எல்லாவற்றிற்கும் பொதுவாகிற கடைசியானது வரையிலும் சேர்த்து, அதிலிருக்கும் ஒன்று மற்றொன்றிலிருந்து உண்டாகிறதென்று அறிந்துகொள்வீர்.

3) மூன்று தேவதா சம்பந்தமான உலகங்களும், இந்த மாற்றங்களால் ஒன்று மற்றொன்றிலிருந்து வேறுயிருக்கின்றன; ஆகையால் ஒன்று மற்றொன்றின் மேலிருக்கிறது. தனது மனதுக்குச் சேர்ந்த மனிதனிட உள்ளானவைகள், இந்த மாற்றங்களால், ஒன்று மற்றொன்றிலிருந்து வேறாய் கூட இருக்கின்றன; தேவர்களின் பரலோகங்களிலும், மனிதர்களிட உட்பொருள்களிலும், ஞானமாயிருக்கிற வெளிச்சத்துக்கும், அன்பாயிருக்கிற சூட்டுக்கும் விஷயம் அம்மாதிரியே இருக்கிறது. கர்த்தர், சூரியனுகை அவரிடமிருந்து வரும் ஒளியுமே அங்கிருந்து புறப்படும் சூடே கூட, அதைப்போன்று வேறுனதா யிருக்கின்றன. ஆகையால் உலகத்தின் மத்தியான வெளிச்சத்தை ஆயிரம் மடங்கு விசேஷித்திருக்கும்படியாக, மூன்றுவது பரமண்ட

ல்த்திலுள்ள வெளிச்சம் அவ்வளவு அதிக பிரகாசமாகவும், இரண்டாவது பரமண்டலத்திலிருக்கும் வெளிச்சம் அவ்வளவு பிரகாசமாகவுமிருக்கிறது. ஞானத்தோடு விஷயம் அப்படியே; ஏனென்றால், சூக்கும லோகத்தில் வெளிச்சமும் ஞானமும் சமமான சம்பூரண திட்டத்தை உடைத்தாயிருக்கின்றன. ஆசைகளின் திட்டங்கள் எல்லாம் அம்மாதிரிதான்; ஆசைகளுக்கு விஷயம் இதுவாக யிருப்பதால், ஆசைகளின் பதார்த்தங்கள் உபயோகங்களாயிருப்பதைக்கொண்டு, உபயோகங்களின் திட்டங்களுக்கும் கூட அப்படியே இருக்கிறது. ஸதூலமானதும் சூக்குமமானதுமாகிய இரண்டின் ஒவ்வொரு வடிவத்திலும், அபூர்வபரிணம மாற்றங்களும் அத்துடன் தொடர்ச்சியான மாற்றங்களும் இருக்கிறதாக இன்னும் கவனிக்கவேண்டும். வேறுவேறான திட்டங்களில்லாமல், ஒரு உருவமானது காரணம் அல்லது ஆன்மாவை உருவாக்குகிற அந்த உள்ளான குணத்தைப் பெற்றிருக்காது; தொடர்ச்சியான திட்டங்களிலில்லாமல் அதற்கு யாதொரு விசாலமும் தோற்றமுமிருக்காது.

XII. ஒவ்வொரு உபயோகமும், சமுதாய உபயோகத்திலிருந்து தன்னிட உயிரை அடைகிறது. உபயோகத்தின், ஆவசியகமானதும், உபயோகமானதும், இன்பமானதுமான பொருள்கள், உபயோகத்தின் லக்ஷணத்துக்கும், அதன் ஆசையின் லக்ஷணத்துக்கும் தகுந்தபடி, அதிலிருந்து பாய்கிறது.

இது இன்னும் வெளியாகாத ஒரு இரகசியம். அந்த உண்மையானது, நிஜமாகவே, உலகத்தில் ஏறக்குறைய தெளிவாயிருக்கிறது. ஆனால் அதன் லக்ஷணம் அறிந்து

கொள்ளும்படி சக்தியுண்டாக்க அவ்வளவு தெளிவாய் அது இல்லை: ஏனென்றால், உலகத்தில் ஒவ்வொரு மனிதனும், உலகத்தாரிடமிருந்து, வாழ்க்கையின் ஆவசியமானதும், உபயோகமானதும், இன்பமுள்ளதுமான பொருள்களை, தன்னிட தொழிலின் மேன்மைக்கும், பரப்புக்கும் தக்கபடி அடைகிறான். சிலர் உலகத்தாரால் பிரதி யுபகரிக்கப்படுகிறார்கள்; அதே மூலத்தில் சிலர் தனைவந்தனுகிறார்கள். உலகத்தார், பிரதி பலனும் ஐசுவரியமும், பாய்கிற ஒரு ஏரியைப் போலிருக்கிறார்கள். ஆசைக்குச் சேர்ந்த உபயோகங்களும் அலுவல்களும், அந்தப் பொருள்களை கற்பித்து உண்டாக்குகின்றன. ஆயினும் இவைகளிலெல்லாமிருந்து, உபயோகங்கள் தாமே, தங்களிடமே இவ்வித குணங்கள் உடைத்தாயிருப்பதாக, தீர்மானம் செய்ய முடியாது; ஏனென்றால், உலகத்தில், நல்லவர்களுடன் கெட்டவர்களும், தீமையான காரியங்களைச் செய்பவர்களுடன் யாதொரு உபயோகங்களைச் செய்யாதவர்களும், நல்ல உபயோகங்களைச் செய்பவர்களோடு கூட சில வேலைகளில் சமமாக பிரதிபலன் செலுத்தப்பட்டு ஐசுவரியமுள்ளவர்களாக்கப் படுகிறார்கள். உபயோகங்கள் மறைக்கபடாமல் வைக்கப்படுகிறதும், அவைகளிட உற்பத்தியின் சுபாவமும், பரலோகத்தில் கடவுளாயிருக்கிற ஞான மனிதனில் அவர்களிருக்கு மிடமும் வெளிபடுத்துப் படுகிறதுமான ஞானலோகத்தில் அது பேதமாயிருக்கிறது. அங்கே ஒவ்வொருவனும், உபயோகத்தின் மேன்மைக்கும், அதேகாலத்தில் உபயோகத்தின் ஆசைக்கும் தக்கபடி, பரிசு அளிக்கப்படுகிறான். எந்த சோம்பேறியும், எந்த சோம்பலான நாடோடியும், மற்றவர்களின் சிந்தனைகளையும் உழைப்புகளையும் பேசும் எந்த வீம்பனும் அங்கே ஒப்புக்கொள்ளுகிறதில்லை; ஆனால் ஒவ்வொருவனும், தன்னிட

தொழிலில் உழைப்புள்ளவனுகவும், சுறுசுறுப்பானவனுக வும் சிரத்தையுள்ளவனுகவும் பாடுபடும் படியானவனுகவும் இருக்கவேண்டும்; மேலும், கௌரவத்தையும் வெகு மதியை யும் முதலில்லாமல், இரண்டாவது அல்லது மூன்ருவது இடத்தில் வைக்கவேண்டும் இவைகளை அனுசரித்து, வாழ்க்கையின் ஆவசியகமானதும், உபயோகமானதும், இன்பமானது மான பொருள்கள் அவர்களிடம் பாய்கிறது.

2) இந்த உலகத்தில் போல, ஒருவன் பொருட்டாக அவைகள் சம்பாதிக்கப்படாமல், நொடி நேரத்தில் உள் பொருளாய், கர்த்தரால் தாராளமாய் கொடுக்கப்படுகிற படியினுல், பொதுவானதிலிருந்து இந்த பொருள்கள் வெளி வருகின்றன. ஞானலோகத்தில், எல்லா சிந்தனைகளிடவும் ஆசைகளிடவும் பரப்பும் போக்குவரவும், பரலோகத்தில் அவைகளின் குணத்துக்கு தக்கபடி, உபயோகத்தினிட ஆசைகளின் பரப்பும் போக்குவரவும் இருப்பதாலும், பர லோகத்திலுள்ளவர்களெல்லாம் உபயோகங்களால் மாறு தலுண்டாக்கப்பட்டு, சந்தோஷப்படுகிறபடியாலும், ஆகை யால் வாழ்க்கையின் அவசியமானதும், உபயோகமானதும் இன்பமானதுமான பொருள்கள், சாதாரணமானதிலிருந்து அதன் உபயோகத்துக்கும், உபயோகத்தின் பயனுக, உபயோகத்தைச் செய்கிறவனுக்கும், பின் பாய்ந்து திரும்பு கின்றன.

3) கர்த்தரால் தாராளமாய் கொடுக்கப்படுகிறதும் நொடி நேரத்தில் உள் பொருளாகிறதுமான, வாழ்க்கையின் அவசியமான பதார்த்தங்கள், ஆகாரமும், உடைகளும், வாசஸ்தானமு மாயிருக்கின்றன; தேவன் இருக்கப்பட்ட உபயோகத்துக்கு இவைகள் முழுமையும் ஒத்திருக்கின்றன. உபயோகத்துக்கு தக்கப்படி அழகாகவும் அதன் ஆசைக் குத் தக்கபடி போகமானதாகவும், மேஜைக்கும், வஸ்திரங்

களுக்கும், வீட்டிற்கும் இதர பற்பல அலங்காரங்களுடன், அவனுக்கு சந்தோஷத்துக்கு மூலமாயிருப்பதும், இந்த மூன்றுக்கும் கீழானதுமானவைகள் உபயோகங்களாயிருக்கின்றன. தன்னிட விவாகமான மனைவியுடனும், தன்னிட சிநேகிதர்களுடனும், தோழர்களுடனும், அவன் நேசிக்கப்பட்டவர்கள் எல்லாராலும், அவனே நேசிக்கிற எல்லாராலும் விபாகிக்கப் படுகிறதுமானவைகள் சந்தோஷமான பொருள்களாயிருக்கின்றன. இந்த அன்னியோன்னியமானதும், ஒன்றுக்கொன்று பதிலாய் வைக்கக் கூடியதுமான அன்பு, உபயோகத்தின் ஆசையிலிருந்து இருக்கிறது.

4) அவைகள் மனிதனிடத்திலிருப்பதால், பரமண்டலத்திலும் இவ்வித பொருள்கள் இருக்கின்றன; ஏனென்றால், பரமண்டலம், மனிதனில் எல்லா பொருள்களுக்கும் ஒத்திருக்கின்றன. மேலும் உபயோகத்திற்காக, உபயோகத்திலிருந்து, உபயோகத்தின் ஆசையில் இருக்கிற மனிதன், எல்லாவற்றிலும் சிறிய வடிவமாக பரலோகமாயிருக்கிறான். சமுதாய அவயவங்களின் அமைப்புகளிலிருந்து அதற்கு வேண்டியவைகளையும், உபயோகங்களையும், சந்தோஷங்களையும் அடையாத ஒரு அவயமும் ஒரு அவயவத்தின் எந்த பாகமும் அவனிடத்தில் இல்லை. அங்கே சமுதாயமானது பிரத்தியேகமானதை உபயோகத்துக்கு தக்கபடி மதிக்கிறது. ஒரு பாகமானது தன்னிட வேலைக்கு வேண்டியது யாதெனினும், அது அடுத்த பாகங்களிலிருந்தும், இவைகளுக்கு, அவைகளுக்கு அடுத்த பாகங்களிலிருந்தும், இம்மாதிரியாக முழுதிலிருந்தும், அதற்கு கொண்டுபோகப் படுகிறது; அப்படியிருக்கையில், இதுவும், வேண்டியபடிக்கு தன்னிட சொந்தத்திலிருந்து மற்றவைகளுக்கு, அதைப்போன்று பகிர்ந்து கொடுக்கிறது. கர்த்தரிடத்தில் அது அதைப்போன்றிருப்பதால், தெய்வீக பரம

மனிதனில் விஷயம் அப்படியே யிருக்கிறது. ஒவ்வொரு உபயோகமும், முழு சரீரத்தின் எல்லா உபயோகங்களின் பிரதிநிதி என்றும், ஆதலால், ஒவ்வொரு உபயோகத்திலும், பிரபஞ்சத்தின் அபிப்பிராயமிருக்கிறதென்றும், இதன் பலனாக மனிதனிடம் பிரதிமை இருக்கிறதென்றும், இவைகளிலிருந்து விசதமாகிறது. பரலோகத்தின் தேவன். உபயோகத்துக்குத் தக்கபடி மனிதன் என்று தொடருகிறது; உண்மையில் ஒருவன் ஞானமாய்ப் பேசினால், உபயோகமென்பது மனித தேவனாயிருக்கிறது.

**XIII. உபயோகத்தின் அன்பில் ஒரு மனிதன் எவ்வளவு தூரம் இருக்கிறானோ, அவ்வளவு தூரம் அவன் கர்த்தரிலிருந்து, அவ்வளவு தூரம் அவரையும் அயலானையும் நேசித்து, ஒரு மனிதனாயிருக்கிறான்.**

கர்த்தரிடத்தில் அன்பு பாராட்டுதல், அயலானிடத்தில் அன்பு பாராட்டுதல், என்பது என்ன அருத்தம் கொள்ளப் படுகிறதென்றும், மேலும், கர்த்தரிருப்பதும், மனிதனாயிருப்பதும் என்பதின் அருத்தமும், உபயோகங்களின் அன்பிலிருந்து நாம் உபதேசிக்கப்படுகிறோம். கர்த்தரை நேசித்தலென்பது, அவரிடமிருந்தும் அவருக்காவும் உபயோகங்களைச் செய்தலென்று அருத்தம் கொள்ளப்படுகிறது. அயலானை நேசித்தலென்பது, திருச்சபைக்காகவும், ஒருவன் தேசத்திற்காகவும், மானிட கூட்டத்திற்காகவும், ஒருவனிட நகரவாச தோழர்களுக்காகவும், உபயோகங்களைச்செய்தலென்று அருத்தம் கொள்ளப்படுகிறது. கர்த்தரிருப்பது என்பது உபயோகமாயிருத்தல் என்றும், மனிதனாயிருப்பது என்பது கர்த்தரின் பொருட்டு அயலா

னுக்கு உபயோகங்களைச் செய்தல் என்றும் அருத்தம் கொள்ளுகிறது. ஒரு மனிதன் செய்கிற எல்லா உபயோகங் களும் கடவுளிடமிருந்து வருகிறபடியினால், "கர்த்தரை நேசித்தல்," என்பது அவரிடமிருந்து, அவருக்காக உப யோகங்களைச் செய்தல் என்கிற அருத்தம் கொள்ளுகிறது, ஏற்படுகிறது. நல்ல உபயோகங்கள், நல்லவைகள்; இவை கள் கர்த்தரிடமிருந்து வருகிறதென்பது தெரிந்த சங்கதி. இவைகளை நேசித்தலென்பது அவைகளைச் செய்தல், ஏனென்றால், ஒரு மனிதன் எதை நேசிக்கிறானோ, அதை அவன் செய்கிறான். எவனும் வேறு விதத்தில் கடவுளை நேசிக்க முடியாது; நன்மைகளாயிருக்கிற உப யோகங்கள், கர்த்தரிடமிருந்து வருகின்றன, ஆகையால் அவைகள் தெய்வீக பொருள்களாயிருக்கின்றன; உண்மை யில், அவைகள், மனிதனில் கடவுளாகவே இருக்கின்றன. கர்த்தர் நேசிக்கக்கூடிய பொருள்கள் இவ்விதமாயிருக் கின்றன. அவரிடசொந்த தெய்வீகமான பொருள்களால் தவிர, அன்பினால் எந்த மனிதனிடனும் அவரை ஒன்று படுத்தமுடியாது; அப்படியிருப்பதால், ஒரு மனிதனானவன், அவரை நேசிக்கும்படியான வல்லமையை வேறு விதமாய் கொடுக்கப்பட மாட்டான். ஏனென்றால், ஒரு மனிதன் கர்த்தரை அவரிடமிருந்தே நேசிக்க முடியாது; கர்த்தரே அவனை இழுத்து, தன்னுடன் சேர்த்துக் கொள்ளுகிறார். ஆகையினால் உபயோகங்களை அல்லாமல், கர்த்தரை ஒரு மனிதனாக நேசித்தல், நேசித்தலாகாததாயிருக்கும், அவரை தன்னிடமிருந்து நேசித்தலாகிறது. கர்த்தரிடமிருந்து நன்மைகளைச் செய்கிறவன், அவருக்காகவும்கூட அவை களைச் செய்கிறான். மூன்றாவது பரமண்டலத்திலிருக்கும் தேவர்களிருக்கிற சுவர்க்க சம்பந்தமான அன்பினால் இந்த யதார்த்தங்கள் திருஷ்டாந்தப்படுத்தப்படலாம். மற்ற பர

லோகத்திலிருக்கும், தேவர்களைவிட அதிகமாய், இவர்கள் கர்த்தரிடத்து அன்பிலிருக்கிறார்கள். உபயோகங்கள் தங்களிடம் கர்த்தராகிறதென்று கூறி, உபயோகங்களாயிருக்கிற, நன்மைகளைச் செய்வதைவிட, கர்த்தரை நேசித்தல், வேறொன்றுமில்லையென்று அவர்களுக்குத் தெரியும். வர்த்தகர்கள் தொழிலாளிகளுடன், குருக்கள், அதிகாரிகள் சம்பந்தப்பட்டவரையில், உபயோகங்களென்பதால், சேவை, தொழில், கருமம் இவைகளின் உபயோகங்களும் நன்மைகளுமென்று அவர்கள் அருத்தம் கொள்ளுகிறார்கள். அவர்கள் செய்யும் தொழில்களின் பயனாக வரும் நன்மைகளை அவர்கள் உபயோகங்களென்று சொல்லாமல், பிச்சைகளென்றும், நன்மைகளென்றும், தருமங்களென்றும்சொல்லுகிறார்கள்.

2) "அயலானை நேசித்தலென்பது," திருச்சபைக்கும் ஒருவனிட சுயதேசத்திற்கும், கூட்டத்திற்கும் ஒருவனிட நகரவாச தோழர்களுக்கும் உபயோகமானவைகளைச் செய்தல் என்கிற அருத்தம் கொள்ளுதல் என்பது, விசாலமானதும் வரைப்படுத்தியதுமான இரண்டு கருத்திலும் இவைகள் அயலானகிறபடியினல், ஏற்படுகிறது. ஒவ்வொருவனிட தொழிலுக்குச் சேர்ந்த உபயோகங்களின் சாதனங்களால் தவிர இவைகளை நேசிக்க முடியாது. ஒரு குருவானவர் தன்னைக் கேட்கிறவர்களை வைராக்கியத்திலிருந்து அவர்கள் மோட்சத்தின்பொருட்டுக் கற்பித்து வழிகாட்டினால், தன்னிட திருச்சபையையும், சுயதேசத்தையும், கூட்டத்தையும், நகரவாச தோழர்களையும், இம்மாதிரியாக தன்னிட அயலானை நேசிக்கிறார். ஒரு அரசனும் அவனிடகீழ் உத்தியோகஸ்தர்களும், பொது நன்மையின்பொருட்டு வைராக்கியத்திலிருந்து தங்கள் தொழில்களைச் செய்து

முடித்தால் திருச்சபையையும், அவர்களிட சுயதேசத்தை யும், கூட்டத்தையும், நகர தோழர்களையும், இம்மாதிரியாக அயலானை நேசிக்கிறார்கள். நியாயத்தின்பொருட்டு ஆவலி லிருந்து அவர்கள் நடந்தால், நியாயாதிபதிகளுக்கும், நிஷ்கபடத்தின் பொருட்டு அவர்கள் உற்சாகமாயிருந்தால், வர்த்தகர்களுக்கும், நேர்மையிலிருந்து நடந்தால், தொழி லாளிகளுக்கும், விசுவாசத்துடன் நடந்தால் சேவகர் களுக்கும், இவ்விதமாக மற்றவர்களுக்கும் விஷயம் அதே ஆகிறது. விசாலமானதும் எல்லைக்குள்பட்டதுமான இரண்டு கருத்திலும், கடவுளிடமிருந்து அயலானிடத்து அன்பை அவர்கள் உடைத்தாயிருக்கையில், இவர்கள் எல்லாரிடத்திலும், விசுவாசம், நேர்மை, நிஷ்கபடம், நீதி உற்சாகம் பரவியிருந்தால், ஒவ்வொருவனிட உபயோகத் தின் அன்பும் கர்த்தரிடமிருந்து வருகிறது. இருதயத் திலே, விசுவாசமுள்ளவனாகவும், நேர்மையானவனாகவும், நிஷ்கபடமானவனாகவும், நியாயமானவனாகவும் இருக்கிற வன் எவன் திருச்சபையையும், தன்னிட சுயதேசத்தையும், நகரவாச தோழர்களையும் நேசிக்காதவனாயிருக்கின்றான்? பதார்த்தத்தின் பொருட்டு என்பது அயலான், உபயோ கம், கர்த்தர் இவர்கள் பொருட்டு என்று அருத்தம் கொள் ளுகிற தென்றும், அயலானை நேசித்தல் என்பது அவர்க ளிட பதார்த்தங்களுக்கு உபயோகங்களைச் செய்தலென் றும், கர்த்தரை நேசித்தல், என்பது அவைகளின் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து உபயோகங்களைச் செய்த லென்றும், இம்மாதிரியாக, அன்பானது யாரிடமிருந்து வந்ததோ அவரிடம் திரும்பிப்போக வேண்டுமென்றும் இந்த யோசனை களால் இப்பொழுது விசதமாகிறது. எல்லா அன்பும் தன் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து, அன்பினால் அதன் பதார்த் தத்துக்கு, அதன் உற்பத்தி ஸ்தானமாகிய கடவுளிடமிருந்து

வரும் அன்பிற்குத் திரும்புகிறது; அப்படித் திரும்புதல் அதன் அன்னியோன்னிய பரிமாற்றமாகிறது. நேசித்த லென்பது செய்தலாகிறபடியினால், அன்பானது, உபயோகங் களாயிருக்கிற செய்கைகளால் இடைவிடாமல் போகிறதும் திரும்பி வருதலுமாயிருக்கிறது; ஏனென்றால், செய்கை யானது அன்பின் சிறந்த முடிவாகவும், அது அதில் ஜீவிக் கிறதாகவும், இருப்பதால், அன்பு செய்கையாகா விட்டால், அது அன்பில் இருக்காமல் ஒழிகிறது.

3) அவன் அவ்வளவு தூரம் திருச்சபையிலும், அவ் வளவு தூரம் பரமண்டலத்திலும் இருப்பதால், மனிதனு னவன் உபயோகத்தின் அன்பில் எவ்வளவு தூரம் இருக்கின் றானோ, அவன் கர்த்தரில் அவ்வளவு தூரம் இருக்கிறான். உபயோகங்களைச் செய்வதால் அவைகளை நேசிக்கிறவர்கள் எல்லாராலும், உயர்ந்ததும், தாழ்ந்ததும், உள்ளானதும், வெளியானதுமான அங்கங்கள் என்று சொல்லப்பட்டு அவ ரிட ரூபங்கள், உருவாக்கப்பட்ட திருச்சபையும் பரமண்டல மும் ஒரு மனிதனாக, கர்த்தரிடமிருந்து வருகின்றன. ஞானியாயிருப்பதால், மனிதர்களால் அல்லாமல், அவர்கள் செய்யும் உபயோகங்களால், அது உண்டாயிருப்பதால், உபயோகங்களே அந்த மனிதனைக் கூட்டுகிறது. மேலும், கர்த்தரிடமிருந்து உபயோகங்களின் அன்பை அடைகிறவர் கள் எல்லாம் அந்த மனிதனிலிருக்கிறார்கள்; அயலானுக் காகவும், உபயோகங்களுக்காகவும், கர்த்தருக்காகவும் அவைகளைச் செய்கிறவர்கள் இவர்கள்தான். அந்த மனிதன் கர்த்தரிட மிருந்துவரும் தெய்வீக வெளிப்பாடாயிருப்ப தாலும், வெளிவரும் தெய்வசத்தி, திருச்சபையிலும் பர மண்டலத்திலும், கர்த்தரா யிருப்பதாலும், இவர்கள் எல் லாம் கர்த்தரில் இருப்பதாகத் தொடருகிறது.

4) பொதுவான அல்லது ஜனசம்பந்தமான நன்மைக்கு எந்த விஷயத்திலாவது உபயோகமானதா யிருக்கிற ஒவ்வொரு உபயோகமும் உபயோகத்தின் குணத்தை அனுசரித்தும், அதே காலத்தில் அதின் அன்பின் குணத்தை அனுசரித்தும், அழகும் பூரணமுமான மனிதனுயிருப்பதால், இவைகளும் ஒரு மனிதனுயிருக்கின்றன வென்பது ஏற்படுகிறது. அதிலிருந்து உண்டாகிற அங்கே யிருக்கும் முழுவதையும் அதன் சொந்தமாகப் பார்ப்பதாலும், அதனல் உயிரோடிருக்கிற ஒவ்வொரு பாகத்தையும் தன்னிட சொந்தமாக, முழுவதும் மதிக்கிறபடியினுலும், மானிட சரீரத்தில் ஒவ்வொரு பிரத்தியேகமான பொருளிலும், அதன் உபயோகத்திலிருந்து, முழுவதின் பிரதிமை (அபிப்பிராயம்) இருக்கிறதென்பது இதற்குக் காரணமாயிருக்கிறது. பிரத்தியேகமான பாகங்களிலிருக்கிற முழுவதின் இந்தப் பிரதிமையிலிருந்து அங்கே யிருக்கும், ஒவ்வொரு உபயோகமும், மிகவும் சிறியதும், மிகவும் பெரியதுமான பாகங்கள் இரண்டிலும், ஒரு மனிதனுயிருக்கிறது; பிரத்தியேகமானதாலும், சமுதாயமானதாலும், உருவங்கள் சமமாய், அங்க சம்பந்தமுள்ளவைகளா யிருக்கின்றன. எல்லா பரிபூரணமும், உள்ளான பொருள்கள் சார்பாக பெருகுகிறபடியினுல், நிஜமாகவே, உள்ளிருக்கும் மூலபாகத்தின் பாகங்கள், மிசிரமான பாகங்களை விட அதிகமாய் மனிதர்களாயிருக்கிறார்கள். ஏனென்ருல் மனிதனிலிருக்கும் எல்லா அங்க சம்பந்தமான உருவங்களும் உள்ளான வடிவங்களால் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளும், மனிதனிட மனதின் ஒவ்வொரு அன்பும் சிந்தனையோடும் அவைகளினுல் போக்கு வரவு உண்டாகிற மிகவும் உள்ளுக்குள்ளான பாகத்திற்கும்கூட இன்னும் அதிக உள்ளான உருவங்களிலிருந்து இவைகள் கட்டப்பட்டிருக்

கின்றன. ஏனென்றால், அதன் எல்லா விரிவிலும், ஒரு மனிதனிட மனமானது, அவனிட சரீரத்தின் ஒவ்வொன்றுக்கும் விசாலிக்கிறது ; அது உயிரின் அதே உருவமாகவே யிருக்கிறபடியினால் சரீரத்தின் எல்லாப் பொருள்களிலும் அது தொழில் படுகிறது. மனதுக்கு இந்த வயலிருந்தாலொழிய, ஒரு மனிதன் மனது மாகான், மனிதனுமாகான். ஆதலால், மனிதனிட சித்தத்தின் தீர்ப்பும், சங்கற்பமும், ஒரு நொடிநேரத்தில் நிச்சயிக்கப்படுகிறதென்றும், அவைகள் புறப்பட்டுப்போய், செய்கைகளில் இறுதியாகின்றதென்றும் கூட தொடருகிறது. சித்தமும் சிந்தனையும் தானே அவைகளுக்குமேல் அல்லாமல் அவைகளிலேயே இருந்ததுபோல் சரியாய் இது சம்பவிக்கிறது.

மனிதனில் ஒவ்வொரு, எல்லாவற்றிலும் சிறிய பொருளும், அதன் உபயோகத்தினால் மனிதனென்பது, பரமார்த்த கருத்தால் போல், ஜடமான அபிப்பிராயத்தால் அவ்வளவு சுலபமாய்த் தெரிந்துகொள்ளப்படுகிறதில்லை. பரமார்த்த கருத்தில் ஒரு மனிதன் மனிதனல்ல ; ஆனால் ஒரு உபயோகமாயிருக்கிறான். ஏனென்றால், மாயை, இடம், காலம், இவைகளுக்குச் சம்பந்தமில்லாமையால், பரமார்த்த கருத்து, மானிட தன்மையின் எவ்வித அபிப்பிராயத்தையும், ஆலிங்கனம் செய்கிறதில்லை. ஆகையினால், பரலோகத்தில் ஒருவன் மற்றவனைப் பார்க்கும்போது, அவன் நிஜமாகவே, மனிதனைப் பார்க்கிறான். ஆனால் அவன் அவனை ஒரு உபயோகமாக நினைக்கிறான். மேலும் ஒரு தெய்வலோகத்தான் தானிருக்கிற பிரயோசனத்துக்குத் தக்கபடி முகத்தில் தோன்றுகிறான் ; அந்த உபயோகத்தின் ஆசை அவன் முகத்தின் உயிரை நியமிக்கிறது. ஒவ்வொரு நல்ல உபயோகமும் உருவத்தில் மனிதனென்று இவைகளினால் விசதமாகிறது.

XIV. தங்களையே எல்லாப் பொருள்களுக்கும் மேலாயும், உலகத்தைத் தாங்களேயாகவும் நேசிக்கிறவர்கள் மனிதர்களுமல்ல, கடவுளில் அவர்களிருக்கிறதுமில்லை.

உலகத்தையும் தங்களையும் நேசிக்கிறவர்கள் நல்ல உபயோகங்களைச் செய்யவும் கூடும். அவர்கள் அவைகளையும் செய்துகொண்டே இருக்கிறார்கள்; ஆனால் கர்த்தரிடமிருந்து அயலானுக்காகவு மல்லாமல், தங்களிடமிருந்து தங்களுக்காகவும், அவைகளிருக்கிற படியினால் உபயோகத்தின் பொருட்டு கொள்ளும் அவர்களிட ஆசைகள் நல்லவைகளல்ல. விசாலமானதும் எல்லைப் படுத்தியதுமான கருத்தில் அதாவது திருச்சபைக்காகவும் தங்களிட சுயதேசத்திற்கும், கூட்டத்திற்கும், தங்களிட நகர தோழர்களுக்குமாகத் தெரிந்து கொள்ளப்பட்டபடி அயலானுக்காக அவைகளிருப்பதாக அவர்கள், நிஜமாகவே, சொல்லி மற்றவர்களை வசப்படுத்துகிறார்கள். வேதத்திலுள்ள கடவுளிட கட்டளைகளின் ஆதாரத்தின் பேரில் நிறுத்தப் பட்டிருப்பதால், சிலர் அவைகள் அவர் பொருட்டு இருப்பதாகவும், தங்களிடமிருந்தும், அவைகள் தங்களுக்கு மறுபடியும் திரும்பும் படியாக அயலானுக்காகவும் இருப்பதால், அவர்கள் செய்யும் உபயோகங்கள் தங்களுக்காகவே இருந்தாலும், எல்லா நன்மையும் கடவுளிடமிருந்து வருகிறதின் நிமித்தம், அவைகள் நல்லவைகளாயிருப்பதால் அவைகள் கடவுளிடமிருந்து வருவதாகவும் கூடவும் சொல்ல தைரிய மாயிருக்கிறார்கள். அடியில் கண்ட அடையாளங்களால் இவர்கள் அறிந்து கொள்ளப்படலாம்; விசாலமானதும் வரைப் படுத்தியதுமான இரண்டு கருத்திலும் தெரிந்து கொள்ளப் பட்ட படி, அயலானுக்காகக் கர்த்தரிடமிருந்து உபயோகங்

களைச் செய்கிறவர்களிலிருந்து, இவர்கள் அவர்களால் விசேஷித்து அறியப்படலாம். ஒவ்வொன்றிலும் தங்களை யும் உலகத்தையுமே அவர்கள் பார்க்கிறார்கள்; இவைகள் தங்களுக்காகவே, உபயோகங்களா யிருப்பதால் பற்பல நோக்கங்களோடு அவர்கள் கீர்த்தியை நேசிக்கிறார்கள்; அவைகளில் தங்களையும், தங்களிட சொந்த பலன்களையும் பார்க்கிறவரையில், உபயோகங்களால் அவர்கள் நடத்தப் படுகிறார்கள்; மேலும், அவர்களிட இன்பங்கள் சரீர இன் பங்களாயிருக்கின்றன; அவர்கள் உலகத்தில் இவைகளைத் தேடுகிறார்கள். இவ்விதமான ஜனங்களின் நடத்தையை இதனடியில் கண்ட ஒப்பனையால் திருஷ்டாந்தப்படுத்த லாம்; அவர்களே சிரசாயிருக்கிறார்கள், உலகம் சரீரமாயி ருக்கிறது, திருச்சபை அவர்களிட சுயதேசம், அவர்களிட நகரவாச தோழர்கள், பாதத்தின் உள்ளங்கால், கடவுளான வர் செருப்பு சம்பந்தமாக நிற்கிறார். ஆனால் உபயோகங் களின் அன்பினால் அவைகளைச் செய்கிறவர்களுக்கு, கர்த்தர் சிரசாயிருக்கிறார், திருச்சபை அவர்களிட சுயதேசம், அயலானாயிருக்கிற அவர்களிட நகர வாச தோழர்கள், உலகம் முழங்கால்களிலிருந்து உள்ளங்கால்கள் வரையில் பாதமாயிருப்பதின் நிமித்தம், முழங்கால்கள் வரை யில் சரீரமாயிருக்கிறார்கள்; அப்படியிருக்கையில் அவர் களே, அழகாக செருப்பினால் அலங்கரிக்கப்பட்ட பாதத்தின் உள்ளங்கால்களா யிருக்கிறார்கள். ஆதலால், அவர்கள் முழுமையும், தலைகீழாய் கவிழ்க்கப்பட்டிருக்கிறார்களென் றும், தங்களிடமே யிருந்தும், சுயலாப அன்பிலிருந்தும் உபயோகங்களைச் செய்கிறவர்களில் மனிதன் என்பது ஒன்று மில்லை என்று அதனால் விசதமாகிறது.

2) எல்லா அன்புகளுக்கும், ஆசைகளுக்கும் இரண்டு உற்பத்தி ஸ்தானங்களிருக்கின்றன; ஒன்று சுத்தமான

அன்பாயிருக்கிற பரலோகத்து சூரியன்; மற்றொன்று சுத்த நெருப்பாயிருக்கும் உலகத்து சூரியன். பரலோக சூரியனிடத்திலிருந்து அன்பு உடையவர்கள், பரமார்த்தமானவர்களும், உயிரோடிருப்பவர்களுமா யிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சுய தன்மையிலிருந்து கர்த்தரால் எழுப்பப்படுகிறார்கள். ஆனால் உலக சூரியனிடத்திலிருந்து அன்புடையவர்கள் ஜடமானவர்களாகவும், உயிரில்லாதவர்களாகவு மிருக்கிறார்கள்; தங்களிட சுய தன்மையில் தங்களிஷ்டமாய் ஊறவைக்கப்படுகிறார்கள். ஆதலால் பார்க்கக் கூடிய எல்லாப் பொருள்களிலும் அவர்கள் ஜகத்தை மாத்திரம் பார்க்கிறார்கள்; அவர்கள் கர்த்தரை ஒத்துக் கொண்டாலோ அது, இருதயத்தாலல்லாமல், உதடுகளால் தான். இவர்கள்தான், வேதத்தில், சூரியன், சந்திரன் பரலோகத்தின் எல்லாக் கூட்டத்தையுந் தொழுவோர் என்று அருத்தம் கொள்ளப்படுகிறது. பரமார்த்த உலகத்தில் அவர்கள், நிஜமாகவே, மனிதர்களாகத் தோன்றுகிறார்கள்; ஆனால் பரலோகத்தின் வெளிச்சத்தில் குரூபாங்கிகளாகத் தோன்றுகிறார்கள். அவர்கள் உயிர் அவர்களுக்கே உயிராகத் தோன்றுகிறது. ஆனால் வானவர்களுக்கு அது மரணமாகத் தோன்றுகிறது. இவர்களில், தங்கள் கல்விக்காக உலகத்தில் மேன்மையாக நினைக்கப்பட்டவர்கள் அநேகர் இருக்கிறார்கள். (எனக்கு அடிக்கடி ஆச்சரியத்தை உண்டாக்கினபடி) ஒவ்வொன்றையும் பிரகுருதிக்கும் விவேகத்துக்கும் ஆரோபித்தலின் பொருட்டு, தங்களுக்குத் தாங்களே விவேகிகளென்று நினைக்கிறார்கள்; மானிட ஜாதியின் மற்றவர்களை அவர்கள் அறிவில்லாதவர்கள் என்கிறார்கள்.

XV. உபயோகமானது தன்னிட ஆசை அல்லது தொழிலாக இருந்தாலொழிய, ஒரு மனிதன் நல்ல ஸ்திதியிலுள்ள மனதுடையவனல்ல.

ஒரு மனிதனுக்குப் புறம்பானதும் உள்ளானதுமான இரண்டு சிந்தனைகளுண்டு. மற்றவர்கள் கூட இருக்கும் போது, அக்காலத்தில் அவன், கேட்டுக்கொண்டிருந்தாலும் பேசினாலும், கற்பித்தாலும், செயலுற்றாலும், புறம்பான சிந்தனையிலிருக்கிறான். அவன் எழுதும்போது விஷயம் அதேதான். ஆனால் அவன் தனியாக இருந்து, தன்னிட உள்ளான ஆசைக்குத் தன்னிஷ்டப்படி ஆட இடங்கொடுத்தால், உள்ளான சிந்தனையிலிருக்கிறான். இந்த பின் சொல்லிய சிந்தனை அவனிட ஆன்மாவின் அதே சிந்தனையாகிறது; முன் சொல்லியது சரீரத்திலுள்ள அவன் ஆன்மாவின் சிந்தனையாகிறது. ஒவ்வொருவிதமும், இறந்த பிறகு, ஒரு மனிதனோடு தங்குகிறது; அவனிட புறம்பான சிந்தனை நீக்கப்படாமல் ஒழிய அக்காலத்தில் அவன் குணம் தெரியாமலிருக்கிறது; ஏனென்றால், அப்பொழுது தான் தன்னிட சொந்த அன்பிலிருந்து நினைத்துப் பேசி செயலுடையவனாகிறான். மனதில் சுகமுள்ளவன், அப்பொழுது ஆச்சரியமான பொருள்களைக் கண்ணால் பார்த்து, காதால் கேட்பான். இந்த உலகத்தில் புத்தியாய்ப் பேசினவர்களும், கல்வித் திறமையுடன் பிரசங்கம் செய்தவர்களும், பாண்டித்தியத்துடன் போதித்தவர்களும், ஞானத்தோடு எழுதி, விவேகத்தோடு நடந்தவர்களுமாகிய அநேகர், தங்களிட மனங்களின் புறம்பானவைகளை நீக்கப்பட்ட உடனே, உலகத்தில் பைத்தியக்காரர்களைவிட அவர்கள் அதிக உன்மத்த முள்ளவரென்று சொல்லும்படியாக, நினைக்கிறார்களென்றும், பேசுகிறார்களென்றும், அவ்வளவு துஷ்டத்தனமாய் நடக்கிறார்களென்றும், அவன் பிறகு கேள்விப்பட்டு கண்ணாலும் பார்ப்பான்; இன்னும் அதிசயம் என்னவென்றால், அவர்கள் அப்பொழுது மற்றவர்களைவிடத் தாங்களே அதிக புத்திசாலிகளென்று நம்புகிறார்கள். ஆனால் அவர்

2) களின் பைத்தியத்தின் தொடர்ச்சியைத் தடுக்க, தங்களிட புறம்பானவைகளுக்குத் திரும்பிப் போக விடப்படுகிறார்கள்; இந்த விதத்தில் தாங்கள் உலகில் வாழ்ந்த ஊருக்குரியதும் சன்மார்க்கமுமான வாழ்க்கைக்கு அவர்கள் வருகிறார்கள். மற்றவர்களோடு அவர்கள் அங்கே இருக்கையிலும், பரலோகத்திலும், தங்களிட மதிக் கேடுகளை நினைவு கூற, அவர்கள் விடப்படுகிறார்கள்; அப்பொழுது தாங்களே அறிந்துகொண்டு தாங்கள் புத்தியீனமாய்ப் பேசினதாகவும், மூடத்தனமாய் நடந்ததாகவும், ஒத்துக்கொள்ளுகிறார்கள்; ஆனாலும், தங்களிட உட்பாகங்களுக்காவது, தங்களிட ஆன்மாவுக்குச் சரியான பொருள்களிலாவது, அவர்கள் மறுபடியும் திரும்பின உடனே, முன்போலவே அவர்கள் பைத்தியக்காரர்களாகிறார்கள். அவர்களிட பைத்தியங்கள் அநேகமிருக்கின்றன; மேலும், அவைகள் அவர்களிடசித்தமானது, அதிகாரம் செலுத்தவும் திருடவும், விபசாரம் செய்யவும், கடவுள் நிந்தனை செய்யவும், தீங்கு செய்யவும், திருச்சபைக்கும் பரமண்டலத்திற்கும் சேர்ந்த உண்மையும் நல்லதுமான எல்லாவற்றோடும் கூட, நேர்மையானதும், நியாயமானதும், உண்மையானதுமான எல்லாவற்றையும், குற்றம் காட்டித் தள்ளிப் பரிகாசம் செய்யவும் இருக்கிறதென்கிற, இதற்குக் காரியப்படுகிறது. இன்னும் அதிகம் என்னவென்றால், தங்களிட ஆன்மாவின் இந்த நிலைமையை, அவர்கள் நேசிக்கிறார்கள்; தங்கள் சொஸ்த புத்தியாய் அல்லது உன்மத்தமாய் எவ்விதமாய்த் தங்களிஷ்டப்படி நினைக்கிறார்களென்றும் அநேகர் பரிசோதனை செய்யப்பட்டதில், உன்மத்தமாய் நினைக்க அவர்கள் இச்சிக்கிறார்களென்றும் கண்டு பிடிக்கப்பட்டது. அவர்கள் அவ்வித குணமுள்ளவர்களாயிருக்கிறார்களென்பதற்குக் காரணம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அது

இது வருகிறது :—அவர்கள் தங்களையுமே, உலகத்தையும், எல்லாவற்றையும் விட அதிகமாய் நேசித்தார்கள் ; கௌரவத்திற்கும், லாபத்துக்கும் மாத்திரம், உபயோகங்களிடத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டார்கள். மேலும் மனதினிட இன்பங்களைவிடச் சரீர இன்பங்களை மிகவும் அதிக பிரதானமாக மதித்தார்கள். மனிதர்கள் சந்நிதியில் தவிர, தங்களுக்குள்ளே, உன்மத்த மில்லாமல், எப்பொழுதும் நினைக்காதபடி, உலகத்தில் அவ்விதமாயிருந்தார்கள். இந்த வைத்தியத்திற்கு ஒரே மருந்து, ஒரு நியாயாதிபதியின் அதிகாரத்தில், நரகத்தில் கஷ்டமான வேலைகளை அவர்களுக்குக் கொடுப்பது தான். அவ்வித கஷ்ட வேலைகளில் அங்கே அவர்களிருக்கிற வரையில், அவர்கள் வைத்தியமுள்ளவர்களல்ல : ஏனென்றால், இவர்கள் இவைகளை அனுபவிப்பதினால், அவர்களிட மனங்கள் சிறைச்சாலையிலும், கட்டுகளிலும் இருப்பது போல வைக்கப்பட்டு, தங்களிட மோகங்களின் ஜன்னியில் சஞ்சரிக்காதபடி தடுக்கப்படுகிறார்கள். ஆகாரத்துக்காகவும், உடுப்புக்காகவும், இருப்பிடத்துக்காகவும், தாராளமாய் அன்பினால் அல்லாமல், மனதில்லாமல் ஏழைத்தனத்தால், அவர்களிட கஷ்டமான வேலைகளை அங்கே செய்து முடிக்கிறார்கள்.

3) ஆனால் மற்றபடி, உபயோகங்களை நேசித்த உலகத்திலுள்ள எல்லோரும், அவைகளின் பேரில் அன்பினால் அவைகளைச் செய்தவர்களும், தங்கள் ஆன்மாவில் தெளிந்த புத்தியுடனும், நினைக்கிறார்கள். அவர்கள் ஆன்மா அவர்கள் சரீரத்தில் தெளிந்த புத்தியுடன் நினைக்கிறது. ஏனென்றால், உள்ளான சிந்தனை, இம்மாதிரியாக புறம்பான சிந்தனையாக கூட இருக்கிறது. பேச்சு பின் சொன்னதிலிருந்து, முன் சொன்னதினால் உண்டாகிறது ; அவர்கள் செயலோடு விஷயம் இதுவும் கூட ஆகிறது. உபயோகத்தினிடத்து

ஆசை, அவர்களிட மனங்களைத் தன்னிடத்தே பிடித்து வைக்கிறது; வீணானதும், காம விகாரமானதும், அசுத்தமானதுமான தொழில்களிலும், கபடத்திலும், வஞ்சகத்திலும், பற்பல மோகங்களின் உண்மையில்லாத இன்பங்களிலும், சஞ்சரிக்க அவர்களை விடுகிறதில்லை. இவர்களிட குணம், இறந்த பிறகும் அம்மாதிரியே இருக்கிறது; அவர்களிட மனசுகளே, தேவதா சம்பந்தமா யிருக்கின்றன; புறம்பான சிந்தனை நீக்கப்பட்ட போது, அவர்கள் பரமார்த்தமாகவும் தேவதா சம்பந்தமாகவும், இம்மாதிரியாக கர்த்தரிடமிருந்து பரலோக ஞானத்தை அடைகிறவர்களாகவுமாய்விடுகிறார்கள். உபயோகமானது தன்னிட ஆசை அல்லது தொழிலாக இருந்தாலொழிய எந்த மனிதனும் நல்ல ஸ்திதியுள்ள மனதை உடையவனல்லவென்று இதனால் இப்பொழுது விசதமாகிறது.

XVI. ஒவ்வொரு மனிதனும் ஒரு ஆசையாயிருக்கிறான். ஆசைகளும், முன்னமே பிறந்தவர்கள் அல்லது அனந்தகாலம் வரையில் பிறக்கப்போகிறவர்கள் நானாவிதமாயிருப்பது போல, நானாவிதமாயிருக்கின்றன.

அவர்களில் எல்லாரும் ஆசைகளாயிருக்கிற பரமண்டலத்துத் தேவர்களிலிருந்தும், நரகத்துப் பேய்களிலிருந்தும், இது முக்கியமாய் விசதமாகிறது. நரகத்துப் பேய்கள், மோகங்களாயிருக்கிற பொல்லாத ஆசைகள். பரமண்டலத்துத் தேவர்கள் நல்ல ஆசைகள். தன்னிட உயிரானது அன்பாயிருக்கிறபடியினால், ஒவ்வொரு மனிதனும் ஒரு ஆசையாயிருக்கிறான். அன்பின் விசாலங்களும் உற்பவங்களும் ஆசைகள் எனப்படுகின்றன. ஆகையால், ஆசைகள், தாங்களே அன்புகளாயிருக்கின்றன. ஆனால் தங்களிட

பிரபு அல்லது தலைவனுக்குக் கீழானதாயிருப்பது போல, சாதாரண அன்புக்குக் கீழானதாயிருக்கிறது. ஆகையால், உயிரே அன்பாக இருப்பதால், எல்லாப் பொருள்களும், பொதுவாகவும், குறிப்பாகவும், ஆசைகளென்றும், அதனால், மனிதனை ஆசையாயிருக்கிறானென்றும் தொடரு
2) கிறது. இது இப்படியிருக்கிறதென்று உலகத்தில் பெரும்பான்மையோர் ஆச்சரியப்படுவார்கள். சகஜ உலகத்திலிருந்து சூக்கும உலகத்திற்கு வருகிற எல்லாரிட வாய்களிலிருந்தும் இதைத் தெரிந்து கொள்ள எனக்கு அனுக்கிரகிக்கப்பட்டது. தான் ஆசையாயிருக்கிறானென்று தெரிந்திருக்கிற ஒருவனையும் இது வரையில் நான் காணவில்லை. உண்மையில், சிலருக்குத்தான் ஆசை என்னவென்று தெரியும்; ஆசையானது தன் விசாலத்திலும் உற்பவத்திலும் அன்பென்று நான் சொன்னபோது, தாங்கள் அதை அறிந்து கொண்டபடியால் சிந்தனை என்னவென்று தங்களுக்குத் தெரியுமென்றும், ஆனால் யாரும் அறியக்கூடாதபடியால் அன்பு தெரியவில்லையென்றும், சொல்லி, அன்பு என்னவென்று கேட்டார்கள். விவாகத்துக்கு முன்னே, மணமகள் அன்பிலிருந்தும், தன்னிட குழந்தைகளிடத்து காட்டும் ஒரு தாயின் அன்பிலிருந்தும், தான் தன்னிட விவாக நிச்சயம் செய்த மனைவி அல்லது தன்னிட சிசுவை முத்த மிடும்போது சிறு பரிமாணம் ஒரு தகப்பனிட அன்பிலிருந்து கூட, அன்பு என்கிற ஒரு பொருளிருப்பதாக தங்களுக்குத் தெரியுமென்று அவர்கள் சொன்னார்கள்; இவைகளுக்குப் பதிலாக சிலர் வைப்பு ஸ்திரி என்று சொன்னார்கள். சிந்தனை என்பது தானாக ஒன்றுமல்லவென்றும், ஆனால் உருவாக்கப்பட்டது, அதை உருவாக்கினதிலிருந்து வருகிறதுபோல, சிந்தனையானது அன்பிலிருந்து வருகிறபடியினால், மனிதனிட உயிராகிய

அன்புக்குச் சேர்ந்த ஆசையின் மூலமாய் ஏதுவோ ஒன்று கிறதென்றும், ஆன்மா வல்லாமல், சரீரமானது அதன் இந்திரியங்கள் அறியப்படுகிறதுபோல், உருவாக்குகிறது அல்லாமல், உருவாக்கப்பட்டது, பார்க்கப்படுகிறதினால், ஆசையல்லாமல் சிந்தனையானது அறியப்படுகிறதென்றும் நான் அவர்களுக்குச் சொன்னபோது, அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். இதனால், அநேக உண்மைகளை ஆரோபித்து

3) அந்த விஷயத்தைப்பற்றி அவர்கள் இன்னும் அதிக மாய்க் கற்பிக்கப்பட்டார்கள். சிந்தனையின் எல்லாப்பொருள் களும் ஆசையிலிருந்தும் அதன் பிரகாரமும் இருக்கின்றன வென்றும், அவர்கள் ஆசையில்லாமல் நினைக்க முடியாதென் றும், அதற்கு விரோதமாகவும் நினைக்க முடியாதென்றும், ஒவ்வொருவனும் தன்னிட ஆசையைப்போல் அதே குணத்தை உடைத்தாயிருக்கிறனென்றும், ஆகையால் ஒவ் வொருவனும் தன்னிட பேச்சினலல்லாமல், ஆசையினல் சோதிக்கப்படுகிறனென்றும், அவர்கள் கற்பிக்கப்பட்டார் கள். ஏனென்றால், புறம்பான ஆசையினிட சிந்தனையிலிருந்து பேச்சு புறப்படுகிறது ; தயை காண்பிக்கவும், பிரியப்படுத்த வும், புகழப்படவும், மரியாதை யுள்ளவர்களாகவும், சன் மார்க்கமானவர்களாகவும் விவேக முள்ளவர்களாகவும், இருப்பதாக கண்ணியம் அடையவும் ஆசைப்பட இது ஜனங் களைச் செய்கிறது. உள்ளிருக்கிற ஆசையின் முடிவை உத்தே சித்து இது செய்யப்படுகிறது ; இந்தப் பலன்களை அடைய இவ்விதபொருள்கள், வழிகளாயிருக்கின்றன. அப்படி இருந் தாலும், அதே ஆசையானது, பூரணமான வேஷதாரியாய் இருந்தாலொழிய ஒரு மனிதனிடப் பேச்சின் தொனியில் கேட்கப்படுகிறது ; ஏனென்றால் பேச்சானது, சிந்தனையின் முகஜாடையாயிருக்கிறது. அதன் சத்தம் ஆசையின் முக ஜாடையாயிருக்கிறது. அப்படியிருப்பதால் சத்த நீக்க

லாய், வார்த்தைகள் இருக்காதது போல், ஆசையில்லாமல் சிந்தனை இருக்கமுடியாதென்றும், ஆசையால் பேச்சானது சத்தத்தின் உச்சாரணமாயிருப்பதைக் கொண்டு, சத்தமானது பேச்சின் எல்லா மாயிருப்பது போல், ஆசையானது சிந்தனையின் எல்லா மாயிருக்கிற தென்று, விசதமாகிற தென்றும் அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

4) ஒருமனிதன் ஆசையைத் தவிர வேறொன்று மில்லை என்று இவைகளாலும், பின்னிட்டு, சிந்தனைகளின் எவ்வித வித்தியாசங்கள் பிரகாரம் அல்லாமல், ஆசைகளின் பொதுவானதும் குறிப்பானதுமான பேதங்களை அனுசரித்து, மாகாணங்களாகவும், கூட்டங்களாகவும் விசேஷித்தறியப்பட்ட இராச்சியத்தில் போல, மோட்சலோகம் முழுதும், நரகம் முழுதும், இருக்கிறதென்கிற இதினாலும், கர்த்தருக்கு மாத்திரம் முன் கூறியது தெரியு மென்றும் அவர்கள் போதிக்கப்பட்டார்கள். அப்படியிருப்பதால், ஆசையின் நானு விதங்களும், பேதங்களும் முடிவற்ற தென்றும், முன்னமே பிறந்திருக்கும் மனிதர்கள் போலும் அனந்த காலம் வரையில் இனி பிறப்பவர்கள் போலும் அவைகள் அவ்வளவு அநேகமா யிருக்கிறதென்றும் தொடருகிறது.

## XVII. உபயோகத்தின் பொருட்டு கொள்ளும் தன்னிட ஆசையை அனுசரித்து, மனிதனுக்குச் சதாகால வாழ்நாள் உண்டு.

ஆசையானது மனிதனாகவே யிருக்கிறபடியினாலும், உபயோகமானது அதன் பயிர்ச்சிக்கு ஒரு வயலைப் போலவும் அல்லது பாடசாலையைப் போலவும் இருந்துகொண்டு, அதின் பயனாகவும், வேலையாகவும், இருப்பதினாலும், அதன் பதார்த்தத்திலிருந்து நீங்கலாய் ஆசை இருக்கமுடியாதபடியினாலும், அம்மாதிரியே மனிதனிட உயிரின் ஆசை உப

யோகமில்லாமல் உள்பொருளாகாது. ஆசையும் உபயோகமும் ஒன்றாகிறபடியினால், தான் அன்பாயிருப்பதின் நிமித்தம், மனிதனிட குணம், உபயோகத்திலிருந்து அறியப்படுகிறது; இது இப்படி அறிதலும் கஷ்டத்தோடு தான், சகஜ உலகத்தில் அருமையாகவே யிருக்கிறது. ஆனால் ஞான உலகத்தில் தெளிவாகவும் முழுமையும் அறியப்படுகிறது; ஏனெனில், பரமார்த்தமானவை அதன் சாரத்தில் பரமஇச்சாசத்தியாகவும், பரமஞானசத்தியாகவும் இருப்பதால்; ஞானப் பொருள்கள் ஒவ்வொரு அன்பையும், அதன் ஒவ்வொரு விவரத்தையும் திகம்பரமாய் வைக்கிறது; சூரியனிட வெளிச்சம் தன்னிட பற்பல நிறங்களாலும், நிழலின்படி கிரமத்தாலும் உலகம் பொருள்களை வெளிப்படுத்துகையில், உலகத்து சூரியனிட சூடு, அவைகளின் வாசனைகளாலும் சுவைகளினாலும், அவைகளை வெளிப்படுத்துகிறது போல், அதன் தோற்றத்தில், உபயோகங்களைக் கோரும் ஆசைகளை வெளிப்படுத்துகிற சுவர்க்க லோகத்துச் சூடும் வெளிச்சமுமாய் அது இருக்கிறது.

2) அந்த அன்பானது மனிதனாகவே யிருக்கிறபடியினால், ஒவ்வொரு மனிதனுக்கும், உபயோகத்தைக் கோரும் தன்னிட ஆசை பிரகாரம், சதாகால வாழ்நாள் உண்டு. ஆகையால், இது இருப்பதுபோல் அவ்விதமாகவே மனிதனு மிருக்கிறான். ஆனால் உபயோகத்தைக் கோரும் அன்பு சாதாரணமாய் இரட்டிப்பான ரகமாயிருக்கிறது; உபயோகத்தைக் கோரும் பரமார்த்த அன்பும் இருக்கிறது, உபயோகத்தைக் கோரும் சகஜ அன்பும் இருக்கிறது. இவைகள் இரண்டும், புறம்பான வடிவத்தில் ஒரே மாதிரியாயிருக்கின்றன. ஆனால் உள்ளான வடிவத்தில் முழுமையும் பேதமாயிருக்கின்றன. ஆகையினால் உலகத்தில் மனிதர்களால் அவைகள் விசேஷித்தறியப்படுகிறதில்லை. ஆனால்

பரலோகத்தில் வானோர்களால் தெளிவாய் அறியப்படு கிறது. ஏனென்றால், அவைகள் ஒன்றுக்கொன்று முழு மையும் எதிரிடையா யிருக்கின்றன. ஏனென்றால், உப

3) யோகத்தைக் கோரும் ஸ்தூலமான அன்பு கீர்த்திக் காகவும் லாபத்திற்காகவும் முழுமையும் இருப்பதாலும், இம்மாதிரியாக தனக்கும் உலகத்துக்கும் நோக்கங்களாக யிருப்பதாலும், உபயோகத்தைக் கோரும் பரமார்த்த அன்பு மனிதனுக்குச் சுவர்க்கத்தைக் கொடுக்கிறது. ஆனால் உபயோகத்தைக் கோரும் பரமார்த்த அன்பு இல்லாமல், ஸ்தூலமான அன்பு நரகத்தைக் கொண்டு வருகிறது. மற்றபடி, உபயோகத்தைக் கோரும் பரமார்த்த அன்பு, கடவுளின் மகிமைக்காகவும், உபயோகங்களுக்கே யாகவும், இம்மாதிரியாக, கடவுளுக்காகவும் அயலானுக் காகவும் நோக்கங்களாக இருக்கின்றது. தங்கள் தொழில் களை எல்லா சிரத்தையுடனும், பரிசிரமத்துடனும், செய்கிற நியாயாதிபதிகளும், அரசர்களும், உத்தியோ கஸ்தர் போலவும், வைராக்கியத்திலிருந்து செய்வதுபோல உக்கிரத்துடன் பிரசங்கம் செய்யப்பட்ட குருக்களும், குருப்பிரதானிகளும் போலவும், தெய்வபக்தி, பயிர்ச்சி, கல்வி இவைகளால் நிறைந்த நூல்களை எழுதுகிற வித்தியா சம்பந்தமான மனிதர்கள் போலவும், அவைபோன்ற சுபாவமுள்ள மற்றவர்கள் போலவும், தங்கள் தொழில்களை யும் கடமைகளையும் அதிக தெய்வ பக்தியுடனும், உழைப் புடனும், வைராக்கியத்துடனும் செய்யப்பட்ட மனிதர்கள் உலகத்தில் இருக்கிறார்கள். தங்கள் கடமைகளை இம் மாதிரி கவனிப்பதில், திருச்சபைக்கும், தங்கள் தேசத்திற் கும், கூட்டத்திற்கும், தங்களிட நகரவாச தோழர்களுக்கும் உபயோகங்களைக்கூட செய்கிறார்கள். அப்படி யிருந்தாலும், மரியாதை செய்யப்பட்டு, பெரிய உத்தியோகங்களுக்கு

உயர்த்தப்பட வேண்டுமென்று தங்களுக்காகவும், லாபத்தை அடைந்து தனவந்தனர்களாகும்படி உலகத்திற்காகவும், அவைகளைத் தங்களுக்காகவே செய்கிறார்களென்று அருத்தம் கொள்ளும் ஸ்தூல அன்பினால் மட்டும் அநேகர் இவைகளைச் செய்கிறார்கள். உபயோகத்தைக் கோரும் பரமார்த்த அன்பில் இருப்பவர்களை விட, அவர்கள் சில வேலைகளில் இதை நன்றாய்ச் செய்ய, இந்த நோக்கங்கள், உபயோகங்களின் காரிய சித்தியடைய அவர்களில் அவ்வித ஆசையை கொளுத்துகிறது.

4) இறந்தபின் பேய்களான போது, இவ்வித ஆசையிலிருந்த அநேகருடன் நான் பேசியிருக்கிறேன்; பாத்திரத்தின் பேரில் சுவர்க்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இவர்கள் கூக்குரலிட்டார்கள்; ஆனால், சுபாவிகமான அன்பிலிருந்து மட்டும், அதாவது கடவுளுக்காகவும், அயலானுக்காகவும் அல்லாமல், தங்களுக்காகவும் உலகத்துக்காகவும், உபயோகங்களைச் செய்தபடியினால், மத்தேயுவில் இருக்கும் அடியில் கண்டதைப் போன்ற உத்தரம் அடைந்தார்கள் :—“ அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறிய வில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (VII. 22; 23); லூக்காவிலும் கூட :—“ அப்பொழுது நீங்கள் உம்முடைய சமுகத்தில் போஜன பானம் பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம் பண்ணினீரே என்று, சொல்லுவீர்கள். ஆனாலும் அவர்: நீங்கள் எவ்விடத்தாரோ,

உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்களெல்லோரும் என்னை விட்டு அகன்று போங்கள் என்று சொல்லுவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் ” (XIII. 26, 27). உலகத்திலிருந்தபோது அவர்களிட நடத்தையைப்பற்றி ஒரு பரிசோதனையும் செய்யப்பட்டது. சிலரிடத்தில் தன்னிடத்து அன்பிலிருந்து அனலுள்ளதாகவும், உலகத்தின் அன்பிலிருந்து மற்றவர்களிடத்தில் மங்கல் நிறமானதாகவும், மற்றவர்களிடத்தில் பரமார்த்தப் பொருள்களை தள்ளுவதிலிருந்து கொஞ்சம் கறுப்பானதாகவும், தோன்றிய மோகங்களாலும், அதிலிருந்து திரட்டிய தீங்குகளாலும், அவர்களிட உள்ளானவைகள் நிறைந்திருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அப்படி இருந்தாலும், அவர்களிட புறம்பானவைகள், புறம்பான உருவத்திலுள்ள உபயோகங்களிலிருந்து, பனிபோல வெளுத்தும் சிவப்பாகவும் தோன்றின. அவர்கள் உபயோகங்களைச் செய்திருந்த போதிலும், கௌரவத்தையும் லாபத்தையும் அடையும் கருத்துடன் நற்பெயரைத்தவிர வேறொன்றையும் அவர்கள் நினைக்கவில்லை என்று இவைகளால் விசதமாயிற்று; அந்தப் பொருள்கள் அவர்களிட ஆன்மாக்களுக்குச் சரியானதாயும், அவர்களுக்குள்ளேயும் அவர்களிட வாழ்க்கையிலும் இருந்ததாகவும், அவர்களிட நற்காரியங்கள், அவர்களே பேதமான குணத்தை உடையவர்களாயிருந்த படியினுல், தோற்றங்களாகவாவது நோக்கங்களுக்காக அந்தப் பொருள்களுக்கு ஒரே வழி வகையாகவாவது இருந்ததாகவும்கூட விசதமாயிற்று. உபயோகங்களைக் கோரும் ஸ்தூலமான ஆசைகளைக் குறித்து இவ்வளவு தூரம் சொல்லப்பட்டது.

5) ஆனுல் உபயோகத்தைக் கோரும் பரமார்த்த அன்பு உள்ளானதாகவும், அதே காலத்தில் புறம்பானதாயுமிருக்கிறது; அது எவ்வளவு தூரம் புறம்பானதாயும் அல்லது

ஸதூலமானதாயும் இருக்கிறதோ, அவ்வளவு தூரம் பரமார்த்தமானதாயிருக்கிறது; ஏனென்றால், பரமார்த்த மானவை, ஸதூலமானதில் பாய்ந்து, காரணகாரிய ஒற்று மைக்கு, இம்மாதிரியாக தன்னையே போன்ற ஒருவடிவத்துக்கு அதை ஒழுங்கு படுத்துகிறது. ஆனால், அவைகள் புறம்பான தோற்றத்தில் ஒரே மாதிரி யிருப்பதாக தோன்றுகிற படியினால், உலகத்தில் தற்காலத்தில், உபயோகத்தைக் கோரும் பரமார்த்த அன்பின் சுபாவமும், அது ஸ்தூலமான அன்பிலிருந்து எப்படி பேதப்படுகிறது என்பதும் முழுமையும் தெரியாமலிருப்பதின் நிமித்தம் முன் சொல்லியதை எப்படி அடையலாமென்று காண்பிக்கப் படும். தருமத்திலிருந்து பிரிக்கப்பட்ட விசுவாசமாயிருக்கிற விசுவாசத்தால் மாத்திரம் அதை அடைய முடியாது; ஏனென்றால், இந்த விசுவாசமானது சிந்தனையில் மட்டும் விசுவாசமாயும், உண்மை ஒன்று மில்லாததாயுமிருக்கிறது. மேலும், அது தருமத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதால், மனிதனேயாகிற ஆசையிலிருந்து அது பிரிக்கப்பட்டும் கூட இருக்கிறது; ஆகையினால் கூட, இறந்த பிறகு, அது வாயுமயமான ஏதோ ஒரு பொருளென்று கலைக்கப்படுகிறது. ஆனால், அவைகள் பாவங்களாயிருக்கிறபடியினால், தீமைகளை ஒழிப்பதால், ஞானமான அன்பு சம்பாதிக்கப் படுகிறது; அவைகளுக்கு விரோதமாக சண்டை செய்வதினால் இது நிறைவேற்றப்படுகிறது. மனிதன் நீக்க வேண்டிய தீமைகள் எல்லாம் தசாக்ஞையில் எழுதப்பட்டிருக்கிறது; அவைகள் பாவங்களாயிருப்பதால், இவைகளுக்கு விரோதமாய் அவன் எவ்வளவு தூரம் சண்டை செய்கிறானோ, அவ்வளவு தூரம் ஞான ஆசையாய், இம்மாதிரியாக ஞான வாழ்விலிருந்து அவன் உபயோகங்களைச் செய்கிறான். மேற்கூறியபடி, சிலரிடத்தில்

அனலுள்ளதாயும், மற்றவர்களிடத்தில் கொஞ்சம் கறுப்பானதாகவும், இன்னும் மற்றவர்களிடத்தில் மங்கல் நிறமானதாகவும், தோன்றுகிற, அவனிட உள்ளானப் பாகங்களைச் சுவாதீனப்படுத்திக் கொள்ளுகிற அப்பொருள்கள், தீமைகளுடன் சண்டை செய்வதால் கலைக்கப்படுகின்றன. இம்மாதிரியாக அவனிட ஞானமானது திறக்கப்படுகிறது; இதன் மூலமாய் கர்த்தர் அவனிட ஸ்தூல மனதில் பிரவேசித்து, பரமார்த்த உபயோகங்கள் இன்னும் பார்வைக்கு சகஜமாயிருப்பதின் நிமித்தம், பரமார்த்த உபயோகங்களைச் செய்ய இஷ்டப்படச் செய்கிறார். மற்றவர்களுக்கல்லாமல், இவர்களுக்கு, எல்லாப்பொருள்களைவிட தன்னையும், அயலானையும் தங்களைப்போலவும், நேசிக்க கர்த்தரானவர் சக்தி கொடுக்கக்கூடும். ஒருமனிதனானவன், பாவங்களென்று தீமைகளுக்கு விரோதமாய் சண்டைசெய்து, உலகத்தில், எவ்வளவு கொஞ்சமேனும், பரமார்த்தமான ஏதோ ஒன்றைச் சம்பாதித்தால், அவன் இரக்ஷிக்கப்படுகிறான்; (மத்தேயு அத். XIII. 32; மார்கு, IV. 30—32; லூக்கா XIII. 18, 19) இவைகளிலிருக்கும் கர்த்தரிட வார்த்தைகள்படிக்கு ஒரு கடுகு விதையானது ஒரு மரமாக பெருகுகிறதுபோல் அவனிட உபயோகங்கள், பின்னிட்டு வளருகின்றன.

## XVIII. மனிதனிட சித்தம் அவனிட ஆசையாயிருக்கிறது.

மனிதனிட சித்தம், அவனிட அன்பின் ஆதானமாகவும், புத்தி ஞானத்தின் ஆதானமாகவுமிருக்கிற தென்பது இதன் காரணமாயிருக்கிறது. மேற்கூறியபடி, ஆசைகளானது அன்பின் தொடர்ச்சிகளாகவும், உற்பவங்களாகவும் மாத்திரமிருப்பதால் அன்பின் கொள்கலமாயிருப்பது,

எல்லா ஆசைகளிட கொள்கலமாகவும்கூட இருக்கிறது. பெற்றுக்கொள்ளுகிறதும் பொருள் சுபாவமுமான உருவத்தில் தவிர, அன்பானது மனிதனிடத்தில் இருக்கமுடியாத படியினால் அதற்கு அன்பின் ஆதானம் என்று சொல்லப் படுகிறது ; அவ்வித உருவமில்லாவிட்டால்; அன்பானது உபயோகமானதாகவும், சாசுவதமானதாகவும், நிலைமையானதாகவுமிருக்காது. அன்பின் அதே பெற்றுக்கொள்ளுகிற வடிவமும்கூட விவரிக்கப்படலாம். ஆனால் இது அதற்கு இடமல்ல. இந்தக் காரணத்தால் சித்தமானது, அன்பின் ஆதானம் என்று சொல்லப்படுகிறது. சித்தமானது மனிதனிட எல்லாமென்பதும், அவனைச் சேர்ந்த எல்லாப் பொருள்களிலும் இருக்கிறதென்பதும், அன்பானது அதன்முழு அளவில் மனிதனுயிருப்பதுபோல, இம்மாதிரியாக அது மனிதனே என்றும், அடியிற் கண்ட கவனிப்புகளால் விசதமாகிறது. தன்னிட அன்பு அல்லது ஆசைக்கும், நிஜமாகவே அவன் உயிருக்கும் சேர்ந்த ஒவ்வொன்றைக் குறித்தும், தான் இச்சிக்கிறதாகவும், தொழில் படவும், பேசவும், நினைக்கவும், அறிந்துகொள்ளவும், தான் இச்சிப்பதாகவும், ஒரு மனிதன் சொல்லுகிறான் ; இவைகளிலெல்லாம் சித்தமிருக்கிறது. அந்தப் பொருள்களில் சித்தமானது இருந்தாலொழிய, அந்த மனிதன், தொழில் படவும், பேசவும், நினைக்கவும், அல்லது அறியவும் முடியாது ; உண்மையில், உயிரின் ஆன்மா சரீரத்திலும், அதைச்சேர்ந்த ஒவ்வொன்றிலும் இருக்கிறதுபோல், சித்தமானது அவைகளிலிருப்பதால், அப்பொருள்களின் மிகச் சிறிய விவரணங்களிலும் அது இருந்தாலொழிய, அவைகள் ஒருநொடி நேரத்தில் இல்லாமல் ஒழியும். "சித்தம் கொள்ளல்" என்பதற்குப் பதிலாக, "அன்பு பாராட்டல்" என்று சொல்லலாம். உதாரணமாக, அவன் தொழில்படவும், பேசவும், நினைக்

கவும், அல்லது அறியவும் விரும்புகிறுனென்று சொல்லலாம். அதைப்போன்றே ஒரு மனிதன், பார்க்கவும், கேட்கவும், சாப்பிடவும், குடிக்கவும், உருசிபார்க்கவும், இச்சிக்கிறுனென்றும், முகரவும், நடக்கவும், பேசவும், விளையாடவும் இம்மாதிரியாகப் பலவற்றை இச்சிக்கிறுனென்றும், சரீரத்தின் புறம்பான இந்திரியங்களைப்பற்றிச் சொல்லப்படுகிறது. இந்த விஷயங்களில் ஒவ்வொன்றிலும்கூட சித்தமானது கர்த்தாவா யிருக்கிறது; ஏனென்றுல், அது மறுபடியும் எடுத்துக் கொள்ளப்பட்டால், சோம்பு உடனே அதிகமாய் பின்தொடரும்; இந்தக் கிரியைகள்கூட சித்தத்தின் வழி வகையால் கொஞ்சகாலம் நிறுத்தப்படுகிறது.

3) அவனிட அன்பிற்குச் சேர்ந்த எல்லா ஆனந்தமும், பிரீதியும், மனேகரமும், திருப்தியும், தேவ அருள் பெருதலும், இவ்விதமாய் அறியப்பட்டு, இந்திரியகிராகியமானதாய்ச் செய்யப்படுகிறது என்கிற இதினுல், சித்தமானது ஒரு வடிவத்தில் மனிதனிட அன்பாயிருக்கிறதென்று மிகவும் விசதமாயிருக்கிறது. ஒரு மனிதனுனவன், சந்தோஷமானதும், பிரீதியானதும், மனேகரமானதும், திருப்தியானதும், தேவ அருள் பெற்றதுமான பொருள்களை இச்சித்து தான் அவைகளை இச்சிக்கிறுன் என்றும் சொல்லுகிறபடியினுல், இவைகளும்கூட சித்தத்திற்குச் சேர்ந்ததென்று விசதமாகிறது. நன்மையையும் உண்மையையும் பற்றி மனிதனுனவன் அம்மாதிரியே பேசுகிறுன். ஏனென்றுல், அவன் நேசிப்பதை நல்லது என்கிறுன். ஆகையினுல், அவன் இதை தன்னிட சித்தத்தின் உட்குறிப்பாகச் செய்கிறுன்; தன்னிட அன்பின் அல்லது சித்தத்தின் நன்மையாக அவன் நாட்டுகிறது உண்மை என்று சொல்லப்படுகிறது; இதையும்கூட அவன் நேசிக்கிறுன். அதைப்பற்றி நினைக்கவும், பேசவும்

இஷ்டமுள்ளவனு யிருக்கிறுன். மேலும், அதை நேசிப் பதால் தான் விரும்புவதை அவன் இச்சிக்கிறபடியினு லும், அதை நேசிப்பதால், அவன் ஆசிரயப்பதையும், ஆசைப்படுவதையும், அவன் இச்சிக்கிறபடியினுலும், அதை நேசிப்பதால், அவன் பிரயாசைப்படுகிறதும், தேடுகிறது மானதை அவன் இச்சிக்கிறபடியினுலும், தான் உத்தேசிக் கிறதை அவன் இச்சிக்கிறபடியினுலும், அவன் நேசிப்ப தால் உத்தேசிக்கிறதினுலும், இவ்விதமாய் அவைகள் அவ னிட அன்புக்குச் சேர்ந்தபடியினுல், தான் விரும்புகிறதும், ஆசிரயிக்கிறதும், ஆசைப்படுகிறதும், பிரயாசைப்படுகிற தும், தேடுகிறதும், கருதுகிறதுமான ஒவ்வொன்றைப்பற்றி யும் மனிதனுனவன் அவ்விதப் பொருள்களை தான் இச்சிப்ப தாகச் சொல்லுகிறுன். மனிதனில் சித்தமும், அன்பும் அல் லது, சித்தமும் ஆசையும், ஒன்றென்றும், மேலும் ஆசையா யிருப்பதால் அன்பானது அவனிட உயிராயும் கூட இருக் கிறதென்றும், அது மனிதனே என்றும் இதனுல் அறிந்து கொள்ளலாம். மனிதனிட புத்திக்குச் சித்தம்கூட உயிரென் றும், அப்படி யிருப்பதால் அவனிட சிந்தனைக்கும் உயி ரென்றும், பின் தொடருகிறதினுல் ரூபகாரம் செய்யலாம்.

4) சித்தம், மனிதனே என்று மனிதன் ஏன் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறுன் என்கிற காரணமானது, அன்பு அல்லது ஆசை மனிதனே என்று அவனுக்கு அறிவில்லாத படி செய்கிற பொருளேயாகிறது. தான் பார்க்கிறதற் கும், உணருகிறதற்கும் காரணமா யிருக்கிற உயிர், ஆன்மா, அல்லது மூலாதாரத்தினிடம் அல்லாமல், ஒவ்வொருவனும் தான் பார்க்கிற அல்லது உணருகிற பொருள்களிடம் தன் னிட கவனத்தைச் செலுத்துகிறுன். இது இந்திரியப் பொருள்களில் உள்ளுக்குள்ளாய் மறைந்து கிடக்கிறது. ஸ்தூலமான மனிதன் அதைக் கண்டுபிடிக்கப் போதுமான

அளவு ஆழ்ந்து நினைக்கிறதில்லை. இந்திரிய அறிவு தன்னிட ஞானத்தின் குறிப்பு பொருளாக யல்லாமல், தானே கூட பரமார்த்தமா யிருக்கிற இந்திரிய அறிவில் அது பிரதானும்சமா யிருப்பதால், ஞானியினிடத்தில் அது வேறுவிதமா யிருக்கிறது. சிந்தனையானது மனிதனிட எல்லாமென்றும், அது மனிதனே என்றும், அல்லது, சிந்தனையிலிருந்து ஆசையை நீக்கினால், நீ ஒரு மரக் கட்டையா யிருப்பாய். ஆனபடியினால், தன்னிட சிந்தனையின் எல்லாம், ஆசையா யிருக்கிற தென்றாலும், தான் நினைக்கிற படியினால் மனிதன் மனிதனே என்றும், இந்தக் காரணத்துக்காக அநேகர் சொல்லுகிறார்கள். பரமார்த்தமானதிலிருந்து பகுத்தறிவுள்ளவனா யிருக்கிறவனும், நன்மையானது உண்மையானது எது வென்று தெரிந்தவனும், ஆதலால் தீமையானது பொய்யானது எது வென்று தெரிந்தவனும் முன் சொல்லியதிலிருந்து தன்னிட ஆசைகளிடவும், தன்னிட தலைமையான ஆசையினிடவும் சுபாவத்தைக் கண்டு பிடிக்கலாம்: ஏனென்றால், இவைகளின் லக்ஷணங்கள், ஒரு மனிதனிட சிந்தனை, பேச்சு, செயல், பார்வை, கேள்வி, இவைகளின் சந்தோஷங்களைப்போலவும், அவனிட தொழில்கள், ஆசைகள், கருத்துகள் போலவும், அவ்வளவு அநேக மாயிருக்கின்றன. ஆனால் அவனைக் கவனிக்கவும் யோசிக்கவும் விட்டுவிடுங்கள்.

## XIX. வேதத்தில், அன்பு வைத்தல் என்றால் உபயோகங்களைச் செய்தல் என்று அருத்தம் கொள்ளுகிறது.

அன்பு வைத்தல் என்பது இச்சித்தலென்கிறதும், இச்சித்தலென்பது செய்கிற தென்பதும் இதற்குக் காரணமாயிருக்கிறது. அன்பு வைத்தல் என்பது இச்சித்தலென்று

இப்பொழுது தான் ரூபகாரம் செய்யப்பட்டது; இங்கே இச்சித்தல் என்பது செய்தல் என்று நாம் மெய்ப்பிக்க வேண்டும். சித்தத்தையே யோசித்தால் அது தானாக அன்பாகிறதில்லை. ஆனால் அதன் ஆசயமாயிருக்கிறது. மேலும் அது தானாக அன்பைப் பெற்றுக் கொள்ளுகிறது மாத்திர மல்லாமல், அதின் நிலைமைகளையும்கூடத் திருப்பி, இவைகளின்படி உருவங்களை தரிக்கிற அவ்வித ஆசயமாயிருக்கிறது. ஏனென்றால், மனிதன் உயிர் அல்லாமல், உயிரைப் பெற்றுக் கொள்கிறவனாயிருக்கிற படியினாலும், ஆதலால், அன்பு உயிராயிருப்பதின் நிமித்தம், அன்பைப் பெற்றுக் கொள்பவனாயிருப்பதாலும், மனிதனிட எல்லாப் பொருள்களும் உட்பெருக்கினால் பிரவேசிக்கின்றன. இது மனிதனிட இந்திரியங்களின் அங்கங்களால் திருஷ்டாந்தப்படுத்தப்படலாம்; ஏனென்றால், கண் என்பது வெளிச்சமல்ல; ஆனால் அது, வெளிச்சத்தின் எல்லா விகற்பங்களையும் பெற்றுக் கொள்ள உண்டாக்கப்பட்டிருப்பதின் நிமித்தம், வெளிச்சத்தை ஏற்றுக்கொள்ளும் பொருளாயிருக்கிறது; காதானது, சத்தத்தையும், அதன் இசைவிகற்பங்களையும், தெளியொலிகளையும் ஏற்றுக் கொள்ளும் பொருளாயிருக்கிறது; ஆனால் அது சத்தமல்ல. அதே மனிதனிட மற்ற புறம்பான இந்திரியங்களுக்கும் பொருந்துகிறது. ஞான ஒளியினாலும் சூட்டினாலும் வேறாகப் பிரிக்கப்பட்டு ஏவப்படுகிற இந்திரியத்தின் உள்ளான அங்கங்கள் விஷயமாய், சங்கதி அம்மாதிரியேயிருக்கிறது. அதனால், அதன் சாரத்தில் அன்பாயிருக்கிற ஞான சூட்டின் ஆசயமாய் இருப்பதால், அது சித்தத்தைப் போலிருக்கிறது. இந்த ஆசயமானது மனிதனிடத்தில் எல்லாவிடத்திலுமிருக்கிறது. ஆனால் அதன் முதன்மையானதில் அது மூளையிலிருக்கிறது. இந்த தொடக்கங்கள் அல்லது உற்பத்தி ஸ்தானங்கள் புறனிக்

சூரியமென்றும், சாம்பல் போன்றது என்றும் சொல்லப்படுகிற மூளையின் பதார்த்தங்களாயிருக்கின்றன. வேறு இடத்தில் பிரஸ்தாபித்த ஞான ஜந்து வடிவாயிருக்கிற அதன் உருவத்தின் பிரகாரம், அது சுழலுகிறதும் எங்கும் பிரவகிக்கிறதுமான முகத்தின் எல்லா பாகங்களிலும், சரீரத்தின் எல்லாபாகங்களிலும், இவைகளிலிருந்து கிரணங்களினால் போல, நார்களின் வழிவகையால் ஒவ்வொரு திசையிலும் அது இறங்குகிறது. இம்மாதிரியாக அவ்விடத்திலிருக்கும் எல்லாப் பொருள்களும், பொதுவாகவும் சிறப்பாகவும் இரண்டு விதத்திலும், முதன்மையானவைகளிலிருந்து இறுதியானவைகள் வரையில் ஏவப்படுகின்றன; காரிய சித்திகள் இறுதியானவைகளில் இருக்கின்றன. ஒரு முயற்சியின் நலத்தால் ஒவ்வொரு பொருளுமியக்கப் படுகிறது என்றும், அந்த முயற்சி நிற்குங்கால் சலனம் நிற்பதாகவும், நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இம்மாதிரியாக மனிதனிட சித்தத்தின் முழு யதேச்சையும், மனிதனில் மனமுள்ள முயற்சிகளாயிருந்து, முயற்சிகள் செய்கைகளாகிற மூளையிலிருக்கிற தொடக்கங்களிலிருந்து, ஸ்தூல பாகங்களிருக்கிற, இறுதியானவைகள் வரையில்கூட இடைவிடாதிருக்கிற ஓயாத முயற்சிகள் தவிர தங்களுக்குள்ளே வேறொன்றுமாயில்லாத நார்களினாலும் நரம்புகளினாலும் இறுதியானவைகளில் இயங்குகிறது. சித்தமானது என்னவென்றும், இந்த முயற்சியானது உள்ளேபாய்வதும் பெற்றுக்கொள்ளப் படுகிறதுமான அன்பினால் அசைக்கப்பட்டு செய்கைக்குத் தீர்மானிக்கப் படுகிறதின் நிமித்தம், தொழில்பட சாசுவத முயற்சியிலிருக்கிற அன்பின் ஆசயமென்றும் தெரிந்திருக்கும் பொருட்டாக இந்தக் குறிப்புகள் செய்யப்பட்டன.

இந்த ஆலோசனைகளிலிருந்து, அன்புவைத்தல் என்பது இச்சித்தலாகிறபடியினால், அது செய்தலும் கூட ஆகிறதென்று இப்பொழுது ஏற்படுகிறது; ஏனென்றால், ஒரு மனிதன் நேசிப்பது யாதெனிலும், அவன் இச்சிக்கிறான்; அவன் இச்சிப்பதை, கூடுமானால் செய்கிறான்; முடியாததது என்கிற காரணத்தினால் அவன் அதைச் செய்யாவிட்டாலும் பிரத்தியக்ஷமாகாத உள்ளான செய்கையிலிருக்கிறான். ஏனென்றால் இறுதியானவைகளில்கூட அது இருந்தாலொழிய மனிதனுக்கு ஒரு முயற்சியும், அல்லது சித்தமும் கிடையாது. அது இறுதியானவைகளி லிருக்கும்போது, உள்ளுக்குள்ளான செய்கையி லிருக்கிறது. ஆனால் இந்தச் செய்கையானது அவனிட ஆன்மாவி லிருப்பதால், அந்த மனிதன் முதலாயும் கூட எவனாலும் பார்க்கப்படுகிறதில்லை. இந்தக் காரணத்துக்காகத் தான் சித்தமும் செயலும் ஒன்றாகிறது; சித்தமானது செய்கைக்குச் சமமாகவும் எண்ணப்படுகிறது. ஸ்தூல லோகத்தில் சித்தத்தின் உள்ளான செய்கை பிரத்தியக்ஷமாய் இல்லாதபடியினால், அந்த உலகத்தில் சங்கதி இதுவல்ல. ஆனால், அது பிரத்தியக்ஷமாகிற ஞான லோகத்தில், அப்படி யிருக்கிறது. ஏனென்றால் அந்த உலகத்தில் தங்களிட அன்புகளுக்குத் தக்கபடி எல்லாரும் நடக்கிறார்கள்; சுவர்க்க சம்பந்தமான அன்பிலிருப்பவர்கள், சொஸ்த புத்தியுள்ளவர்களாய் நடக்கிறார்கள், நரக சம்பந்தமான அன்பிலிருப்பவர்கள் உன்மத்தமாய் நடக்கிறார்கள்; ஏதோ ஒரு பயத்திலிருந்து அவர்கள் நடக்காவிட்டால், அவர்களிட சித்தமானது உள்ளுக்குள்ளாய் சுறுசுறுப்பில் இருப்பதின் நிமித்தம், திடீரென்று வெளிக்கு வராதபடி அவர்களால் தொழில் படாமல் தடுக்கப்படுகிறது; சித்தமானது தொழில் படாமல் நின்றபோது தவிர, மற்றபடி இந்தச் செய்கையானது நிற்

கிறதில்லை. ஆகையினால், சித்தமும் செய்கையும் ஒன்றாகிற படியினாலும், சித்தமானது அன்பின் முயற்சியாகிறபடியினாலும், வேதத்தில் அன்புவைத்த லென்பதினால் செய்வதென்றும், இம்மாதிரியாக கர்த்தரையும் அயலானையும் நேசித்தல் என்பதால் கர்த்தரிட மிருந்துவரும் அன்பிலிருந்து அயலானுக்கு உபயோகங்கள் செய்தல் என்றும் அருத்தங் கொள்ளப்படுகிறது தவிர வேறொரு அருத்தமும் இல்லையென்று அனுமானமாகத் தொடருகிறது.

இதுதான் சங்கதி என்று கர்த்தரே, யோவானில், போதிக்கிறார்: "என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான் (XIV. 21—24). மறுபடியும், "என்னிட அன்பிலே நிலைத்திருங்கள். என்னிட கற்பனைகளை நீங்கள் கைக்கொண்டால், நீங்கள் என்னிட அன்பிலே நிலைத்திருப்பீர்கள். (XV. 9—10). மேலும், மறுபடியும் "கர்த்தரானவர் பேதுருவை நோக்கி மூன்று தடவை, என்னிடத்தில் அன்பா யிருக்கிறாயா என்றார். பேதுரு மூன்று தடவை, தான் அன்பு வைத்திருப்பதாக உத்திரம் கொடுத்தார்: கர்த்தர் அவருக்கு மூன்று தடவை என்னிட ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்" (XXI. 15-17). பிரிக்கமுடியாதபடி இரண்டு பொருள்கள் கூட இருக்கின்றன. இந்த இரண்டும், சொரூபமானதும், தடத்தமானது மாயிருக்கின்றன. சொரூபமானது நிலைத்து, அப்படி நிலைப்படுதலால், எதோ ஒன்றாலொழிய, சூனியமாகும். அன்பு வைத்தலோடும், செய்தலோடும், அல்லது இச்சித்தலோடும், தொழில் படுதலோடும் விஷயம் அதேவாகவே கூட இருக்கிறது. ஏனென்றால், அன்பு வைத்து, செய்யாமலிருப்பது முடியாது; இச்சித்து, தொழில் படா

மலிருப்பது முடியாது; இல்லா விட்டால், அவைகள், சூனியமாகும். ஆனால் அவைகள் செய்வதினாலும் நடப்பதினாலும் நிலைத்திருக்கின்றன. ஆகையால் ஒரு மனிதன் செய்து நடந்தால், பிறகு அன்பும் சித்தமும் முதலில் நிலைபடுகின்றன. வேறு விதத்தில் அல்லாமல், இந்த விதத்தில், கர்த்தரும் அயலானும் நேசிக்கப்படுகிறார்கள்.

## XX. அன்பு சூட்டை உற்பத்தி செய்கிறது.

அன்பானது பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களின் உயிரேயாகவும், உயிருள்ள சக்தியேயாகவும் இருக்கிறதென்பது காரணமாயிருக்கிறது; பிரபஞ்சத்திலுள்ள எல்லா முயற்சிகளுக்கும், சக்திகளுக்கும், சுறுசுறுப்புகளுக்கும், சலனங்களுக்கும், ஒன்றேயான உற்பத்தி ஸ்தானம், சுவர்க்கலோகங்களில் வானோர்கள் முன்பாக சூரியனைப் போலத் தோன்றுகிறதும், கர்த்தருமாகிய பர அன்பா யிருக்கிறது. அந்த அன்பானது ஒன்றென்றும், சூடு வேறொன்று என்றும், தேவர்களிலும் மனிதர்களிலும் அவைகளுக் குள்ளேயிருக்கும் பேதங்களால் மிகவும் விசதமாகிறது. ஒரு வானோன், அன்பிலிருந்து இச்சித்து நினைக்கிறான், புலப்பாடுடையவனாய், புத்தியுள்ளவனா யிருக்கிறான்; எது ஆசீர்வதிக்கப்பட்டதும் சுகானுபவமானது மென்றும் தனக்குள்ளே உள்ளுக்குள்ளாய்கூட உணர்ச்சியுள்ளவனாயிருக்கிறான்; மேலும் அன்பு வைக்கிறான். மனிதனுக்கும் விஷயம் அதுதான், இவ்விதமாக மானத காரிய சித்திகளிருக்கின்றன; ஆனால் சரீரத்தில் ஒவ்வொன்றும் சூட்டை உணருகிறது. இது ஆசீர்வதிக்கப்பட்டதும் சுகமானவைகளுக்கும் பிரத்தியேகமாயிருக்கிறது. ஆதலால், சூடானது, உயிர் அல்லது அன்பின் சுறுசுறுப்பினிட காரியமென்று விசதமாகிறது. குளிர்

காலத்தின் மத்தியில்கூட, உயிரின் அன்புகளுக்குத் தக்கபடி மனிதனானவன் உள்ளுக்குள்ளாயிருப்பதிலிருந்து மனிதன் உஷ்ணமுள்ளவனாக வளர்கிறானென்றும், பூலோக சூரியனிட வெப்பத்துக்கும் அந்த வெப்பத்துக்கும் பொதுவானது ஒன்றுமில்லை என்றும், அன்பின் பெருக்குக்குத் தக்க பிரகாரம் அவன் சூடாய் வளர்ந்து தூண்டப்பட்டு, நெருப்பு மூட்டப்படுகிறானென்றும், அதின் குறைவுக்குத் தக்கபடி மந்தமாகிறானென்றும், குளிர்பட்டு, இறக்கிறானென்றும், இம்மாதிரியாக அன்பின் சுறுசுறுப்புகளுக்குத் தக்கபடி இருக்கிறதென்றும், கூறப்பட்ட இவைபோன்ற அநேக ஆலோசனைகளால், சூடானது அன்பின் காரியமென்பது விசதமாகிறது.

2) பூமியின் பிராணிகளோடும், சுவர்க்கலோகத்தின் பட்சிகளோடும், விஷயம் அம்மாதிரியிருக்கிறது ; அக்காலத்தில் அவைகளிட இருதயம் துடிக்கிறபடியினாலும், இரத்தம் சூடாக்கப்படுகிற படியினாலும், நார் சூடாயிருப்பதாலும், மிகவும் சிறியதும் மிகவும் பெரியதுமான பாகங்கள் தங்களிட உயிருக்காதாரமான தொழில்களைச் செய்கிறபடியினாலும், நடுகோடை காலத்தைப் பார்க்கிலும், நடுகார் காலத்தில் சில வேலைகளில் இவைகள் அதிக சூடாயிருக்கின்றன ; அந்தச் சூடானது, சூரியனிடமிருந்தல்லாமல், ஆசையாயிருக்கிற ஆன்மாவின் உயிரிலிருந்து வருகிறது.

அன்பானது ஏன் சூட்டை உண்டாக்குகிறது என்பதற்குக் காரணம், பிரபஞ்சத்திலுள்ள எல்லா சக்திகளுக்கும் அது உயிரென்பதும், சூடாயிருக்கிற ஒரு கிரியா சக்தியினால் தவிர சிருட்டிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளும் பொருள்களில், இந்த உயிரானது பிரவேசிக்காது என்பதுவுமாயிருக்கின்றது. ஒவ்வொரு அந்தஸ்திலும் உபயோகங்களை உற்பத்தி செய்யும் பொருட்டு, கடவுளானவர் உலகத்தைச்

சிருட்டிக்கும்போது முதன்மையானதிலிருந்து இறுதியான வைகள் வரையில் எல்லா வழி வகைகளையும் தானே ஆயத்தம் செய்தார்; சம்யோகத்துக்கு சர்வ வியாபகமும் உபாதானமுமான காரணங்கள், அன்பின் முயற்சியினிட சாரம் இருக்கக்கூடிய சூடாயிருக்கிறது. ஒவ்வொரு காரணத்துக்கும் காரியத்துக்கும் காரணகாரியசம்பந்தம் யிருப்பதால், சூடானது அன்பிற்குச் சமீபமாய் இருப்பதின் நிமித்தம் அன்பிற்கும் சூட்டிற்கும் காரணகாரியசம்பந்த மிருக்கிறது. காரணகாரிய சம்பந்தத்திலிருந்து தான், கர்த்தராயிருக்கிற சுவர்க்கலோக சூரியன் அனலுள்ளவராகத் தோன்றுகிறார்; அத்துடன் அதிலிருந்து வரும் அன்பு வானோர்களால் சூடாக அறியப்படுகிறது. அம்மாதிரியே அன்னுவயத்திலிருந்துதான் சுவர்க்கலோகங்களிலுள்ள கர்த்தரிட பரமஞானசத்தி ஒளியாகத் தோன்றுகிறது; அதனாலே தான் கர்த்தரின் முகம் அவர் வேற்றுருவான போது, "சூரியனைப் போல் பிரகாசித்தது" (மத்தே. XVII. 2). அதே காரணகாரிய சம்பந்தத்திலிருந்துதான், கர்த்தரின் அன்பினிட பரிசுத்த மூலகாரணம், பலிபீடத்தின் நெருப்பினாலும், கூடாரத்திலிருந்த விளக்குத் தூணின் விளக்குகளிலிருந்த நெருப்பினாலும், சாயல் காட்டப்பட்டது; அதினால் தான், சீனாய் மலையின்மேரில் நெருப்பாகவும், கூடாரத்துக்குமேல் இரவில் ஒரு நெருப்பு சுவாலையாகவும் கர்த்தர் தோன்றினார்; அதே காரணத்தால் தான், அநேக தேசத்தார் நெருப்பைப் பரிசுத்தமாக நினைத்து, ரோமர்கள் "தவப் பெண்கள்" என்று கூறிய கன்னிகைகளை அதை வளர்க்க பிரத்தியேகமாய் வைத்திருந்தார்கள். அதே சம்பந்தத்தினால்தான், வேதத்தின் அநேக வாக்கியங்களில், நெருப்பு என்பதாலும், சுவாலை என்பதாலும், அன்பு என்று அருத்தம் கொள்ளப்படுகிறது;

மேலும் அந்த சம்பந்தத்தை உள்ளுக்குள்ளாய் அறிவதால், பரிசுத்த அன்பு என்று அருத்தம் கொள்ளப்படுகிற அந்த பரிசுத்த நெருப்பு, நம்மிட இருதயங்களைத் தீமூட்டவேண்டு மென்றும் நாம் பிரார்த்திக்கிறோம். அதே காரணத்தினால் தான், பரம அன்பானது சுவர்க்கத்தில் தூரத்தில், நெருப்பு போல் தோன்றுகிறது. அதன் நிமித்தம் கர்த்தரும் கூட, "நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போல பிரகாசிப்பார்கள்" என்று சொன்னார் (மத்தே. XIII. 43). அம்மாதிரியே, நரகத்தில் அதைச் சேர்ந்த அன்பு, தூரத்தில் நெருப்புபோல் தோன்றுகிறது. இந்த விஷயத்தைப்பற்றி சுவர்க்கமும் நரகமும் என்கிற நூலைப் பார்க்கவும். (செ. 566—575.)

**XXI. தானே உயிராயிருக்கிற பரமஇச்சா சத்தி, சூட்டின் வழிவகையால் அவைகளில் உள்ள ஒவ்வொரு பொருளுடனும் எல்லாப் பொருள்களுடனும், ஞான ஜீவ உருவங்களை உற்பத்தி செய்கிறது.**

பரமஇச்சாசத்தியாகவும், அதே உயிராகவு மிருக்கிற, தன்னிட சொந்த சூரியனிலிருந்து, பிரபஞ்ச சிருட்டி கர்த்தாவாகிய கடவுளானவர், உலகத்தின் இறுதியானவை களிலும், உள்ளுக்குள்ளானவைகளிலும் உற்பத்தி செய்து பிராணி உருவமென்றும், விருக்ஷ உருவமென்றும் சாதா ரணமாய் இரண்டு உருவங்கள் இருக்கின்றன. பிராணி உருவங்கள் என்பதால் எல்லாவித பிராணிகளென்றும், அத் துடன் மனிதர்களும் தேவர்களும் என்றும், விருக்ஷ உரு வங்கள் என்பதால், மரங்கள் போலவும், புதர்கள் போல வும், புஷ்பங்கள் போலவும், இருக்கப்பட்ட எல்லாவித செடிகளென்றும் அருத்தம் கொள்ளப்படுகிறது. இந்த

இரண்டு உருவங்களைப்பற்றி முன்னமே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்விடத்தில் ஆதரிக்கப்பட்ட விஷயமானது, தன்னிலிருந்து எல்லாப் பொருள்களும் சிருட்டிக்கப்பட்ட பரமஇச்சாசத்தியாக இருப்பதாலும், எல்லாப் பொருள்களும் சிருட்டியினால், இடைவிடாமல் உருவாக்கப் படுகிறதினாலும், பிராணி உருவமான முதல் வடிவத்தைப் பற்றி இன்னும் கொஞ்சம் ஆலோசனைகளை இங்கே சொல்ல நாம் அனுமதி கொடுக்கப்பட வேண்டும்.

2) தானே உயிராக இருக்கிற பரமஇச்சாசத்தி கடவுளாகிய அதன் ஆக்கியோனிடமிருந்து, தன்னையே போன்ற பிரதிமைகளையும் சாயல்களையும் சிருட்டித்து உருவாக்குகிற சக்தியைப் பார்க்கிலும் தன்னிட நெஞ்சில் வேறொன்றையும் வகிக்கிறதில்லை; இவர்கள் மனிதர்களா யிருக்கிறார்கள், மனிதனிடமிருந்து வானோர்கள் உண்டாகிறார்கள்; பிராணிகளா யிருக்கிற ஒவ்வொருவித ஆசைகளையும் பொருந்திய சரீரத்தினால் உடுத்தவும்கூட பூரணமானதும் பூரணமில்லாதுமாகிய இந்த எல்லா உருவங்களும், அன்பின் வடிவங்களாயிருக்கின்றன; நகரவும், நடக்கவும், செய்யவும், பார்க்கவும்; கேட்கவும், வாசனை பார்க்கவும்; ருசி பார்க்கவும், உணரவும்; சாப்பிடவும், குடிக்கவும், கூடி சவகாசம் செய்யவும், பெருகவும், தங்கள் சக்தியில் அடங்கியிருக்கிற புறம்பானவைகளில் உயிர் விஷயத்தில் அவைகள் ஒப்பானதா யிருக்கின்றன. ஆனால், நினைக்கவும், இச்சிக்கவும், பேசவும், தெரிந்து கொள்ளவும்; கிரகிக்கவும், புத்தியுள்ளவனாகவும் இவைகளிலிருந்து சந்தோஷத்தையும் பேரின்பத்தையும் அனுபவிக்கவும் வேண்டிய சக்தியில் அடங்கி யிருக்கிற உள்ளானவைகளில், உயிர் விஷயத்தில் அவைகள் ஒவ்வாதவைகளா யிருக்கின்றன. இந்த பின் சொல்லப்பட்ட உருவங்கள் மனிதர்களாயும் தேவர்களாயு

யிருக்கிறார்கள்; ஆனால் முன் சொன்னவைகள் நானுவித் உயிருள்ள பொருள்களா யிருக்கின்றன. இந்த குறிப் பிட்ட மனோசக்திகள் காரியத்திலும் உபயோகத்திலும் இருக்கும் பொருட்டாக சிருட்டிக்கப்பட்ட பொருள்களி லிருந்தும் ஜடப் பொருள்களிலிருந்தும் ஆச்சரியகரமாய் அவைகள் செய்யப்பட்டு, உறுப்போடு அமைக்கப்பட் டிருக் கிறது.

மனிதனுயிருக்கிற கர்த்தரும் தானே உயிராக இருக்கிற அவரிட பரமஇச்சாசத்தியும், தன்னிடமிருந்து சூரியனை புறப்படுகிற தன்னிட சொந்த பரமார்த்த ஞானத்திலிருந்து அந்த பதார்த்தங்களை உருவாக்கினார் என்பது, உயிருள்ள ஆன்மாக்கள் ஆசைகளா யிருக்கிறதும், பூரணமானதும், பூரணமில்லாததுமாகிய எல்லாம், புறம்பானவைகளில் ஒரே மாதிரியாக இருக்கிறதுமாகிய இந்த உண்மையி லிருந்து மிகவும் தெளிவாய் இருக்கிறது. ஒரு கண்ணுள் ளவனைகவும், ஆந்தைக் கண் உள்ளவனைகவும், ஊனப் பார்வை உள்ளவனைகவும், ஒருவன் இல்லாவிட்டால், அவ்வித பதார்த்தங்கள் வேறு எந்த உற்பத்தியையும் உடைத்தாயிருக்க முடியாதென்று பார்க்கக்கூடாதவன் எவன் இருக்கிறான்? உன்னிட மதியைச் சுபாவத்தின் ஆழத் துக்கு மேல் கொஞ்சம் உயர்த்து, நீ புத்தியுள்ளவனுவாய். சூடானது நிருமாணத்தின் உபகரண மென்பது, கர்ப்ப பிண்டமிருக்கும் கர்ப்பாசயத்திலுள்ள சூடான திரவ வஸ்துவிலிருந்தும், முட்டையிலுள்ள கோழிக் குஞ்சுவி லிருந்தும், நன்றாய்த் தெரிந்திருக்கிறது. உலகத்துச் சூரிய னிட சூடானது இவ்வித உற்பத்திகளுக்குக் காரணமா யிருக்கிறதென்கிற நம்பிக்கை, சரீர இந்திரியங்களின் போலி நியாயங்களால் குருடாக்கப்பட்ட மனதில் பிறக்கிறது. ஏனென்றால், இந்த வழியில், முதன்மையானதிலிருந்து

இறுதியானவைகள் வரையில், உயிரானது முழுகாரிய சித்திக்கும் வருகிறபடியினால், உள்ளான சூடு அவைகளில் கூட பாயும் பொருட்டாக அந்த சூரியனிட சூடானது சரீரத்தின் மிகவும் வெளியே யுள்ள பாகங்களையும் அல்லது மேற்றோல்களைத் திறப்பதில் மாத்திரம் வேலை செய்கிறது. இந்தக் காரணத்துக்காகத்தான் பூமியிலுள்ள பிராணிகளும், சுவர்க்கத்திலுள்ள பட்சிகளும், ஒவ்வொரு வருஷத்திலும் வசந்தகாலத்திலும் வேனிற்காலத்திலும், பிள்ளை பெறும் தொழில்களையும் கடமைகளையும் நிறைவேற்றி தங்களுடைய சந்தோஷங்களில் பிரவேசித்து அவைகளைப் புதுப்பிக்கின்றன. சிந்தனைகளின் ஆசாபாசங்களினால் எழுப்பப்பட்ட உள்ளிருக்கும் அன்பிலிருந்து சூட்டை உடைத்தாயிருக்கிறவனும், சரீரத்தின் கடைசியான பாகங்களாயிருக்கிற மேற்றோல்களைக் குளிர் தாக்காதபடி தன்னிட உடுப்பு தடுக்கிறதுமான மனிதனோடு அது வேறு மாதிரியிருக்கிறது.

# பரமஞானசத்தி

# பரமஞானசத்தி

I. சுவர்க்க லோகங்களிலுள்ள பரமஞான சத்தி தேவர்கள் கண்களுக்கு முன்பாக ஒளி போல் தோன்றுகிறது.

கடவுளிடத்தில் அன்பும் ஞானமு மிருக்கின்றன. அவரில் அன்பு சொரூபம்; அவரில் ஞானம் தடத்தம். அப்படியிருந்தாலும், ஞானம் அன்பைச் சேர்ந்த படியினுலும், அன்பு ஞானத்தைச் சேர்ந்த படியினுலும், அவரில் இவைகள் இரண்டல்ல, ஒன்றே. அன்னியோன்னியமாயிருக்கிற இந்த ஒருமைப் பாட்டின் பலன், ஒரு ஏகம். இந்த ஏகமான பொருள் சுவர்க்கலோகத்திலே தேவர்கள் முன்பாக ஒரு சூரியனுகக் காணப்படுகிற பரமஇச்சாசத்தியாக இருக்கிறது. பரமஞானசத்தியினிடவும் பரமஇச்சாசத்தியினிடவும் அன்னியோன்னிய சம்யோகம் என்பது கர்த்தரின் பின்வரும் வாக்கியத்தால் அருத்தம் கொள்ளப்படுகிறது:—"பிலிப்புவே, நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிற தில்லையா? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள் (யோவான். XIV. 10, 11); இந்த வாக்கியத்தாலும் கூட, "நானும் பிதாவும் ஒன்ருயிருக்கிறேம்" (யோவான் X. 30). ஆனுல் கர்த்தரில் ஒன்ருயிருக்கிற இந்த இரண்டும், சூரியனுகிற அவரிடமிருந்து பிரத்தியேகமாய் இரண்டாக அதாவது ஞானம் ஒளியாவும், அன்பு சூடாகவும், புறப்படுகின்றன. தோற்றத்தின்படி, நிஜமாகவே, அவைகள் பிரத்தியேகமாய் புறப்படுகின்றன. ஆயினும், சூரியனிடமிருந்து புறப்படுவது, நுண்ணிய

பாகங்களில் சூரியனுகவும் அதனுல் முழுவதிலும் சர்வ வியாபகமாய் கூட இருப்பதின் நிமித்தம் நுண்ணிய நுனியிலும், சூரியன் விஷயத்தில் போல், அவைகள் ஒன்ரு யிருப்பதால், ஒளி சூட்டைச் சேர்ந்த படியினுலும், சூடு ஒளியைச் சேர்ந்த படியாலும், அவைகள், தாங்களே பிரத்தியேகமாய் இல்லை. ஒவ்வொரு நுனியிலும், நுண்ணிய பாகத்திலும் என்று சொல்லப்பட்டது ; ஆனுல் பரமாயிருக் கப்பட்டது ஸ்தூலமா யல்லாமல் பரமார்த்தமாயிருப்பதின் நிமித்தம், பரமாயிருப்பதில் இது முடியாதபடியினுல், இடத்தின் நுண்ணிய பாக மென்றும், நுனி என்றும் நாம் அருத்தம் கொள்ளவில்லை.

2) ஞானமும் அன்பும், தோற்றத்துக்கு, சூரியனுகிய கடவுளிடமிருந்து, ஞானம் ஒளிகாட்சியாகவும், அன்பு சூடாகவும் அறியப்பட்டும், இரண்டாகப் பிரத்தியேகமாய் புறப்படுகிறபடியினுல், தேவர்களால் பிரத்தியேகமாய் இரண்டாக அவைகள் பெறப்படுகின்றன. அவர்களில் சிலரால், அன்பாயிருக்கிற சூடு அதிகமாய் அடையப் படுகிறது, இன்னும் சிலரால், ஞானமாயிருக்கிற ஒளி அதிக மாய் அடையப்படுகிறது ; ஆகையினுலும்கூட, எல்லா பரலோகங்களிலும் இருக்கும் தேவர்கள் இரண்டு ராஜ்யங் களாக விசேஷித்து அறியப்படுகிருர்கள். ஞானமாயிருக்கிற ஒளியைப் பார்க்கிலும், அன்பாயிருக்கிற சூட்டை அதிக மாய் அடைந்தவர்கள் ஓர் ராஜ்யத்தாராய், சுவர்க்க தேவர் கள் எனப்படுகிருர்கள் ; இவர்களால், எல்லாவற்றிலும் உயர்ந்த சுவர்க்கங்கள் உண்டாக்கப்படுகின்றன. அன்பாக யிருக்கிற சூட்டைப் பார்க்கிலும் ஞானமாயிருக்கிற ஒளியை அதிகமாய் அடைந்தவர்கள் மற்ற ராஜ்யத்தாராய் ஞான தேவர்கள் எனப்படுகிருர்கள் ; இவர்களால் தாழ்ந்த சுவர்க் கங்கள் உண்டாக்கப்படுகின்றன.

பின் சொன்னவர்கள் அன்பாயிருக்கிற சூட்டைப் பார்க்கிலும், ஞான மாயிருக்கிற ஒளியை அதிகமாய் அடைந்திருக்கிறார்களென்று சொல்லப்பட்டது; ஆனால் இந்த மிகுதி வெளிக்கு மாத்திரமிருக்கிறது; ஏனென்றால், அவர்களிட அன்பானது அவர்களிட ஞானத்தோடு ஒன்றாகிற அளவு மட்டும் அதற்கு அதிகமாய் அல்லாமல் புத்தியுள்ளவர்களாய் இருக்கிற படியினால், ஞான தேவர்கள் ஞானிகள் என்றல்லாமல் பகுத்தறியும் அறிவு உள்ளவர்களென்று சொல்லப்படுகிறார்கள். கடவுளிலும், கடவுளிலிருந்தும், தேவர்களிலும் இருக்கும் ஒளியைப் பற்றி இவ்வளவு சொல்லப்பட்டது.

3) சுவர்க்க லோகங்களில் வெளிச்சமாகத் தோன்றுகிற பரமஞானசத்தி, அதன் சாரத்தில் வெளிச்சமல்ல. ஆனால் தேவர்கள் பார்வைக்குத்தோன்றும் படியாக கூட,ஒளியினால் அது தானே உடுத்துக் கொள்ளுகிறது. ஞானமானது அதன் சாரத்தில் பரம உண்மை, ஒளியானது அதன் தோற்றமும் பொருந்தியது மாயிருக்கிறது. முன்னமே சொல்லிய அன்பின் சூடு போன்றே விஷயம் ஞானத்தின் வெளிச்சத்துக்கு மிருக்கிறது. ஒளியானது ஞானத்தோடு பொருந்துகிற படியினாலும், கடவுளானவர் பரம ஞான மாயிருப்பதாலும் வேதத்தில் அநேக வாக்கியங்களில், கர்த்தரை ஒளியென்றும் கூட சொல்லப் பட்டிருக்கிறது; பின் வருபவைகளில் போல :—“ உலகத்திலே வந்த எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி (யோவான், I. 9). “நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன், என்னை பின் பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்” என்று இயேசு சொன்னார் (யோவான் VIII, 12). அதற்கு இயேசு: “ இன்னும் கொஞ்ச காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்; இரு

ளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள். ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படி ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்.' என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனும் இருளில் இராதபடிக்கு நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்." (யோவான் XII. 35,36,46); இன்னும் அநேக இதர வாக்கியங்களிலும்; அவர் வேற்றுருவானபோது அவரிட வஸ்திரம் உறைந்த மழையைப்போல் பூமியிலே எந்த வண்ணானும் வெளுக்கக்கூடாத வெண்மையாய்ப் பிரகாசித்தபடியினால், அவரிட பரமஞானசத்தி அவரிட வஸ்திரங்களால் கூட சாயல் காட்டப்பட்டது (மார்க்கு IX 3; மத்தே. XVII. 2). வேதத்திலே வஸ்திரங்கள் என்பது ஞானத்தின் உண்மைகளைக் கருதுகிறது. ஆகையினால் தங்களிட சாதாரண அறிவினிடவும், பகுத்தறியும் அறிவினிடவும், ஞானத்தினிடவும் உண்மைகளுக்குத் தக்கபடி, பரமண்டலத்திலுள்ள எல்லா தேவர்களும் உடுத்திருப்பதாகத் தோன்றுகிறார்கள்.

4) ஒளியானது ஞானத்தின் தோற்றமென்றும், அது அதற்குப் பொருந்தினதென்றும், உலகத்தில் அல்லாமல், சுவர்க்கலோகத்தில் விசதமாய் இருக்கிறது; ஏனென்றால், அங்கிருக்கும் எல்லாப்பொருள்களையும் பரம இச்சாசத்தியிலிருந்து வெளிச்சமாக்கிக்கொண்டு, ஞானத்தின் வெளிச்சமாயிருக்கிற சுவர்க்கலோகத்தில் ஞான வெளிச்சத்தைப் பார்க்கிலும் இதர வெளிச்சம் கிடையாது. வானோர்களின் ஞானம் அந்தப் பொருள்களை அதன் சாரத்தில் தெரிந்துகொள்ள அவர்களுக்குப் சக்தி உண்டாக்குகிறது; வெளிச்சமானது அந்தப் பொருள்களை அவைகளின் உருவத்தில் பார்க்க சக்தி உண்டாக்குகிறது, ஆகையால், சுவர்க்கலோகங்களிலுள்ள வெளிச்சமானது தேவர்களின் ஞானத்

துக்குத் தக்கபடி அளவாய் இருக்கிறது. அவர்கள் ஞானத்தி லிருக்கிறார்களென்கிற காரணத்தின் நிமித்தம், எல்லாவற்றி லும் உயர்ந்த பரமண்டலங்களில், வெளிச்சமானது சுவாலை போன்றும், அதிகமாய் மெருகிட்ட பொன் எரிகிறதுபோல வும் எரிந்துகொண்டு இருக்கிறது. அவர்கள் பகுத்தறியும் அறிவில் இருப்பதின் நிமித்தம், கொஞ்சம் தாழ்ந்த பரலோ கங்களில், அதிகமாய் துலக்கின வெள்ளியிலிருந்து போல, ஒளியானது வெண்மையாயும் பிரகாசமாயு மிருக்கிறது. எல்லாவற்றிலும் தாழ்ந்த பரமண்டலங்களில், அவர்கள் ஒரு பொருள் இருக்கிறபடி அறியும் அறிவில் இருப்பதின் நிமித்தம், வெளிச்சமானது உலகத்தின் மத்தியான வெளிச் சத்தைப் போலிருக்கிறது. கொஞ்சம் உயரமான பர லோகங்களின் வெளிச்சம், தானே இரவில் காந்தியால் பிரகா சிக்கிற நட்சத்திரத்தின் தோற்றத்தைப்போல் பிரகாசமா யிருக்கிறது; அங்கே சூரியன் எப்பொழுதும் அஸ்தமிக் காதபடியினால் அந்த வெளிச்சமானது இடைவிடாதிருக் கிறது. ஞானமுள்ளவர்களாக விரும்புகிற மனிதர்களின் புத்திகளுக்கு உலகத்தில் ஞானம் கொடுப்பது அதே வெளிச்சமாயிருக்கிறது; ஆயினும், அவைகள் பரமார்த்த மாய் அல்லாமல் ஸ்துலமாயிருப்பதால் அது அவர்களுக்குத் தோன்றுகிறதில்லை. அது எனக்குத் தோன்றியபடியால், அது தோன்றக்கூடும். ஆனால் அது என்னிட ஞானக் கண்க ளுக்கு முன் தோன்றியது. மேலும் எல்லாவற்றிலும் உயர்ந்த பரலோகத்தின் வெளிச்சத்தில் நான் ஞானத்தி லிருந்ததாகவும், இரண்டாவது பரலோகத்தின் வெளிச்சத் தில் பகுத்தறியும் அறிவில் இருந்ததாகவும், இறுதியான பரலோகத்தின் வெளிச்சத்தில் ஒரு பொருள் இருக்கிறபடி அறியும் அறிவில் இருந்ததாகவும், நான் ஸ்தூல வெளிச்சத் தில் மாத்திரம் இருந்தபோது ஞானவிஷயங்களைப் பற்றி,

எனக்கு அறிவில்லாதிருந்ததாகவும் தெரிந்துகொள்ள எனக்கு அனுக்கிரகிக்கப்பட்டது.

5) உலகத்தில் கல்விமான்கள் இக்காலத்தில் எவ்வித வெளிச்சத்தில் இருக்கிறார்களென்று நான் தெரிந்து கொள்ள, இரண்டு வழிகள் எனக்குப் பிரத்தியக்ஷமாக்கப் பட்டன. ஒன்று ஞானவழி என்று சொல்லப்பட்டது. மற்றொன்று மூடவழி என்று சொல்லப்பட்டது. ஞானவழியின் முடிவில் ஒரு அரமனை வெளிச்சத்தில் இருந்தது; ஆனால் மூடவழியின் முடிவில் அரமனை போன்ற ஒன்று இருந்தது. ஆனால் அது இருட்டிலிருந்தது. கல்விமான்கள் முன்னூறுபேர் வரையில் ஒன்றாய் வந்தார்கள்; தாங்கள் தெரிந்தெடுக்கும் வழியில் போக அவர்கள் இஷ்டப்படி விடப்பட்டது; இருநூற்று அறுபது பேர் மூட வழியில் பிரவேசித்ததையும், நாற்பதுபேர் மாத்திரம் ஞானவழியில் பிரவேசித்ததையும் கவனிக்கப்பட்டது. ஞானவழியில் சென்றவர்கள், வெளிச்சத்திலிருந்ததும், மகத்துவமான பொருள்கள் இருந்ததும், நேர்த்தியான நாரால் செய்யப் பட்ட ஆடைகள் கொடுக்கப்பட்டதும், அங்கே தேவர்களானதுமான, வெளிச்சத்திலிருந்த ராஜகிரகத்தில் பிரவேசித்தார்கள்; ஆனால் மூடவழியில் பிரவேசித்தவர்கள், இருட்டில் ராஜகிரகத்தைப்போல் தோன்றியதில் பிரவேசிக்கவிரும்பினார்கள். ஆனால், அதுவோ ஒரு கூத்துக்காரர்கள் நாடகசாலையாயிருந்தது; அங்கே அவர்கள் நாடகசாலை ஆடைகளைப் போட்டுக்கொண்டும், வேஷம் போட்ட குறிகாரர்களாக கற்பித்துக்கொண்டும் மூடர்களானார்கள். ஞான வெளிச்சத்தில் உள்ள கற்ற ஞானிகளோடு ஒப்பிட்டால், இக்காலத்தில் ஸ்தூல வெளிச்சத்திலுள்ள கற்ற மூடர்களின் லட்சணமும் அளவான கணக்கும் இவ்விதமாய் இருக்கிறதென்றும், மற்றொருவன் கூறுவது உண்மையாவென்று

தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள், ஞான வெளிச்சத்தை அனுபவிக்கிறார்களென்றும், ஆனால் மற்றவர்கள் சொல்வதை உறுதிப்படுத்த மாத்திரம் விரும்புகிறவர்கள் ஸ்தூல வெளிச்சத்திலிருக்கிறார்களென்றும் எனக்கு பின்னிட்டுச் சொல்லப்பட்டது.

**II. கடவுளானவர் மனிதனில் அவனிடசித்தமாயிருக்கிற அன்பின் ஆசையைச் சிருட்டித்து, பின்னிட்டு, அவனில் அதை உருவாக்கி, அவனிட புத்தியாயிருக்கிற ஞானத்தின் ஆசயத்தை அத்துடன் சேர்க்கிறார்.**

கடவுளில், அன்பு ஞானம் என்கிற இரண்டு பொருள்களிருக்கிறபடியினாலும், இவைகள் இரண்டும் அவரிடமிருந்து புறப்படுகிறபடியினாலும், மனிதனானவன் அவரிட சாயலாகவும் பிரதிமையாகவும், அன்பினால் சாயலாகவும், ஞானத்தினால் பிரதிமையாகவும் இருக்க சிருட்டிக்கப்பட்டபடியினால், ஒன்று அன்பிற்கும், மற்ற ஒன்று ஞானத்திற்குமாக, இரண்டு ஆசயங்கள் மனிதனில் சிருட்டிக்கப்பட்டன. அன்பின் ஆசயம் சித்தமென்றும், ஞானத்தின் ஆசயம் புத்தியென்றும் சொல்லப்படுகின்றன. தனக்கு இந்த இரண்டும் இருக்கிறதாக மனிதனுக்குத் தெரியும். ஆனால், கர்த்தரில் அவைகள் உயிர் என்கிறதும், ஆனால் மனிதனில் அவைகள் உயிரைப்பெறும் ஆசயங்களென்கிறதுமான, இந்த வித்தியாசத்துடன், கர்த்தரில் இருப்பதுபோல் அவைகள் சேர்க்கப்பட்டிருக்கிறதென்று அவனுக்குத் தெரியாது. அவைகள் ஞான உருவங்களாயிருப்பதாலும், ஞான பொருள்கள் விவரணத்தை மிஞ்சி இருக்கிறபடியினாலும், இந்த உருவங்களின் சுபாவமும் லட்சணமும் விஸ்தரிக்க முடியாது. கணக்கற்றதாயும், பிரத்தியேகமானதாயும், ஆனால் அப்படி

யிருந்தாலும் ஒற்றுமையானதாயும் இருப்பதனுல், மூன்று வதுபடி வரையில்கூட ஏறுகிற உருவங்களுக்குள் உருவங்களாகவும், அன்பினிடவும் ஞானத்தினிடவும் தனித்தனியே ஆசயங்களாகவு மிருக்கின்றன. சேதனு நிலயங்களில் இந்திரிய ஞானமும், அசைக்கிற அங்கங்களில் சலனமும் சாத்தியமாகச் செய்து, அவைகளினுல் அவைகளின் முயற்சியும் சக்தியும் சரீரத்தின் உயர்ந்ததும் தாழ்ந்ததுமான எல்லாப் பொருள்களிலும் செல்லுகிற, அங்கே நார்களின் முதலிடமாகவும் முக்கிய பாகமாகவுமிருக்கிற மூளையில் அவைகள் அவைகளிட உற்பத்தியை உடைத்தாயிருக்கின்றன. அதே வழிவகையால், மற்ற அங்கங்களிலும், போஷிப்புக் காரியங்களும், அன்னரசம் இரத்தம் இவைகளின் நிருமாணமும், அத்துடன், பிரித்தல், சுத்தம்செய்தல் பிள்ளை பெறுதலாகிய காரியங்களும், இம்மாதிரியாக ஒவ்வொன்றும் தன்னிட பிரதானமான உபயோகத்தில் ஆதரிக்கப்படுகின்றன.

இவைகளை முந்தி சொல்லியதால்,

1. அன்பும் ஞானத்துக்கும் ஆகாயங்களா யிருக்கிற அந்த உருவங்கள் மனிதனில் முதலில், கருப்பையில் கர்ப்பம் தரிக்கும்போதும் ஆரம்பிக்கும்போதும், இருக்கின்றன வென்றும்,

2. அவைகளிலிருந்து, சரீரத்தின் சிரசிலிருந்து பாதத்தின் உள்ளங்கால் வரையிலும் கூட ஒவ்வொரு பாகமும் இடைவிடாமல் உற்பத்தி செய்யப்பட்டு உண்டாக்கப்படுகிறதென்றும்,

3. இந்த உற்பத்திகள் அன்னுவய சாஸ்திர சட்டங்கள்படி உண்டாகிறதென்றும், அதனுல், புறம்பானதும் உள்ளானதுமான சரீரத்தின் எல்லாப் பாகங்களும் அன்னுவயமானவைக ளென்றும்,

அறியப்படலாம்.

1. அன்புக்கும், ஞானத்துக்கும் ஆசயங்களா யிருக்கிற அந்த 2) உருவங்கள் மனிதனில் முதலில் கருப்பையில் கர்ப்பம் தரிக்கும்போதும் ஆரம்பிக்கும்போதும், இருக்கின்றன வென்பது, நீரீட்சணத்தால் தெளிவா யிருக்கிறது, மேலும் அதை அறிவிலிருந்தும் ரூபகாரம் செய்யலாம். கர்ப்பம் தரித்த பின் கருப்பையிலுள்ள இளஞ்சூல்களின் முதல் ஆரம்பத்தையும், அதனுடன், அவயங் காத்தபின் முட்டையிலுள்ள கோழிக் குஞ்சுவின் மூலாங்கங்களையும் பார்ப்பதிலிருந்து. ஆரம்பமான உருவங்கள் தானே வெறும் கண்ணுக்குக் காணப்படுகிறதில்லை. ஆனால் தலையாகிற அவைகளிட முதல் உற்பத்திகள் காணப்படுகின்றன. பின் கூறியவைகள் முதலில் ஒன்றுக் கொன்று ஒவ்வாமல் பெரியதா யிருக்கிறதென்றும், அதனுடன் அதிலிருந்து சரீரத்திலுள்ள எல்லாப் பொருள்களின் மூல அங்கங்களும் வெளியே அனுப்பப்படுகிறதென்றும், நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இதனால் இந்த உருவங்கள் ஆரம்பங்களென்று விசதமாகிறது. பரமஇச்சாசத்தியாகவும், பரமஞானசத்தியாகவும் இருப்பதின் நிமித்தம், சூரியனாகிற கர்த்தரிடமிருந்து எல்லா சிருட்டியும், உண்டாகிறதென்று காண்பிக்கிற அறிவிலிருந்து; இவைகளிலிருந்து மனிதனிட சிருட்டி உண்டாகிறது. கருப்பப் பையில் இளஞ்சூலினிடவும் சிசு மனிதனிடவும் நிருமாணம், சிருட்டியின் உவமையா யிருக்கிறது; அது விருத்தியால் உண்டாகிறபடியால், ஜனித்தல் என்று சொல்லப்படுகிறது. ஆகையினால், முக்கியமாய் மனிதனில் ஆரம்பமான உருவங்கள், அன்பினிடவும் ஞானத்தினிடவும் ஆசயங்களென்றும், மனிதனுக்குகிற எல்லா மீதி பொருள்களின் சிருட்டி, இவைகள் மூலமாய் உண்டாக்கப்படுகிற தென்றும், பின் தொடருகிறது. மேலும், நிமித்தகாரணமென்று பெயரிடப்பட்ட முந்தின

காரணத்திலிருந்து தவிர, எந்தப் பலனும் தன்னிலிருந்தே உண்டாகிறதில்லை; முயற்சியிலும் அபிப்பிராயத்திலும் பின் தொடருகிற ஒவ்வொரு பொருளும் இருக்கப்பட்ட முடிவு என்கிற காரணத்திலிருந்து அல்லாமல், இதுகூட தன்னிலிருந்தே உண்டாகிறதில்லை; இவைகள் முடிவுகளுக்கு முடிவா யிருப்பதால், அந்த முயற்சி பரமஇச்சாசத்தியிலும், அந்த அபிப்பிராயம் பரமஞானசத்தியிலும் இருக்கிறது.

3) 2. அந்த உருவங்களிலிருந்து, சரீரத்தின் சிரசிலிருந்து பாதத்தின் உள்ளங்கால் வரையிலும் கூட ஒவ்வொரு பாகமும் இடைவிடாமல் உற்பத்தி செய்யப்பட்டு, உண்டாக்கப்படுகிறது, என்பதுகூட நோக்கத்தால் விசதமாகிறது; அறிவினாலும் ரூபகாரம் செய்யப்படலாம். அந்த ஆதியான உருவங்களிலிருந்து கண்களென்றும், காதுகளென்றும், நாசித் துவாரங்களென்றும், நாவென்றும், சொல்லப்பட்ட முகத்திலுள்ள சேதனநிலயங்களுக்கும் அதனுடன், தசைநார்கள் என்று சொல்லப்பட்ட, முழு சரீரத்தின் அசைக்கிற அங்கங்களுக்கும், அம்மாதிரியே சரீரத்தில் பலவித உபயோகங்களுக்கு உபயோகப்படுகிற எல்லா அங்க சம்பந்தமான ஆந்திரிகங்களுக்கும், நார்கள் அனுப்பப்படுகிறபடியினால், நிரீட்சணத்தாலும். முன் சொன்னதும் பின் சொன்னதுமாகிய இவைகளெல்லாம் ஒவ்வொரு மூளையிலிருந்தும், முள்ளந்தண்டு கொடியிலிருந்தும் அனுப்பப்பட்ட நார்களினாலும் நரம்புகளினாலும் உருவாக்கப்பட்ட நிர்மாணங்களாய் மாத்திரம் இருக்கின்றன. அதிலிருந்து வலைபோன்ற பின்னல்கள்கூட உண்டாகிற இரத்த நாடிகளே அதே மூலத்தில் உற்பத்தியாகிற நார்களிலிருந்து அம்மாதிரியே வருகின்றன. சரீர சாஸ்திரத்தில் சாமர்த்தியமுள்ள ஒவ்வொருவனும், பெரிய மூளையின் புறத்திலும் அகத்திலும், சிறிய மூளையிலும் முள்ளந்தண்டுக் கொடி

யிலும், புறணிக்குறியதும் சாம்பல் போன்றதுமான பொருள்கள் என்றும், கோளங்கள் என்றும் சொல்லப் பட்ட நுண்ணிய கோளாகாரமான குவியல்கள் இருக்கின் றனவென்றும், மூளையிலுள்ள சகல நார்களும், சரீரத்தில் எல்லா விடங்களிலு மிருந்தும் அவைகளிலிருந்து புறப்படு கிற எல்லா நரம்புகளும், அந்த நுண்ணிய மண்டலங்களி லும் அல்லது பொருள்களிலுமிருந்து அனுப்பப்பட்டு வரு கின்றன வென்றும், அறிந்துகொள்ளலாம். அதிலிருந்து சிரசு முதல் பாதத்தின் உள்ளங்கால் வரையில் சரீரத்தின் எல்லாப் பாகங்களும் கொண்டு வரப்பட்டு உற்பத்தி செய்யப் படுகிற தொடக்கமான உருவங்கள் இவைகளாயிருக் கின்றன.

மூலம் இன்றி நார்கள் இருக்க முடியாதபடியினாலும், பலவித கலப்பான நார்களிலிருந்து உண்டாக்கப்பட்ட சரீரத்தின் அங்க சம்பந்தமுள்ள பாகங்கள், அவைகளின் உற்பத்தி ஸ்தானங்களிலிருந்து தொடர்ச்சியினால் தவிர, தாங்களே உயிரோடிருந்து, உணர்ந்து, அசைக்கப்படாத காரியசித்திகளாயிருப்பதினாலும், அறிவிலிருந்து. இது உதாரணங்களால் திருஷ்டாந்தப்படுத்தப்படலாம். கண், புத்தியிலிருந்து தொடர்ச்சியாயிருக்கிறதினால் தவிர, தானே பார்க்கிறதில்லை; ஏனென்றால், புத்தியானது கண்ணின் மூல மாய்ப் பார்க்கிறது. அது மேலும் கண்ணை அசைத்து, பொருள்களின்பேரில் அதை நாட்டி, பார்வைக்கு நுண்ணறி வைத் தருகிறது. அதுவன்றி, காதானது, அறிவிலிருந்து தொடர்ச்சியாயிருக்கிறதினால் தவிர, தானே கேட்கிற தில்லை; ஏனென்றால், காதுகளின் மூலமாய் புத்தியானது கேட்கிறது; அது மேலும் அவைகளை நடத்தி, சத்தங் களுக்கு திறந்திருந்து, சிரத்தையுள்ளவைகளாயிருக்கச்செய் கிறது. அதுவுமன்றி நாக்கானது, புத்தியின் சிந்தனை

யிலிருந்து தவிர தானே பேசுகிறதில்லை ; ஏனென்றால், சிந்தனையானது நாக்கின் மூலமாய்ப் பேசி, சத்தங்களின் இசைகளை விகர்ப்பித்து, தங்கள் இஷ்டப்படி அவைகளின் திரிபுகளை உயர்த்துகிறது. தங்களிஷ்டப்பிரகாரம் அவைகளைப் பிரவர்த்திக்கச் செய்கிற, புத்தியுடன் கூடிய சித்தத்திலிருந்து தவிர, இவைகள் தாங்களே அசைக்கப்படாமலிருப்பதின் நிமித்தம், தசைநார்களுக்கும் அதே பொருந்துகிறது. அதனால் மனிதனில், அன்பினிடவும் ஞானத்தினிடவும் ஆசயங்களாயிருக்கிற, சித்தமும் புத்தியும் இருக்கும் அதின் மூலங்களிலிருந்து தவிர, உணர்ந்து, தானே அசைகிற யாதொன்றும் சரீரத்தில் இல்லை என்று, இந்த ஆலோசனைகளால் விசதமாகிறது; மேலும், சேதனநிலையத்தைச் சேர்ந்தும் அசைக்கிறதுமான அங்கங்கள் இரண்டும், அவைகளிலிருந்து உற்பன்னமான உருவங்களாக இருப்பதின் நிமித்தம், இவைகள்தான் முதன்மையான உருவங்களென்றும் கூட விசதமாயிருக்கிறது. ஏனென்றால், உட்பெருக்கு, நிருமாணத்தின் பிரகாரம் நடக்கிறது ; முன் சொன்னதிலிருந்து பின் சொன்னதற்கு அல்லாமல், பின் சொன்னதிலிருந்து முன் சொன்னதற்கு, அப்பெருக்கு முடியாது. முன் சொன்னதிலிருந்து பின் சொன்னதற்குச் செல்லும் உட்பெருக்கு ஞான உட்பெருக்கா யிருக்கிறது ; பின் சொன்னதிலிருந்து முன் சொன்னதற்குச் செல்லும் உட்பெருக்கு, ஜட சம்பந்தமானதும் என்று சொல்லப்பட்ட ஸ்தூல உட்பெருக்காயிருக்கிறது.

4) 3. இந்த உற்பவங்கள் அன்னுவய சாஸ்திர சட்டங்கள் படி உண்டாகின்றன, ஆகையால், சரீரத்தின் உள்ளானதும் புறம்பானதுமான பாகங்கள் அன்னுவயமா யிருக்கின்றன.

பரமார்த்தமானவைகளின் சுபாவம் தெரியாதிருக்கிறபடியினாலும், அன்னுவயமென்பது ஸ்தூலமானதற்கும் பா

மார்த்தமானதற்கும் உள்ள சம்பந்தமானபடியினலும், அன்னுவய மென்பதின் சுபாவம் இது வரையில் உலகத்தில் தெரியாம லிருந்திருக்கிறது. பரமார்த்தமான திலிருந்து அதன் உற்பத்தியாகவும் காரணமாகவும் பிறந்த எந்தப் பொருளாவது இந்திரியங்களுக்குக் காணக்கூடியதாகவும் அறியக் கூடியதாகவுமாகிறபோது, இவைகளுக்குள் பிறகு அன்னுவய மிருக்கிறது. ஞானமானவைகள், அவனிட அன்பிற்கும் ஞானத்துக்கும், அதனுல் அவனிட சித்தத் திற்கும் புத்திக்கும், ஸதூலப் பொருள்கள் அவன் சரீரத் துக்கும் சம்பந்தப்பட்ட எல்லாப் பொருள்களாயு மிருப்ப தால், மனிதனில் பரமார்த்தமானதற்கும் ஸதூலமானதற் கும் உள்ள அன்னுவயம் இவ்விதமா யிருக்கிறது. பின்கூறிய வைகள், உள் பொருளாக இருந்து, இடைவிடாமலிருப் பதால் அதாவது முன் சொன்னதிலிருந்து ஜீவிக்கிறபடி யினல், அன்னுவயங்களாக இருக்கின்றன; ஆகையால், முடிவென்றும், காரணமென்றும், காரியமென்றும் ஒத்து நடக்கின்றன. இம்மாதிரியாக, முகம் மனதின் ஆசைக ளோடும், பேச்சு சிந்தனையுடனும், எல்லா அவயவங்களின் எல்லாச் செயல்களும் சித்தத்துடனும், அம்மாதிரியே மற்ற எல்லா விஷயங்களிலும், ஒத்து நடக்கின்றன. அந்த உரு வத்தில், பரமார்த்தமானது முடிவாகவும், பலன் காரண மாகவும், ஸ்தூலமானது காரியமாகவும், செயல்படுகிற முடிவுக்குப் பொருந்துகிற ஒரு உருவமாக அது ஆகிறவரை யில், பரமார்த்தமானது அதன் முடிவாகிய உபயோகம் அல்லது பலனுடன் பொருந்தி, சூட்டினலும் வெளிச்சத் தினலும் அதைப் பிரவர்த்திக்கச்செய்து திருத்துகிறதென் பது அன்னுவயங்களின் பொது சட்டமாயிருக்கிறது. ஆனல் ஞான உலகத்தில் உண்மையானவைகள் ஸ்தூலமானவை

களுக்குப் பதிலாக நிலைபடுகின்றன; அவ்வித உருவங்கள் மனிதனிலிருக்கும் எல்லாப் பொருள்களுமாகின்றன.

5) சுவர்க்கலோகமும் நரகமும் என்கிற நூலில் (செ, 87-102, 103-115) அன்னுவயத்தைப்பற்றி அதிகம் பார்க்கலாம். சுவர்க்கலோக இரகசியம் என்னும் நூலில் பலவித அன்னுவயங்கள் கூட பிரஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. முகத்தின் அன்னுவயமும், மனதினிட ஆசைகளுடன் அதன் தோற்றத்தின் திரிபுகளும் (செ. 1568, 2988, 2989, 3631, 4796, 4797, 4800, 5165, 5168, 5695, 9306) இவைகளில் கூறப்பட்டிருக்கிறது. சரீரத்தின் சைகைகளும் செயல்களும் சம்பந்தப்பட்ட வரையில் புத்தி சம்பந்தமானதும் சுவேச்சா பூர்வமானதுமான பொருள்களுடன் வகிக்கும் அன்னுவயம் (செ. 2988, 3632, 4215). பொதுவாக இந்திரியங்களின் அன்னுவயம் (செ. 4318-4330). கண்களிடவும் அவைகள் பார்வையினிடவும் அன்னுவயம் (செ. 4403-4420). நாசித் துவாரங்களிடவும் நாற்றங்களிடவும் அன்னுவயம் (4624—4634). காதுகளிடவும் கேட்கையினிடவும் அன்னுவயம் (செ. 4652—4660). நாவினிடவும் சுவையினிடவும் அன்னுவயம் (செ. 4791—4805). கைகள், புயங்கள், தோள்கள், பாதங்களிட அன்னுவயம் (செ. 4931—4953). இடுப்புகளிடவும் பெறுதலுக்கு சம்பந்தப்பட்ட அங்கங்களிடவும் அன்னுவயம் (செ. 5050-5062). சரீரத்தின் உள்ளான ஆந்திரிகங்கள், முக்கியமாய், அன்னசயம், மார்பெலும்புக்குக் கீழிருக்கும் கோளம், அன்னரசத்தின் குழாய்களும் ஆசயமும், இவைகளின் அன்னுவயம் (செ. 5171—5189). மண்ணீரலின் அன்னுவயம் (செ. 9698). வயிற்றின் உள்ளிருக்கும் ஜவ்வுகள், மூத்திரப் பிண்டங்கள், மூத்திரப்பை இவைகளின் அன்னுவயம் (செ. 5377—5396). தோலினிடவும் எலும்புகளிடவும்

அன்னுவயம் (நெ. 5552—5573). மார்பெனும்பினிட குருத்தெனும்பின் அன்னுவயம் (நெ. 9236). குணப் பொருள்களின் ஞாபகத்தின் அன்னுவயம் (நெ. 6808). சடப் பொருள்களின் ஞாபகத்தின் அன்னுவயம் (நெ. 7253). மனிதனுடன் சுவர்க்க அன்னுவயம் (நெ. 911, 1900, 1928, 2996, 2998, 3624, 3636—3643, 3741—3745, 3884, 4041, 4279, 4523, 4524, 4625, 6013, 6057, 9279, 9632). பூர்வீக ஜனங்களுக்குள் முக்கியமாய், கிழக்கு தேசத்தார்களுக்குள், அன்னுவய சாஸ்திரம், சாஸ்திரங்களுக்கு சாஸ்திரமாயிருந்தது, ஆனால் தற்காலம் அது இழந்து விடப்பட்டது என்பதற்கு (நெ. 3021, 3419, 3472—3485, 4280, 4749, 4844, 4964, 4965, 5702, 6004, 6692, 7097, 7729, 7779, 9391, 10252, 10407). அன்னுவயங்களின் அறிவில்லாமல், வேதம் அறிந்துகொள்ள முடியாதென்பதற்கு (நெ. 2870—2893, 2987—3003, 3213—3227, 3472—3485, 8615, 10687). சுவர்க்க லோகங்களில் காணப்பட்ட தெல்லாம் அன்னுவயங்கள் என்பதற்கு, (நெ. 1521, 1532, 1619—1625, 1807, 1809, 1971, 1974, 1977, 1980, 1981, 2299, 2601, 3213—3226, 3348, 3350, 3475, 3485, 3745, 9481, 9575, 9576, 9577). ஸ்தூலலோகத்திலும், அதின் மூன்று ராஜ்யங்களிலும், உள்ள எல்லாப் பொருள்களும், ஞான லோகத்திலுள்ள எல்லாப் பொருள்களோடும் அன்னுவயப்படுகிறதென்பதற்கு, (நெ. 1632, 1881, 2758, 2890—2893, 2987—3003, 3213—3227, 3483, 3624—3649, 4044, 4053, 4116, 4366, 4939, 5116, 5377, 5428, 5477, 8211, 9280). சுவர்க்கலோக இரகசியம் எனும் நூலில் இந்தக் குறிப்புகளுடன், கர்த்தரிடமிருந்து சுவர்க்க லோகங்களிலுள்ள அன்புக்கும் ஞானத்துக்கும் சேர்ந்ததும்,

அதன் உள்ளார்த்தமாயும் இருக்கிற ஞானப்பொருள்க ளோடு, சொல்பொருளான வேதத்தின் ஸ்தூலார்த்தத்தின் அன்னுவயமானது, (அதே நூலில்) கூட பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது; மேலும் பரிசுத்த வேதத்தைக் குறித்த புதிய எருசலேம் நகரத்தின் போதம் என்கிற நூலிலும் (நெ. 5-26) இன்னும் (நெ. 27-69) இதிலும் கூட அன்னுவய ரூபகாரம் பிரசித்தப்படுத்தப்பட் டிருக்கிறது. சித்தமானது புத்தி யுடன் காரணகாரிய ஒற்றுமைப்படுதலைப்பற்றி ஒரு அபிப் பிராயம் அடையும் பொருட்டு மேற் குறித்த வாக்கியங்கள் ஆலோசிக்கப்படலாம்.

## III. அந்த இரண்டு ஆசயங்களுக்குள்ளே உட்பெருக்கின் மூலமாய், கருப்பப் பையில் கர்த்த ரால் மனிதன் நிருமாணமாவதைப் பற்றி.

கர்ப்பாசயத்தில் மனிதன் நிருமாணமாவதில் ஞானப் பொருள்கள் ஸ்தூலப் பொருள்களோடு சேர்க்கப்படுகிறதி லிருந்து அவைகள், ஜடப்பொருள்களிலிருந்து வேறாய் பிரிக்கப்பட்ட ஞானப் பொருள்களானதின் நிமித்தம் ஒரு மனிதன் மற்றவனைவிட அதிக புத்திசாலித்தனமாய் கிர கிக்கிற, ஸ்தூல பாஷையில் சில பொதுவான வார்த்தைக ளால் மாத்திரம் அறிவிக்கக் கூடியதாயிருப்பதால் விளக்கக் கூடாத அநேக விவரங்கள் இருக்கின்றன. என்றாலும், இவைகளாலும், அன்னுவயங்களாய் கூட இருக்கிற தார தம்மியத்தாலும், அடியில் வரும் பிரமேயங்கள் பிரசித்தப் படுத்தப்படும் :—

I. கடவுளானவர், கருப்ப உற்பத்தியில் தாயின் கருப் பையில் மனிதனோடு தானே சேர்ந்து, அவனை உருவாக்குகிறார்.

2. ஒன்றில் அன்பினாலும், மற்றொன்றில் ஞானத்தினாலும், அந்த இரண்டு ஆசயங்களிலும் அவர் தானே சேருகிறார்.

3. அன்பும் ஞானமும் கூடியும், பொருந்தியும் ஒவ்வொரு பொருளையும் எல்லாப் பொருள்களையும் உருவாக்குகின்றன ; ஆகிலும், அந்தப் பொருள்களில் அவைகள் வேறு வேறனதாயிருக்கின்றன.

4. எல்லாவற்றிலும் தாழ்ந்தது அல்லாமல், அதிகமாய் உயர்ந்த இரண்டும் கடவுளின் வாசஸ்தானங்களாக விருக்கிறதினால் ஒன்று மற்றென்றுக்குள்ளாக மூன்று அந்தஸ்துகளாக இந்த ஆசயங்கள் வகையறுக்கப்படுகின்றன.

5. ஒரு ஆசயமானது வரப்போகிற மனிதனிட சித்தத்துக்கும், மற்றது அவனிட புத்திக்குமாக இருக்கிறது ; என்றலும், அவனிட சித்தத்தினிடவும் புத்தியினிடவும் எதுவாகிலும் அந்த நிருமாணத்தில் இருக்கிறதில்லை.

6. இளந்தூலுக்கு அது தெரியாதாயினும் அதில் பிறப்பதற்கு முன் உயிரிருக்கிறது.

I. கருப்ப உற்பத்தியில் கடவுளானவர், தாயின் கருப்பையில் மனிதனேடு தானே சேர்ந்து, அவனை உருவாக்குகிறர்.

*இங்கும் வேறு இடங்களிலும் கர்த்தர் என்பதால், அதிலிருந்தும் அதினாலும் பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களும் சிருட்டிக்கப்பட்டதும், விண்ணவர்கள் இருக்கப்பட்டதுமான சுவர்க்க லோகத்து சூரியனுகிய அவரிடமிருந்து புறப்படுகிற தெய்வமென்று அருத்தம் கொள்ளப்படுகிறது. அந்த தெய்வம் உயிரே என்று ரூபகாரம் செய்யப்பட்டது. முதல் கருப்ப உற்பத்தியில், உயிரானது தானே வடிவமைக்கும் மூலகாரணமாக, ஆஜரா யிருக்கிறது என்பது, ஒரு மனிதனு யிருக்கிற உயிரின் ஒரு உருவமாகவும், அவைகள்கூட மனிதனுக இருக்கிற கடவுளின் சாயலாகவும் பிரதிமையாகவும், கடவுளிடமிருந்து உயிராயிருக்கிற அன்பையும் ஞானத்தையும் கொள்பவனுகவும், இம்மாதிரியே கடவுளையே கொள்பவனுகவும், அவன் இருக்கும்*

பொருட்டு, ஒரு மனிதன் உயிராலேயே உருவாக்கப்பட வேண்டுமென்கிற இந்த ஆலோசனைகளிலிருந்து பலனைகப் பின் தொடருகிறது. மனிதன் கடவுளில் இருக்கிறானென் றும், கடவுள் மனிதனில் இருக்கிறாரென்றும், கடவுளான வர் மனிதனால் நேசிக்கப்பட்டால், அவனில் வாசம் செய் கிறாரென்றும், அவரே கற்பிக்கிறார்; பின் தொடருவதால் அறியக்கூடியதுபோல், கருப்பையில் இந்த வாசஸ்தா னத்தைக் கடவுளானவர் தனக்காகவே தயார் செய்கிறார். ஆகையால் யெகோவா அல்லது கர்த்தர் வேதத்தில் கருப் பையிலிருந்து சிருட்டி கர்த்தா என்றும், உருவாக்கினவர் என்றும், உண்டாக்குகிறவ ரேன்றும், சொல்லப்பட் டிருக் கிறது (எசாயா XLIII. 1; XLIV. 2, 24; XLIX. 5); தாவீது விஷயத்தில் கர்த்தரிடம் போடப்பட்டு கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் அவரால் ஆதரிக்கப்பட்டார் என்று சொல்லப்பட் டிருக்கிறது (சங்கீதம் XXI. 10; LXXI. 6;).

மனிதன் கருப்பையி லிருக்கும்போது அவன் குற்ற மற்ற நிலைமையி லிருக்கிறான்; பிறந்த பிறகு அவனிட முதல் நிலை அதனால் மனப் புனிதநிலையா யிருக்கிறது; மேலும், கடவுளானவர் அவனிட மனப் புனிதத்தில் தவிர மனிதனில் எப்பொழுதும் வாசம் செய்கிறதில்லை; ஆகை யால் அவன் மாசின்மையில் இருக்கும்போது அவனுடன் அவர் முக்கியமாய் வாசம் செய்கிறார்; அம்மாதிரியே, மனித னும் அப்போது ஒரு அமைதி நிலைமையிலிருக்கிறான். அக் காலத்தில் மனிதனானவன் மாசின்மையிலும் அமைதியிலும் ஏன் இருக்கிறா னென்பதற்குக் காரணமானது, சுவர்க்க லோகமும் நரகமும் என்கிற நூலில் (செ. 276--283, 284—290) தெரிந்துக் கொள்ளக்கூடியதுபோல, இச்சா சக்தியும் ஞான சக்தியும் புனிதமே யாகவும் அமைதியே யாகவும் இருக்கிறதென்பதா யிருக்கிறது. மேற் குறித்த

சூஜனங்களைப் படிக்கும்போது உங்களிட மனதுக்குச் சில சந்தேகங்கள் தோன்றுமென்று எதிர்பார்க்கிறேன். ஆனால் முடிவு வரையில் படித்து, பின்னிட்டு மறுபடியும் யோசியுங்கள், அவைகள் அப்புறம் உங்களுக்கு தோன்ருது.

2. ஒன்றில் அன்பினாலும், மற்றொன்றில் ஞானத்தினாலும், அந்த இரண்டு ஆசயங்களிலும், அவரே கூடுகிறார்.

சிரசு முதல் குதிகால் வரையில்கூட, உள்ளானதும் புறம்பானதுமான சரீரத்தின் எல்லாப் பாகங்களும் அந்த இரண்டு ஆசயங்களிலிருந்து உருவாக்கப்பட்டுப் பிறப்பிக்கப் படுகிறது என்று ரூபகாரம் செய்த முந்திய பிரிவினால் இது ஏற்படுகிறது. எல்லாப் பொருள்களின் பரிபாலனங்களும் ஆரம்பங்களும் இவைகளிலிருந்து வருகிறபடியினால், தெய்வமானது வடிவமைக்கும் மூலகாரணமாக அவைகளிலும், அவைகள் மூலமாக அவைகளிட விரிவுகளிலும் இருக்கிறதாக பின் தொடருகிறது; ஆனால் முன் சொல்லியதிலும் பின் சொல்லியதிலும் அது இருக்கும்போது, அது அவைகளின் பலன்களிலிருப்பதால், அது அப்படியிருப்பது ஜடமாய் அல்லாமல் ஞானமாயிருக்கிறது; பலன்களைதானே யோசித்தால் அவைகள் ஜடமல்ல; ஆனால் பலன்கள் காரியங்களாகிற அவசியமான பொருள்கள் ஜடமாயிருக்கின்றன. மனிதனிட தொடக்கங்களாகிய இந்த இரட்டையாய்ப் பிறந்த முதன்மையான ஆசயங்கள் தகப்பனிடமிருந்து வருகின்றன; ஆனால் பிறக்கிற காலம் வரையில் அவனிட நிருமாணம் தாயினிடமிருந்து வருகிறது; ஏனென்றால், விதையானது மனிதனிடமிருந்து வருகிறதினாலாகிறது. வித்தானது வேருக்கப்பட்டு சுத்தி செய்யப்படுகிற சுக்கில கொள்கலங்களும் பீஜங்களும் அவனுக்குண்டு. அது நணைக்கப்படுகிற கூடு இருக்கப்பட்டதும், அது போஷிக்கப்படுகிற சிறிய வாய்கள் உள்ளது

மான ஒரு கருப்பை அவளுக்கு இருப்பதால், இது மனுஷியால் பெற்றுக் கொள்ளப்படுகிறது. பிரகுருதியில், வித்திலிருந்து தவிர ஒன்றும் உண்டாகிறதுமில்லை, சூட்டின் மூலமாக தவிர வளருகிறதுமில்லை. மனிதனிட பண்பை மாத்திரம் விளக்கும் அந்த முதல் மூலங்கள் எந்த விதமான உருவத்தை உடைத்தாயிருக்கிறதென்று, பின் தொடருவதில் காட்டப்படும்.

மனிதனிட ஆதிக்கமான மூலாதாரம் வித்தானபடியினுலும், இது உயிரின் இரட்டையான ஆசயமாயிருப்பதாலும், ஓர் உயிரே மாத்திரம் இருப்பதாலும், இதுவும் கடவுளாயிருப்பதின் நிமித்தம், மானிட ஆன்மா உயிரிலிருந்து வந்த உயிரல்லவென்றும், தானே உயிரல்லவென்றும் விசதமாகிறது. மனிதனிட உயிரின் புலப்பாட்டின் மூலம், வேறு இடங்களில் காட்டப்பட்டிருக்கிறது. நார்களின் மூலமாய், மூளையிலிருந்து சரீரத்தின் எல்லாப் பாகங்களிலும் இந்த ஆசயங்களின் ஒரு விரிவு இருக்கிறதினுல், அந்தப் பொருள்களுள்ளே உயிரின் ஏற்கையினிட விரிவு இருக்கிறதென்றும், ஆகையினுல், காரணமானது காரியத்திலும், தொடக்கமானது அதில் உற்பன்னமானவைகளிலும் இருப்பதுபோல், ஆன்மாவானது இங்கே அங்கே என்றல்லாமல், அவைகளிலிருந்து உற்பத்தியான எல்லாவற்றிலுமிருக்கிறதென்று விசதமாயும்கூட இருக்கிறது.

3. அன்பும் ஞானமும் ஒருமித்தும், பொருந்தியும், ஒவ்வொரு பொருளையும் எல்லாப் பொருள்களையும் உருவாக்குகின்றன; ஆகிலும், அந்தப் பொருள்களில் அவைகள் வேறு வேறனதாயிருக்கின்றன.

சூட்டையும் ஒளியையும்போல, அன்பும் ஞானமும் இரண்டு வேறுன பொருள்களாயிருக்கின்றன. அன்பு உணரப்படுவதுபோல, சூடு உணரப்படுகிறது, வெளிச்ச

மான்து ஞானத்தைப்போல பார்க்கப்படுகிறது. மனிதன் நினைக்கும்போது, ஞானம் பார்க்கப்படுகிறது. மனிதன் இயக்கப்படும்போது அன்பு உணரப்படுகிறது. ஏனென்றால் நிருமாணம் ஆகும்போது இரண்டாக அல்லாமல் ஒன்றாக அவைகள் சேட்டிக்கின்றன. உலக சூரியனிட சூட்டுக்கும் வெளிச்சத்துக்கும் விஷயம் இதுவுமே யாகிறது; வசந்தகாலத்திலும் கோடைகாலத்திலும் பயிர் செழிப்பும், தழைப்பும் உண்டாக்கி, சூடு ஒளியுடனும், ஒளி சூட்டினுடனும் ஒத்துவேலை செய்கிறது. அம்மாதிரியே, அன்பானது சாந்தமும் சமாதானமுமான நிலைமையில் ஞானத்தோடும், ஞானம் அன்போடும் ஒத்து உழைத்து, இரண்டும் உற்பத்திகள் செய்து உருவாக்குகின்றன; இதுவும் இளஞ்சூலிலும் மனிதனிலும் ஒரே மாதிரியிருக்கிறது.

அன்பும் ஞானமும் ஒத்து உழைத்தல் சூடும் ஒளியும் ஒத்து உழைத்தல்போலிருக்கிறது என்பது ஞானலோகத்தின் தோற்றங்களிலிருந்து மிகவும் தெளிவாயிருக்கிறது; ஏனென்றால், அங்கே அன்பானது சூடாகவும், ஞானம் வெளிச்சமாகவும் இருக்கிறது; அங்கே தேவர்களுள் எல்லா பொருள்களும் உயிரோடிருக்கின்றன, அவர்களிட அன்பு, ஞானத்தின் ஐக்கியப்படி முழுமையும் அவைகள் அவர்களை சுற்றி மலருகின்றன. அன்பானது ஞானத்துடன் தானே சேர்ந்தும், ஞானமானது அன்புடன் தானே மறுபடியும் சேர்ந்துகொண்டு இருக்கிறபடியால், அன்பினிடவும் ஞானத்தினிடவும் சேர்க்கையானது அன்னியோன்னியமானதாயிருக்கிறது; ஆகையால், அன்பு செயல்படுகிறது, ஞானம் எதிர்தாக்குகிறது. இந்த அன்னியோன்னியத்தின் மூலமாய் ஒவ்வொரு காரியமும் உண்டாகிறது.

2) அன்னியோன்னிய சேர்க்கை இவ்விதமாயிருக்கிறது. ஆதலால், கடவுள் இருக்கப்பட்ட மனிதனில், சித்தத்தி

னிடவும் புத்தியினிடவும், அதனுடன் நன்மையினிடவும் உண்மையினிடவும் தருமத்தினிடவும் விசுவாசத்தினிட வும், பரஸ்பரமும் அப்படியே யிருக்கிறது. நிஜமாகவே, அவர்கள் தன்னிலும் தான் அவர்களிலும் இருந்ததாக யோவானில் தன்னிட சீஷர்களுக்குச் சொல்லிய வார்த்தை களால், கருதப்பட்ட பரஸ்பரம் கர்த்தரே திருச்சபையுடன் இருக்கும் பரஸ்பரம் போன்ற விதமாயிருக்கிறது (XIV. 20, இதர இடங்களிலும்). மாற்கில் "அவர்கள் இருவரும் ஒரே மாமிசமாயிருப்பார்கள்" என்று சொல்லியதில் (X—8) மனிதன் மனைவியிட சேர்க்கை என்பதால் அதே ஐக்கியமே கூட கருதப்பட்டது. ஏனென்றால், மனிதன் புத்தியாக இருக்கவும், அதிலிருந்து ஞானமாகவும் பிறந்தான்; ஆனால் மனுஷியானவள் சித்தமாயிருக்கவும், அதிலிருந்து அன்பி னுடைய ஆசையாகவும் பிறந்தாள். இந்த விஷயத்தைப்பற்றி சவர்க்கலோகமும் நரகமும் (செ. 366—386) என்னும் நூலைப் பார்க்கவும்.

3) கருப்பையில் இளஞ்சூலை உருவாக்குகிற அன்பு என்றும் ஞானமென்றும் இரண்டு பொருள்களிருக்கிறபடி யினால், ஒன்று அன்பிற்கும் மற்றொன்று ஞானத்துக்குமாக இரண்டு ஆசயங்களிருக்கின்றன; அதினால்கூட, சரீரத்தில் எவ்விடத்திலும், அம்மாதிரியே வேறானதும் சேர்ந்தது மான ஒரு இருமையிருக்கிறது. மூளையின் இரண்டு அர்த்த கோளங்களும், இரண்டு கண்களும், இரண்டுகாதுகளும், இரண்டு நாசித்துவாரங்களும், இருதயத்தின் இரண்டு அறைகளும், இரண்டு கைகளும், இரண்டு பாதங்களும், இரண்டு மூத்திரப்பிண்டங்களும், இரண்டு பீஜங்களுமிருக் கின்றன; அங்கங்களில் மற்றவைகளின் ஒரு துவிதம்கூட இருக்கிறது. ஒவ்வொன்றிலும், வலது பக்கத்திலிருப்பது அன்பின் நன்மைக்கும், இடது பக்கத்திலிருப்பது ஞானத்

தின் உண்மைக்கும் சம்பந்தப்பட்டிருக்கிறது. பலவிதமான ஜதைகள், பொருத்தத்துடன் அன்னியோன்னியமாயும் பரஸ்பரமாயும் செயல்படும்படியான விதமாய்ச் சேர்க்கப் பட்டிருக்கிறது என்பது, தொந்தரவு எடுத்துக்கொண்டால், ஒரு சிரத்தையுள்ள ஆராய்ச்சிக்காரனால் பார்க்கப்படலாம். எல்லா திக்குகளிலும் கிளைவிடுகிறதும், கண்ணுக்குத் தெரியும்படியாய் இசைத்து செய்யப்பட்டதுமான நார்கள் விஷயத்தில் அந்த ஒற்றுமையே பார்வைக்குப் பிரசன்னமாகிறது. இந்தக் காரணத்தினாலும்கூட இந்த துவிதம் என்பது வேதத்தில் வலது இடது என்கிற வார்த்தைகள்ால் கருதப்படுகிறது. இந்த ஆலோசனைகளால், அன்பும் ஞானமும் கருப்ப பிண்டத்தில் ஒவ்வொரு பொருளையும் எல்லாப்பொருள்களையும் ஏககாலத்தினும் பொருத்தத்துடனும் உருவாக்குகிறது என்றாலும், தாங்களே வேறாயிருக்கிறதென்கிற இந்த உண்மை விசதமாகிறது.

4. எல்லாவற்றிலும் தாழ்ந்தது அல்லாமல் அதிகமாய் உயர்ந்த இரண்டும் கடவுளின் வாசஸ்தானங்களாயிருக்கிறபடியினால், ஒன்று மற்றொன்றுக்குள்ளாக, மூன்று அந்தஸ்துகளாக இந்த ஆசயங்கள் வகையறுக்கப்பட்டிருக்கின்றன.

“ஆசயம்” என்கிற வசனமானது, ஒருநாளம் அல்லது சிறிய குழாய் என்கிற எண்ணத்தை இயல்பாக வரச் சொல்லுகிறதின் பொருட்டு, அவைகள் ஆசயங்கள் என்று சொல்லப்படுகிறபடியினால், மனிதனிட வித்துக்குச் சம்பந்தமான மானிட உருவத்தின் மூலாங்கங்களைக் குறித்து, எவனாவது ஒருவன் ஒருபோலிநியாயமான அபிப்பிராயத்தைத் தனக்குள்ளே உண்டாக்கிக் கொள்வான். அது சுவர்க்க லோகங்களில் காண்பிக்கப்பட்டதை நான் பார்த்ததுபோல, ஸ்தூலமான பாஷையின் வார்த்தைகள் எவ்வளவு சொல்ல விடுகிறதோ அவ்வளவு முழுமையும் அந்த மூல உரு

வத்தைக் குறிப்பிட்டு விவரமாய்ச்சொல்ல நான் உத்தேசிக்கிறேன். அந்த ஆசயங்கள் சிறு நாளங்களைப்போல் குழியானதாயும் மடிக்கப்பட்டதாகவும் இருக்கவில்லை; ஆனால் அவைகள், அதினுடைய நுண்ணியதும், போதும் போதாமல் பார்க்கக்கூடிய மாதிரியானதும், ஒரு உபாங்கமும் காணமையிலிருக்கையில் அதே காலத்தில், முன்புறத்தில் உள்ள முகத்தின் நமூனா போன்றதுமாகிய மூளையிருப்பதுபோல அவைகள் அவ்விதமாயிருக்கின்றன. ஒவ்வொரு சிறிய கோளமும் அம்மாதிரியான, ஆனால் அதற்குச் சிறிதான கோளங்களின் கூட்டமாகவும், இவைகளில் ஒவ்வொன்றும் எல்லாவற்றிலும் சிறிதானதால் மறுபடியும் உருவாக்கப்பட்டும் இருக்கக்கொள்ள, மேலுள்ள புறங்குவிந்த பாகத்திலுள்ள இந்த ஆதியான மூளையானது சேர்ந்திருக்கும் சிறு கோளங்கள் அல்லது சிற்றுண்டைகளின் நிர்மாணமாயிருந்தது. முன்புறத்தில், தட்டையான பாகத்தில், முகத்தின் ஒருவித குறிப்புப்படம் தோன்றியது; ஆனால் புறங்குவிந்ததும் தட்டையானதுமான பாகங்களுக்கு மத்தியிலுள்ள குழியில் முதன்மையான அடுக்குகள் இல்லை. புறங்குவிந்தபாகம் ஒரு மிகவும் மெல்லிய துலக்கமான ஜவ்வினால் மூடப்பட்டிருந்தது. என்னிட பார்வைக்கு காண்பிக்கப்பட்டபடியும் நான் பார்த்தப்படியும், மனிதனிட முதலானது இவ்விதமாயிருந்தது. அதின் முதல் அல்லது எல்லாவற்றிலும் தாழ்ந்தபடியானது முதல் விவரித்த நிருமாணமாயிருந்தது; இரண்டாவது அல்லது மத்தியிலுள்ள நிலை விவரித்த இரண்டாவது நிருமாணமாயிருந்தது. மூன்றுவது அல்லது எல்லாவற்றிலும் உயர்ந்த நிலை மூன்றுவது நிருமாணமாயிருந்தது; இம்மாதிரியாக ஒன்று மற்றொன்றிற்குள்ளிருந்தது. படிகளுக்குத் தக்கபடி, மென்மேலும் ஆச்சரியப்படும்படியான சொல்லிமுடியாத நிர்மாணங்கள் ஒவ்

வொரு சிறிய கோளத்திலுமிருந்ததாகவும், மேலும் அவை களில் ஒவ்வொன்றிலும், வலதுபக்கம் அன்பின் படுக்கை அல்லது ஆசயமென்றும், இடதுபக்கம் ஞானத்தின் படுக்கை அல்லது ஆசயமென்றும், மற்று ஒன்றில் ஒன்றினிட அற்புதமான நெய்தலினால், அவைகள் அப்படியிருந்தும் இது விஷயத்தில் மூளையின் இரண்டு அர்த்தகோளங்களை ஒத்து, மனைவி போலவும் தோழர்கள்போலவும், இருக்கின்றனவென்றும், எனக்குச் சொல்லப்பட்டது. இடத்துக்கும் பாய்ச்ச

2) லுக்கும் சம்பந்தபட்ட வரையில் இரண்டு உள்ளிருக்கும்படிகளின் மொத்தபிண்டம், சுவர்க்கலோகத்தின் பத்ததியிலும் உருவத்திலும் இருந்ததாகவும், ஆனால் எல்லாவற்றிலும் தாழ்ந்தபடியின் பிண்டமொத்தம் இடத்துக்கும் பாய்ச்சலுக்கும் சப்பந்தப்பட்ட வரையில் நரகத்தின் உருவத்திலிருந்ததாகவும், காந்தியுள்ள வெளிச்சத்தில் அதிகமாகக் காண்பிக்கப்பட்டது. எல்லாவற்றிலும் தாழ்ந்தது அல்லாமல், அதிகமாய் உயர்ந்த இரண்டும் கடவுளின் வாசஸ்தானங்களா யிருக்கையில், ஒன்று மற்றொன்றுக்குள்ளாக மனிதனிலுள்ள ஆசயங்கள் மூன்று நிலைகளாக விசேஷித்து அறியப்படுகிறதென்று இந்த காரணத்துக்காகச் சொல்லப்பட்டது.

மனிதனானவன் பரம்பரையான துன்மார்க்கத்திலிருந்து சுவர்க்கலோகத்து பத்ததிக்கும் உருவத்துக்கும் எதிரிடையாகவும், அதனால் எல்லாவித தீமைகளிலும் பிறந்திருக்கிறபடியினாலும், அந்த கெடுதலானது, மனிதனிட உயிரின் எல்லாவற்றிலும் தாழ்ந்ததான ஸ்தூலமான திருக்கிறபடியினாலும், கடவுளிடமிருந்து அன்பையும் ஞானத்தையும் பெற்றுக்கொள்ளஉருவாக்கப்பட்டிருக்கிற,அதிலும்உயர்ந்தபடியானது அவனில் திறக்கப்பட்டாலொழிய, அது நீக்கப்படாமலிருப்பதினாலும், எல்லாவற்றிலும் தாழ்ந்தது அவ்

வித சுபாவத்தை உடையதாயிருந்தது. அதுவும் அத னுடன் அந்தரங்கமான படியும் எப்படி திறக்கப்படுகின்றது என்று கர்த்தரானவர் வேதத்தில் கற்பிக்கிறார். பின் வருவதில் இது காண்பிக்கப்படும். ஆனால், இவ்விஷயத்தைப் பற்றி இன்னும் அதிகமான வெளிச்சத்துக்கு, படிகளைப் பற்றியும், அதனுடன் மூளையைப்பற்றியும் முன்னமே சொல்லியதைப் பார்க்கவும். அவைகள் உள்ளிருக்கிறவைகளானாலும் அந்தப் படிகள் கொஞ்சம் உயர்ந்தவைகளென்று சொல்லப்படுகின்றன. அதிகம் உயர்ந்ததும் அதிகம் தாழ்ந்ததுமான பொருள்கள் பின் தொடர்ந்து வருகிற கிரமத்திலும், ஆனால் உள்ளானதும் புறம்பானதும் ஏககாலத்தில் சம்பவிக்கும் கிரமத்திலும் இருக்கிறபடியினால் நிலைகளின் கிரமம் பின்தொடர்ந்து வருபவைகளாகவும் ஏககாலத்தில் சம்பவிக்கப்பட்டவைகளாகவும் இருக்கிறதென்பது இதன் காரணமாயிருக்கிறது; ஏககாலத்தில் சம்பவிக்கிற கிரமத்தில் உள்ளானதாயிருக்கிற அதே பொருள்கள், பின் தொடருகிற கிரமத்தில் கொஞ்சம் உயர்ந்ததாயிருக்கின்றன. புறம்பானதும் தாழ்ந்ததுமான பொருள்களுக்கும் விஷயம் அதுவே யாகவும்கூட இருக்கிறது. மனிதனில் மூன்று நிலைகள் இருக்கிறபடியினால், சுவர்க்க லோகங்கள் வானோர்களான மனிதர்களால் ஆயிருக்கிறதின் நிமித்தம் சுவர்க்க லோகங்களின் மூன்று நிலைகள் இருக்கின்றன. தொடருகிற கிரமத்தின் நிலைகள் படி ஒன்றின் மேல் ஒன்றாகவும், ஏககாலத்தில் சம்பவிக்கும் கிரமத்தின்படி ஒன்றுக்குள் ஒன்றாகவும், சுவர்க்க லோகங்கள் காணப்படுகின்றன. இந்தக் காரணத்துக்காகத் தான், வேதத்தில் உயரமானது உள்ளானது என்று கடவுளானவர் அந்தரங்கமான பொருள்களில் இருப்பதைக் கொண்டு, மிகவும் உயரமானவர் என்றும் அருத்தம் கொள்ளப்படுகிறது.

இப்போது மனிதனானவன் அவனிட முதல் உற்பத்தியில் முன் விவரித்தபடி கர்த்தரின் அவ்வித வாசஸ்தானமாயிருப்பதினாலும், அந்த மூன்று படிகளும் பிறகு திறக்கப்படுகிறபடியினாலும், சூரியனாகிற அவரிடமிருந்து புறப்படுகிற ஒவ்வொரு பொருளும், அதற்குத் தகுந்த இடத்தில் முன்னமே மேல் காண்பித்தபடி எல்லாவற்றிலும் சிறியதிலும் பெரியதிலும் இரண்டிலும் மனிதனாயிருக்கிறபடியினாலும், மானிட உருவத்தை விட வேறு இதர உருவாக விரிவு இருக்க முடியாது; அதுவல்லாமல் மத்திய வஸ்துவாக அன்பிலிருந்து உற்பவித்த சூட்டினுடன் ஞானத்தில் உற்பவித்த ஒளியின் கதிர்களால் தவிர இம்மாதிரியாக, கதிர்களாகிற உயிர்ப்பிக்கப்பட்ட நார்களால் தவிர, விரிவு இருக்கமுடியாது. அதைப்போன்ற தீர்மானம் இருப்பதாகக்

3) கண்ணுக்குப் பிரத்தியக்ஷமாக இருக்கிறது. மனிதனில் உயிரின் நிலைகளின் கணக்கு இவ்விதமாயிருக்கிறது; ஆனால் மிருகங்கள் விஷயத்தில் மிகவும் தாழ்ந்தது மாத்திரம் இருக்கையில், இரண்டு உயர்ந்த அந்தஸ்துகள் இல்லாமலிருக்கின்றன; ஆகையினால், அவைகளின் உயிரின் மூலாங்கங்கள், கடவுளிட அன்பு ஞானத்தின் ஆசயங்கள் அல்ல; ஆனால் அவைகள், அவர்கள் அதிலும்கூட பிறந்திருக்கிற ஸ்தூல ஆசையினிடவும் அறிவினிடவும் ஆசயங்களாயிருக்கின்றன. சுத்தமான மிருகங்களிலுள்ள இந்த ஆசயங்கள் சர்வவியாபக உட்பெருக்கின் பத்ததிக்கு எதிரிடையாக இல்லாமல் அதற்குப் பொருந்தும்படியாக ஒழுங்கு படுத்தப்படுகிறது; ஆகையினால் அவைகள் பிறந்த உடன் தங்கள் தொழில்களைத் தெரிந்து அவைகளை அனுபவிக்கின்றன; ஏனென்றால், ஞான வெளிச்சத்திலிருந்து சிந்திக்கவும் வாதிக்கவும் தெய்வ பத்ததியின் சட்டங்களுக்குக் கொடுமை செய்யவும் அறிவுக்குச் சம்பந்தப்பட்

டது அவைகளுக்கு இல்லாதபடியினுல், தங்களிட ஆசை களைக் கெட்ட வழியில் திருப்ப அவைகளுக்குச் சக்தி யில்லை.

5. ஒரு ஆசயமானது வரப்போகிற மனிதனிட சித்தத்துக்கும், மற்றது அவனிட புத்திக்குமாக இருக்கிறது; என்றலும், அவனிட சித்தத்தினிடவும் புத்தியினிடவும் எதுவாகிலும் அந்த நிருமாணத் தில் இருக்கிறதில்லை.

சித்தமும் புத்தியும், சுவாசாசயங்கள் திறக்கப்படுகிற வரையில், மனிதனில் ஆரம்பிக்கிறதில்லை; மனிதனிட சித்தமானது பிறந்த பிறகு, அன்பின் ஆசயமாகவும், புத்தி யானது ஞானத்தின் ஆசயமாகவும் ஆகிறபடியினுல், அது வரையில் இது நேரிடுகிறதில்லை. சுவாசாசயங்கள் திறக்கப் பட்டபோது இது ஏன் முதலில் விஷயமாகிறது என்பதற் குக் காரணமானது, சுவாசாசயங்கள் புத்தியின் உயிரோடும் இருதயமானது சித்தத்தின் உயிரோடும் அனுவயமாகிற தென்பதும், மேல் காண்பித்தபடிக்கு உருவாக்கப்பட்டு உயிர்ப்பிக்கப்படுகிற அன்பினிடவும் ஞானத்தினிடவும் ஒத்து உழைத்தலில்லாமல் அவனுக்கு உயிரில்லாதது போல், புத்தியும் சித்தமும் ஒத்து உழைக்காவிட்டால் மனிதனுக்குத் தன்னிட சொந்த உயிரில்லை என்பதுமா யிருக்கிறது.

இருதயமானது இரத்த ஓட்டத்துக்கும், பித்தாசய மானது போஷிப்புப் பெருதலுக்கும் இருக்கிறபடியினுல் இளஞ்சூலில் இருதயம் மாத்திரம் அடிக்கிறது, பித்தாசயம் துடிக்கிறது. ஆந்திரிகங்களின் மற்றதின் சலனம் இவைகளி லிருந்து உண்டாகின்றன; கருப்பாதாரணத்தின் மத்திய காலத்துக்குப் பிறகு, நாடி ஓட்டமாக உணரப்படுகிறது இந்த சலனம்தான்.

ஆனால் இந்த சலனம் இளஞ்சூலுக்கு ஏற்ற எந்த உயிரின் பலன் அல்ல. நிஜமான உயிரானது சித்தத்தின் உயிராகவும், புத்தியின் உயிராகவு மிருக்கிறது. அது அப்படி யிருக்க, சிறு குழந்தையின் உயிரானது, தொடங்கு கிற சித்தத்தினிடவும், தொடங்குகிற புத்தியினிடவும் உயிராயிருக்கிறது. ஞானேந்திரிய கர்மேந்திரிய உயிரானது இவைகளிலிருந்து மாத்திரம் சரீரத்திலிருக்கிறது. இந்த உயிரானது இருதய துடிப்பினால் மாத்திரமல்லாமல், சுவாசாசயங்களின் சுவாசம் வாங்குதல் விடுதலினோடு இது சேர்தலினால் உண்டாகிறது. மூர்ச்சையில் விழுந்த போதாவது, மூச்சு விடாமல் செய்யப்பட்ட போதாவது, மனிதர்கள் சித்தமும் புத்தியும் வைத்திருக்கிறதிலிருந்து இதுதான் விஷயமென்று விசதமாயிருக்கிறது. சுவாசத்தை நிறுத்தி வைத்த பின், இருதயம் அடித்தாலும், இரத்தம் ஓடினாலும், அவர்கள் பார்வைக்கு இறந்தவர்கள் போலிருக் கிறார்கள்; அவர்களுக்கு இந்திரிய ஞானமுமில்லை, அவ யவங்களின் சலனமுமில்லை; அவர்கள் நினைக்கிறதுமில்லை, இச்சிக்கிறதுமில்லை; ஆனால் சுவாசாசயங்கள் சுவாசம் வாங்கிவிட ஆரம்பித்த உடனே, மனிதனானவன் தன்னிட சுரு சுருப்புகளுக்கும் இந்திரிய போதங்களுள்ளும், அவனிட புத்திக்கும் சித்தத்துக்கும் திரும்புகிறான்.

சுவாசாசயங்கள் அல்லாமல் இருதயம் மாத்திரம் தன் னிட சலனங்களை நடத்துகிற, கருப்பையிலிருக்கும் இளஞ் சூலின் உயிரின் தன்மையைப்பற்றி ஒரு தீர்மானம், அதாவது, அதில் சித்தத்தின் உயிரும், புத்தியின் உயிரும் யாதொன்றும் இல்லையென்றும், ஆனால் அதினால் மனிதனான வன் பின்னிட்டு உயிரோடிருக்கப் போகிற கடவுளிட மிருந்து வருகிற உயிர் மாத்திரம், வடிவமைக்கிற மூல காரணமென்றும் இவைகளிலிருந்து ஏற்படுத்தலாம். ஆனால்,

பின் தொடரும் பிரிவில் இந்த விஷயத்தைப்பற்றி அதிகம் பார்க்கலாம்.

6. கருவுக்கு அது தெரியாதாயினும், அதில் பிறப்பதற்கு முன் உயிரிருக்கிறதென்பது, மேலே கூறியதாலும் அதனுடன் கருப்பையிலிருக்கும் கரு ஜீவிக்கிற உயிரானது அதனுடைய தல்ல என்பதும், தான் மாத்திரம் உயிராயிருக்கிற கடவுளுடையது என்பதுமான உண்மையாலும் ஏற்படுகிறது.

## IV. கருப்பையில் மனிதன் நிருமாணத்துக்கும், அவனிட சீர்திருத்தத்துக்கும் பரிபக்குவத்துக்கும் இடையில் ஒரு சாயலும் ஒப்பு மிருக்கிறது.

திருத்தப்படுகிற மனிதனுக்கு ஒரு சித்தமும் புத்தியும் இருக்கிறதென்றும், அவன் கருப்பையிலிருக்கும்போது அவனுக்குச் சித்தமுமில்லை, புத்தியுமில்லை என்கிற இந்த வித்தியாசத்துடன் மாத்திரம், மனிதனிட சீர்திருத்தம், கருப்பையில் அவனிட நிருமாணத்துடன் பூரணமாய் ஒத்திருக்கிறது. ஆயினும் கடவுளானவர் மனிதனை திருத்துவதிலும் பரிபக்குவப்படுத்துவதிலும், அதைப்போன்றே, அவனிட சித்தத்தையும் புத்தியையும் நடத்துகிறபடியினால், இந்த வித்தியாசமானது அந்த சாயலையும் ஒப்பனையையும் அழிக்கிறதில்லை. ஆனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட சித்தத்தினாலும் புத்தியினாலும் மனிதனே, தன்னைத் தானே நடத்திக் கொண்டதுபோல, அதாவது தன்னிலிருந்தே இச்சித்து நடந்ததாகவும், தன்னிலிருந்தே நினைத்துப் பேசியதாகவும் தோன்றுகிறது; அப்படி யிருந்தாலும், வேதத்திலிருந்தும், வேதத்திலிருந்து பிறந்த கோட்பாட்டிலிருந்தும், அது தானே அல்லவென்றும், ஆனால் அது கடவுளென்றும், அதனால், அது தோற்றமாய் மாத்திரம் இருக்கிறதென்றும் அவனுக்குத் தெரியும். அது

இல்லாவிட்டால், கடவுள் அவனை நேசிக்கிறபடி அவன் கடவுளை நேசிக்கிறதும், தன்னிட மிருந்ததேபோல் அவனிட அயலானை நேசிக்கிறதும், தன்னிட மிருந்தேபோல் கடவுளை நம்புகிறதுமாகிய அன்னியோன்னிய நிலைமை இருக்க முடியாதாகையினால், இந்த தோற்றமானது ஏற்கைக்கும், தனதுபோல் உபயோகப்படுத்தலுக்கும் இருக்கிறதென்று அவனுக்குத் தெரிந்துகூட இருக்கலாம். இந்த பரஸ்பர நிலைமை இல்லாவிட்டால் கடவுள் இருக்க முடியாத தற்சலனிபோல் மனிதன் இருப்பான்; ஏனென்றால் கடவுளானவர் நேசிக்கப்பட விரும்புகிறபடியினால், இதை விரும்ப மனிதனுக்குச் சக்தியை அவர் கொடுக்கிறார். இதிலிருந்து சித்தமும் மனிதனுடைய தல்லவென்றும், புத்தியும் மனிதனுடைய தல்லவென்றும், பின் சொன்னதும் முன் சொன்னதுமாகிய இரண்டும் தாமே கருப்பையில் அவனில் அவைகளிலிருந்ததுபோல், அவனுக்குச் சொந்தமான தல்லவென்றும் விசதமாகிறது. ஆனால் அந்த இரண்டு மனோ சக்திகளும் மனிதனுக்குத் தன்னிடமிருந்தே போல இச்சிக்கவும் நேசிக்கவும், நடந்துகொள்ளவும், பேசவும், அப்படி யிருந்தாலும், அவைகள் தன்னிட மிருந்தல்ல வென்று யூகித்து அறிந்து கொண்டு நம்பும்படி மனிதனுக்குக் கொடுக்கப்பட்டதென்று விசதமா யிருக்கிறது. இந்த வழி வகையால்,

2) மனிதனானவன் சீர்திருத்தப்பட்டு, பரிபக்குவப் படுத்தப்பட்டு, கருப்பையில் தங்களிடமிருந்தும் கூட அவன் உருவாக்கப்பட்ட சித்தத்தில் அன்பையும், புத்தியில் ஞானத்தையும் பெற்றுக் கொள்ளுகிறான். மேற்சொல்லியபடி, அவன் நிருமாணமாகும் போது கடவுளிட வாசஸ்தானங்களா யிருந்த உயிரின் அதிகம் உயர்ந்த இரண்டு படிகளும் இந்த வழி வகையால்கூட மனிதனில் திறக்கப்படுகின்றன ; அதனுடன் மேற்சொல்லியபடி

கவிழ்ந்து வளர்ந்திருந்த எல்லாவற்றிலும் தாழ்ந்தபடியும் சீர்திருத்தப்பட்டுகிறது.

இந்த ஒப்பனையாலும் சாயலாலும் பக்குவப்படுத்தப் படுகிற ஒரு மனிதனானவன், புதிதாக கருப்பம் தரிக்கப் பட்டு, உருவாக்கப்பட்டு, பிறந்து கற்பிக்கப்படுகிறதுபோல இருக்கிறானென்றும், இதுவும் அன்பில் கடவுளின் சாயலாகவும், ஞானத்தில் அவரிட பிரதிமையாகவும், அவனுகும் பொருட்டென்றும், விசதமாகிறது. நீர் அதை நம்பு இச்சை கொண்டால், இவ்வித செய்கையினால், அவன் தனக்கு ஒரு புதிய சித்தமும் புதிய ஞானமும் மாத்திரமல்லாமல், தன்னிட ஆன்மாவுக்கு ஒரு புதிய சரீரத்தையும் கூட கொடுக்கப்படுகிறான் என்கிற உண்மையில் அவன் புதிய மனிதனாகிறான். நிஜமாகவே முன்னிருந்தவைகள் அழிக்கப்படுகிறதில்லை, ஆனால் காணப்படாத விதமாய் நீக்கப்படுகிறது; அப்படி யிருக்கையில், பக்குவப்பட்டவர்களில், கடவுளா யிருக்கிற அன்பினாலும் ஞானத்தாலும் கருப்பையில் போல புது பொருள்கள் உருவாக்கப்படுகின்றன. மேல் ரூபிக்கப்பட்டதுபோல்கூட தலையிலிருந்து குதிகால் வரையில், மனிதனில் எல்லாப் பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டவைக ளானபடியினால், மனிதனிட சித்தமும் புத்தியும் இருக்கிறதுபோல, மனிதனும் அவ்விதமாய் ஒவ்வொரு பொருளிலும் பொதுவாகவும் சிறப்பாகவும் இருக்கிறான்.

V. பிறந்த பிறகு மனிதனில் சித்தமானது அன்பின் ஆசயமாகிறது, புத்தியானது ஞானத்தின் ஆசயமாகிறது. *

---

* கிரந்த கர்த்தாவின் கையெழுத்துப் பிரதியின் ஓரத்தில் பின்வரும் குறிப்பு இருக்கிறது :—" அல்லது இம்மாதிரி யாக்கும் :

மனிதனுக்குச் சித்தமும் புத்தியும் என்கிற உயிரினிட இரண்டு மனோசக்திகள் இருக்கிறதென்பது நன்றாய்த் தெரிந்திருக்கிறது ; ஏனென்றால், அவன் சிந்தித்து அறியக் கூடியவனா யிருக்கிறான். உண்மையில், அவன் இச்சிக்கா ததை அறிந்து கொள்ளக்கூடும். சித்தமும் புத்தியும் மனிதனுக்குச் சேர்ந்த இரண்டு பிரத்தியேகமான பொருள் கள் என்கிறதும், சித்தமானது அன்பின் ஆசயமென்கிற தும், புத்தியானது ஞானத்தின் ஆசயமென்கிறதுமாகிய இதிலிருந்து அது விசதமாகிறது. ஆகையினால் ஒரு மனி தன் நேசிப்பதை அவன் இச்சிக்கிறதினாலும் கூட அன்பா னது சித்தத்துக்குச் சேர்ந்ததென்றும், புத்தியின் பார்வை சிந்தனையா யிருக்கிறதினால், ஒரு மனிதன் யூகிக்கிற அல் லது அறிந்து கொள்ளுகிறதை, புத்தியினால் பார்ப்பதினா லும், ஞானமானது புத்திக்குச் சேர்ந்ததென்றும் தெளிவா யிருக்கிறது.

மேல் ரூபித்தபடி நிருமாணகாலத்தில் கருவுக்குச் சித் தத்தினிடவும் புத்தியினிடவும் எந்தப்பொருளும் சாராத படியினால், கருப்பையில் இருக்கிற காலம்வரையில் மனித னானவன் அந்த இரண்டு மனோசக்திகளையும் உடைத்தாயி ருக்கிறதில்லை. ஆகையால் சித்தம் என்கிற ஆசயமானது அன்பை ஏற்றுக்கொள்ளவும், புத்தி என்கிற ஆசயமானது, ஞானத்தை ஏற்றுக்கொள்ளவும், இருக்கிறபடியினால், ஒன்று பின் வருகிற மனிதனிட சித்தத்திற்காகவும், மற்றொன்று அவனிட புத்திக்காகவும், கடவுளானவர் இரண்டு ஆசயங் களைத் தயார் செய்திருக்கிறாரென்றும், அவர் அவைகளை தன்னிடசொந்த அன்பினாலும், தன்னிடசொந்த ஞானத்தி னாலும் தயார் செய்திருக்கிறாரென்றும், ஆனால் இந்த இரண்

பிறந்த பிறகு மனிதனில், அன்பின் ஆசயம் சித்தமாகிறது, ஞானத்தின் ஆசயம் புத்தியாகிறது.''

டும் அவன் பிறப்பதற்கு பூரணமாய் உருவாக்கப்படுகிற வரையில் மனிதனில் செல்லுகிறதில்லை யென்றும், ஏற்படுகிறது. தன்னிடமிருந்து வருகிற அன்பும் ஞானமும், மனிதனுனவன் முதுமைக்கு வந்து வயதுஆகஆக, அந்த ஆசயங்களில் மென்மேலும் முற்றும் பெற்றுக்கொள்ள, கடவுளானவர் சாதனங்களைச் சித்தப்படுத்திக்கூட வைத்திருக்கிறார்.

2) சித்தமும் புத்தியும் ஏன் ஆசயங்கள் என்று சொல்லப்படுகிறது என்பதற்குக் காரணம், சித்தமானது ஓர்வித சூக்குமமனேபாவனையான யாதொன்றுமல்லாமல், கடவுளிடமிருந்து அன்பை ஏற்றுக்கொள்ள உருவாக்கப்பட்ட ஒரு பதார்த்த சுபாவமுள்ள உண்மைப்பொருள் என்பதும், புத்தியானது ஒருவித சூக்குமமனேபாவனையான ஏதோ ஒன்றல்லாமல், கடவுளிடமிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொள்ள உருவாக்கப்பட்ட ஒரு பதார்த்த சுபாவமுள்ள உண்மைப்பொருள் என்பதுமாயிருக்கிறது. மூளையின்மேற் பட்டையைப்போன்ற ஜவ்வை உருவாக்குகிற பொருள்களில் உள்ளுக்குள்ளாகவும், அதனுடன் பொதுவாக மூளையின் பச்சைமயப் பொருளிலும் முக்கியமாய் வரிவரியாயுள்ள வஸ்துக்களிலும், அதனுடன் சிறிய மூளையின் பச்சைமயப் பொருளில் உள்ளுக்குள்ளாகவும், அதனுடன் அதற்கு மூலமாகிற முள்ளந்தண்டு கொடியிலும் இருக்கிறதினால், பார்வைக்கு மறைந்து கிடந்தாலும், அவைகள் மெய்யாய் நிலைத்திருக்கின்றன. ஆகையினால், அவைகளில் ஒவ்வொன்றும் இரட்டையானதும், மேலே காண்பித்தபடி மூன்று படிகளுமுள்ளதுமான, இரண்டல்லாமல் கணக்கில்லாத ஆசயங்களிருக்கின்றன.

3) முழுசரீரம் உண்டாக்கப்பட்ட எல்லா நார்களின் ஆரம்பங்களாகவும், தலைமையானவைகளாகவும் அவைகள்

இருக்கிறதென்கிறதும், சித்தத்தினிடவும் புத்தியினிடவும் சிறிய இருப்பிடங்களிலிருந்து அவைகள் வெளிப்பட்டு நீட்டப்படுகின்றன என்கிற உண்மையில் மாத்திரம் ஞானேந்திரியங்கள் உணர்ந்தும் கர்மேந்திரியங்கள் சல்னமடையப் படுகையில், அவைகள் அவைகளிட ஆரம்பங்களாகவும் முடிவுகளாகவும் இருப்பதால், இவைகளிலிருந்து அனுப்பப்பட்ட நார்களிலிருந்து எல்லா ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் உருவாக்கப்படுகின்றன என்கிறதுமான இந்த உண்மையிலிருந்து, இவைகள் ஆசயங்களென்றும் அவைகள் அப்படி வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் மிகவும் தெளிவாயிருக்கிறது. சிறு குழந்தைகளில் அவ்வாசயங்கள் சிறியதாயும் மென்மையானதாயுமிருக்கின்றன; பின்னிட்டு அவைகளிடத்து இருக்கும் உணர்வுகளுக்கும் ஆசைகளுக்கும் தக்கபடி, அவைகள் அதிகரித்து பூரணநிலைக்கு வருகின்றன; விவேகத்துக்கும் உபயோகங்களை நாடும் அன்புக்கும் தக்கபடி, அவைகள் உரமுள்ளதாகிறது; மனப்புனிதத்திற்கும் கடவுளிடத்து அன்புக்கும் தக்கபடி அவைகள் இளக்கமாகின்றன; அப்படியிருக்கையில், இவைகளின் எதிரிடையானவைகளிலிருந்து அவைகள் திண்மையாகவும் கடினமாகவுமாகின்றன. அவைகளின்களின் மாறுதல்கள் ஆசைகளாயிருக்கின்றன, அவைகளின் நிலைமை உருவபேதங்கள் சிந்தனைகளாயிருக்கின்றன, முன்சொல்லியதினிடவும் பின் சொல்லியதினிடவும் இருப்பும் ஸ்திரமும் ஞாபகமாயிருக்கிறது; அப்படியிருக்கையில், அவைகளை மறுபடியும் விளைவிக்கை பூர்வ சங்கதியை ஞாபகப்படுத்துகையாயிருக்கிறது; இவைகள் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டால் மானிட மனதாயிருக்கின்றன.

VI. இருதயம் சித்தத்தோடும், சுவாசாசயங்கள் புத்தியுடனும் அன்னுவயமிருக்கிறது.

அன்னுவயத்தின் சுபாவமும் அதனுடன் உலகத்தி லுள்ள எல்லாப் பொருள்களுக்கும் சுவர்க்கலோகத்திலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் அன்னுவயமிருக்கிறதென்பதும், அம்மாதிரியே, ஜடப்பொருள்களுக்கும் சூக்குமபொருள் களுக்கும் அன்னுவய மிருப்பதால், மனிதனில் சரீரத்தி லுள்ள எல்லாப் பொருள்களுக்கும், மனிதனில் மனதைச் சேர்ந்த எல்லாப் பொருள்களுக்கும் அன்னுவயமிருக்கிற தென்பதும் தெரியாமல் இருக்கிறபடியினுல், இது உலகத் தில் தெரியாமலிருக்கிறது. ஆனுல் அன்னுவயமும், அதன் கூட அதன் சுபாவமும் குணமும் என்னவென்றும், அத் துடன் மானிட சரீரத்தில் எந்தப் பாகங்களோடு அன்னு வய மிருக்கிறதென்றும் மேலே காண்பிக்கப்பட்டது. மனி தனில் சரீரத்தின் எல்லாப் பொருள்களுக்கும் அன்னுவய மிருப்பதால் இருதயத்துடனும் சுவாசாசயத்துடனும் இருக்கும் அன்னுவயம், இருதயமும், அத்துடன் சுவாசாச யங்களும் முழுசரீரத்தில் அரசாட்சி செய்வதால், சர்வவியா பகமாய் இருப்பதின் நிமித்தம், அவைகளோடு குறிப்பாய் ஒரு அன்னுவயமிருக்கிறது. இருதயமும் சுவாசாசயங்களும் சரீரத்தில் எல்லா ஸ்தூல சலனங்களுக்கும் இரண்டு ஊற்று களாயிருக்கின்றன. அப்படி யிருக்கையில், சித்தமும் புத்தியும் அதே சரீரத்தில் எல்லா ஞான சுருசுருப்பு களுக்கும் இரண்டு ஊற்றுகளாயிருக்கின்றன. இந்த அன்னு வயமில்லாவிட்டால் சரீரத்தின் உயிரும், மனதின் உயிரும், ஆகிய இரண்டும் நின்று விடுமாகையால் சரீரத்தின் ஸ்தூல சலனங்கள், அதின் ஆன்மாவினிட சுருசுருப்புக்களுடன் ஒற்றுமைப்படவேண்டும்; அன்னுவயமானது இந்த இரண் டையும் நிலைக்கவும் ஜீவிக்கவும் செய்கிறது.

2) இருதயமானது சித்தத்தோடு, அதாவது, அதே வாகிற அன்புடன், அன்னுவயமா யிருக்கிறது என்பது,

ஆசைகளுக்குத் தக்கபடி இருக்கிற அதின் நாடி துடிப்பின் விகர்ப்பங்களினால் விசதமாகிறது. துடிப்பதில் நாடியானது பேதப்படுகிறது. அது தாமதமாகவாவது விரைவாகவாவது, உயர்ந்தாவது தாழ்ந்தாவது, மிருதுவாகவாவது கடினமாகவாவது, சமமாகவாவது சமமற்றாவது, முதலிய பலவிதமா யிருக்கின்றன; இம்மாதிரியாக அது, சந்தோஷத்திலும் விசனத்திலும், மனதின் அமைதியிலும் கோபத்திலும், நிர் பயத்திலும் பயத்திலும், சரீரத்தின் சூட்டிலும் குளிர்ச்சியிலும், வியாதிகளில் நானாவிதமாயும் இத்தியாதி பேதங்களா யிருக்கின்றன. எல்லா ஆசைகளும் அன்பி
3) னுடையதா யிருக்கின்றன; அதிலிருந்து சித்தத்தினுடையதா யிருக்கிறது. அன்பினுடையதா யிருக்கிற, அதிலிருந்து சித்தத்தினுடையதா யிருக்கிற ஆசைகளுக்கு இருதயமானது காரணகாரிய சம்பந்தமா யிருப்பதால், பூர்வகாலத்து ஞானிகள் இருதயத்துக்கு ஆசைகளை ஆரோபித்தார்கள்; அவர்களில் சிலர், இருதயத்தை அதன் பீடமாக நினைத்தார்கள். இந்த காரணத்துக்காக, பெருந் தகைமையுள்ள இருதயமென்றும், கோழையான இருதய மென்றும், சந்தோஷமான இருதய மென்றும், விசனகரமான இருதயமென்றும், மிருதுவான இருதயமென்றும், கடினமான இருதயமென்றும், பெரிய இருதயமென்றும், சிறிய இருதயமென்றும், நல்ல ஸ்திதியிலுள்ள இருதயமென்றும், துக்கத்தினால் ஒடுங்கிப்போன இருதயமென்றும், மாமிச இருதயமென்றும், கல் இருதயமென்றும் சொல்வதும், ஒரு மனிதனை கொழுத்த இருதயமுள்ளவனென்றும், மிருதுவான இருதயமுள்ளவனென்றும், இழிவான இருதயமுள்ளவனென்றும் கூப்பிடுவதும்; வேறொருவனைப்பற்றி அவனுக்கு இருதயமில்லை என்று சொல்வதும், செயல்பட இருதயத்தைக் கொடுத்தலென்

றும், ஒருவனுக்கு ஒரு இருதயம் அல்லது புதிய இருதயம் கொடுத்தல் என்றும், இருதயத்தில் வைத்தலென்றும், இருதயத்தில் ஏற்றுக்கொள்ளல் என்றும், இருதயத்தில் பிரவேசித்தல் இல்லையென்றும், இருதயத்தில் பிடிவாதமாய் இருத்தல் என்றும், இருதயத்தில் உயர்த்தப்படுதல் என்றும், இருதயத்தில் சிநேகிதமா யிருத்தலென்றும் கூறுதலானது, சாதாரண சம்பாஷணை சங்கதியா யிருக்கிறது. ஆகையினால் நாம் ஒற்றுமை என்றும், ஒவ்வாமை என்றும், இருதய வைத்தியமென்றும்கூட பேசுகிறோம், அதைப் போன்ற அநேக சொற்களை உபயோகப்படுத்துகிறோம். வேதமானது காரணகாரிய சம்பந்தங்களால் முழுமையும் எழுதப்பட்டிருப்பதால், அந்த வேதத்தில் கூட இருதயமென்பதால், சித்தம் அல்லது அன்பு என்று எவ்விடத்திலும் அருத்தம் கொள்ளப்படுகிறது.

4) அவைகளின் ஆன்மா அல்லது ஆவி என்பதால் புத்தி என்று அருத்தம் கொள்ளப்படுகிற சுவாசாசயங்களுடன் விஷயம் அதைப்போன்றதே ; ஏனென்றால், இருதயமானது அன்பு அல்லது சித்தத்துடன் அன்னுவயமாகிறதுபோல, ஆன்மா அல்லது சுவாசமாயிருக்கிற சுவாசாசயங்களின் மூச்சுவிடுதல், புத்திக்கு அன்னுவயப்படுகிறது. ஆகையால் முழுசித்தத்துடனும், முழுபுத்தியுடனும் அன்பு வைக்கவேண்டுமென்று அருத்தம்கொள்ளுகிற முழு இருதயத்தோடும் முழு ஆன்மாவுடனும் மனிதனானவன் கடவுளை நேசிக்கவேண்டுமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதனானவன் பரிபக்குவமாக்கப்படும்போது அவன் புதிதாய் சிருட்டிக்கப்படுதலால், இருதயம் என்பது சித்தமென்றும், ஆவியானது புத்தி என்றும் அருத்தம் கொண்டு, அம்மாதிரியே கடவுளானவர் மனிதனில் ஒரு

புதிய இருதயத்தையும், ஒரு புதிய பிராணனையும் சிருட்டிப்பார் என்று சொல்லப்படுகிறது. அதே காரணத்துக்காக, யேகோவா கடவுளானவர் அவனில், ஞானத்தை ஊதினார் என்று அருத்தம் கொள்ளுகிற, ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊதினார், அவனை ஜீவாத்மாவாகச் செய்தார் என்று ஆதாம் என்பவரைப் பற்றிவும் கூட சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், நாசித் துவாரங்கள் மூலமாக நடக்கிற சுவாசத்தினிட அன்னுவயத்திலிருந்து, நாசித் துவாரங்கள் என்பது கிரகிக்கும் சக்தி என்று அருத்தம் கொள்ளுகிறது; அந்த காரணத்துக்காக ஒரு புத்திசாலியான மனிதனுக்கு கூர்மையுள்ள மூக்கு இருக்கிறதாகவும், புத்தியில்லாதவனுக்கு மழுங்கலான மூக்கு இருக்கிறதாகவும் சொல்லப்படுகிறது. ஆகையினால் கர்த்தர் சிஷர்களின் பேரில் ஊதி: "பரிசுத்த ஆவியைப்பெற்றுக் கொள்ளுங்கள்" என்று அவர்களுக்கு சொன்னார் (யோவான் XX-22). அவர்கள்பேரில் ஊதி என்

5) பது அவர்கள் ஏறக்குறைய பெற்றுக்கொள்ள இருந்த அறிவை கருதுகிறது; பரிசுத்தஆவி என்பது, ஒரு மனிதனுக்கு கற்பித்து, அறிவை உண்டாக்குகிற ஞானசக்தி என்று அருத்தம் கொடுக்கிறது. பரிசுத்த ஆவி என்பதினால் அருத்தம் கொள்ளப்பட்ட ஞானசக்தியானது அவரிடமிருந்து புறப்படுகிறதாக வெளிப்படையாகும் பொருட்டு இது செய்யப்பட்டது. ஆன்மா, ஆவி என்பவை சுவாசத்தைப்பற்றி உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தைகளென்று பிரதிதின பேச்சிலிருந்து கூட தெரிந்திருக்கிறது. ஏனென்றால் சாகும்காலத்தில், சுவாசமும் உயிர்ப்பும் இல்லாமல் நிற்பதால், அக்காலத்தில் ஒரு மனிதனைப்பற்றி அவனிட ஆன்மாவும் ஆவியும் போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது. மேலும் ஆவி என்பது, அநேக பாஷைகளில், சுவர்கத்திலுள்ள ஆவியையும் மனிதனிட சுவாசமாகிய இரண்டில்

ஒவ்வொன்றையும், காற்றையும்கூட கருதுகிறது. சுவர்க்க லோகங்களிலுள்ள ஆவிகளும், இறந்த பிறகு மனிதர்களிட ஆன்மாக்களும் காற்றுகளைப்போலிருக்கிற தென்கிறதும், உண்மையில் அப்படியிருந்தும் கடவுளானவர் மனிதனாயிருக்கும்போது, அவரை ஆவியென்று சொல்லப்படுவதால், கடவுளை அவைகளை என்கிறதுமான அநேகர் கொள்ளும் அபிப்பிராயமானது எங்கிருந்து வருகிறது. அம்மாதிரியே கூட இறந்தபிறகு மனிதன் ஆன்மா ஒரு மனிதனாயிருக்கிறது; மேலும் சுவர்க்கலோகத்தில் ஒவ்வொரு ஆவியும் ஒரு மனிதனாயிருக்கிறது. ஆனால் காரண காரிய சம்பந்தத்தில் "ஆன்மா" "ஆவி" என்பது ஞானத்தைக் கருதுகிறபடியினால் அவைகள் அப்படி சொல்லப்படுகின்றன.

6) இருதயத்துக்கும் சித்தத்துக்கும்போல, சுவாசாசயங்கள் புத்தியுடன் அன்னுவயப்படுகிறது என்பது மனிதனிட சிந்தனையாலும் பேச்சினாலும் இன்னும் விசதமாகிறது. எல்லா சிந்தனையும் புத்தியைச் சேர்ந்தது, எல்லா பேச்சும் சிந்தனையினுடையது, சுவாசமானது கிரமமானதாகவும் ஏக காலத்தில் சம்பவிக்கிறதாகவும் இருந்தாலொழிய ஒரு மனிதன் நினைக்கமுடியாது, ஆதலால், அவன் மௌனமாய் நினைக்கும்போது, அவன் மௌனமாய் மூச்சுவிடுகிறான்; அவன் ஆழமாய் நினைக்கும்போது, ஆழமாய் சுவாசிக்கிறான்; நிதானமாயும், துரிதமாயும், கவனமாயும், மெதுவாயும், மனப் பூர்வமாயும் முதலிய விதங்களில் அம்மாதிரியே; அவன் தன்னிட சுவாசத்தை முழுமையும் பிடித்து கொண்டால், ஆவியிலும் அதன் சுவாசத்திலிருந்தும் இத்தியாதிவிதங்கள் தவிர அவன் நினைக்க முடியாது. தனக்குள்ளே இருக்கும் ஜீவ அனுபவத்திலிருந்து ஒவ்வொருவனும், தான் விரும்பினால், மனிதனிட

புத்தியின் சிந்தனையிலிருந்து புறப்படுகிற வாயின் உச்சாரணம், சுவாசாசயத்தின் சுவாசத்துடன் ஒன்ருகிறதென்றும், குரல்வளை மூலமாயும், சுவாசக் குழல் மூலமாயும் சுவாசாசயங்களிலிருந்து உதவியில்லாமல், மிகவும் அற்பமான சப்தத்தையாவது, மிகவும் அற்பமான வசனத்தையாவது, அவன் உச்சரிக்க முடியாதபடி அம்மாதிரி ஒன்ருகிறதென்றும், தெரிந்து கொள்ளலாம்.

7). இருதயமானது சித்தத்தோடும், சுவாசாசயங்கள் புத்தியோடும், அன்னுவயப்படுகிறது என்பது, சரீரத்திலும், அதன் ஒவ்வொரு பாகத்திலும் விவரணத்திலும் இரண்டின் சர்வ வியாபக அதிகாரத்திலிருந்தும்கூட விசதமாகிறது. இருதயமானது சுத்த இரத்த நாடிகளாலும் அசுத்த இரத்த நாளங்களாலும் சரீரத்தில் பரிபாலனஞ் செய்கிறதென்பது நன்ருய்த் தெரிந்திருக்கிறது. சுவாசாசயங்களும் கட்டுப்பாட்டில் வைக்கிறதென்பது ஒவ்வொரு சாரீர சாஸ்திரிக்கும் வெளிப்படையாய் தெரியும்; ஏனென்ருல், சுவாசாசயங்கள், தாங்கள் மூச்சு வாங்கி விடுதலினுல் விலா வெலும்பின் பேரிலும் ஈரல்தாங்கி பேரிலும் பிரவர்த்திக்கிறது; இவைகளால், ஓர்வித வெள்ளை சவ்வின் மூலமாயும் அடிவயற்றகத்தை மூடிய சவ்வின் மூலமாகவும் சரீரத்தில் உள்ள எல்லா ஆந்திரிகங்கள் பேரிலும், அத்துடன் அதன் எல்லா தசைநார் பேரிலும் அவைகள் பிரவர்த்திக்கின்றன; அவைகள் இவைகளை உட்படுத்துகிறது மாத்திர மல்லாமல் அத்துடன்கூட அவைகள் வெள்ளை ஜவ்விலிருந்தும், அதினுல் சுவாசத்திலிருந்தும் ஏதோ ஒன்றை அடையாத, ஆந்திரிகத்தினிவுடம் ஒரு தசைநாரிடவும், எல்லாவற்றிலும் ஒரு சிறிய பாகமும் மேற் பாகத்திலிருந்து உள்ளுக்குள்ளான பாகம் வரையில், இல்லாதபடி அவ்வளவு முழுமையும் அவைகளுள்ளே பிரவேசிக்கின்

8

றன. அதின் அன்னவாகி என்கிறது ஈரல்தாங்கியின் வழியாய் போய், சுவாசாசயங்களிலிருந்து வெளி வருகிற சுவாசக் குழலோடு சேர்ந்துக் கொள்வதால் மற்ற ஆந்திரி கங்களை விட அன்னசயத்துடன் விஷயம் அதிகமாய் இது வாக இருக்கிறது; ஆதலால், அது ஈரல்தாங்கியின் பேரி லும் சுவாசாசயங்களின் உள் பாகத்திலும் இருப்பதாலும், அதினிட சிரவங்களால் அவைகளோடு ஒட்டியும் சேர்க் கப்பட் டிருப்பதாலும், இருதயத்துக்கே தன்னிட சொந்த சலனமன்றி, சுவாசாசய சம்பந்தமான சலனமும் கூட இருக்கிறது; அதனால் சுவாசசம்பந்தமான சலனம் சுத்த இரத்தமுள்ள நாடிகளிலும் அசுத்த இரத்தமுள்ள நாளங் களிலும் பாய்கிறது; அந்த காரணத்துக்காக, அவைகள் சரீரத்தின் மற்றைப் பாகத்திலிருந்து வேறாக, மார்புக்கூடு என்கிற ஒரு அறையில் அவைகள் கூட்டான இருப் பிடத்தை வைத்திருக்கின்றன.

8). செயல்கள் என்று சொல்லப்பட்டதும், தசைநார் களால் நிலைத்திருக்கிறதுமான எல்லா உயிருள்ள சலனங் களும், ஒவ்வொரு விஷயத்திலும் சலனமானது பொது வானது அல்லது புறம்பானது என்றும், குறிப்பானது அல் லது அந்தரங்கமானதென்றும் இருவிதமாய் இருக்கிற தினால், இருதயத்துக்கும் சுவாசாசயங்களுக்கும் சேர்ந்த சலனங்களின் கூட்டுத்தொழிலால் சம்பவிக்கிறதென்று, ஒரு சிரத்தையாய் கவனிப்பவன் இந்த ஆலோசனைகளால் அறிந்துகொள்ளலாம். மேலும் தெளிவாய் அறிந்துகொள்ளு கிறவன், சரீரத்தின் சலனங்களின் இந்த இரண்டு ஊற்று களும் சித்தத்துக்கும் புத்திக்கும், அவைகளிலிருந்து உண் டாகிறபடியினால் அனுவயப்படுகிறதென்றுகூடத் தெரிந்து கொள்ளலாம். உயிருக்கு அதைக் காண்பித்த தேவர்க ளோடு ஹாஜராயிருக்க நான் விடப்பட்ட சுவர்க்கலோகத்தி

லிருந்து, இது ஸ்திரமும்கூட செய்யப்பட்டது. ஒரு ஆச்சரியமானதும் சொல்லமுடியாததுமான வட்டங்களாக செய்யப்பட்ட பாய்ச்சலினால், அவைகளின் நிர்மாணத்தின் புறம்பானதும் உள்ளானதுமான எல்லாப் பாகங்களுடன், இருதயத்தின் ஒரு சாயலையும் சுவாசாசயங்களின் ஒரு சாயலையும் அவர்கள் உருவாக்கினார்கள்; சுவர்க்கலோகத்துக்கு கர்த்தரிடமிருந்து வருகிற அன்பினிடவும் ஞானத்தினிடவும் உட்பெருக்கிலிருந்து இவ்வித உருவங்களுண்டாக சாய்வு இருக்கிறபடியினால், அவர்கள் சுவர்க்கலோகத்தின் உட்பெருக்கைப் பின் தொடர்ந்தார்கள். இம்மாதிரியாக, அவர்கள் அன்பு, ஞானத்தின் விவாகம் என்று அவர்கள் சொல்லுகிற அவைகளின் சம்யோகத்துடன் இருதயத்தின் விவரணங்களையும் சுவாசாசயங்களின் விவரணங்களையும், காண்பித்தார்கள். முழுசரீரத்திலும், அதின் ஒவ்வொரு அவயவங்களிலும், அங்கங்களிலும், ஆந்திரிகங்களிலும் இருதயத்தும் சுவாசாசயத்துக்கும் சம்பந்தமுள்ள அதிலுள்ள பொருள்களோடும் கூடவும், விஷயமானது முழுசரீரத்தில் அம்மாதிரியே இருக்கிறதென்றும், அந்த இரண்டும் செயல்படாமலும் தங்களிட குறிப்பான தொழில்களை நிறைவேற்றாமலும் போனவிடத்தில், எந்த தன்னிஷ்டமான நியமித்திலிருந்தும் உயிரின் எந்த சலனமும், புத்தி சம்பந்தமுள்ள எந்த நியமித்திலிருந்தும் எந்த சைதந்நியமும் இருக்கமுடியாது.

9). காரணங்களைப்பற்றி புத்திசாலியாக இருக்க விரும்புகிறவன் ஒவ்வொருவனும், மேற் சொன்னதிலிருந்து, சித்தமானது தானே புத்தியுடனும், புத்தியானது சித்தத்துடனும், எப்படி சேருகிறதென்றும், அவ்வித புணர்ச்சியில் அவைகள் எப்படி செயல் படுகிறதென்றும்,—இருதயத்திலிருந்து எப்படி சித்தமும், சுவாசாசயத்திலிருந்து எப்படி

புத்தியும், இருதயத்தினிடவும் சுவாசாசயங்களினிடவும் புணர்ச்சியிலிருந்து, சித்தத்தினிடவும் புத்தியினிடவும் பரஸ்பர புணர்ச்சியும், எப்படி செயல்படுகிறதென்றும்,— கற்பிக்கப்பட்டு தெரியப்படுத்தப்படுவான். முன்போன பிரிவின் உண்மையானது, மனிதனில் பிறந்த பிறகு, அன்பின் ஆசயம் சித்தமாகிற தென்கிறதும், ஞானத்தின் ஆசயம் புத்தியாகிற தென்கிறதுமாகிய உண்மைகளால், ரூபிக்கப்படுகிறது. ஏனென்றால் பிறந்த பிறகு சுவாசாசயங்கள் திறக்கப்படுகின்றன; அவைகள் இருதயத்துடன் சேர்ந்து, சித்தத்துக்குச் சேர்ந்த சுருசுருப்பான உயிரும், மனிதனிட புத்திக்குச் சேர்ந்த இந்திரிய ஞானமுள்ள உயிரும், ஆரம்பிக்கின்றன. முன் சொன்ன உயிரும், பின் சொன்ன உயிரும், இருதயத்தின் சுயம்பான செய்கையினாலும், சுவாசாசயங்களின் சுயம்பான செய்கையினாலும் அல்லாமல் அவைகளின் கூட்டுத் தொழிலினால் நிலைபடும்; காரணகாரிய சம்பந்தமில்லாமலும், மூர்ச்சியிலும், திக்கு முக்கிலும், அவைகள் இருக்கவும் முடியாது.

**VII. மனிதனில் சரீரத்தினிடவும் ஆன்மாவினிடவும் சேர்க்கையானது அவனிட இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் சலனங்களின் பலனாயிருக்கிறது; அந்த சலனங்கள் நிற்கும்போது பிரிவு சம்பவிக்கிறது.**

இது கிரகிக்கப்படும் பொருட்டு, இந்த விஷயத்தை விளக்க சிலது முந்தி சொல்லப்பட அவசியமாயிருக்கிறது. முந்தி சொன்னதிலிருந்து அடியில் கண்டவைகளை அறியலாம்.

1) மனிதனிட சூக்ஷ்ம சரீரமுள்ள ஆன்மா சமமாய் ஒரு மனிதனாக இருக்கிறான்.

2) மனிதனிட ஆன்மா சமமாய் ஒரு இருதயத்தையும், ஆதலால் ஒரு நாடியையும், அதனுடன் சுவாசாசயங்களையும், ஆகையால் சுவாசத்தையும் உடைத்தாயிருக்கிறது.

3) சூக்ஷ்ம சரீரமுள்ள ஆன்மாவினிட இருதயத்தின் துடிப்பும், அதன் சுவாசாசயங்களின் சுவாசமும், உலகத்தில் உள்ள ஒரு மனிதனில் இருக்கும் இருதயத்தின் துடிப்பிலும், சுவாசாசயங்களின் சுவாசத்திலும் பாய்கின்றன.

4) ஜடமா யிருக்கிற சரீரத்தின் உயிரானது அந்த உட்பெருக்கினுல் நிலைத்து, ஜீவிக்கிறது ; அது நீக்கப்படுதலால், இம்மாதிரியாக பிரிவினையால் விட்டுப் போகிறது.

5) அப்போது மனிதனுனவன் ஸ்தூலத்திலிருந்து பரமார்த்தமாகிறன்.

1. மனிதனிட சூக்ஷ்ம சரீரமுள்ள ஆன்மா சமமாய் ஒரு மனிதனு யிருக்கிறன் என்பதை, சுவர்க்கமும் நரகமும் (நெ. 73–77, 311–316, 445–452, 461–469) எனும் நூலிலும், அவனிட அந்தரங்கமானவைகள் சம்பந்தப்பட்ட வரையில் ஒவ்வொரு மனிதனும் ஒரு ஆன்மா வென்பதை (நெ. 432–444) லும், அதிக அனுபோகத்தால் ரூபகாரம் செய்யப்படுவதை நீ அறிந்து கொள்ளலாம். ஞான சம்பந்தமானவை ஒவ்வொன்றும், அவ்வண்ணமாக, ஞான சம்பந்தமானபடியினுல், கர்த்தரிடமிருந்து புறப்படும் அன்பினிடவும் ஞானத்தினிடவும் ஒவ்வொன்றும், அதன் சாரத்தில் ஒரு மனிதனு யிருக்கிற தென்பதை இதற்குச் சேர்த்தப்படலாம். ஞான சம்பந்தமான ஒவ்வொன்றும் அல்லது கடவுளிடமிருந்து புறப்படுவதும், ஏன் மனிதனுயிருக்கிறது என்பதற்குக் காரணமானது, அவ்வித சுபாவமுள்ளது தவிர வேறொன்றும் அவரிடமிருந்து புறப்படக்கூடாத பிரபஞ்சத்துக்குக் கடவுளாகிய கர்த்தர் தாமே ஒரு மனிதனுயிருக்கிறர் என்பதாகிறது ; ஏனென்றல், தெய்வம் தன்னிலே

மாறுகிறதாயும் விரிந்ததாயும் இல்லை; விரிக்கப்படாதது எவ் விடத்திலும் அதே வருகிறது; அங்கிருந்து அவரிட சர்வ வியாபகத்துவம் வருகிறது.

தேவர்களும் சூக்கும சரீரமுள்ளவர்களும், இறந்த பிறகு தானும் மானிட சரீரமில்லாமல் ஆகாயத்தைப்போல வும் காற்றைப்போலவும் இருக்கிறார்களென்கிற அபிப்பிரா யத்தை ஏன் மனிதன் உண்டாக்கிக்கொண்டான் என்பதற் குக் காரணமானது, இந்திரிய சம்பந்தமான பொருள்களில் தேர்ந்தவர்கள், வாயின் ஒரு சுவாசமென்று அருத்தம் கொள்ளுகிற ஆவி என்கிற வார்த்தையிலிருந்து இந்த அபிப் பிராயத்தைக் கொண்டபடியினாலும், அத்துடன் ஆவி யானது பார்க்கப்படாமல் கண்களுக்கு முன்னே தோன்றாத படியினாலுமா யிருக்கிறது. ஏனென்றால், இந்திரிய சம் பந்தமானவர்கள், இந்திரிய சம்பந்தமான ஜடப்பொருள் களிலிருந்தும், ஜடப்பொருள்களிலிருந்தும் அத்துடன் ஞானார்த்தமாய் தெரிந்து கொள்ளப்படாத வேதத்தி லுள்ள சில வாக்கியங்களிலிருந்தும் மாத்திரம் நினைக் கிறார்கள். அப்படி யிருந்தாலும், கர்த்தரானவர், தான் மாமிசம் எலும்புகள் சம்பந்தப்பட்டவரையில் மனிதனை யிருந்தாலும், சீடர்களுக்கு அகோசரமாய், மூடப்பட்ட கதவுகள் மூலமாய் சென்றாரென்று வேதத்திலிருந்து அவர் களுக்குத் தெரியும். வேதத்தில் குறித்து வைத்திருக்கிறபடி. தேவர்கள்கூட அநேகரால் மனிதர்களாகப் பார்க்கப்பட் டிருக்கிறார்கள்; இவர்கள் மானிட உருவத்தைத் தரிக்காமல், கண்கள் அக்காலத்தில் திறந்திருக்கையில், தாங்கள் தோற்றம் காட்டியவர்களின் ஆன்மாவின் கண்களுக்கு முன்பாக தங் கள் சொந்த உருவத்தில் தாங்களே பிரத்தியக்ஷமானார்கள். ஆகையினால், சூக்கும சரீரமுள்ளவர்களைப்பற்றியும், தேவர் களைப்பற்றியும், இறந்தபிறகு தங்கள் சொந்த ஆன்மாக்

களைப் பற்றியும் மனிதர்கள் இனிமேலும் போலிநியாயமான அபிப்பிராயம் கொள்ளாதபடி; என்னிட ஆன்மாவின் திருஷ்டியைத் திறக்கவும், தேவர்களோடும், இறந்துபோனவர்களோடும் முகமுகமாய்ப் பேச இடங்கொடுக்கவும், மேலும் அவர்களைப் பார்க்கவும், அவர்களைத் தொடவும், இக்காலத்திலிருக்கும் மனிதர்களின் நம்பிக்கை யீனத்தையும் திரிபு காட்சிகளையும் குறித்து அவர்களுக்கு அநேக சங்கதிகளைச் சொல்லவும், கர்த்தருக்கு அருள்பிறந்தது. 1744-ம் வருஷம் முதல் இன்று வரையில் பத்தொன்பது வருஷகாலம் நான் அவர்களுடன் பிரதிதின சம்பந்தத்தில் இருந்திருக்கிறேன். இவைகளினுல் ஒரு மனிதனிட சூக்கும சரீரமுள்ள ஆன்மா சமமாய் மனிதனுக இருக்கிறுன் என்று விசதமாகிறது.

2. மனிதனிட ஆன்மா சமமாய் ஒரு இருதயத்தையும், ஆதலால் ஒரு நாடியையும், அத்துடன் சுவாசாசயங்களையும், ஆகையினுல் சுவாசத்தையும் உடைத்தாயிருக்கிறது.

இது முதலில் அனுபவத்திலும், பின்னிட்டு அறிவிலும் ஸ்திரப்படுத்தப்படவேண்டும். முதலில் அனுபவத்திலிருந்து. தேவதா சம்பந்தமான சுவர்க்கலோகம், ஒன்று சுவர்க்க சம்பந்தமானதென்றும், மற்றென்று ஞான சம்பந்தமானதுமென்று சொல்லப்பட்ட இரண்டு இராச்சியங்களாக விசேஷித்து அறியப்படுகிறது; சுவர்க்க சம்பந்தமான இராச்சியம் கர்த்தரிடத்து அன்பிலிருக்கிறது; ஞான சம்பந்தமான இராச்சியம் அந்த அன்பிலிருந்து வந்த ஞானத்திலிருக்கிறது. கர்த்தரிடத்திலிருந்து வருவதும், கர்த்தரிலும் உள்ள அன்பும் ஞானமும், முந்தியே காண்பித்தபடி, சூரியனிடமிருந்து வரும் சூட்டையும் ஒளியையும் போல பிரத்தியேகமாய் இருப்பதைக் கொண்டு, இரண்டு வேறுனதாயும், என்றுலும் சேர்ந்ததாயும் இருக்கப்பட்டப் பொருள்களாய் இருப்பதால், சுவர்க்க லோகமானது இம்மாதிரி பேதம்

காட்டப்பட்டிருக்கிறது. சுவர்க்க சம்பந்தமான 'இராச்சியத்தின் தேவர்கள் கர்த்தரிடத்து அன்பில் இருப்பதால், சுவர்க்க லோகத்தின் இருதயத்துக்குச் சம்பந்தமுடையவர்களா யிருக்கிறார்கள்; அப்படி யிருக்கையில், ஞான சம்பந்தமான தேவர்கள், அந்த அன்பிலிருந்து ஞானத்தி லிருப்பதால், சுவர்க்கலோகத்தின் சுவாசாசயங்களுடன் சம்பந்தமுடையவர்களா யிருக்கிறார்கள்; ஏனென்றால், மேற்கூறியபடி, கர்த்தரிட திருஷ்டியில் முழு சுவர்க்கலோகமும் ஒரு மனிதனைப் போல இருக்கிறது. மேலும் ஞான சம்பந்தமான இராச்சியத்தினுள்ளே சுவர்க்க சம்பந்தமான இராச்சியத்தின் உட்பெருக்கானது, மனிதனில் சுவாசாசயத்தினுள்ளே இருதயத்தின் உட்பெருக்கைப் போன்று இருக்கிறது; அதனால் ஒவ்வொருவனிலும், இருதய சம்பந்தமானதும் சுவாசாசய சம்பந்தமானதுமாகிய அந்த இரண்டு சலனங்களுடனும் சுவர்க்கத்தின் ஒரு சர்வ வியாபக காரணகாரிய சம்பந்தமிருக்கிறது. இருதயத்திலிருந்து வரும் அவர்கள் சுத்த இரத்தமுள்ள நாடிகளில் ஒரு நாடி துடிப்பு சமமாய் இருக்கிறதென்றும், உலகத்தில் மனிதர்கள் செய்வதுபோல் அவர்கள் சுவாசம் விடுகிறார்களென்றும், மேலும், அன்பின் நிலைமைகளுக்குத் தக்கபடி நாடியடிகளும், ஞானத்தின் நிலைமைகளுக்குத் தக்கபடி சுவாசமும், அவர்களில் பேதப்படுகிற தென்றும், தேவர்களிடமிருந்து கேட்க எனக்கும் இடம் கொடுக்கப்பட்டது. அவர்களே அவர்களிட மணிக்கட்டுகளைத் தொட்டுப் பார்த்து மேற்சொன்ன உண்மையைப்பற்றி என்னை நம்பும்படி செய்திருக்கிறார்கள்; நானும்கூட அவர்களிட சுவாசம் வாங்கி விடுதலை அடிக்கடி கவனித்திருக்கிறேன்.

2). அன்பைச் சேர்ந்த ஆசைகளுக்குத் தக்கபடி முழு சுவர்க்கலோகமும் கூட்டங்களாக விசேஷித்து அறியப்

படுகிறபடியினாலும், எல்லா ஞானமும் புத்தியும் அந்த ஆசைகளுக்குத் தக்கபடி இருக்கிறதினாலும், ஒவ்வொரு கூட்டமும், மற்ற கூட்டத்தின் சுவாசத்திலிருந்து பிரத்தியேகமானதும் அதற்கே விசேஷமான சுவாசத்தையும், அம்மாதிரியே, விசேஷமானதும் பிரத்தியேகமானதுமான இருதயதுடிப்பையும் உடைத்தாயிருக்கிறது. அப்பொழுது இருதயமானது கஷ்டப்படுகிறபடியினாலும், சுவாசாசயங்கள் அமுக்கப்படுகிறபடியினாலும், எவனும் ஒரு கூட்டத்திலிருந்து தூரமான ஒன்றில் பிரவேசிக்க முடிகிறதில்லை; அதுவுமல்லாமல், உயர்ந்த சுவர்க்கலோகத்திலிருந்து தாழ்ந்ததற்கு, எவனும் இறங்கமுடியாது, தாழ்ந்ததிலிருந்து உயர்ந்ததற்கு ஏறவும் முடியாது. எவனொருவனும் நரகத்திலிருந்து சுவர்க்கலோகத்திற்கு ஏற முடியாது; ஏனென்றால், அப்படி அவன் முயர்ச்சி செய்தால், மரண வேதனையில் இருக்கப்பட்டவனைப் போலும், தண்ணீரிலிருந்து காற்றிலே விடப்பட்ட ஒரு மீனைப்போலும் அவன் தவிக்கிறான். சுவாசங்களிடவும் நாடி யடிகளிடவும் இந்த சர்வ வியாபகமான பேதமானது கடவுளிட அபிப்பிராயத்துக்குத் தக்கபடி இருக்கிறது. ஏனென்றால்,

3). அதிலிருந்து வருகிற அன்பு ஞானத்தின் வித்தியாசங்கள், அந்த கருத்தின் பலனாயிருக்கிறது. ஆகையினால் ஒரு மதத்தைச் சேர்ந்த தேசத்தார் மற்ற ஒரு மதத்தைத் சேர்ந்தவர்களோடு இருக்கமுடியாது. கிறிஸ்துவர்கள் மகமதியர்களோடு, தங்களிட சுவாசத்தின் பொருட்டு இருக்கமுடியாதென்பது எனக்குத் தெளிவாக்கப்பட்டது.

மிகவும் சுலபமானதும் மிகவும் அமைதியுமான சுவாசம், கடவுளைப்பற்றி மனிதனாக கருத்துள்ளவர்களாலும், கர்த்தரைப்பற்றி, சுவர்க்கலோக கடவுளென்று கருதுகிற

கிறிஸ்து உலகத்திலிருந்து வருபவர்களாலும் அனுபவிக்கப் படுகிறது. ஆனால் சோசினியர்களும் ஏரியர்களும் செய்கிறதுபோல, அவரிடதெய்வத் தன்மையைத் தள்ளுகிறவர்கள் கஷ்டமானதும் பிரயாசையுள்ளதுமான சுவாசத்தை உடைத்தா யிருக்கிறார்கள். நாடி யடியானது சித்தத்தினிட அன்புடனும், சுவாசமானது புத்தியினிட ஞானத்தோடும், ஏககாலத்தில் நடக்கிறபடியினால், சுவர்க்கத்துக்குவர கிட்ட இருக்கிறவர்கள் ஒற்றுமையான சுவாசங்களால் தேவதா சம்பந்தமான வாழ்வில் முதலில் பலவகையால் ஆரம்பிக்கப் பட்டு, அங்கிருந்து அந்தரங்கமான உணர்ச்சிக்குள்ளும் சுவர்க்க சம்பந்தமான சுதந்திரத்தினுள்ளும் அவர்கள் வருகிறார்கள்.

4) அறிவிலிருந்து. மனிதனிட சூக்கும சரீரமுள்ள ஆன்மாவானது, ஆந்திரிகங்கள், இதர அங்கங்கள், அவயவங்கள் இவைகளிலிருந்து பிரிக்கப்பட்ட பொருளல்ல, ஆனால் அவைகளோடு அந்தரங்கமாய் சேர்க்கப்பட்டிருக்கிறது; ஏனென்றால், பரமார்த்தமானது, மிகவும் வெளியானதிலிருந்து மிகவும் உள்ளானது வரையில் ஒவ்வொரு நுண்ணிய பாகத்துடனும், அதனால் இருதயத்தினிடவும் சுவாசாசயத்தினிடவும் எல்லா நுண்ணிய நிர்மாணத்துடனும் நார்களுடனும் கூட, துணைபோகிறது. ஆகையினால், மனிதனிட சரீரத்துக்கும் சூக்குமசரீர ஆன்மாவுக்கும் இருக்கும் சம்பந்தம் கலைக்கப்பட்டபோது சூக்கும சரீரமுள்ள ஆன்மாவானது மனிதன் முன்னிட்டு அடைந்திருந்ததைப் போன்ற ஒரு உருவத்தை உடைத்தாயிருக்கிறது; அது ஸ்தூலமான பொருளிலிருந்து சூக்குமமானதின் பிரத்தியேகப்படுதலாய் மாத்திர மிருக்கிறது. ஆதலால், ஆன்மாவுக்கு, மனிதனுக்கு உலகத்தில் இருந்ததுபோல், ஒரு இருதயமும் சுவாசாசயங்களும் உண்டு. ஆகையால் அதற்கு அதைப்போன்ற

இந்திரிய ஞானங்களும் சலனங்களு மிருக்கின்றன ; அதற்கு அத்துடன் பேசும் சக்தியுமிருக்கிறது ; இந்திரிய ஞானமும், சலனமும் பேச்சும், இருதயமும் சுவாசாசயங்களுமில்லாவிட்டால், இருக்க முடியாது ; சூக்கும சரீரமுள்ள ஆன்மாக்களுக்கும்கூட ஆகாயங்கள் உண்டு, ஆனால் இவைகள் ஞானமாயிருக்கின்றன. ஆகையால், மூளையிலாவது இருதயத்திலாவது ஆன்மாவுக்கு ஒரு தனியான இடத்தை நியமிக்கிறவர்கள் எவ்வளவு அதிகமாய் தவறுயுணர்கிறார்கள் ; ஏனென்றால் இறந்த பிறகு இருக்கப்போகிறது மனிதனிட ஆன்மா அதாவது அவனிட சூக்கும சரீரமுள்ள ஆவியா யிருக்கிறது.

3. சூக்கும சரீரமுள்ள ஆன்மாவினிட இருதயத்தின் துடிப்பும், அதன் சுவாசாசயங்களின் சுவாசமும், உலகத்திலுள்ள ஒரு மனிதனில் இருதயத்தின் துடிப்பிலும், சுவாசாசயங்களின் சுவாசத்திலும் பாய்கின்றன.

இதுவும் அனுபவத்திலிருந்தும், பின்னிட்டு அறிவிலிருந்தும் ஸ்திரப்படுத்தப் படவேண்டும். அனுபவத்திலிருந்து—அந்தரங்கமானவைகள் சம்பந்தப்பட்ட வரையில் மனிதனானவன் ஒரு சூக்கும சரீரமுள்ள ஆன்மாவென்றும், ஒரு சூக்கும சரீரமுள்ள ஆன்மாவும் சமமாய் மனிதனாயிருக்கிற தென்றும் தெரியாதபடியினால், மனிதனுக்கு உலகத்திலிருக்கும்போது சுவாசாசயங்களின் இரட்டிப்பான சுவாசமும், இருதயத்தின் இரட்டிப்பான சலனமும் இருக்கிறதென்று தெரியாமலிருக்கிறது. அப்படியிருந்தாலும், இரண்டு சலனங்களும் மனிதனில் தொடர்ச்சியா யிருக்கிறதென்றும், ஆதலால் சூக்கும சரீரமுள்ள ஆன்மாவின் அந்த சலனங்கள் சரீரத்தின் அந்த இரண்டு சலனங்களிலும் பாய்கிறதென்றும், புத்தியுடன் பார்க்கும்படி எனக்கு அனுமதி கொடுக்கப்பட்டது.

பலத்த வசித்துவ சக்தியினுல், நினைக்கும் எல்லா சக்தியும் புத்திக்கு இல்லாமல் செய்யவும், அதே காலத்தில், சுவாசம் வாங்கிவிடும் எல்லா சக்தியும் நீக்கக் கூடியதுமான சூக்கும சரீரமுள்ள ஆவிகள் என்னுடன் இருக்கும்போது, நான் அவைகளுள் ஒரு தரம் கொண்டு வரப்பட்டேன். இது எனக்குச் செய்யக் கூடிய கெடுதியைத் தடுக்க, சுவர்க்க லோகத்தில் இருக்கும் தேவர்களின் சுவாசத்துடன் ஏககாலத்தில் நடப்பதை நான் அப்பொழுது தெளிவாய் அறிந்த என்னிட சூக்கும சரீரமுள்ள ஆன்மாவின் சுவாசத்தில் நான் கொண்டுவரப்பட்டேன். அதனுல், சுவர்க்கலோகம் பொதுவாயும், அங்குள்ள ஒவ்வொரு தேவனும் குறிப்பாயும் சுவாசம் வாங்கி விடுவதாகவும், அன்றியும், புத்தியானது எவ்வளவு தூரம் நஷ்டப்படுகிறதோ, சுவாசமும் அவ்வளவு தூரம் நஷ்டப்படுகிறதென்றும், தெளிவாக்கப்பட்டது. சூக்கும உலகத்திலுள்ள சில பொல்லாத பிசாசுகளுக்கு இருக்கும் வசித்துவ சக்தி அதே காலத்தில் மூச்சுவிடாதபடி செய்கிறதினுல், அதற்குச் சரீரத்தினிட மூச்சுவிடாதபடி செய்யும் சக்தி என்றும் மனதினிட நாசம் செய்யும் சக்தி என்றும் சொல்லப்படுகிறது. தேவர்களும் கூட என்னிட சுவாசத்தை நடத்தவும், என்னிட சூக்கும சரீரமுள்ள ஆன்மாவின் சுவாசம் மாத்திரம் நிற்கிற வரையில், சரீர சுவாசத்தைக் குறைத்து, படிப்படியாய் நீக்க, ஒரு தரம் அநுமதி கொடுக்கப்பட்டார்கள். இதை நான் அப்பொழுதுகூட புத்தியுடன் பார்த்தேன். இதுவன்றியும், சூக்கும சரீர ஆன்மாக்களிடவும் தேவர்களிடவும் நிலைமை போன்ற நிலைமையில் நான் எப்பொழுதாகிலும் இருந்தபோது, என்னிட சூக்கும சரீர ஆன்மாவின் சுவாசத்தில் நான் இருந்திருக்கிறேன்; நான் எப்பொழுதாகிலும் சுவர்க்கலோகத்துக்கு உயர்த்தப்பட்ட

போது, சில வேளை, சரீரத்தில் அல்லாமல் நான் சூக்கும சரீர ஆன்மாவிலிருந்தேன் ; மற்றைக் காலங்களில், சரீரத்திலும் சூக்கும சரீர ஆன்மாவிலும் இருந்தேன். என்னிட சூக்கும சரீரமுள்ள ஆன்மாவின் உயிர்ப்பு இருக்குங்கால் சுவாசாசய சம்பந்தமானதும், சரீர சம்பந்தமுமான உயிர்ப்பின் நிறுத்தி வைத்தலைக் குறித்து சுவர்க்கலோகமும் நரகமும் (செ. 449) என்பதையும் பார்க்கவும்.

2) அறிவிலிருந்து.—ஒவ்வொரு மனிதனும், ஒன்றுக்குள் ஒன்றாக இரட்டையான சுவாசத்தை அனுபவிக்கிறபடியினால், இதனால் கூட மிருகங்களிலிருந்து பேதம் காட்டப்பட்டு, அவன் அவனிட புத்தியிலிருந்து பகுத்தறிவுடன், நிஜமாகவே, பரமார்த்தமாய், நினைக்கப் பலப்படுத்தப்படுகிறானென்றும், அதனுடன், அவனுடைய புத்தியானது வெளிச்சமாக்கப்படக் கூடுமென்றும், அவனே சுவர்க்க லோகத்துக்கு உயர்த்தப்பட்டும், தேவர்களோடு மூச்சு விடப் பலப்படுத்தப்பட்டும, இம்மாதிரியாக சீர்திருத்தப்பட்டு தூயகுணம் பெறக் கூடுமென்றும், மேற் கூறிய உயிருள்ள அனுபவங்களால், விசதமாகிறது. மேலும், புறம்பானது இருக்குமிடத்தில், ஒரு அந்தரங்கமானது மிருக்க வேண்டும் ; பின் கூறியது ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு இந்திரிய ஞானத்திலும், இருக்கவேண்டும் ; புறம்பானது பொதுவாய் செயல்படுகிறது, அந்தரங்கமானது குறிப்பாய் தொழில்படுகிறது. பொதுவானது இல்லாவிட்டால், குறிப்பானதுமில்லை. இந்த காரணத்துக்காக மனிதனுக்கு ஸ்தூலமான ஒரு புறம்பானதும், பரமார்த்தமான ஒரு அந்தரங்கமானதுமாக, ஒரு புறம்பானதும் அந்தரங்கமானதுமான இரத்தாசயம் சுருங்கக் கூடியதும் உயிருண்டாக்குகிறதுமான ஒரு சலனம் உண்டு. இம்மாதிரியாக கூட, சித்தமானது புத்தியுடன் ஏககாலத்தில் நடந்து, சரீர சல

னத்தை உண்டாக்கக்கூடும்; அத்துடன் புத்தியானது சித்தத்துடன் சேர்ந்து சரீர இந்திரிய ஞானத்தை உண்டாக்கக் கூடும். ஒரு பொதுவானதும் சிறப்பானதுமான நாடியடியும் சுவாசமும் மிருகங்களிலும் கூட இருக்கிறது. ஆனால் அவைகள் விஷயத்தில் புறம்பானதும் அந்தரங்கமானதும் இரண்டும் ஜடமா யிருக்கிறது. அப்படி யிருக்கையில் மனிதனிடத்தில் புறம்பானது ஜடமாகவும், அந்தரங்கமானது பரமார்த்தமாயும் இருக்கிறது. சுருங்கச் சொல்லில், புத்தியிலிருந்து நினைத்து, சித்தத்திலிருந்து சங்கற்பிக்கிற மனிதனிட ஆன்மா அவ்விதமா யிருப்பதால், புத்தி இருக்கிற மாதிரியே, சுவாசமும் இருக்கிறது. அந்த பரமார்த்தமான சுவாசங்கள் சரீரத்தில் சென்று, மனிதனை ஜடமாய் நினைத்து இச்சைப்பட பலப்படுத்தும் பொருட்டு, சூக்கும சரீரமுள்ள ஆன்மாவின் சுவாசமும் நாடியடியும், சரீரத்தின் சுவாசத்துடனும் நாடி யடியுடனும் ஏககாலத்தில் நடக்க வேண்டும்; ஒன்றினிட உட்பெருக்கு மற்றொன்றில் இருக்க வேண்டும்; அப்படி இல்லாவிட்டால் ஒப்படைப்பு கிடையாது.

**4. ஜடமா யிருக்கிற சரீரத்தின் உயிரானது, அந்த உட்பெருக்கினால் நிலைத்து ஜீவிக்கிறது, அது நீக்கப்படுதலால், இம்மாதிரியாக பிரிவினையால் விட்டுப் போகிறது.**

மனிதனானவன், இறந்த பிறகு மனித சூக்கும சரீர ஆன்மாவாகிறா னென்பது தவிர, இறந்த பிறகு, அவன் இறக்கிறதற்கு முன் இருந்ததுபோல சமமாய் மனிதனாய் இருக்கிறானென்பதற்குக் காரணமானது ஆன்மாவினிட மானிடத் தன்மை சரீரமுள்ள மனுஷத் தன்மையுடன் ஐக்கிய மில்லாத ஒரு சிறு நாரும் இழையும் அல்லது அவைகளின் மிகவும் நுண்ணிய பாகமும் இல்லாதபடி அவ்வளவு அந்தரங்கமாயும் இவ்வித பொருந்துதலுடனும் அவனிட

பரமார்த்தமானவை அவனிட ஸ்தூலமானதுடன் அல்லது ஆன்மாவின் உண்மைப் பொருள் சரீரத்தின் ஜடத்துவத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற தென்பதாயிருக்கிறது.

முழுவதினிடவும் பாகங்களிடவும் உயிரானது, இருதயத்தின் இரத்தாசயம் சுருங்கச்செய்கிற சலனமும், சுவாசாசயங்களின் சுவாச சம்பந்தமான சலனமுமாகிய இந்த இரண்டு பொதுவான சலனங்களின்பேரில் மாத்திரம் சார்ந்திருப்பதால், அந்த சலனங்கள் சரீரத்தில் நிற்கும்போது, ஜடமான இயர்க்கைப்பொருள்கள், உண்மைப் பொருள்களான பரமார்த்தமான பொருள்களிலிருந்து பிரிக்கப்படுகிறதென்று பின்தொடருகிறது. அவைகள் ஏககாலத்தில் செயல்பட சக்தியற்றவைகளாயிருக்கின்றன. ஆகையினுல் பரமார்த்தமான செயல்படுகிற மூலகாரணமானது தானே, ஜடமாயிருக்கிற செயல் படப்படுகிற அந்தப் பொருள்களின் ஒவ்வொரு பாகத்திலுமிருந்து பின்னுக்குப்போகிறது. இம்மாதிரியாக மனிதனுனவன் வேறு மனிதனுகிறுன். ஆகவே, இது மனிதனிட மரணமும் உயிர்த்தெழுகையுமாயிருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி, சுவர்க்கமும் நரகமும் எனும் நூலில் (நெ. 445-452, 453-460, 461-469) இந்த நெம்பர்களில் வாஸ்தவமான அனுபவத்திலிருந்து உதாரணமாய்ச் சொல்லப்பட்டதைப் பார்க்கவும்.

2). சுவாசம் நின்றபோது மனிதன் இறந்துபோனது போல் தோன்றுகிறது ; என்றாலும், பின்னிட்டு சாதாரணமாய் நேரிடுகிற இருதயத்தின் சலனம் நிற்கிறவரையில் ஒரு மனிதன் இறந்து போகிறதில்லை. இருதயத்தின் சலனம் நிற்கிற வரையில் ஒரு மனிதன் இறக்கிறதில்லை என்பது, கருப்பையிலுள்ள சிறு குழந்தைகளின் உயிரினுலும், இந்திரிய ஞானமும் சலனமும் இம்மாதிரியாக உயிரின் உணர்ச்சியும் இல்லாவிட்டாலும், மனிதன் உயிரோடிருக்கிறதும்,

சுவாசாசயங்கள் சலனமின்றி இருக்கும்போது இருதய மானது சுருங்கவும் விரியவும் வேண்டிய சலனங்களைச் செய் கிறதுமான மூர்ச்சையிலும் திக்குமுக்கிலும் உள்ள வயது வந்தவர்களின் நிலைமைகளிலிருந்தும், விசதமாகிறது. அப் பொழுது ஆன்மாவின் சுவாசமானது, அதற்குச் சரிபட சரீ ரத்தின் எவ்வித சுவாசமுமில்லாமல் நடக்கிறதென்பதும், ஆதலால் இருதயத்தினிடவும் சுவாசாசயத்தினிடவும் இரண்டு உயிருக்காதாரமான சலனங்களிட அன்னியோன் னியம் இல்லை என்பதும், ஒற்றுமையும் அன்னியோன்னிய மும் இல்லாமல் இந்திரிய ஞானமுள்ள உயிரும், எவ்வித செயலும் முடியாதென்பதும், காரணமாயிருக்கிறது. மனித னிட சரீரத்தின் ஸ்தூல உயிரின் விஷயமானது அவனிட மனதின் ஞான உயிரைப்போலிருக்கிறது; ஏனென்றால், சித்தமும் புத்தியும், அல்லது அன்பும் ஞானமும் ஒன்று பட்டு நடக்காவிட்டால், எந்த பகுத்தறிவுள்ள கிரியை யும் நடக்கிறதில்லை. புத்தி அல்லது ஞானம் பின் வாங்கப் பட்டால், சித்தமானது அதன் அன்புடன் இறந்தது போலாகிறது. அப்படியிருந்தாலும், தங்கள் ஞாபக சக்தியை இழக்கிறவர்களுக்கு நேரிடுகிறதுபோல், புத்தி யானது தடுக்கப்பட்டால், உணர்ச்சி யில்லாவிட்டா லும், அது உயிரோடிருக்கிறது. ஆனால் சித்தம் அல்லது அன்பு பின் வாங்கினால், அது வேறானதாயிருக்கிறது. ஏனென்றால் இருதயம் அடிக்காது நிற்கிறபோது அவன் சரீரத்தில் எல்லாம் முடிவாகிறதுபோல, அப்பொழுது மனிதனிட மனதில் எல்லாம் முடிவாகிறது. சரீரத்தி லிருந்து ஆன்மா பிரிதல், அத்தியந்த வேதனையின் பின் இரண்டாவது தினத்தில் சாதாரணமாய் சம்பவிக்கிற தென்பதை, அவர்கள் இறந்த பின் மூன்றாவது நாளில் அப்பொழுது சூக்ஷும சரீர ஆவிகளாயிருந்த சில இறந்து

போனவர்களுடன் நான் சம்பாஷித்திருக்கிறேன் என்கிற இதிலிருந்து தெரிந்துகொள்ள எனக்கு அனுமதி கொடுக்கப்பட்டது.

5. மனிதன் அப்போது ஸ்தூலத்திலிருந்து பரமார்த்தமாகிறன். ஸ்தூலமான மனிதன் பரமார்த்த மனிதனிலிருந்தும், பரமார்த்தமான மனிதன் ஸ்தூலமான மனிதனிலிருந்தும், அவர்கள் கூடியிருக்க முடியாத அவ்வளவு முழுமையும் வித்தியாசப்படுகிறார்கள். பரமார்த்தமானது அதன் சாரத்தில் என்னவென்று தெரியாதவன், பரமார்த்தமானது மனிதனில் பகுத்தறிவென்கிற அதிக சுத்தமான ஸ்தூலமானது மாத்திரமென்று நினைக்கலாம்; ஆனால் பரமார்த்தமானது ஸ்தூலமானதற்கு மேலாகவும், இலையுதிர் காலத்தில் மத்தியான வெளிச்சம் சாயந்திர சாயையோடு உவமித்தாலிருப்பதுபோல அதிலிருந்து அவ்வளவு பிரத்தியேகமாயிருக்கிறது. இந்த பிரத்தியேகமும் வித்தியாசமும், ஸ்தூலமும் சூக்குமமான இரண்டு உலகங்களிலும் இருக்கிறவனுக்கும், ஒரு காலத்தில் ஒன்றிலும் மற்ற ஒரு காலத்தில் மற்றதிலும் ஒன்றை விட்டு ஒன்றில் இருக்கவும், ஒன்றை மற்றதிலிருந்து பிரதிவின்பத்தால் பார்க்கவும் அனுமதி கொடுக்கப்பட்டவனுக்கும் தவிர மற்றவர்களுக்குத் தெரிய முடியாது. எனக்கு அருள் செய்யப்பட்ட அவ்வித சக்தியிலிருந்து, ஸ்தூல மனிதனிட சுபாவத்தைப் பற்றியும், சூக்கும சரீர ஆன்மாவாயிருக்கிற பரமார்த்த மனிதனிட சுபாவத்தைப்பற்றியும், நான் சமாசாரம் அடைந்திருக்கிறேன். இது தெரிந்திருக்கும் பொருட்டு, அது சுருக்கமாய்ச் சொல்லப்படவேண்டும். ஜட மனிதன் அவனிட சிந்தனையினிடவும் பேச்சினிடவும் ஒவ்வொன்றிலும், அவனிட சித்தத்தினிடவும் செய்கையினிடவும் ஒவ்வொன்றிலும், ஜடப் பொருளையும் இடத்தை

யும் காலத்தையும் அளவையும், இவைகள் ஸ்திரப்பட்டும் நிர்ணயிக்கப்பட்டும் இருக்கிறதினால் அவைகளை அவனிட பொருளாக வைத்திருக்கிறான். அப்படி யிருக்கையில் அவைகள் இல்லாவிட்டால் சிந்தனையைப்பற்றியும் அதிலிருந்து பேச்சைப்பற்றியும் ஒரு அபிப்பிராயமும் அவனுக்கு இருக்காது. அதுவுமன்றி சித்தத்தினிட எந்த ஆசையும், அதிலிருந்து விளையும் செய்கையும் அவனுக்கு இருக்காது. பரமார்த்தமான மனிதன் அல்லது சூக்கும சரீரமுள்ள ஆன்மா மேல்குறித்த பொருள்களை நினைக்கும் மூலகாரணமாக அல்லாமல் நோக்கும் பொருள்களாக மாத்திரம் வைத்திருக்கிறான். பரமார்த்தமான உலகத்தில், நிலங்கள், மைதானங்கள், வயல்கள், தோட்டங்கள், காடுகள், அறைகள் உள்ள வீடுகள், இவைகளில் உபயோகத்தின் பொருட்டு இருக்கும் எல்லாவித பொருள்களும் போல, ஸ்தூல லோகத்தில் இருக்கிறவைகளை முழுமையும் ஒப்பிடக்கூடிய பொருள்கள் இருக்கின்றன என்பது காரணமாயிருக்கிறது. இத்துடன் மனிதர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் இருவகையாருக்கும் உலகத்திலிருப்பதுபோல தகுதியான ஆடைகளுமிருக்கின்றன; உலகத்திலிருப்பதுபோல மேஜைகளும், ஆகாரங்களும், குடிக்கும் பதார்த்தங்களும், பழகினதும் காட்டிலிருக்கிறதுமான இருவகை பிராணிகளும், அதனால் எண்களுடனும் பரிமாணங்களுடனும் கூட இடங்களும் காலங்களுமிருக்கின்றன. அந்தப்பொருள்கள் எல்லாம் கண்ணால் விசேஷித்து அறியப்படாதபடி உலகத்தில் உள்ள பொருள்களைப்போல் அவ்விதமான ஒப்பனையிலிருக்கின்றன. அப்படியிருந்தாலும், அந்தப் பொருள்கள் எல்லாம் ஒரு பக்கத்தில் தேவர்களிட புத்தியின் ஞானத்தின் தோற்றங்களாயிருக்கின்றன. மற்றைப் பக்கத்தில், அவர்கள் சித்தத்தின் அன்புகளின் உணர்ச்சிகளாயிருக்கின்றன;

ஏனென்றால், தோற்றங்களாயிருக்கிற அந்தப் பொருள்களில் சூக்கும சரீர ஆவிகள் அல்லது தேவர்களிட ஸ்திரம் அல்லது மாறும் நிலையை அனுசரித்து, ஸ்திரமாகவும், ஸ்திரமில்லாமலும், இருக்கிறதினால் கர்த்தரால், ஒரு நொடி நேரத்தில் அவைகள் சிருட்டிக்கப்பட்டு ஒரு நொடி நேரத்தில் கூட அவைகள் கரைக்கப்படுகின்றன. அந்த பொருள்கள் எல்லாம் அவர்களின் சிந்தனைகளுக்கும் ஆசைகளுக்கும் நோக்கும் பொருள்களாக மாத்திரம் ஏன் இருக்கின்றனவென்பதற்கும், முன் சொல்லியபடி இந்த தோற்றங்கள் ஞானத்திற்கும் அன்பிற்கும், இம்மாதிரியாக ஞானப் பொருள்களுக்கும் சம்பந்தபட்டவைகளா யிருக்கிறதினால் ஏன் மூலகாரணங்கள் அவைகள் உற்பத்தியாகிற பொருள்களா யிருக்கின்றன என்பதற்கும், இதுதான் காரணம்.

உதாரணமாக, அவர்கள் இடங்களைப் பார்க்கும்போது, இடத்திலிருந்து அவைகளை அவர்கள் நினைக்கிறதில்லை; அவர்கள் தோட்டங்களையும் அதனுள் மரங்களையும், புதர்களையும், புஷ்பங்களையும், விதைகளையும் பார்க்கும்போது, தோற்றத்திலிருந்து இவைகளை நினைக்கிறதில்லை. ஆனால் அவ்விதத் தோற்றங்கள் உண்டாகிற பொருள்களிலிருந்து நினைக்கிறார்கள்; மற்ற விஷயங்களிலும் இம்மாதிரியே. இதனால்தான் ஞானமுள்ளவர்களின் சிந்தனைகள் ஜடமானவர்களின் சிந்தனைகளிலிருந்து முழுமையும் பேதப்பட்டிருக்கின்றன; ஆசைகள் விஷயத்திலும் விஷயம் அம்மாதிரியே; அவைகள் சொற்ப அளவு உள்ளான பகுத்தறியும் பார்வையில் விடுகின்றனவென்கிறதும், இது குணங்களிலிருந்து பரிமாணங்களைப் பிரித்தெடுப்பதால் மாத்திரம் விளைகின்றதென்கிறதுமாகிய, இவைகள் தவிர அவைகள் அவைகளை முழுமையும் கடந்து, ஸ்தூல அபிப்பிராயங்களில் விழாதபடி அவ்வளவு வித்தியாசமா யிருக்கின்றன. ஆகை

யால், தேவர்கள், ஜடமனிதன் அறிவுக்கு எட்டாததும், மேலும் 'வாக்குக்கு எட்டாததுமான ஞானத்தை உடைத்தா யிருக்கிறார்களென்று விசதமாகிறது. அவர்களிட சிந்தனைகள் அவ்வித சுபாவமா யிருப்பதால், அவர்கள் பேச்சுகூட அம்மாதிரி சுபாவமுடையதா யிருந்து, அது ஒரு வசனத்திலும் ஒத்துவராதபடி மனிதனிட பேச்சிலிருந்து அவ்வளவு முழுமையும் பேதப்படுகிறது.

உலகத்திலுள்ள மனிதர்களிட எழுத்துகளுடன் எழுதிய அக்ஷரங்களில் ஒத்திருந்தாலும், பூமியின் பேரிலுள்ள எந்த மனிதனும் அறிந்து கொள்ளக்கூடாததா யிருக்கிற அவர்களிட எழுத்துகள் விஷயத்தில் சங்கதி அம்மாதிரியே யிருக்கிறது. அவர்களுக்கு ஒவ்வொரு எழுதப்பட்ட மெய்யெழுத்தும் பிரத்தியேகமான அர்த்தத்தை அறிவிக்கிறது; உயிரெழுத்துகள், எழுதப்படாமல் குறியிடப்பட்டு யிருப்பதினால் ஒவ்வொரு உயிரெழுத்தும் ஒரு ஆசையை அறிவிக்கிறது. கணக்கிடக் கூடாததா யிருக்கிற அவர்களிட கைத்தொழில்களும் அவர்களிட உத்தியோகங்களின் வேலைகளும், மானிட வார்த்தைகளால் சொல்லக்கூடாத ஒரு வழியாய், உலகத்திலுள்ள ஜடமனிதர்களிட தொழில்களிலிருந்தும் வேலைகளிலிருந்தும் அம்மாதிரியே வித்தியாசப்படுகிறது. இந்த சில விவரங்களால் ஜடமானதும் பரமார்த்தமானதும் சாயைபோலவும் வெளிச்சத்தைப் போலவும் ஒன்றிலிருந்து ஒன்று வித்தியாசப்படுகிறதை அறிந்துகொள்ளலாம். அப்படி யிருந்தாலும், அநேக வேறுபாடுகள் இருக்கின்றன. ஏனென்றால், பரமார்த்த இந்திரிய சம்பந்தமானவை என்றும், பரமார்த்த பகுத்தறிவு சம்பந்தமானவை என்றும், பரமார்த்த சுவர்க்க சம்பந்தமானவை என்றும் இருக்கின்றன; ஆசைகளுக்கும் அதிலிருந்து வரும் சிந்தனைகளுக்கும், தக்கபடி வித்தியா

சங்களும் முன் சொன்னதற்குத் தக்கபடி தோற்றங்களும் இருக்கிறபடியினுல், பரமார்த்த தீமை என்றும் பரமார்த்த நன்மை என்றும் கூட இருக்கின்றன. சரீரத்தின் சுவா சாசயங்களும் இருதயமும் நடத்தப்படாமல் நின்ற உட னேயும், இம்மாதிரி ஸ்தூல சரீரம் பரமார்த்த சரீரத்தி லிருந்து எடுக்கப்பட்ட போதும், ஒரு மனிதனுனவன் ஜடத்திலிருந்து பரமார்த்தமாகிருனென்று இவைகளினுல் விசதமாகிறது.

## VIII. உலகத்தில் மனிதனுய்ப் பிறந்திராத எந்த தேவனும் சூக்கும சரீர ஆன்மாவும் இருக் கிறதுமில்லை, இருக்கப்போகிறது மில்லை.

தேவர்கள் உபகரணமின்றி நேராய் சிருஷ்டிக்கப்பட வில்லை என்பதும், ஆனுல் சுவர்க்கலோகத்துக்கு எப்பொழு தாகிலும் போய் அங்கே இருப்பவர்கள் எல்லாரும் முதலில் மனிதர்களாகப் பிறந்தவர்கள் என்பதும் உலகத்தில் வாழ்க்கை முடிந்தவுடன் தேவர்களாயிருக்கிருர்கள் என்ப தும் சுவர்க்கமும் நரகமும் (கெ. 311–317) என்னும் நூலில் ரூபிக்கப் பட்டிருப்பதைப் பார்க்கலாம். உலகத் தில் பிறந்த மனிதர்களிலிருந்து தவிர தேவர்கள் இருக்க முடியாதென்றும், இது தெய்வ ஒழுங்குக்கு ஒத்திருக்கிற தென்றும், பின் தொடரும் ஆலோசனைகளால் அறிந்து கொள்ளலாம் :—

1) மனிதனில் ஒரு தேவதா சம்பந்தமான மனதிருக்கிறது.

2) அவ்வித மனது மனிதனில் தவிர உருவாக்க முடியாது.

3) ஜனிப்பிக்கவும் முடியாது, ஜனிப்பிக்கையினுல் விருத்தி யாக்கவும் முடியாது.

4) சூக்கும சரீர ஆன்மாக்களும் தேவர்களும் இதிலிருந்து சதாகாலம் இருக்கவும் ஜீவிக்கவும் சக்தியையும்.

5) மானிடவர்க்கத்துடன் அடுத்திருக்கவும், ஒன்று படவும் சக்தியையும் அடைகிறார்கள்.

6) இந்த வழிவகையால் சிருஷ்டியின் நோக்கமாயிருந்த சுவர்க்கலோகம் நிலைத்திருக்க சக்தியுள்ளதா யிருக்கிறது.

1. மனிதனில் ஒரு தேவதா சம்பந்தமான மனது இருக்கிறது.

*மனிதன் சுவர்க்கத்துக்குப் பிறந்திருக்கிறானென்றும், அன்றியும் அவன் நன்றாய் வாழ்ந்தால், சுவர்க்கத்துக்குப் போய், அங்கே தேவர்களோடு அவர்களில் ஒருவராக இருப்பானென்றும், அத்துடன் எப்பொழுதும் உயிரோடிருக்கும்படியான சுபாவமுள்ள ஒரு ஆன்மா அல்லது மனது அவனுக்குக் கொடுக்கப்பட் டிருக்கிறதென்றும், அந்த மனதை தன்னில் தானே யோசித்துப் பார்த்தால்,* கர்த்தரிடத்து அன்பில் ஸ்திரப்படுத்தப்பட்டு அவரிடமிருந்து வரும் ஞானமா யிருக்கிறதென்றும், தேவர்களுக்கும் அம் *மாதிரியான மனதுகள் இருக்கிறதென்றும், கிறிஸ்துவ உலகத்தில் தெரிந்த பொருளா யிருக்கிறது. ஆகையால் மனிதனில் ஒரு தேவதா சம்பந்தமான மனது இருக்கிறதென்றும், அந்த மனதானது மனிதனே என்றும் விசதமாகிறது; ஏனென்றால், ஒவ்வொரு மனிதனும் அந்த மனதிலிருந்து மனிதனா யிருக்கிறான்; அந்த மனது இருப்பது போன்ற விதமான மனிதனா யிருக்கிறான். உலகத்தில் அந்த மனதானது உடுக்கப்பட்டு சூழப்பட்டிருக்கிற சரீரமானது, தன்னில் தானே மனிதனாக இல்லை; ஏனென்றால், அதின் மனதிலிருந்து தவிர, சரீரமானது கர்த்தரிடமிருந்து புத்தியுள்ளதா யிருக்கவும், தன்னிடமிருந்தே அவரை நேசிக்கவும் முடியாது; ஆகையால், மனதானது விட்டுப் புறப்பட்டுப்போய் தேவனாகும் சமயத்தில் சரீரமானது போடப்பட்டுத் தள்ளப்படுகிறது. அப்பொழுது*

ஒரு மனிதன் தேவதாசம்பந்தமான ஞானத்தில் ஏன் வருகிறனென்பதற்குக் காரணம், அவனிட மனதினிட உயிரின் அதிகம் உயர்ந்த அந்தஸ்துகள் திறக்கப்படுகின்றன என்பதாயிருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் உயிரின் மூன்று படிகளுண்டு ; எல்லாவற்றிலும் தாழ்ந்தபடி ஜடமாயிருக்கிறது ; மனிதன் உலகத்தில் வாசம்செய்யும் போது அதிலிருக்கிறன் ; இரண்டாவது படி பாமார்த்தமானது, அந்தப் படியில், கொஞ்சம் தாழ்ந்த சுவர்க்கங்களில் இருக்கும் ஒவ்வொரு தேவனுமிருக்கிறன் ; மூன்ருவதுபடி அதிகம் உயர்ந்த பரமண்டலங்களிலிருக்கும் ஒவ்வொரு தேவனும் இருக்கப்பட்ட சுவர்க்க சம்பந்தமானதா யிருக்கிறது. மேலும் கர்த்தரிடமிருந்து வரும் ஞானத்தினுலும், அவரிடம் காட்டும் அன்பின் மூலமாயும், மனிதனில் அதிகம் உயர்ந்த இரண்டு படிகளும் உலகத்தில் திறக்கப்படுகிற அளவு மனிதன் தேவனுயிருக்கிறன். அப்படியிருந்தாலும், உலகத்திலிருக்கும்போது அந்தப் படிகள் திறக்கப்படுகின்றன என்று அவனுக்குத் தெரியாது ; ஜடமான சரீரம் இறந்த பிறகு இந்த பிரிவினை சம்பவிக்கிறதினுல் முதல்படியிலிருந்து அவன் பிரிக்கப்படும்போது மாத்திரம் அவனுக்கு இது தெரியும். உலகத்தில் அப்படியில்லா விட்டாலும், அப்பொழுது அவன் ஒரு தேவனைப்போல் ஞானமுள்ளவனுயிருக்கிறனென்று, பார்க்கவும் கேட்கவும் எனக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. உலகத்திலிருக்கும்போது வேதத்தில் கடவுளிடமிருந்து வருகிற பொருள்களைக் கபடமின்றி நம்பி அவைகளின்படி விசுவாசத்துடன் வாழ்ந்தவர்களும், உலகத்திலிருக்கும்போது எனக்குத் தெரிந்தவர்களுமான ஸ்திரீ புருஷர்களான இருவகையில் அநேகர் சுவர்க்கலோகங்களில் காணப்பட்டவர்கள் ; தேவர்களைப்பற்றி சொல்லப்

படுகிறதுபோல, வாக்குக்கு எட்டாதவைகளை அவர்கள் சுவர்க்கலோகத்தில் பேசுகிறதைக் கேட்கப்பட்டிருக்கிறது.

3). 2. அவ்விதமான மனது மனதினில் தவிர உருவாக்க முடியாது.

இதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. எல்லா தெய்வீக உட்பெருக்கும் முதன்மையானவைகளிலிருந்து இறுதியானவைகளுள்ளும், இறுதியானவைகளுடன், சேர்க்கையால் மத்தியிலுள்ளவைகளுள்ளும், இருக்கிறது; இவ்விதமாக கர்த்தர் சிருட்டியின் எல்லாப் பொருள்களையும் கூட்டி இணைக்கிறார்; இந்தக் காணத்துக்காகக்கூட அவர் ஆதி என்றும் அந்தமென்றும் சொல்லப்படுகிறார். முதன்மையானவைகளிலிருந்தும், அதே காலத்தில், இறுதியானவைகளிலிருந்தும், பிரபஞ்சத்தையும் அதாவது சுவர்க்கலோகத்தையும் உலகத்தையும், அவர் ஆளும்பொருட்டு, அவர் ஏன் உலகத்துக்கு வந்தும், மானிட சரீரத்தை எடுத்தும், அதிலுள் தானே மகிமை யடைந்துகொண்டார் என்பதற்குக் காரணம் இதுவாகவும் கூட இருந்தது. எல்லாப் பொருள்களும் இறுதியானவைகளில் ஏககாலத்தில் இருக்கிறது என்கிற காரணத்தைக்கொண்டு, எல்லா தெய்வீக கிரியைகளிலும் விஷயம் அதைபோன்றிருக்கிறது. ஏனென்றால், தொடர்பான ஒழுங்கிலிருக்கும் எல்லாப் பொருள்களும், இறுதியானவைகளில் ஏககாலத்தில் சம்பவிக்கும் ஒழுங்கில் இருக்கின்றன. ஆதலால், இந்த பின் சொன்ன ஒழுங்கிலிருக்கும் எல்லாப் பொருள்களும் முன் சொன்ன ஒழுங்கிலிருக்கும் எல்லாப் பொருள்களுடன் தடைப்படாத சம்பந்தத்திலிருக்கின்றன. இதிலிருந்து தெய்வீகமானது இறுதியானதில் அதன் சம்பூர்ணத்தில் இருக்கிறதென்று விசதமாகிறது. தொடர்ச்சியான ஒழுங்கின் சுபாவமும் குணமும், அத்துடன் ஏககாலத்தில் சம்பவிக்கும் ஒழுங்

கின் சுபர்வமும் குணமும் மேலே பார்க்கலாம். ஆகையால், எல்லா சிருட்டியும் இறுதியானவைகளில், நிறைவேறுகிற தென்றும், எல்லா தேய்வீக கிரியைகளும் இறுதியானவைகளுக்கு வியாபித்து, அங்கே சிருட்டித்துத் தொழில் படுகிற தென்றும் தெளிவாயிருக்கிறது. மனிதனில் ஒரு தேவதா சம்பந்தமான மனது உருவாக்கப்படுகிறது என்பது, கருப்பையில் அவனிட நிர்மாணத்தாலும், அத்துடன்கூட பிறந்த பிறகு அவனிட வளர்ச்சியாலும், அவைகள் உற்பத்தியாகிற இறுதியானவைகளிலிருந்து முதன்மையானவைகளுக்கு எல்லாப் பொருள்களும், தான் உற்பத்தியான சிருட்டிகர்த்தாவுக்கு மனிதனும் திரும்ப வேண்டுமென்பது தேய்வீக ஒழுங்கின் ஒரு சட்டத்திலிருந்து அது ஏற்படுகிற படியினாலும் விசதமாகிறது.

4). ஒன்றுகூடி மனதைத் தேவதா சம்பந்தமானதாக சக்தியடையச் செய்கிற அவரிடமிருந்து உயிரைப் பெற்றுக் கொள்ளவும், அவனிட பின் வரப்போகிற சித்தத்தினால் அன்பைப் பெற்றுக்கொள்ளவும், அவனிட பின் வரப்போகிற புத்தியினால் ஞானத்தைப் பெற்றுக்கொள்ளவும், மனிதனானவன் அங்கே, தான் பிறக்கும் காலம் வரையில் கர்த்தரிடமிருந்து உயிரால் முழுமையும் உருவாக்கப்படுகிறானென்று காண்பிக்கப்பட்ட, மேல் சொல்லியதில் கருப்பையில் தோன்றும் மனிதனிட நிர்மாணத்திலிருந்து அது விசதமாகிறது.

5). பிறந்த பிறகு அவனிட வளர்ச்சியிலிருந்து மனிதனுக்கு அவ்வித மனதாக எல்லா வழிவகைகளும் சித்தப்படுத்தப்பட்டிருக்கிறதென்று விசதமாயிருக்கிறது. ஏனென்றால், ஒவ்வொரு தேசத்தாரும் மதத்தை உடையவர்களாயிருக்கிறார்கள்; கடவுளானவர் எங்குமிருக்கிறார்; அதிலிருந்து அன்பிற்கும் ஞானத்துக்கும் தக்கபடி சேர்க்கையிருக்கிறது. இம்மாதிரியாக ஒவ்வொரு மனிதனிலும்

உருவாக்கப்படும் சக்தி யிருக்கிறது. அதை விரும்புகிறவ னிடத்திலும், அவன் தேவன் ஆகும்பொருட்டு, இடைவிடாத நிர்மாணமானது இளம்பிராயம் முதல் மூப்புவருகிற வரையில், சுவர்க்கத்துக்கு அடுத்த சார்புடன், நிகழ்கிறது.

6). எல்லாப் பொருள்களும், இறுதியானவைகளிலிருந்து அவைகள் உற்பத்தியான முதன்மையானதற்குத் திரும்ப வேண்டுமென்பது தெய்வீக பத்ததியின் ஓர் சட்டத்தி லிருந்து ஏற்படுகிறது. உலகத்தில் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றிலிருந்தும் இது விசதமாகிறது. விதையானது ஒரு மரத்தின் முதல் தொடக்கமாயிருக்கிறது. இது பூமிக் குள்ளே விதையிலிருந்து முளைத்து, கிளைகளையும், மலர் களையும் விட்டு, பழங்களை உற்பத்தி செய்து, அவைகளில் விதைகளைச் சேகரித்து, அது எழும்பினதிலிருந்து இம் மாதிரியாகத் திரும்புகிறது. ஒவ்வொரு புதர், செடி, புஷ் பத்துடனும் விஷயம் இதே. மேலும் விதையானது, ஒரு பிராணியின் முதல் தொடக்கமாயிருக்கிறது. பிறக்கும் பொருட்டு, ஒரு கருப்பையிலாவது ஒரு முட்டையிலாவது இது உருவாக்கப்படுகிறது; பிறகு அது வளர்ந்து, அம் மாதிரியான பிராணியாகிறது. இது முதுமைக்கு வந்து தனக்குள்ளே விதையை உடைத்தாயிருக்கிறது. இம்மாதிரி யாக பிராணிவர்க்கத்திலும், விருக்ஷாதிவர்க்கத்திலும் கூட இருக்கும் ஒவ்வொன்றும், அதன் முதன்மையானதிலிருந்து அதன் இறுதியானதற்கும், அதன் இறுதியானதிலிருந்து அது உற்பத்தியான முதன்மையானதற்கு மறுபடியும் உயருகிறது. ஒரு பிராணியினிடவும் கந்தமூலத்தினிடவும், ஆரம்பமானது ஜடமானதென்பதும், அதனால், அது அதன் முதன்மையானதுக்குத் திரும்பும்போது, பிரகிருதிக்கு மறு படியும் போகிறது என்பதுமாகிய இந்தப் பேதத்துடன், விஷயமானது மனிதனில், அதைப் போன்றே இருக்கிறது.

ஆனால், மனிதனிட முதன்மையானது பாமார்த்தமானதா யிருப்பதால், அது அவன் ஆன்மாவைப்போல், இறைவனிட இச்சாசக்தியையும் ஞான சக்தியையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருக்கிறது; பிரகுருதிக்கு மறுபடியும் செல்லுகிற சரீரத்திலிருந்து இது பிரிக்கப்பட்டபோது, அதற்கு உயிரைக் கொடுத்த கர்த்தரிடம் அவசியமாய்த் திரும்பிப் போகவேண்டி யிருக்கிறது; விருக்ஷாதிவர்க்கத்தில் தங்களிட * சாம்பல்களிலிருந்து தங்கள் போன பிராணன் திரும்புதலிலிருந்தும், ஸ்தாவரவர்க்கத்தில் குறும்புழுக்கள், இறகில்லாத புழுக்களாகவும் வண்ணாப் பூச்சிகளாகவும் வேற்றுருவாகுதலி விருந்தும், விருக்ஷாதிவர்க்கத்திலும் பிராணிவர்க்கத்திலும்கூட இதன் இதாமோஸ்தர்கள் இருக்கின்றன.

7). 3. ஒரு தேவதா சம்பந்தமான மனதை மனிதனில் தவிர ஜனிப்பிக்க முடியாது, ஜனிப்பிக்கைகளினால் பெருக்கவும் முடியாது.

பாமார்த்தமான உலகத்திலிருக்கும் பொருள்களின் சுபாவத்தையும், ஸ்தூல லோகத்திலிருக்கும் ஜடப்பொருள்களின் அததற்கேற்ற சுபாவத்தையும் தெரிந்தவர்கள், சிருட்டியின் இறுதியான பொருளாகிய உலகத்தில் வசிக்கிறவர்களிடமிருந்தும், வசிக்கிறவர்களிடத்திலும் தவிர, தேவதா சம்பந்தமான மனங்களின் எவ்வித ஜனிப்பிக்கையும் இருக்கிறதுமில்லை, இருக்கப் போகிறதுமில்லை என்று சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம். ஆனால் பாமார்த்த உலகத்தின் பொருள்களின் சுபாவத்துக்கும், ஸ்தூல லோகத்

* பின் வரும் வார்த்தைகள் வருகிற "நிஜமான கிறிஸ்துமதம் என்கிற நூலில் 692 நெம்பரிலிருந்து இதன் அருத்தம் தெரிந்து கொள்ளலாம்," சாம்பல்களிலிருந்து எழுப்பிய ஒரு புதர் அதின் சொந்த உருவத்தின் சாயலில் தோன்றுகிறதுபோல்.

துப் பொருள்களுக்கும் உள்ள சம்பந்தம் தெரிந்திருக்காத படியினால், இப்பொழுது அது சொல்லப்பட வேண்டும். பரமார்த்த உலகத்திலிருக்கும் பொருள்கள் ஜடமானவைகளாகத் தோன்றும், என்றாலும், அவைகள் அப்படி இல்லை. அவைகள் ஜடமாய் இல்லாதபடியினால், ஸ்திரப்படுத்தப்படவில்லை. அவைகள் தேவர்களின் ஆசைகளிட காரணகாரிய சம்பந்தமானவைகள். அவைகள் ஆசைகளோடாவது தேவர்களோடாவது ஸ்திரமாய் நின்று, அவர்களோடு காணப்படாமல் போகிறது. அங்கே சிருட்டிக்கப்பட் டிருந்தால், தேவர்களோடும் அம்மாதிரியே இருந்திருக்கும். ஆனால், தேவர்களோடு, பரமார்த்தமான ஜனிப்பிக்கையும், அதன் பயனாக ஏற்பட்ட பெருக்கும், மாத்திரம் சாத்தியமானது. இதுவும், புதிதாய் பிறக்கிற; அல்லது குணப்படுத்தப்படுகிற மனிதர்களினுடைய ஆன்மாக்களுடையது போலவும், ஞானத்தினுடையதும் அன்பினுடையதுமாயிருக்கிறது. ஆனால் ஸ்தூல லோகத்தில், அவைகளினாலும் அவைகளிலிருந்தும் ஜனிப்பிக்கைகளும், பின்னிட்டு நிர்மாணங்களும், இம்மாதிரியாக மனித விருத்தியும் அதிலிருந்து தேவர்கள் விருத்தியும் செய்யக்கூடிய பிரதான பொருள்கள் இருக்கின்றன.

8). 4. இதிலிருந்து மானிட சூக்கும சரீரிகளும் தேவர்களும், சதாகாலம் நிலைத்து உயிரோடிருக்கிற சக்தியை அடைகிறார்கள்.

இதற்குக் காரணம், உலகத்தில் முதல் பிறந்த மனிதர்களா யிருப்பதால், தேவர்களும் மானிட சூக்கும சரீரிகளும், நிலைத்திருக்கும் சக்தியைத் தங்களுடனேயே கொண்டு போகிறார்கள் என்பதா யிருக்கிறது. ஜீவிக்கிறதற்கும் ஸ்திரத்துக்கும் வல்லமையைக் கொடுக்கிற அந்த எல்லையை அதனால் அவர்கள் அடைகிற பரமார்த்தமானதற்கும் ஸ்தூலமானதற்கும் இடையிலுள்ள ஒரு

வஸ்துவைப் பிரகுருதியின் அந்தரங்கமான பொருள்களி லிருந்து அவர்களோடு அவர்கள் எடுத்துக் கொண்டு போகிறார்கள். இதனால் பரமார்த்தமானது பிரகுருதியி லுள்ள பொருள்களுடன் சம்பந்தப்பட்டு அத்துடன் அவைகளுடன் அன்னுவயப்படுகிறது.

5. இதனாலும்கூட சூக்ஷும சரீரமுள்ளவர்களையும், தேவர்களையும் மானிடவர்க்கத்தோடு சேர்க்கப்பட்டு ஒன்றுபட செய்யலாம்; ஏனென்றால், சேர்க்கை யிருக்கிறது; சேர்க்கை யிருக்குமிடத்தில் இடையிலுள்ள பொருள் ஒன்றுகூட இருக்க வேண்டும்.

அவ்விதமான இடையிலுள்ள பொருள் இருக்கிற தென்று தேவர்களுக்குத் தெரியும். ஆனால் பிரகுருதியின் அந்தரங்கமான பொருள்களிருந்து அது வருகிறபடியினா லும், எல்லாப் பாஷைகளிட வார்த்தைகளும் அதின் இறுதி யானவைகளிலிருந்து வருகிறபடியினாலும், பிரித்து எடுத்த பொருள்களால் தவிர அது சொல்லப்பட முடியாது.

6) இந்த ஆலோசனைகளால் சிருஷ்டியின் நோக்கமா யிருந்த தேவதா சம்பந்தமான சுவர்க்க லோகம் வேறு எவ் வழியிலும் நிலைக்கவில்லை என்றும், இம்மாதிரியாக மானிட வர்க்கமானது, அதற்கு வேண்டியதைக் கொடுக்கிற நாற்றங்கால் என்றும் களஞ்சியமென்றும், இப்பொழுது ஏற்படுகிறது.

## IX. இறைவனிட இச்சாசக்தியானது தெய் வீக நன்மை, அவரிட ஞான சக்தியானது தெய் வீக உண்மை.

அன்பு செய்வதெல்லாம் நன்மை என்பதும், ஞானம் கற்பிப்பதெல்லாம் உண்மை என்பதும் இதன் காரணமாய் இருக்கிறது. ஆகையால், இச்சாசக்தியானது உபயோகமா

யிருக்கிற பலனிலிருந்து தெய்வீக நன்மை என்று சொல்லப் படுகிறதென்றும், ஞானசக்தியும் கூட, உபயோகமாயிருக்கிற பலனிலிருந்து, தெய்வீக உண்மை என்று சொல்லப்படுகிற தென்றும் விசதமாகிறது. ஏனென்றால், காரியமானது செய்தலும், அத்துடன் கற்பிக்கிறதுமாயிருக்கிறது; ஆனால் ஒன்று அன்புக்குச் சேர்ந்தது, மற்றது ஞானத்துக்குச் சேர்ந்தது ; ஒவ்வொரு காரியமும் உபயோகமாயிருக்கிறது, உபயோகமென்பது நன்மை உண்மை என்று சொல்லப் பட்டவைகளாயிருக்கிறது. ஆனால் நன்மையானது உப யோகத்தின் சாரமாயிருக்கிறது, உண்மையானது அதன் உருவமாயிருக்கிறது. ஒவ்வொருவனும் அறிவிலிருந்து, அன்பு செயப்படுகிறதென்றும், ஞானம் கற்பிக்கிறதென்றும், அன்பு செய்வது நன்மை என்றும், ஞானம் கற்பிப்பது உண்மை என்றும், அத்துடன் அன்பு செய்யும் நன்மை யானது உபயோகமாயிருக்கிறதென்றும், ஞானம் கற்பிப் பது அம்மாதிரியே உபயோகமென்றும், தெரிந்துகொள் ளக் கூடுமாகையால் இந்த நிரீட்சணங்களை இன்னும் விஸ் திரித்துத் தொடருவது அகத்தியமில்லை. காரியத்தில் நன்மை இல்லாவிட்டால் அன்பு என்னமாயிருக்கும் என்றும், உப யோக மில்லாவிட்டால் காரியத்தில் நன்மை என்னமாயிருக் கும் என்றும் அன்பானது எந்தப் பொருளாகவும், அல்லது நன்மை எந்தப் பொருளாகவுமிருக்குமா வென்றும், ஆனால் அது உபயோகத்தில் எதுவோ ஒன்று என்றும், ஆதலால் அன்பானது உபயோகத்தில் நிலைபடுகிறதென்றும், அம் மாதிரியே ஞானம் கற்பிக்கிறதினாலும், அன்பு செயல் படுகிறதினாலும் ஞானம் உண்மையாய் நிலைபடுகிறதென்றும், நீங்களே இப்பொழுது யோசித்துப் பாருங்கள். இந்த காரணத்துக்காக கர்த்தராயிருக்கிற சூரியனிடமிருந்து வரும் சூடு, தெய்வீக நன்மை என்றும், அந்த சூரியனிட

யிருந்துவரும் ஒளி, தெய்வீக உண்மை என்றும் சொல்லப் படுகிறது. இவைகள் காரியத்திலிருந்து அம்மாதிரி சொல் லப்படுகிறது ; ஏனென்றால், சூடானது தேவர்களை உயிர்ப் பிக்கிறதினாலும், ஒளியானது அவர்கள் அறிவைக் கொளுத் திக்கொண்டு இருக்கிறதினாலும், இந்த சூடானது அன்பின் பயனாயும், ஒளியானது ஞானத்தின் பயனாவும், ஒவ்வொன் றும் உபயோகமாயும் இருக்கிறது. மனிதர்கள் விஷயத்தில் அம்மாதிரியே.

2). முன்சென்ற பிரிவில் இச்சாசக்தியின் சுபாவம் காண் பிக்கப்பட்டது ; இங்கே ஞானசக்தியின் சுபாவம் சொல்லப் படவேண்டும். ஞானசக்தி என்பது, தெய்வீகபராமரிப்பு என்று சொல்லப்படுவதாயிருக்கிறது. அது தெய்வீகபத் தி என்றும்கூட சொல்லப்படுகிறது. அப்படியிருக்கையில் தெய்வீக உண்மைகள் மேலே சொல்லிய தெய்வீக பராமரிப் பின் சட்டங்களென்று சொல்லப்படுகின்றன. தெய்வபத் தியின் சட்டங்களென்றும் கூட அவைகள் சொல்லப்படு கின்றன. இந்தச் சட்டங்கள் ஒரு பக்கத்தில் கடவுளையும், மற்றப் பக்கத்தில் மனிதனையும் பார்க்கின்றன. இரண்டு விஷ யத்திலும் சேர்க்கையைக் கௌரவப்படுத்துகிறது. இச்சா சக்தியின் நோக்கம், மனிதனுக்கு வழிகாட்டி, அதினிடமே அவனைக்கொண்டு வரவும், ஞானசக்தியின் நோக்கம், கர்த்த ருடன் ஐக்கியப்படவரும் பொருட்டு அவன் சொல்லவேண் டிய வழியை மனிதனுக்குக் கற்பிக்கவுமாயிருக்கிறது. கர்த்த ரானவர் வேதத்திலும், குறிப்பாய் தசாக்ஞையிலும் இந்த வழியைக் கற்பிக்கிறார் ; ஆகையினால், ஒன்று கர்த்தரைக் குறித்தும் மற்ற ஒன்று மனிதனைக் குறித்தும், இரண்டும் ஐக்கியத்தைக் குறித்தும், இருக்கிற பத்து கற்பனைகளின் இரண்டு மேஜைகளும், கர்த்தரிட திருவிரலில் தானே எழுதப்பட்டன. ஆகையால், அந்த வழி தெரிந்திருக்கும்

பொருட்டு, தசாக்ஞை விரித்துரைக்கப்படவேண்டும். அது பின் வருவதில் செய்யப்படும்.

3). மனிதனானவன் இறைவன் இச்சாசக்தியும் ஞான சக்தியையும் பெற்றுக் கொள்பவனாயிருப்பதால், இச்சா சக்தியை ஏற்றுக்கொள்ள ஒருசித்தமும், ஞான சக்தியை ஏற்றுக்கொள்ள ஒரு புத்தியும்—சித்தத்தில் இச்சாசக்தி வாழ்வினாலும், புத்தியில் ஞானசக்தி கொள்கையாலும்—ஆக ஒரு சித்தத்தையும் ஒரு புத்தியையும் அவன் உடைத்தாயிருக்கிறான். ஆனால் வாழ்வில் கொள்கையாலும், கொள்கையில் வாழ்வினாலும் எப்படி ஏற்றுக்கொள்ளுதல் சம்பவிக்கிறதென்றும் தசாக்ஞையின் விரித்தியுரையில் கூடுமான தெளிவுடன் கற்பிக்கப்படும்.

## X. அன்பினிடவும் ஞானத்தினிடவும் ஐக்கியம் பரஸ்பரமா யிருக்கிறது.

அன்பினிடவும் ஞானத்தினிடவும், அதேவாகிற சித்தத்தினிடவும் புத்தியினிடவும், அத்துடன் கூட ஆசையினிடவும் சிந்தனையினிடவும், அம்மாதிரியே நன்மையினிடவும் உண்மையினிடவும் ஐக்கியம் அன்னியோன்னியமானதென்பது, இன்னும் வெளிப்படுத்தப்படாத இரகசியமாயிருக்கிறது. ஒரு ஐக்கியமிருக்கிறது என்பதை, அறிவு கண்டு பிடிக்கலாம். ஆனால் இந்த ஐக்கியமானது பரஸ்பரமானதென்று அறியமுடியாது. ஆசை யில்லாமல் எந்த மனிதனும் நினைக்கமுடியாதாகையால், ஐக்கியமிருக்கிறதென்று அறிவு கண்டுபிடிக்கக் கூடுமென்பது, ஆசையினிடவும் சிந்தனையினிடவும் ஐக்கியத்திலிருந்து விசதமாகிறது. விசாரணை செய்ய இஷ்டமுள்ளவன், ஆசையானது சிந்தனையின் உயிரென்றும், அத்துடன்கூட ஆசை யிருப்பதுபோலவே சிந்தனையு மிருக்கிறதென்றும், ஒன்று தூண்

ட்ப்பட்டால், மற்றதும் அம்மாதிரியே யாகிறதென்றும், ஒன்று குளிர்ந்தால், மற்றதும்கூட அப்படியே யாகிறதென்றும், அறிந்துகொள்வான். இந்தக் காரணத்துக்காகத் தான், ஒரு மனிதன் சந்தோஷ ஸ்திதியிலிருக்கும்போது, அவன் சந்தோஷமாய் நினைக்கிறான்; விசனத்திலிருக்கும்போது, அவன் விசனமாய் நினைக்கிறான்; அம்மாதிரியே, கோபமாய் இருக்கும்போது கோபமாய் நினைக்கிறான். இம்மாதிரியே மற்றதும உன்னிட உயர்ந்த சிந்தனையிலிருந்து தாழ்ந்ததற்கு வந்து, கவனித்துப் பார், நீ அறிந்து கொள்வாய். எல்லா ஆசையும் அன்பினுடையதாகவும், எல்லா சிந்தனையும் ஞானத்தினுடையதாகவு மிருப்பதால், அன்பினிடவும் ஞானத்தினிடவும் சேர்க்கையும் அம்மாதிரியே யிருக்கிறது. அன்பானது சித்தத்தினுடையதாகவும், ஞானமானது புத்தியினுடையதாகவும் இருக்கிறபடியினால் சித்தத்தினிடவும் புத்தியினிடவும் சேர்க்கையும்கூட அம்மாதிரியே யிருக்கிறது. முன் சென்ற பிரிவில் காண்பித்தபடி, நன்மையானது அன்பினுடையதாகவும், உண்மையானது ஞானத்தினுடையதாகவும் இருக்கிறபடியினால், நன்மையினிடவும் உண்மையினிடவும் சேர்க்கைக்கும் விஷயம் அம்மாதிரியே. இந்த ஐக்கியத்தைப் பற்றி, புதிய எருசலேம் நகரத்துக் கோள்கை (நெ. 11–27) என்னும் நூலில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்.

2) அந்த ஐக்கியமானது பரஸ்பரமானதென்பதை, ஆசையானது சிந்தனையை உண்டாக்குகிறதென்கிறதும், சிந்தனையானது ஆசையை மறுபடியும் உண்டாக்குகிறதென்கிறதுமான காரணத்தினுல், ஆசையிலிருந்தும் சிந்தனையிலிருந்தும் கூட நிச்சயப்படுத்தப்படலாம். ஆனால், முன் காண்பித்தபடி (பிரிவுகள் VI & VII) மனிதனில் இருதயத்துக்கும் சித்தத்திற்கும், சுவாசாசயங்களுக்கும்

புத்திக்கும், பூர்ண காரணகாரிய சம்பந்த மிருப்பதால், இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் அன்னியோன்னிய சேர்க்கையிலிருந்து அது முக்கியமாய் நிச்சயப்படுத்தப்படலாம். ஆகவே இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் சேர்க்கையால், சித்தத்தினிடவும் புத்தியினிடவும், அதனால் அன்பினிடவும் ஞானத்தினிடவும் சேர்க்கையைப் பற்றி நாம் உபதேசிக்கப்படலாம். இந்த இரண்டுக்குள் இருக்கும் உவமானத்திலிருந்து அடியில் குறித்தவை விசதமாகிறது :—

(1) சித்தத்தினது உயிரானது புத்தியினிட உயிருடன் தானே சேர்கிறது.

(2) அந்த சேர்க்கை பரஸ்பரமானது; அதன் குணம் என்னவென்றும்,

(3) புத்தியினிட உயிரானது சித்தத்தினிட உயிரை சுத்தப்படுத்துகிறது; மேலும், அதைப் பூர்ணமாக்கி உன்னத ஸ்திதிக்கு கொண்டு வருகிறது.

4) ஒவ்வொரு இயக்கத்திலும், சித்தத்தின் உயிரானது புத்தியினிட உயிருடன் ஒத்து உழைக்கிறது; மற்றபடி, புத்தியினிட உயிரானது சித்தத்தின் உயிருடன் ஒவ்வொரு இந்திரிய ஞானத்திலும் ஒத்து உழைக்கிறது.

(5) அம்மாதிரியே, குரலினிடவும் அதன் பேச்சினிடவும் சப்தத்தில்.

(6) துன்மார்க்கர்களிடத்தில் சித்தத்தின் உயிரானது, புத்தியினிட உயிரினால் சுத்தப்படுத்தப் படாமலும், பூர்ணமாக்கப் படாமலும், உயர்த்தப்படாமலும், ஆனால் அசுசிப்படுத்தப்பட்டிருக்கிறதென்கிறதும், சீரழிந்திருக்கிறதென்கிறதும், மிருகத்தனமாக்கப்படுகிறதென்கிறதுமாக, இந்த விந்தியாசத்தோடு நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் விஷயம் ஒரே மாதிரியேயிருக்கிறது.

(7) சித்தத்தினிட உயிராயிக்கிற அன்பானது, மனிதனிட எல்லா உயிருமாகிறது.

3). ஆனால், முதலில் சித்தத்தின் உயிரென்பதினால் அன்பும் ஆசையுமென்றும், புத்தியின் உயிரென்பதால், ஞானமும், அறிவும், விவேகமும் என்று அருத்தம் கொள்ளப்படுகிறதென்று தெரியப்பட வேண்டும். மேலும், இருதயமே, சரீரத்தில் முழுமையும் உள்ள அதன் இரத்த நாடிகளோடு சித்தத்துடனும், அதன் இரத்தம், சித்தத்தின் உயிராகிற அன்புடனும் அதன் ஆசைகளுடனும் காரணகாரிய சம்பந்தப்படுகிறதென்றும், சுவாசாசயங்கள், சுவாசக்குழலுடனும், குரல்வளையுடனும், தொண்டைக் குழியுடனும், முடிவாய் நாக்குடனும், புத்தியுடன் காரணகாரிய சம்பந்தப்படுகிறதென்றும், காற்று குரல்வளை, சுவாசக்குழல் மூலமாய் சுவாசாசயத்தின் கிளைகளில் செல்வதினால் உண்டாகிற சுவாசமானது புத்தியின் உயிரோடு காரணகாரிய சம்பந்தப்படுகிறதென்றும், தெரிந்திருக்கவேண்டும். உண்மையானது முழுதும், சரியாய் அன்னுவயங்களால் கிரகிக்கப்படும் பொருட்டு இவைகள் தெரியப்படவேண்டும். ஆகையால், இப்பொழுது நாம் உவமானத்தை யோசிக்கலாம்.

1. சித்தத்தின் உயிரே புத்தியின் உயிரோடு சேர்கிறது.

அன்பாயிருக்கிற சித்தத்தின் உயிரானது புத்தியில் பாய்ந்து, அதன் அந்தரங்க உயிராகிறதென்றும், புத்தியானது அந்த உயிரை வலியப்பெற்றுக் கொள்ளுகிறதென்றும், சித்தமானது புத்தியில் அதன் அன்பின் உட்பெருக்கினால், முதலில் சித்தம் அல்லது அன்புக்கு ஏற்ற ஆசைகளையும், பிறகு உணர்ச்சிகளையும், கடைசியாய், கூட்டுவேலையால் பாவனைகளுடன் சிந்தனைகளையும் விளைவிக்கிறதென்றும், அந்த உபமானத்திலிருந்து தெளிவாயிருக்கிறது. இது

தான் விஷயமென்பது இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் சேர்க்கையால் விசதமாகிறது. ஏனென்றால், இருதயமானது, ஜடரிகைவழியாய், அதன் எல்லா இரத்தத்தையும் சுவாசாசயங்களுக்குள் அதன் வலது பையின் மூலமாய் அனுப்பி, சுவாசாசயங்கள் வெண்மையா யிருப்பதைவிட்டு இரத்தத்தைப்போல் சிவப்பாய்த் தோன்றுகிற அதன் இரத்த நாடிகளைச் சிவப்பாகச் செய்கிறது. சுவாசாசயங்களின் அந்தரங்கமான பாகங்கள் வரையில்கூட இரத்த நாடிகளைச் சூழ்ந்திருக்கிறதும், இருதயகோசம் என்று சொல்லப்படுகிறதுமான ஒரு போர்வை அல்லது புறம்பான தோலின் மூலமாய், இருதயமானது தன்னிட இரத்தத்தைத் தள்ளுகிறது. இம்மாதிரியாக இருதயமானது சுவாசாசயங்களுக்கு உயிராயிருந்து, காற்று, சுவாசாசய கிளைகளில் செல்லுவதாலும் அவைகளின் பரஸ்பர பெயர்ச்சிகளாலும் அல்லது மூச்சு விடுதலினாலும், உண்டாகிற சுவாசிக்கும் சக்தியை அவைகளுக்குக் கொடுக்கிறது.

2. அந்த சேர்க்கையானது பரஸ்பரமானது; அதன் குணம் என்னமாயிருக்கிற தென்பதும், அந்த உவமானத்திலிருந்து, புத்தியானது, சித்தத்தினின்று பெற்ற அன்பின் உயிரை எவ்வளவு ஆனபோதிலும் அதைப் பெற்ற அதே வழியில் அல்லாமல், வேறானதும் பக்கத்திலுள்ளதுமான வழியில் மறுபடியும் அனுப்புகிறதென்றும், சித்தமானது அங்கிருந்து முழு சரீரத்தில் உயிரின் எல்லா வேலைகளையும் செய்கிறதென்றும், விசதமா யிருக்கிறது. ஆனால், இந்த பரஸ்பர சேர்க்கையை இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் அன்னியோன்னிய ஐக்கியத்தால், அவைகள் ஒரே மாதிரி யிருப்பதால், மிகவும் முழுமையும் கிரகிக்கப்படலாம். மேற் கூறியபடி, இருதயமானது அதன் வலது சிரவத்தின் மூலமாய்: சுவாசாசயங்களுக்குள் இரத்தத்தை

அனுப்புகிறது; சுவாசாசயங்கள் பெற்றபோது, இருதயத்தின் இடது சிரவத்தினுள்ளே, இவ்விதமாய் வேறு வழியில், மறுபடியும் திருப்பி அனுப்புகிறது; இருதயமானது அதன் இடது சடாரத்திலிருந்து, இரத்த மூலாதார குழாய் மூலமாய் சரீரத்தினுள்ளும், கழுத்திலுள்ள சுத்த இரத்த நாடிகள் மூலமாய் மூளையினுள்ளும், எல்லா திக்குகளிலும் பலமான ஊக்கத்துடன் அதைக் கொட்டுகிறது; இந்த சுத்த இரத்தமுள்ள நாடிகளாலும், அவைகளின் கிளைகளினாலும், இருதயத்தின் முயற்சியுள்ள பலம் சுத்த இரத்தமுள்ள நாடிகளிலிருப்பதினால், இருதயமானது சரீரத்தின் சர்வத்திலும், அதன் முயற்சியுள்ள ஜீவ சம்பந்தமுள்ள தொழில்களைச் செய்கிறது. சுத்த இரத்தமுள்ள நாடிகளிலுள்ள இரத்தம் கருத்த இரத்தமுள்ள நாளங்களில் எல்லா திக்குகளிலும் பிறகு போகிறது. அதின் மூலமாய் இருதயத்தின் வலது சடாரத்தினுள்ளாகவும், மறுபடியும் இதிலிருந்து, முன்போல அன்னியோன்னியமாய் சுவாசாசயங்களிலும் அது மறுபடியும் திரும்பி ஓடுகிறது. இரத்தமானது அன்பின் உயிருடனும், சுவாசமானது புத்தியின் உயிருடனும் காரணகாரிய சம்பந்தமா யிருப்பதால், இந்த இரத்த ஓட்டமானது தேக முழுதிலும் ஒவ்வொரு மனிதனிலும் தொடர்ச்சியா யிருக்கிறது. இதுவரையில் சொன்னதிலிருந்து, அன்பினிடவும் ஞானத்தினிடவும் ஒரு பரஸ்பர சேர்க்கை இருக்கிறதென்றும், அன்பு மனிதனிட அசீத உயிரென்றும், ஒரே உயிரென்றும் விசதமாகிறது.

3. புத்தியினிட உயிரானது சித்தத்தினிட உயிரைப் பரிசுத்தம் செய்கிறதென்பது, சுவாசாசயங்களிடவும் இருதயத்தினிடவும் விஷயத்தில் காரணகாரிய சம்பந்தத்திலிருந்து மாத்திரமல்லாமல், மனிதனனவன் தன்னிட பெற்றோர்களிடமிருந்து தீமைகளில் பிறந்திருக்கிறானென்பதும், ஆகை

யால் சுவர்க்க சம்பந்தமானதும், பரமார்த்தமான பொருள்களைப் பார்க்கிலும் ரூபமுள்ளதும் உலக சம்பந்தமானதுமான பொருள்களை அவன் இச்சிக்கிறானென்பதும், அப்படி யிருப்பதால், அன்பாயிருக்கிற அவனிட உயிரானது சுபாவத்தில் சீரழிக்கப்பட் டிருக்கிற தென்பதும், அசுத்தமா யிருக்கிற தென்பதுமாகிய இந்த உண்மையிலும் கூட விசதமாயிருக்கிறது. இந்த உயிரானது, புத்தியினால் தவிர சுத்தப்படுத்தப்பட முடியாதென்றும், புத்தியை உருவாக்குகிற பரமார்த்தமானதும், நீதி விஷயமானதும், தேசாசாரமானதுமான உண்மைகளால் அது சுத்தப்படுத்தப்படுகிறதென்றும், அறிவிலிருந்து ஒவ்வொருவனும் தெரிந்து கொள்ளலாம். அவனிட சித்தத்தின் அன்புக்கு எதிரிடையா யிருக்கிற பொருள்களைப்பற்றி உடன்பாடாய் தெரிந்து கொள்ளவும், நினைக்கவும், அவைகள் அப்படி யிருக்கிறதென்று தெரிந்துகொள்ள மாத்திரமல்லாமல், கடவுளை எதிர் பார்ப்பதாலும் கூட, அவைகளை எதிர்க்க சக்தியுள்ளவனாக யிருக்கவும், சுத்தப்படுத்தப்படுகிறதே யாகிற, அவனிட சித்தத்தின் சீரழிந்ததும் அழுக்கானதுமானவைகளை நீக்கவும் மனிதனானவன் புத்தி வலிவை கொடுக்கப்பட்டிருக்கிறான்.

இதுவும்கூட சுவாசாசயங்களிலுள்ள இரத்தத்தின் பரிசுத்தத்தினால் திருஷ்டாந்தப்படுத்தப்படலாம். இரத்தமானது சுவாசாசயங்களிலிருந்து இருதயத்துக்குத் திரும்புவதைப் பார்க்கிலும், அது இருதயத்திலிருந்து சுவாசாசயங்களுக்கு மிகவும் பெருந்திரளாய் ஓடுகிறதென்பதும், மேலும், அது தெளியாமலும் அசுத்தமாகவும் பிரவேசித்து, ஆனால் தெளிந்தும் சுத்தமாகவும் திரும்புகிறதென்பதும், அத்துடன் இருதயத்தின் இரத்தமானது சாரமற்ற பொருளைப் பிரித்து, அதை சிறிய சுவாசாசயக் கிளைகளின்

நாடிகளினுள்ளும் அதன் கிளைகளுள்ளும் அனுப்புகிற அறை யறையான ஒரு ஆரம்ப அடுக்கு சுவாசாசயங்களி லிருக்கிற தென்பதும், மறுபடியும் நாசித் துவாரங்களிலும் வாயிலும் இருக்கும் கோழையும், சுவாசிப்பதிலிருக்கும் ஈரமும், அந்த மூலத்திலிருந்து வருகிற தென்பதுமாகிய இதினால், இருதயத்திலிருந்து அங்கே அனுப்பப்பட்ட இரத்தமானது சுத்தப்படுத்தப்படுகிற தென்று சாரீர சாஸ்திரிகளுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இவைகளால் இருதயத்தின் அசுத்தமான இரத்தம் சுவாசாசயங்களில் சுத்தப்படுத்தப் படுகிறதென்று விசதமாகிறது. இருதயத்தின் இரத்த மானது, மனிதனிட உயிராயிருக்கிற சித்தத்தின் அன் புக்கும், சுவாசாசயங்களின் சுவாசம், சுத்திகரிப்பு உண் டாகிற புத்தியின் உணர்ச்சிக்கும் சிந்தைக்கும் காரண காரிய சம்பந்தப்படுவதால், இவைகளால் இப்பொழுதே மேலே சொன்னவைகள் திருஷ்டாந்தப்படுத்தப்படலாம்.

மேலும், புத்தியின் உயிரானது சித்தத்தின் உயிரை பூரணமாக்கி, உயர்த்துகிறது. இதற்குக் காரணம், மனி தன் உயிரை உண்டாக்குகிற சித்தத்தின் அன்பானது, புத்தியின் மூலமாய் தீமைகளிலிருந்து விடுவிக்கப்படுகிற தென்பதும், மனிதனானவன் ரூபமுள்ளவனாகவும் உலக சம்பந்தமானவனாகவும் இருப்பதிலிருந்து, பரமார்த்தமா னவனாகவும் சுவர்க்க சம்பந்தமானவனாகவு மாகிறான் என்பதும், அப்படியாகும் பட்சத்தில் சுவர்க்கலோகத்தி னிடவும், திருச் சபையினிடவும், உண்மைகளும் நன்மை களும், அவனிட ஆசையின் ஒரு பாகமாய், அவனிட ஆன் மாவைப் போஷிக்கிறதென்பதுமா யிருக்கிறது. இம்மாதிரி யாக, அவனிட சித்தத்தின் உயிரானது புதிதாகிறது; ஒவ்வொன்றும் இம்மாதிரியாகப் பூரணமாக்கப்பட்டு, உயர்த் தப்படுகிறதினால், அதிலிருந்து அவனிட புத்தியினிட உயி

ரானது வருகிறது. இது புத்தியிலும் அதன் மூலமாக வும் சம்பவிக்கிறது. ஆனால் சித்தமானது மனிதனேயான படியினால், சித்தத்திலிருந்து வருகிறது. சுவாசாசயங்க ளிடவும் இருதயத்தினிடவும் அன்னுவயத்தினால் இதுகூட ரூபிக்கப்படுகிறது; ஏனென்றால் புத்திக்கு அன்னுவயப் படுகிற சுவாசாசயங்கள், முன்னமே குறிப்பிட்டபடி, இரத் தத்தை அதன் அசுத்தங்களிலிருந்து விடுவிக்கிறது மாத் திரமல்லாமல், காற்றானது, இரத்தத்தின் பிரதான வஸ்து வோடு ஒரேவிதமான ஆவியாய்ப் போகிற மூல வஸ்துக்க ளாலும் நாற்றங்களாலும் நிறைந்திருக்கிறதினால், அந்தக் காற்றிலிருந்துகூட அதைப் போஷிக்கிறது. அதன் அதற்கே உரிய சக்திக்குத் தகுந்தபடி கடந்து போகிற பொருள்களை உறிஞ்சுகிறதும், அதனால் இரத்தமானது புதிதாகவும் தெளிவாகவு மாகிறதும், சுவாசாசயங்களி லிருந்து இருதயத்தின் இடது குகையில் கொண்டு போகப் பட்டபோது அது இருப்பதுபோல, சுத்த ரத்தமாகச் செய் யப்படுகிறதுமாகிய சுவாசாசயக் கிளைகளின் வெளிவரும் சிறு துண்டுகளில் கணக்கிடக்கூடாத அநேக இரத்த நாடி கள்கூட இருக்கின்றன.

காற்றானது புப்புச சம்பந்தமான இரத்தத்துக்குப் புதிதான ஆகாரத்தைக் கொடுக்கிறதென்பது மிகுந்த அனுபவத்தினால் விசதமாகிறது. ஏனென்றால் சுவாசாச யங்களுக்குக் கெடுதியான சில காற்றுகளும், அவைகளை மறுபடியும் பலப்படுத்துகிற மற்றவைகளும், இம்மாதிரியாக, தீங்கான சிலதும், ஆரோக்கியமான மற்றவைகளும் இருக் கின்றன. காடிகள், பாம்புகள், பச்சோந்திகள் போன்ற தும் வேறு எவ்வித ஆதாரமுமன்றி கொஞ்சகாலம் உயி ரைக் காப்பாற்றக்கூடியதுமான மற்றவைகள் போன்றது மான, பூமி சம்பந்தமான ஆகாரமின்றி, இம்மாதிரியாக

காற்று சம்பந்தமான ஆகாரத்தின்பேரில் மாத்திரம் நெடுங் காலம் ஜீவிக்கிற சில பிராணிகளும் கூட இருக்கின்றன. இவைகளினால், சுவாசாசய சம்பந்தமான இரத்தம் காற்றிலிருந்து ஆகாரத்தைக்கூட அடைகிறதென்றும், இம்மாதிரியாககூட புத்தியின் உயிரானது, காரணகாரிய சம்பந்தத்திற்குத் தக்கபடி சித்தத்தின் உயிரைப் பூரணமாக்கி உயர்த்துகிறதென்றும், விசதமாகிறது.

4. சித்தத்தின் உயிரானது புத்தியின் உயிரோடு ஒவ்வொரு இயக்கத்திலும் ஒத்து உழைக்கிறது. மற்றப் பக்கத்தில் புத்தியின் உயிரானது சித்தத்தின் உயிரோடு ஒவ்வொரு இந்திரிய ஞானத்திலும் ஒத்து உழைக்கிறது.

சித்தமும் புத்தியும், இருதயத்தைப் போலவும், சுவாசாசயங்களைப் போலவும், சரீரத்தின் ஒவ்வொன்றிலும் எல்லாப் பொருள்களிலும் ஒத்து உழைக்கிறதென்று மேலே காண்பிக்கப்பட்டது; ஆனால், சித்தமானது சலனங்களை உற்பத்தி செய்வதில் பிரதம கர்த்தாவென்றும், புத்தியானது இந்திரியங்களின் கிரியைகளில் பிரதம கர்த்தாவென்றும், நாம் இன்னும் காண்பிக்கவில்லை. சித்தமானது சலனங்களை உற்பத்தி செய்வதில் பிரதம கர்த்தாவென்பது, செய்தலும் செயல்படுதலும் சித்தத்தினாலானபடியால், அது செய்கிற பணிவிடையினால் ஏற்படுகிறது; புத்தியானது இந்திரியங்கள் விஷயத்தில் பிரதம கர்த்தாவென்பது, அது கிரகித்து, அதிலிருந்து உணர்வதால், அதின் வேலையினாலும் கூட ஏற்படுகிறது; அப்படி யிருந்தாலும், ஒவ்வொன்றின் கூட்டுவேலையில்லாமல் சலனமும் கிடையாது, இந்திரிய ஞானமும் கிடையாது.

அதேகூட இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் கூட்டுவேலையினால் தெளிவாயிருக்கிறது. சலனங்களில் இருதயமானது பிரதம கர்த்தாவென்பதும், சுவாசாசயங்

கள் இரண்டாவதான தென்பதும், சுத்த இரத்தமுள்ள நாடிகள் அவைகளில் செயல்படுவதாலும் ஒருவித வெண்மை நிறமுள்ள நரம்புகளிலிருந்து சிறிய ஜவ்வுகள் திரும்ப செயல்படுவதாலும், தசை நார்களிலிருந்து விசதமாகிறது. சுத்த இரத்தமுள்ள நாடிகள் மூளையிலிருந்து அனுப்பப் பட்ட நார்களினால் சுருக்கப்படுகின்றன; மேலே சேர்க்கப் பட்ட ஒருவித வெள்ளை நரம்புகளிலிருந்து சிறிய ஜவ்வுகளி னால், தளர்த்தப்படுகின்றன. சுத்த இரத்தமுள்ள நாடிகள் இருதயத்திலிருந்து வருகின்றன. ஈரல்தாங்கி அல்லது அடிவயிற்றகத்தை மூடிய ஜவ்விலிருந்தாவது, வேறு எங் கிருந்தாவது தொடர்ச்சியாயிருப்பதால், வெள்ளை ஜவ் வானது சுவாசாசயங்களின் மாறி மாறி வரும் சலனத்தைப் பங்கிட்டுக் கொள்ளுகின்றன. ஆகையினால், சலனங்களில் சுவாசாசயங்களின் சுவாசம் இரண்டாவதான கர்த்தாவா யிருக்கையில், இருதயத்தின் இரத்தம் முதன்மையானதா யிருக்கிற தென்பது விசதமாகிறது. அதன் சலனத்தைப் பங்கிட்டுக் கொள்ளுகிற, முன் சொல்லப்பட்ட ஓர்வித வெண்மை நிறமுள்ள ஜவ்வுகளினால் சுவாசாசயங்களின் சுவாசம் தசைநார்களில் கீழான கர்த்தாவாயிருப்பதால், அந்த வெண்மையான ஜவ்வுகள் தசை நார்களுக்கும், சாதாரண போர்வையாகவும், அத்துடன் அசைக்கிற நார்களின் மேற் சட்டைகளாகவும் ஏற்பட்டு, அங்கிருந்து மிகவும் நுண்ணிய பாகங்களில் அவைகள் பிரவேசிக்கின் றன; இம்மாதிரியாக, அதிலிருந்து, பொதுவானதும் பிரத்தியேகமானதுமான எதிர்த்தாக்கங்களிருக்கின்றன; விசேஷமானவைகள், எங்கும் பரவியிருக்கும் பிரகுருதியின் ஒரு சட்டத்துக்குத் தக்கபடி, பொதுவானவைகளின் கீழ் நானாவிதமாய் அதிகரிக்க சக்தியுள்ளதாயிருக்கின்றன. புத்தியுடனும் சித்தத்துடனும் விஷயம் அம்மாதிரி யிருக்

கிறது. ஆனால், சுவாசாசயங்கள் இந்திரியங்களில் பிரதம கர்த்தா வென்பதும், இருதயமானது கீழான கர்த்தாவென் பதும், இதை ரூபிக்கிற இந்திரியங்களின் அவயவங்க ளிட சோதனையிலிருந்து விசதமாகிறது. ஆனால், அவை களின் நிர்மாணங்கள் சிக்கானதும் நானாவிதமானதுமா யிருப்பதாலும், அவைகளின் பாகங்கள் இங்கே விவரிக்க முடியாதபடியினாலும், இந்திரியங்களின் எல்லா அங்கங் களும் புத்திக்குச் சேர்ந்த பொருள்களுடன் அன்னுவயப் படுகிறதென்று தெரிந்து கொள்ளுதல் போதுமானதா யிருக்கிறது ; ஏனென்றால், திருஷ்டிக்குச் சேர்ந்த அங்கம் அறிவுக்கும், சுரோத்திரம், செவிகொடுப்பதினால் பின் தொடருகிற கீழ்படிதலுக்கும், நாற்ற மறியும் அங்கம், உணர்ச்சிக்கும், நாக்கு ஞானத்துக்கும், பரிசம் பொது வாக உணர்ச்சிக்கும், அன்னுவயப்படுகின்றன.

5. அம்மாதிரியே குரலினிடவும் அநன் பேச்சினிடவும் சப்தத்தில்.

சித்தத்திலிருந்து புத்தியில் உண்டாகும் அன்பி னிட நிர்மாணங்கள் முதலில் ஆசைகளென்றும், பிறகு உணர்ச்சிகளென்றும், கடைசியாய் சிந்தைகளென்றும் மேலே சொல்லப்பட்டது. குரலின் எல்லா சப்தங்களும், சுவாசாசயங்களிலிருந்து வருகின்றன என்றும், சிலது புத்தியிலிருந்து மிகவும் கொஞ்ச மடைந்தும், சிலது மிஞ்சியும், மற்றவைகள் மெத்தவும் அடைந்தும், சப்தங் களின் வித்தியாசங்கள் இருக்கின்றனவென்றும் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. புத்தியிலிருந்து கொஞ்சம் அடைகிற சப் தங்கள், பாட்டினிடவும் இராகத்தினிடவும் தொனிகளா யிருக்கின்றன. புத்தியிலிருந்து அதிகமாய் அடைகிறவை கள், பேச்சினிட உள்ளான தொனிகளாயிருக்கின்றன : இன்னும் மிஞ்சி அடைகிறவைகள் பேச்சினிட புறம்பான

தொனிகளாயிருக்கின்றன ; பேச்சுதானே, வார்த்தைகளா யிருக்கிற தொனியின் உச்சாரணத்தினுல், இவைகளைப் பிரத்தியக்ஷப்படுத்துகிறது.

அன்பாயிருக்கிற சித்தத்தின் உயிரோடும், ஞானமா யிருக்கிற புத்தியினிட உயிருடனும், சப்தங்களிடவும் பேச்சினிடவும் ஒரு அன்னுவயமிருக்கிற தென்பதை சுரோத்திரத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஒரு மனித னிட அன்பின் ஆசையினிட சுபாவம், அவன் சுரலின் தொனியிலிருந்தும், அவன் புத்தியின் ஞானத்தினிட சுபாவம் அவனிட பேச்சினுலும் அறிந்து கொள்ளலாம். இது தேவர்களால் தெளிவாயும், ஆனுல் மனிதர்களால் மங்கலாயும் அறிந்து கொள்ளப்படுகிறது. தொனியினிட அன்னுவயமே, புத்தியிலுள்ள அன்பின் சாதாரண ஆசை யுடனிருக்கிறது ; பாடுதல், ராகம் இவைகளின் தொனி பேதங்கள்போல தொனியின் பேதங்களிட அன்னுவயம், புத்தியிலுள்ள சித்தத்தின் அன்பிலிருந்து வருகிற ஆசை களின் பேதங்களோடு இருக்கிறது. புத்தியிலிருந்து மிக வும் கொஞ்சம் அடைகிற தொனியின் பேதங்களிட காரணகாரிய சம்பந்தமானது உணர்ச்சியுடனிருக்கிறது ; மிஞ்சி அடையப்பட்டவைகள், உணர்ச்சிகளின் பேதத் தோடும், மெத்தவும் அடையப்பட்டவைகள், சிந்தையுட னும் அதன் பேதங்களுடனும், சிந்தையின் அபிப்பிராயங் கள் வார்த்தைகளுடனும் காரணகாரிய சம்பந்த மிருக்கின் றன. இது அந்த விஷயத்தின் சுருக்கமாய்ச் சொல்லப்பட்ட காட்சியாயிருக்கிறது.

தண்டுகள் என்று சொல்லப்பட்ட இரண்டு சுவாசா சயங்கள் இருக்கின்றன ; அவைகளின் சுவாசத்தினிட உற்பத்தி ஸ்தானங்கள், சுவாசக்குழலின் கிளைகளென்றும் சொல்லப்படுகின்றன ; அவைகள் முடியும் கால்வாய்

சுவாசக்குழல் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கால் வாயின் மேற்பக்கம் குறல்வளை எனப்படும், அங்கே சப்தம் போகும் துவாரம், தொண்டைக்குழி எனப்படும் ; இதன் தொடர்ச்சி, நாசித்துவாரங்களிலும் நாக்கிலு மிருக்கிறது, அதன் புறப்பாடு உதடுகளின் துவாரம் மூலமாயிருக்கிறது. சுவாசாசயங்களுக்கும், அவைகளின் சுவாசத்துக்கும், சப்தங்களின் உச்சாரணத்துக்கும் சேர்ந்தவைகள் சாதாரணமாக இவ்விதமாக இருக்கின்றன ; ஒருமிக்க எடுத்த இவைகள், சித்தத்திலிருந்து பிறந்த புத்தியினுடனும், அவைகளின் சப்தங்கள் புத்தியுடனும், அவைகள் சலனங்கள் சித்தத்தினுடனும் காரணகாரிய சம்பந்தப்படுகின்றன.

6. துன்மார்க்கர்களில் சித்தத்தின் உயிரானது, புத்தியினிட உயிரினுல் சுத்தப்படுத்தப்படாமலும், பூர்ணமாக்கப்படாமலும், உயர்த்தப்படாமலும் ஆனல் அசுசிப்படுத்தப்பட்டும், சீரழிந்தும், மிருகத்தனமாக்கப்பட்டும் இருக்கிற தென்கிற இந்த வித்தியாசத்தோடு நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் விஷயம் ஒரே மாதிரி யிருக்கிறது.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு சித்தமும் ஒரு புத்தியும் உண்டு ; சித்தத்தினிடவும் புத்தியினிடவும் பரஸ்பர ஐக்கியமும் கூட இருக்கிறது. நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் விஷயம் இதுவாக இருக்கிறது. ஆனல் சித்தத்தின் அன்பானது ஒவ்வொருவனுடனும் வித்தியாசப்படுகிறது ; ஆகையால் புத்தியின் ஞானமும்கூட, நல்லவர்களோடு இது கெட்டவர்களிடத்தில் இருப்பவைகளுக்கு எதிரானதாக இருக்க அவ்வளவு பேதப்படுகிறது. நல்லவர்களிடத்தில், நன்மையினிடத்து அன்பு இருக்கிறது, ஆதலால் உண்மை தெரிந்துகொள்ளல் இருக்கிறது ; ஆனல் கெட்டவர்களிடத்தில் தீமையின்பேரில் அன்பு இருக்கிறது, ஆதலால் பொய்யை அறிந்துகொள்ளல் இருக்கிறது. ஆகை

யால், நல்லவர்களிடத்தில் சித்தத்தினிட அன்பானது சுத்தப்படுத்தப்படுகிறது மாத்திரமல்லாமல், மேல் ரூபித்தபடி புத்தியினால், பூர்ணமாக்கப்பட்டு உயர்த்தவும் படுகிறதினால், கெட்டவர்களிடத்தில் சித்தத்தின் அன்பானது புத்தியினால் அசுசிப் படுத்தப்பட்டும், சீரழிக்கப்பட்டும், மிருகத்தனமாக்கப்பட்டு மிருக்கிறதென்று பின் தொடருகிறது. புறம்பானவைகள் இரண்டகத்துக்கும் வஞ்சகத்துக்கும் தகுந்தவைகளானபடியினால், புறம்பானவைகளில், நிஜமாகவே, தெளிவான ஒப்பனையிருக்கிறது. ஆனால் அந்தரங்கமானவைகளில் பேதமிருக்கிறது.

2). ஆனால் இது எப்படியிருக்கிறதென்று இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் அன்னுவயத்தால் திருஷ்டாந்தப் படுத்தப்படலாம். ஏனென்றால், ஒவ்வொருவனுக்கும் ஒரு இருதயமும் சுவாசாசயங்களும் உண்டு; மேலும், ஒவ்வொருவனிலும், சுவாசாசயங்களுடன் இருதயத்தினிட சேர்க்கையும், பரஸ்பர ஐக்கியமும்கூட, இருக்கிறது; ஒவ்வொருவனிலும், சுவாசாசயங்களிலுள்ள இருதயத்தின் இரத்தம் அதன் அசுத்தங்களை நீக்கி சுத்தம்செய்யப்பட்டு, காற்றிலுள்ள ஆகாயமாய் போகிற மூலவஸ்துக்களாலும் கந்தங்களாலும் போஷிக்கப்படுகிறது; என்றாலும், நல்லவர்கள் விஷயத்தில் கெட்டவர்களிலிருந்து முழுமையும் வித்தியாசமான விதத்தில் அப்படி செய்யப்படுகிறது. நல்லவர்கள் விஷயத்திலும், கெட்டவர்கள் விஷயத்திலும் சுவாசாசயங்களில் இரத்தத்தின் பரிசுத்தப்படுத்துதலினிடவும் போஷணத்தினிடவும் சுபாவம், பின்தொடரும் அனுபவத்தின் சாட்சியத்தால் தெரிந்துகொள்ளலாம். பரமார்த்த உலகத்தில், நல்ல சூக்கும சரீரமுள்ளவன், தன்னிட நாசித்துவாரங்களில் எல்லாப் பரிமளங்களையும், நறுமணங்களையும் சந்தோஷத்துடன் சுவாசம் வாங்கி அழுகினதும் மலின

மானதுமான நாற்றங்களைக்கண்டு பயம் கொள்ளுகிறான்; ஆனால் ஒருகெட்ட சூக்கும சரீரமுள்ளவன் தன்னிட நாசித் துவாரங்களில் அழுகினதும் மலினமானதுமான நாற்றங் களைச் சந்தோஷத்துடன் சுவாசம் வாங்கி, பரிமளமுள்ளதும் நறுமணமுள்ளதுமானதை விலக்குகிறான். ஆதலால், இந்தக் காரணத்துக்காக, நரகங்களில் அழுக்கானதும், கெட்ட நாற்றமுள்ளதும், ஊழலானதும், பிரேத நாற்றமுள்ளது மான நாற்றங்களும், அவ்வித சுபாவமுள்ள மற்ற நாற்றங் களும் இருக்கின்றன; எல்லாவாசனையும் ஒவ்வொருவனிட அன்பின் ஆசையிலிருந்து வருகிற உணர்ச்சிக்கு அன்னு வயப்படுகிற படியினால், இது இப்படி இருக்கிறது.

3). சுவர்க்கலோகத்தில், அது முழுமையும் எதிரான தாயிருக்கிறது. உலகத்தில் உள்ள மனிதர்களில் இரத்த மானது காற்றினால், ஒரே விதமாயிருப்பதால், ஏற்ற பொருள்களினால் போஷிக்கப்பட்டு, கலப்பானவைகளான படியினால் பேதமானவைகளிலிருந்து சுத்தப்படுத்துப்படு கிறதென்று இவைகளினால் விசதமாகிறது. மானிட இரத் தம் அந்தரங்கமாய் பரமார்த்தமானது, இறுதியானவை களில் தேகமுள்ளது; ஆகையால் ஞானிகளாயிருக்கிறவர் கள், ஞானப் பொருள்களுக்கு அன்னுவயப்படுகிற பிர குருதியிலுள்ள அவ்வித பொருள்களினால் அதைப் போஷிக் கிறார்கள். ஆனால் ஜடமாய் மாத்திரம் இருப்பவர்கள் அவை களுக்கு அன்னுவயப்படுகிற பிரகிருதியிலுள்ள அவ்வித பொருள்களினால் அதைப் போஷிக்கிறார்கள். ஆதலால், மனி தர்களிலிருக்கும் இரத்தத்தின் பேதமானது, அவர்களிட அன்புகளின் பேதங்கள்போல அவ்வளவு பெரியதும் அவ் விதமானதுமாயிருக்கிறது; ஏனென்றால், மேற் சொல்லியதி லிருந்து விசதமாகிறபடி இரத்தமானது அன்புடன் அன்னு வயப்படுகிறது.

**7. சித்தத்தின் உயிராயிருக்கிற அன்பானது, மனிதனிட எல்லா உயிரையும் உண்டாக்குகிறது.**

சிந்தையானது மனிதனிட முழு உயிராகிறதென்று நினைக்கப்படுகிறது; ஆனால் அது அன்பாயிருக்கிறது. இந்த உத்தேசத்துக்கு காரணம், சிந்தையானது மனிதனுக்குக் காணப்படுகிறது என்பதும், ஆனால் அப்படி அன்பு காணப்படுகிறதில்லை என்பதாயிருக்கிறது. ஆசை என்று சொல்லப்படுகிற அன்பை அல்லது அதின் எந்தப் பாகத்தை யாவது நீங்கள் நீக்கிவிட்டால், நீங்கள் நினைப்பதை ஒழிப் பீர்கள், குளிர்ந்து, இறந்துபோவீர்கள்; ஞாபகம் தவறின போதும், தூக்கத்திலும், மூர்ச்சையிலும், திக்குமுக்காட் டத்திலும், அல்லது கருப்பையிலும் இருப்பதுபோல, சிந்தையை மாத்திரம் நீக்கிவிட்டால், அப்படி ஆகிறதில்லை. இந்த விருத்தாந்தங்களினால் ஒரு மனிதன் நினைக்காவிட் டாலும், இருதயமானது அன்புடன் அன்னுவயப்படுகிற படியினால், இருதயம் துடிக்கிறவரையில் அவன் உயிரோடி ருக்கிறான். அன்பு சித்தத்தைச் சேர்ந்தபடியினாலும், சிந்தை புத்தியைச் சேர்ந்தபடியினாலும், சித்தத்துக்கும் புத்திக்கும் 2) அம்மாதிரியே இருக்கிறது. அன்பு மனிதனிட எல்லா உயிருமாகிறதென்பது இருதயமானது சுவாசாசயங்க ளுடன் அன்னுவயப்படுவதினால், முன்னமே திருஷ்டாந்தப் படுத்தப்பட்டிருக்கிறது; மேலும் இருதயமானது கருப்பை யில் சுவாசாசயங்களை உருவாக்குகிறதினால், அவைகளினால் சுவாசத்தையும், இம்மாதிரியாக பேச்சையும் அது உண் டாக்குகிறதென்று அந்த அன்னுவயத்தினால், அது நிச்சயப் படுத்தப்பட்டது. அம்மாதிரியே அன்பானது, புத்தியை உருவாக்கி, அதன் மூலமாய் நினைத்து, சிந்தையிலிருந்து பேசுகிறது. உத்தேசங்கள் உதிக்கிற அன்பானது தன்னிட மிருந்தே பற்றுகளை உற்பத்திசெய்கிறதென்றும், இவை

களினால், (மனோகத) வெளிச்சத்துக்குக் காரணமான அறிவையும், அறிவினால் அபிப்பிராயங்கள் சாரும் சிந்தையையும், பின் சொன்னதிலிருந்து ஞாபகத்தையும் அது உண்டாக்குகிறதென்றும், இவைகள் ஒருமிக்க எடுத்துக்கொண்டால், ஒரு ஒப்பான வரிசையிலுள்ள பொருள்களுடன், சுவாசாசயங்களின் எல்லாப் பொருள்களும் அன்னுவயப்படுகிற புத்தியின் அன்புக்குச் சேர்ந்திருக்கிறதென்றும் காட்டப்பட்டும்கூட இருக்கிறது.

3). அன்பானது, சிந்தையினிடவும் பேச்சினிடவும் உபயோகத்துக்காகப் புத்தியை உண்டாக்குகிறது போல் அன்பாயிருக்கிற முன் சொல்லியதே தவிர அதில் வேறொன்றும் உயிரோடிருக்க முடியாத சிலவற்றை ஜீரணத்தின் உபயோகத்துக்காகவும், சிலவற்றை அன்ன சாரத்தினிடவும், இரத்த நிருமாணத்தினிடவும் உபயோகத்துக்காகவும், சிலவற்றை ஜனிப்பிக்கையின் உபயோகத்துக்காகவும், சிலவற்றை இந்திரிய ஞானத்தின் உபயோகத்துக்காகவும், மற்றவைகளைச் செய்கையினிடவும் நடத்தலினிடவும் உபயோகத்துக்காகவும் இவ்விதமாக உயிரின் மற்றத் தொழில்களை அவைகளின் உபயோகங்களுக்காக அது உருவாக்குகிறது. இரத்தமானது அன்புடனும் இருதயமானது அதன் ஆசயத்துடனும் அன்னுவயப்படுகிறபடியினால் நிர்மாணமானது, இருதயத்தினாலும் அதன் இரத்தத்தினாலும் உண்டாக்கப்படுகிறது; முழுசரீரத்தின் ஆந்திரிகம், அங்கங்கள், அவயவங்கள் இருதயத்தின் மூலமாய் அன்பினால் உபயோகங்களின் தொழில்கள் உருவாக்கப்படுகிற பாகங்களாக இருக்கின்றன. இந்த விஷயத்தைப் பரிசோதிக்க தகுந்தவர்கள், அந்தப் பொருள்களில் முதலிலிருந்து கடைசிவரையில் உபயோகங்களின் விருத்திகள், சுவாசாசயங்களிலிருப்பவைகள் போல இருக்கின்றனவென்று அறியலாம்.

இவைகளினாலும், மேற்சொல்லியவைகளாலும், சித்தத்தின் அன்பானது மனிதனிட எல்லா உயிருமாகிறதென்றும், அதிலிருந்து புத்தியினிட உயிரானது வருகிறதென்றும், ஆதலால், மனிதனானவன் அதிலிருந்தும் அதற்குத் தக்கபடியும், அவனிட சொந்த அன்பென்றும் அவனிட சொந்த புத்தியென்றும் விசதமாகிறது.

## XI. கர்த்தரிடமிருந்து கர்த்தருக்கு அன்பு தருமத்திலும், ஞானமானது பக்தியிலும் ஜீவிக்கிறது.

கர்த்தரிடத்து அன்பைக் குறித்தும், அயலானிடத்து தருமத்தைக் குறித்தும், அதே காலத்தில் பரமார்த்தமாய் அல்லாமல் ஸ்தூலமாய் மாத்திரம் நினைக்கிறவர்கள், கர்த்தரை, தனி ரூபத்துவத்தைப் பற்றியும், அயலானையும் தனி ரூபத்துவத்தைப் பற்றியும் அன்பு பாராட்டப்படவேண்டுமென்பதைக் காட்டிலும் வேறு விதமாய் அவர்கள் நினைக்க முடியாதபடியினால், அப்படி நினைக்கிறார்கள். ஆனால் ஜடமாயும் ஞானமாயும் இருவகையாய் நினைப்பவர்கள், துஷ்டர்களும் நல்லவர்களுமாகிய இருவகையாரும், தனி ரூபத்துவத்தைப்பற்றி கர்த்தரையும், அம்மாதிரியே அயலானையும், நேசிக்கக்கூடுமென்றும், ஒரு துஷ்டன் நேசித்தால், அவனைத் திரும்ப நேசிக்கமுடியாதென்றும், ஆனால் நல்லவன் நேசித்தால் அவனை மறுபடியும் திரும்ப நேசிக்கக் கூடுமென்றும் அறிந்து, உணர்ச்சியினால் உத்தேசித்திருக்கிறார்கள். இந்தக் காரணத்துக்காக, கர்த்தரிருக்கிற, தானே தெய்வமான அவரிடமிருந்து வரப்பட்டதை நேசித்தல், கர்த்தரை நேசித்தலென்றும், இது அயலானுக்கு நன்மை செய்தலாகிறதென்றும், வேறு வழியில் இல்லாமல் இந்த வழியிலேயே, கர்த்தரால் அவன் அன்பு பாராட்டப்

பட்டு, அன்பினுல் அவருடன் சேர்க்கப்படுவான் என்றும், பரமார்த்த—ஸ்தூல மனிதன் தீர்மானிக்கிறுன். ஆன போதிலும் ஸ்தூலமான மனிதன், இந்த விஷயத்தைப் பற்றி, அதைத் தெளிவாய் அவனுக்குக் காண்பித்தா லொழிய, ஞானமாய் நினைக்கமுடியாது. ஆகையால், பின் தொடரும் பிரிவுகளில் அது வேருய்ப் பிரஸ்தாபிக்கப்பட வேண்டும்.

## A. அன்பையும் தருமத்தையும் குறித்து.—

1. உபயோகங்களிடத்து அன்பு தருமம்.

2. கர்த்தரானவர், அது புறப்படுகிற உற்பத்தி ஸ்தா னமாயிருக்கிறர்; அயலானுனவன் அது நோக்கப்படும் பொருளா யிருக்கிறன்.

3. கர்த்தரிடத்து அன்பு, உபயோகத்தி லிருப்பதால், தரு மத்தில் ஜீவித்திருக்கிறது.

4. உபயோகமென்பது, ஒருவன் தன்னிட கடமையை நிறைவேற்றுவதிலும், தன்னிட தொழிலை நடத்துவதிலும் நேர்மையாயும், விசுவாசமாயும், நிஷ்கபடமாயும், நீதியாயும் இருப்பதிலும் அடங்குகிறது.

5. தரும உபயோகங்களாயிருக்கிற பொது உபயோகங்க ளிருக்கின்றன.

6. நரகத்திலிருந்து வரும் தீமைகளுக்கு விரோதமாய் சண்டை செய்கிறவர்கள் தவிர, வேறு யாரிடத்திலும் உபயோகங் கள் தரும உபயோகங்களாகிறதில்லை.

7. ஏனென்றல், இவைகள் கர்த்தரிடத்து அன்பிற்கும், அயலானிடத்து தருமத்திற்கும் எதிரிடையா யிருக்கின்றன.

8. ஒருவனிட சொந்த நன்மை அவைகளின் முதன்மை யானதும், இறுதியுமானதுமான நோக்கமாகச் செய்யப்படும் உபயோகங்கள், தரும உபயோகங்கள் அல்ல.

(B) ஞானத்தைப் பற்றியும் விசுவாசத்தைப்பற்றியும்.—

1. விசுவாசமென்பது உண்மையைத் தவிர வேறென்றுமில்லை.

2. உண்மையானது அது அறியப்பட்டு, அன்பு பாராட்டப்பட்டால் உண்மையாகிறது; அது தெரிந்து கொள்ளப்பட்டு, நினைக்கப்பட்டால் விசுவாசம் என்று சொல்லப்படுகிறது.

3. விசுவாசத்தின் உண்மைகள் ஒரு விஷயத்தில் கர்த்தரையும்; மற்றதில் அயலானையும் எதிர் பார்க்கின்றன.

4. சாதாரணமாய், ஐக்கிய முண்டாக கர்த்தரை எப்படி சமீபிக்க வேண்டுமென்றும், கர்த்தரானவர் பின்னிட்டு மனிதன் மூலமாய் உபயோகங்களை எப்படிச் செய்கிறரென்றும், உண்மைகள் கற்பிக்கின்றன.

5. ஒவ்வொரு மனிதனும், ஞானமானதும், சன்மார்க்கமானதும், தேசாரமானதுமான உண்மைகளால் கற்பிக்கப்படுகிறன்.

6. விசுவாசமானது, அந்த உண்மைகளைத் தெரிந்து நினைப்பதாலும், தருமமானது அவைகளை மனங்கோண்டு செய்தலிலும், அடங்கியிருக்கிறது.

7. ஆதலால், அந்த உண்மைகளை மனங்கோண்டு செய்வதில் அமைந்திருக்கிற தருமத்தில், கர்த்தரிட இச்சாசக்தி மனிதனேடு இருக்கும்போது, கர்த்தரின் ஞானசக்தி, உண்மைகளைத் தெரிந்து நினைப்பதாயிருக்கிற விசுவாசத்தில் மனிதனிடத்தில் நிலைத்திருக்கிறது.

8. தருமத்தினிடவும் விசுவாசத்தினிடவும் ஐக்கியம் பரஸ்பரமானது.

### A. *அன்பையும் தருமத்தையும் குறித்து.—*

(a) 1. உபயோகங்களிடத்து அன்பு தருமம்.

*எல்லாப் பொருள்களிலும், பொதுவாயும் சிறப்பாயும், நுனி என்றும், காரணமென்றும், காரியமென்றும் இந்த*

மூன்றும் இருக்கின்றன. எதிலிருந்து ஒரு பொருள் உண்டாகிறதோ அது நுனியாகிறது; அது எதினால் உற்பத்தியாகிறதோ அது காரணமாகிறது; எதில் உற்பத்தியாகிறதோ அது காரியமாகிறது; காரணத்தின் மூலமாய் அது காரியத்திலிருக்கும்போது நுனி நிலைக்கிறது. எல்லா அன்பிலும், அதின் ஆசையிலும் ஒரு நுனியிருக்கிறது. அந்த நுனியானது அது நேசிப்பதைச்செய்ய உத்தேசிக்கிறது அல்லது சிந்திக்கிறது. செய்கையானது அதன் காரியமாயிருக்கிறது. ஒரு பொருளானது செய்யப்படுகிற நுனியானது கடவுளாயிருக்கிறார். அதனால் செய்யப்படுகிற காரணம் மனிதன். நுனி இருக்கிற காரியம் உபயோகம். அவரிட இச்சாசக்தியிலிருந்து, அவர் ஓயாது உபயோகங்களை அதாவது, மானிடவர்க்கத்துக்கு நன்மையான பொருள்களைச்செய்ய உத்தேசிக்கிறதினால் அல்லது சிந்திக்கிறதினால், ஒருபொருள் செய்யப்படுகிற நுனியாயிருப்பது கடவுளாகிறார்; மனிதனானவன் உபயோகங்களின் அன்பில் இருக்கிறபடியினாலும் அல்லது இருக்கக்கூடுமாகையாலும், அந்த அன்பில் அவன் உபயோகங்களைச் செய்ய உத்தேசிக்கிறதினாலும் அல்லது சிந்திக்கிறதினாலும், உபயோகங்கள், நுனி இருக்கிற காரியங்களாய் இருக்கிறபடியினாலும், அவைகளினால் ஒரு பொருள் செய்யப்படுகிற காரணம் மனிதனாயிருக்கிறான்; உபயோகங்கள் நன்மைகளென்று கூட சொல்லப்படுகின்றன. ஆகையினால், உபயோகங்களின் அன்பானது, மனிதனானவன் அயலானுக்குக் காண்பிக்க வேண்டிய தருமமாயிருக்கிறதென்று விசதமாகிறது.

2). எல்லாப் பொருள்களிலும், பொதுவாயும் சிறப்பாயும், நுனியும், காரணமும், காரியமும் இருக்கின்றன என்பது, எந்த தனித்த பொருளை பரிசோதனை செய்வதாலும் கண்டுபிடிக்கக்கூடும். உதாரணமாக, ஒரு மனிதன் எதைச் செய்

தாலும், தனக்கேயாவது வேறு யாருக்காவது, அல்லது வேறு யாராவது, தனக்காவது இதை, ஏன் நீ செய்கிறு யென்று சொல்லுகிறுன். இம்மாதிரி நுனியைக் குறித்தும், அதை எப்படி செய்கிறுயென்று, காரணத்தைக் குறித்தும், என்ன செய்கிறுயென்று, காரியத்தைக் குறித்தும் சொல்லுகிறுன். நுனியும், காரணமும், காரியமும், முடிவான காரணமென்றும், நடுவான காரணமென்றும், செய்விக்கப்பட்ட காரணமென்றும், சொல்லப்படுகிறது; காரணங்களின் சட்டப்படி, நுனியானது காரணத்தில் எல்லாமாயிருக்கிறது. ஆகையினுல் நுனியானது அதன் சாரமாயிருப்பதால், காரியத்தின் எல்லாமாயிருக்கிறது. அம்மாதிரியே, கடவுளானவர் நுனியாயிருப்பதால், உபயோகங்களின் அன்பில் அல்லது மனிதனேடு தருமத்தில் எல்லாமாயிருக்கிறுர். ஆகையினுல், அவனிடமிருந்து வரும் உபயோகங்களில், அதாவது அவன் செய்யும் உபயோகங்களில் எல்லாமாயிருக்கிறுர். எல்லா நன்மையும் கடவுளிடமிருந்து வருகிறதென்றும், மனிதனிடமிருந்து ஒன்றும் வருகிறதில்லையென்றும், கடவுள் நன்மையே என்றும் திருச்சபையில் ஏன் நம்பப்படுகிறதென்பதற்கு இது காரணமாயிருக்கிறது. ஆகையினுல், தருமம் செய்தல் என்பது, உபயோகங்களைச் செய்தல், அல்லது உபயோகங்களாயிருக்கிற நன்மைகளைச் செய்தல் என்றும் இம்மாதிரியாக உபயோகங்களிடத்து அன்பு தருமமென்றும் அதன் பலனுக ஏற்படுகிறது.

(a)2. கர்த்தரானவர் அது புறப்படுகிற உற்பத்தி ஸ்தானமாயிருக்கிறர்; அயலானவன் அது நோக்கப்படும் பொருளாயிருக்கிறன்.

மேற் சொல்லியதால், உபயோகங்களிடத்தும் அல்லது தருமத்தினிடத்தும் அன்பு இருக்கிறதும் நிலைக்கிறதும் கர்த்தரிடமிருந்துதான் என்பது விசதமாகிறது; தருமம்

வளர்க்கப்பட வேண்டியவனும், தருமம் செய்யப்பட வேண்டியவனும் அயலானனபடியினல், அது நோக்கப்படும் பொருள் அயலானயிருக்கிறது. உபயோகங்கள் பேரில் அன்பு சாய்கிற பொருள் அயலான் என்று சொல்லப்படுகிறபடியினல், அயலான் என்பது என்னவென்றும், யார் என்றுங்கூட சொல்லப்பட வேண்டும். விசாலமான தாற்பரியத்தில் அயலானென்பது சர்வ ஜனங்கள் அல்லது பிரஜைகளாயிருக்கிறது; ஒடுக்கமான தாற்பரியத்தில், திருச்சபை என்றும், ஒரு மனிதனிட தேசமென்றும், அதிக பெரிதும், அல்லது சிறிதுமான கூட்டமென்றும், அப்படி யிருக்கையில், எல்லை படுத்திய தாற்பரியத்தில், ஒரு நகரவாசி என்றும், தோழனென்றும், சகோதரனென்றும், அருத்தம் கொள்ளுகிறது. அவன் அந்த உபயோகங்களை நேசிக்கிறபடியினல், அன்பினல் இவர்களுக்கு உபயோகமானவைகளைச் செய்தல், ஒருவனுக்கு அயலானிடத்து தருமம் செய்தலாகும். அவன் அந்த உபயோகங்களை ஏன் நேசிக்கிருனென்பதற்கு காரணம், உபயோகங்களிடத்து அன்பும், அயலானிடத்து அன்பும் பிரிக்க முடியாதென்பதாயிருக்கிறது. ஒரு மனிதனனவன் நிஜமாகவே, உபயோகங்கள் அல்லது தருமத்தின் அன்பிலிருந்து, ஒரு விரோதிக்கும், ஒரு துஷ்டனுக்கும் நன்மை செய்யலாம்; ஆனல் இவர்களுக்கு, பச்சாதாபத்தினிடவும், இணக்கத்தினிடவும் உபயோகங்களைச் செய்கிருன்; மேலும் இந்த உபயோகங்கள், பலவிதமான வழிகளால் நிறைவேற்றப்பட்டு, வெவ்வேறு யிருக்கின்றன (மத்தே. V. 25, 43, 44; யும் பின்வரும் வாக்கியங்களையும்; லூக்கா VI. 27, 28, 35, யும் பார்க்கவும்).

(a) 3. உபயோகத்திலிருப்பதால், கர்த்தரிடத்து அன்பு தருமத்தில் ஜீவிக்கிறது.

இதை கர்த்தரே யோவானில் கற்பிக்கிறார்: "என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளை கைக் கொள்ளுகிறவனே, என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்; ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக் கொள்ளுவான்; என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக் கொள்ள மாட்டான்." (XIV. 21, 23, 24). மறுபடியும் அதிலேயே: "என்னிட கற்பனையைக் கைக் கொண்டால், என்னிட அன்பில் நிலைத்திருப்பீர்கள்" (XV. 10). அவரிட தர்மநியமங்களையும், வசனங்களையும், கற்பனைகளையும் கைக்கொள்ளல் என்பது அயலானுக்கு உபயோகங்களா யிருக்கிற தருமத்தின் நன்மைகளைச் செய்தலா யிருக்கிறது. மேலும் அதிலேயே: இயேசு பேதுருவை நோக்கி, "நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்று மூன்றுதரம் கேட்டார்; பேதுருவும் தான் அவரை நேசித்ததாக மூன்றுதரம் விடை கொடுத்தார்; இயேசு, மூன்றுதரம், என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்றார் (XXI. 15–17). சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்கிறவர்களுக்கும், கர்த்தரிடத்து அன்பு பாராட்டுகிறவர்களுக்கும் ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் மேய்த்தலென்பது உபயோகங்கள் அல்லது தருமத்தின் நன்மைகள் என்று அருத்தம் கொள்ளுகிறது. ஆகையால் உபயோகத்தி லிருப்பதால், கர்த்தரிடத்து அன்பு தருமத்தில் ஜீவிக்கிறதென்றும், மேலும், கர்த்தரிடத்து அன்பு, அயலானிடத்து தருமத்துடன், இம்மாதிரியாக மனிதனுடன் கர்த்தர் ஐக்கியப்படுதல் உபயோகத்திலிருக்கிறதென்றும், இந்த ஐக்கியத்தின் இனமும் விசாலமும், உபயோகத்தினிடத்து அன்பின் இனத்துக்கும் விசாலத்துக்கும் ஒன்றுக்கொன்று பொருந்தியதா யிருக்கிறதென்றும், விசதமாகிறது. ஏனென்றால், அவரிடமிருந்து வரும் நன்மையிலிருப்பது போல், கர்த்

தர் உபயோகத்தி லிருக்கிறார்; உபயோகத்தின் அன்பில் இருக்கிற மனிதன், தன்னிடமே இருந்துபோல, உபயோகத்திலிருக்கிறான்; என்றாலும் அது தன்னிட மிருந்தன்றி, கர்த்தரிடமிருந்து வருகிறதென்று அவன் ஒத்துக் கொள்ளுகிறான். ஏனென்றால், ஒரு மனிதன் தன்னிட மிருந்தே கர்த்தரை நேசிக்க முடியாது. அதுவுமின்றி, உபயோகங்களைத் தன்னிட மிருந்தே நேசிக்கவும் முடியாது; ஆனால் கர்த்தர் அவனை நேசித்து, அவனிலிருக்கும் அவன் அன்பைத் திரும்பக் கொடுத்து, அதனுடன் தன்னிடமிருந்தே கர்த்தரை நேசித்ததுபோல் அதைத் தோன்றச் செய்கிறார். ஆகவே, இதுதான் கர்த்தரிடமிருந்துவரும் கர்த்தரிடத்து அன்பா யிருக்கிறது. இதிலிருந்து, கர்த்தரிடத்து அன்பு எப்படி தருமத்திலாவது, உபயோகத்தின் அன்பிலாவது ஜீவிக்கிறதென்று கூட விசதமாகிறது.

(a)4. உபயோகமென்பது, ஒருவன் தன்னிட கடமையை நிறைவேற்றுவதிலும், தன்னிட தொழிலை நடத்துவதிலும், நேர்மையாயும், விசுவாசமாயும், நிஷ்கபடமாயும், நீதியாயும் இருப்பதில் அடங்கி யிருக்கிறது.

நல்ல செயல்களென்றும், அதனுடன் பலன்களென்றும், இங்கே உபயோகங்களென்றும், சொல்லப்படுகிற தருமத்தின் நன்மைகளால் வேதத்தில் என்ன அருத்தம் கொள்ளப்படுகிறது என்பது, புதைப் பொருளாயும் சிலருக்கு மாத்திரமும் தெரிந்திருக்கிறது. வேதத்தின் மூலார்த்தத்தில், இவைகள் ஏழைகளுக்குக் கொடுத்தலிலும், தரித்திரர்களுக்கு உதவி செய்வதிலும், விதவைகளுக்கும் தாய் தந்தை யில்லா பிள்ளைகளுக்கும் நன்மை செய்வதிலும், இதைப் போன்ற இதர செய்கைகளிலும், இது அடங்கி யிருக்கிறதென்று எண்ணப்படுகிறது. ஆனபோதிலும்,

வேதத்தில் பலன்கள் என்றும், செயல்கள் என்றும், தரு மத்தின் நன்மைகளென்றும் சொல்வதால், இந்த உபயோ கங்கள் கருதப்படவில்லை; ஆனால், ஒவ்வொருவனும், நேர்மையாய்ம், விசுவாசமாயும், நிஷ்கபடமாயும், நீதியா யும், தன்னிட கடமையைச் செய்து தன் தொழிலில் நடக்க வேண்டுமென்பது அருத்தம். இதை அவன் செய்யும் போது, அவன் பொதுவான அல்லது ஜன சம்பந்தமான நன்மையை, இம்மாதிரியாக, அவனிட தேசத்தினிடவும், சிறியதும் பெரியதுமான கூட்டத்தினிடவும், தன்னிட நகர வாசியினிடவும், தோழனிடவும், சகோதரனிடவும் நன்மை யையுங் கூட ஆலோசிக்கிறான்; ஏனென்றால், மேலே சொல்லியபடி, அதன் விசாலமானதும் குறுகலானதுமான அருத்தங்களில், இவைகள்தான் அயலானு யிருக்கின்றன. ஒவ்வொருவனும், குருவானாலும், அதிகாரியானாலும், உத்தியோகஸ்தனானாலும், கமாமிசுக்காரனானாலும் அல்லது வேலைக்காரனானாலும், அனுதின உபயோகங்களைச் செய் கிறான்; குருவானவன் பிரசங்கம் செய்வதாலும், அதிகாரி யும் உத்தியோகஸ்தனும் அரசாட்சியாலும், வர்த்தகன் வர்த்தகத்தாலும், வேலைக்காரன் தன்னிட வேலையாலும் அனுதின உபயோகங்களைச் செய்கிறார்கள். உதாரணமாக, நேர்மையாயும், விசுவாசமாயும், நிஷ்கபடமாயும், நீதியாயும் தீர்மானம் செய்கிற நியாயாதிபதி அவன் தீர்மானம் செய் யும் ஒவ்வொரு வேளையிலும் உபயோகங்களைச் செய்கிறான்; அம்மாதிரியே கற்பிக்கும் காலத்தில் குருவும்; அப்படியே கூட மற்ற திருஷ்டாந்தங்களிலும் இருக்கிறது.

தருமத்தின் நன்மைகள் என்பதாலும், வேலைகள் என்ப தாலும் அவ்வித உபயோகங்கள் கருதப்படுகிற தென்பது, சுவர்க்க லோகங்களில் கர்த்தரின் ராஜரிகத்தால் விசதமா கிறது; ஏனென்றால், அங்கே எல்லாரும் உலகத்தில் போல்

ஏதோ ஒரு காரியத்திலும், சேவையிலும், கடமையிலும் அலுவலிலும், ஏற்பட்டிருக்கிறார்கள் ; மேலும் ஒவ்வொருவனுக்கும், தன்னிட உண்மைக்கும், நிஷ்கபடத்துக்கும் நீதிக்கும் தக்கபடி மேன்மையும், செல்வமும், சுகமும் இருக்கிறது. ஒரு உபயோகமற்ற சோம்பலான ஆள், சுவர்க்கத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறதில்லை ; ஆனால், சஞ்சலத்திலும் சகல தரித்திரத்திலும் வசிக்க அடவியிலாவது நரகத்திலாவது போடப்படுகிறான். சுவர்க்கத்திலுள்ள அவ்வித பொருள்கள், தருமத்தின் நன்மைகள் என்றும், நல்ல வேலைகளென்றும், உபயோகங்களென்றும் சொல்லப்படுகின்றன. உலகத்தில் தன்னிட உத்தியோகத்திலும் அலுவலிலும், உண்மையாயும், நிஷ்கபடமாயும், நீதியாயும் இருந்த ஒவ்வொருவனும் கூட, உலகத்தை விட்டுப்போன உடனே உண்மையாயும், நிஷ்கபடமாயும் நீதியாயும் கூட இருந்து, தேவர்களால் சுவர்க்கத்தில் அங்கீகரிக்கப்படுகிறான் ; மேலும், அவனிட உண்மையினிடவும், நிஷ்கபடத்தினிடனிடவும், நீதியினிடவும் சுபாவத்துக்குத் தக்கபடி அவனுக்கு சுவர்க்க ஆனந்தமுண்டு. உபயோகத்தினிடத்து அன்பிலிருந்து, அதன் உத்தியோகத்துக்கும் அலுவலுக்கும் பிரதிஷ்டை செய்யப்பட்ட மனது, தன்னிட வீரத்தைவைத்துக் கொண்டு பிறகு உண்மையினிடவும் நிஷ்கபடத்தினிடவும், நீதியினிடவும், ஆனந்தமாகிய ஞானானந்தத்தில் இருக்கிறதென்பதும், மோசத்தினிடவும் துவேஷத்தினிடவும், அத்துடன் வீண்பேச்சுக்களினிடவும் விருந்துகளிடவும் சந்தோஷத்திலிருந்து இதுவும் கூட சோம்பேறித் தனத்தின் சந்தோஷமாயிருக்கிறதினால், நிறுத்திவைக்கப் படுகிறதென்பதும் காரணமாயிருக்கிறது ; மேலும் சோம்பேறித்தனம் பிசாசின் தலையணையாயிருக்கிறது. கர்த்தரானவர் பின் சொன்னதின் அன்பில் தன் உறைவிடம் வைக்கமாட்டார்.

ஆனால், முன் சொன்னதின் அன்பில் வைப்பார் என்று ஒவ்வொருவனும் அறியலாம்.

(a)5. தருமத்தின் உபயோகங்களாயிருக்கிற, பொது உபயோகங்களிருக்கின்றன.

தருமத்தின் யுக்தமானதும் யதார்த்தமானதுமான உபயோகங்களானவைகள், கர்த்தரிடத்து அன்பு ஜீவிக்கிறதும், மனிதனானவன் இவைகளை ஞான உண்மையுடனும் நிஷ்கபடத்துடனும் செய்கிறபோது அதனுடன் இந்த அன்பு சேர்க்கப்படுகிறதுமான, அப்படியிருக்கும் பட்சத்தில், தருமத்தின் நன்மைகளாகிற மேற் சொல்லியபடி ஒருவனிட அலுவலுக்கும் ஆளுகைக்கும் சேர்ந்த உபயோகங்களாயிருக்கின்றன ; மேலும், உபயோகங்களாயிருப்பதால் உபயோகங்களை நேசிக்கிறவனும், எல்லா நன்மையும் கர்த்தரிடமிருந்துவருகிறதென்று நம்புகிறவனும், இதைச்செய்கிறான். ஆனால், மேற் சொல்லியது தவிர, ஒரு மனைவியை உண்மையாய் நேசித்தலும், பிள்ளைகளுக்குச் சரியான கல்வி கற்றுக் கொடுப்பதும், இல்லறத்தை முன்னாலோசனையோடு நடத்தலும், வேலைக்காரர்களை நியாயமாய் ஆதரித்தலும் போன்ற இதர சாதாரண உபயோகங்களும் கூட இருக்கின்றன. இந்த வேலைகள் உபயோகத்தின் அன்பிலிருந்து செய்யப்படும்போதும், மனைவி விஷயத்தில், பரஸ்பரமானதும் கற்புள்ளதுமான அன்பிலிருந்து செய்யப்படும்போதும், தரும கைங்கரியங்களாகின்றன ; இந்த உபயோகங்கள் தருமத்தின் சம்சார உபயோகங்களாயிருக்கின்றன.

மற்ற சாதாரண உபயோகங்களும் கூட இருக்கின்றன ; இவைகளில்ஒன்று, கோவிலின் ஊழியத்துக்காக தகுந்ததும் அவசியமானதையும் கொடுத்தல் : சபையானது அயலானுக உயர்ந்த திட்டத்தில் நேசிக்கப்படுகிற அளவு, இந்த நன்மைகள் தருமத்தின் உபயோகங்களாகின்றன. அநாதபிள்ளை

களுக்கு ரக்ஷகஸ்தலங்களையும், அன்னியர்களை ஆதரிக்கும் இடங்களையும், வித்தியாசாலைகளையும், அவ்வித சுபாவமுள்ளவைகளையும் கட்டவும் ஆதரிக்கவும் கொடுத்தலின் உபயோகங்கள் சாதாரண உபயோகங்களில் சேர்ந்திருக்கின்றன. இந்த உபயோகங்கள் ஒருவனிட சக்திக்குத் தக்கபடி செய்யப்படவேண்டும். ஆனால் அவைகள் கட்டாயமானதல்ல. தரித்திரர்களுக்கும், விதவைகளுக்கும், அநாத பிள்ளைகளுக்கும், அவர்கள் தரித்திரர்களா யிருக்கிறதினாலும் விதவைகளாயிருக்கிறதினாலும் அநாதபிள்ளைகளா யிருக்கிறதினாலும் மாத்திரம் உதவி செய்தலும், அவர்கள் பிச்சைக்காரர்களா யிருக்கிறதற்காக மாத்திரம் பிச்சைக் காரர்களுக்குக் கொடுத்தலும், பக்தி என்று சொல்லப்படும் புறம்பான தருமத்தின் உபயோகங்களா யிருக்கின்றன; ஆனால் அவைகள், உபயோகத்திலேயே யிருந்தும், அதனிடத்து அன்பிலிருந்தும், வந்த அளவுமட்டும், உள்ளான தருமத்தின் உபயோகங்களா யிருக்கின்றன். ஏனென்றால் புறம்பான தருமம், உள்ளானது இல்லாவிட்டால் தருமமாகாது; உள்ளானது தான் அதை அப்படிச் செய்கிறது; ஏனென்றால் உள்ளானதிலிருந்து புறப்படுகிற புறம்பான தருமம் முன் ஆலோசனையோடு நடக்கிறது. ஆனால், உள்ளான தருமம் அல்லாமல் புறம்பானது, புத்திக்குறைவாயும், அடிக்கடி அநியாயமாயும் நடக்கிறது.

(a)6. உபயோகங்கள், நரகத்திலிருந்து வருகிற தீமைகளுக்கு விரோதமாய் சண்டை செய்கிறவர்கள் தவிர, வேறு எவனிடத்திலும் தருமத்தின் உபயோகங்களாகிறதில்லை.

நரகத்திலிருக்கிற வரையில், அதாவது அவன் உயிரை ஏற்படுத்துகிற அன்பு அங்கே இருக்கிற வரையிலும், அங்கிருந்து வருகிற வரையிலும், ஒரு மனிதன் செய்கிற உபயோகங்கள், தருமத்தின் உபயோகங்களல்ல.

ஏனென்றால், சுவர்க்கலோகத்துடன் பொதுவான்து ஒன்றும் அவைகளுக்கில்லை. மேலும் கர்த்தர் அவைகளி லில்லை. அங்கே இருந்ததும், அங்கிருந்து வந்ததுமான தீமைகளுக்கு விரோதமாக அவன் சண்டை செய்யா திருக்கிற வரையில், ஒரு மனிதனிட உயிரின் அன்பு அங்கே இருக்கிறது, மேலும் அங்கிருந்து வருகிறது; அந்த தீமைகள், தசாக்ஞையில் விவரிக்கப்பட்டு, பிரசித்தப் படுத்தப்பட்டிருக்கிறது; அதை அதன் விளக்கத்தில் அறியக்கூடும். தருமம் அல்லது பக்தி என பாசாங்கில் செய்யப்படுகிற உபயோகங்கள், வேதத்தில் விவரிக்கப்பட் டிருக்கின்றன. தருமமென பாசாங்கில் செய்யப்பட்டவை கள் மத்தேயுவில் இம்மாதிரி விவகரிக்கப்பட் டிருக்கிறது: “அந்நாளில் அநேகர் என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த் தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத் தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற் புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப் பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக் காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள்” என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (VII. 22,23). பக்தி என பாசாங்கில் அவைகளைச் செய்தவர்கள், லூக்காவில் இம்மாதிரி விவரிக்கப்பட் டிருக்கிறது: “அப்பொழுது நீங்கள் உம்முடைய சமுகத்தில் போஜனபானம் பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம் பண்ணினீரே என்று சொல்லு வீர்கள். ஆனாலும் அவர்: “நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்கள் எல்லா ரும், என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று சொல்லுவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” (XIII. 26,27).

தங்களை தீவட்டிகளில் எண்ணெயை இல்லாதவர்களும், அவர்கள் வந்தபோது, "உங்களை அறியேன்" என்று மணவாளன் சொன்னவர்களுமாகிய ஐந்து புத்தியில்லா கன்னிகைகளினால் இவைகளும்கூட அருத்தம் கொள்ளப் படுகிறது (மத்தே. XXV. 1-12). சண்டையினால் நரகத் துக்கு அடுத்ததும் பேய்த்தனமுமுள்ள தீமைகள் நீக்கப் படாத வரையில், தருமம் என்பது ஒன்றுமில்லாததும், ஆதலால் பக்தி ஒன்றுமில்லாததுமான உபயோகங்களை ஒரு மனிதன் செய்யலாம்; ஏனென்றால், அவைகள் அந்த ரங்கமாய் அசுசியாக்கப்பட் டிருக்கின்றன.

(a)7. கர்த்தரிடத்து அன்புக்கும், அயலானிடத்துத் தரு மத்துக்கும் இவைகள் விரோதமா யிருக்கின்றன.

தங்களிட சாரத்தில், தருமத்தின் உபயோகங்களா யிருக்கிற எல்லா உபயோகங்களும் கர்த்தரிடமிருந்து வந்து, மனிதர்கள் மூலமாய் அவரால் செய்யப்படுகின்றன; அப் பொழுது கர்த்தரானவரே, மனிதனோடு உபயோகத்தில் கூடு கிறார்; அல்லது கர்த்தரிடத்து அன்பு, அயலானிடத்து தரு மத் துடன்தானே கூடுகிறது. கர்த்தரிடமிருந்து அல்லாமல், எவனும் எந்த உபயோகத்தையும் செய்யா முடியாதென்று, யோவானில் அவரே கற்பிக்கிறார்: "ஒருவன் என்னிலும், நான் அவனிலும், நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனி களைக் கொடுப்பான்; என்னை அல்லாமல் உங்களால் ஒன் றும் செய்யக்கூடாது" (XV-5); இங்கே கனி என்பது உப யோகமென்று அருத்தம் கொள்ளுகிறது. நரகத்திலிருந்து வரும் தீமைகளுக்கு விரோதமாய் முன்னமே சண்டை பிடிக்காதவனும், தற்காலம் சண்டை பிடிக்காதவனுமாகிய ஒரு மனிதன் செய்கிற உபயோகங்கள், கர்த்தரிடத்து அன்புக்கும், அயலானிடத்து தருமத்துக்கும், எதிரிடையா யிருக்கின்றன என்பது, அந்த உபயோகங்களில் உள்ளுக்

குள்ளாய் மறைந்து இருக்கிற தீமைகள், கர்த்தருக்கு எதி ரிடையாகவும், இம்மாதிரியாக அவரிடத்து அன்புக்கு விரோதமாகவும், ஆகையால் தருமமாயிருக்கிற உபயோகத் தின் அன்புக்கு, எதிரிடையாகவும் இருப்பதினுல் ஏற்படு கிறது. ஒன்று மற்றதற்கு எதிரிடையாயிருப்பதினுல், அவைகள் ஒவ்வாதவைகளாயிருப்பதின் நிமித்தம், நரகமும் சுவர்க்கமும் ஒருமிக்க இருக்க முடியாது. ஆகையால் இவ்விதமான உபயோகங்களைச் செய்கிறவர்கள், அயலானை அதாவது, அகலமானதும், இறுக்கமானதுமான அருத்தங் களில், அயலாரானபடியினுல், தேசத்தாரையும் சர்வ ஜனங் களையும், சபையையும், தங்கள் தேசத்தையும் அவர்கள் வசிக்கிற கூட்டத்தையும், நகரவாசியையும், ஒரு தோழனை யும், ஒரு சகோதரனையும், நேசிக்கிறதில்லை. இதுதான் விஷயமென்று அகன்ற அனுபவத்தினுல் எனக்கு தெளி வாக்கப்பட்டது. அவைகளைச் செய்கிற மனிதனுக்குள் அவ் விதமாக அந்த உபயோகங்களிருக்கின்றன. ஆனுல், மனித னுக்கு வெளியில், பொது நன்மைக்காகவும் தனித்த நன் மைக்காகவும், மனிதனுடன் கர்த்தரால் ஏவப்பட்ட உப யோகங்கள் கூட இன்னுமிருக்கின்றன ; ஆனுல் அவைகள் கர்த்தரிடமிருந்து செய்யப்படுகிறதில்லை ; ஆகையால், அந்த உபயோகங்கள் சுவர்க்கத்தில் பிரதியுபகரிக்கப்படுகிற தில்லை. ஆனுல் உலகத்தில் பிரதியுபகரிக்கப்படுகின்றன, மேலும் ஈடு செலுத்தவும் படவேண்டும்.

(a)8. ஒருவனிட சொந்த நன்மையை அவைகளின் முதன் மையானதும் இறுதியானதுமான நோக்கமாகச் செய்யப்படும் உபயோகங்கள், தரும உபயோகங்க ளல்ல.

மதிக்கப்படுகிற நோக்கம், காரியத்தின் முழுவதும், அல்லது உபயோகத்தின் முழுவதுமாயிருக்கிறதென்பதும், கர்த்தர் அந்த முடிவு என்பது, முடிவிலிருந்து

உபயோகமானது தருமத்தின் உபயோகமென்பதும் இந்தப் பிரிவில் மேலே ரூபிக்கப்பட்டது. ஆகையினல், மனிதனானவன் அதாவது அவனிட சொந்த யுக்தமான நன்மை முடிவாக இருக்கும் போது, அப்பொழுது அவன், காரியத்தின் முழுவதும் அல்லது உபயோகத்தின் முழுவதுமாயிருக்கிறன். ஆதலால், அவனிட உபயோக மானது, உபயோகத்தின் சாரமாயில்லாமல், சரீரத்தி லிருந்து உயிரிருக்கிறதும், ஆனல் சூக்குமசரீர ஆன்மாவி லிருந்து ஒன்று மில்லாத அதன் தோற்றமாக ஆகிறது.

## (B) ஞானத்தைப் பற்றியும் விசுவாசத்தைப் பற்றியும்.

(b) 1. விசுவாச மென்பது உண்மையைக் காட்டிலும் வேறென்றுமில்லை.

தருமம் நின்ற போது, கிறிஸ்துவ உலகமானது தருமமும் விசுவாசமும் ஒன்றென்றும், ஆதலால், தருமம் இல்லாத விடத்தில் எந்த விசுவாசமும் இருக்கமுடியா தென்றும், விசுவாச மில்லாத விடத்தில், எந்த தருமமும் இருக்கமுடியா தென்றும் சொல்லப்படும் உண்மையைப் பற்றிய அறிவை இழக்க ஆரம்பித்தது. இந்த அஞ்ஞானத்தி லிருந்து, தருமம் அல்லது விசுவாசம் என்ன வென்று அவர் களுக்குத் தெரியாதபடிக்கு அவ்வளவு குருட்டுத் தனம் உதித்தது. அப்போது அவர்கள் இந்த இரண்டு பொருள் களையும், சிந்தனையில் மட்டுமல்ல, கோட்பாட்டிலும்கூட பிரிக்கவும், அந்த வழிவகையால், அதுவே ஒன்றுயிருப்பதை, நானுவிதமான பிரிவுகளாக, கிறிஸ்துவ சபையை, விபாகிக் கவும், விசுவாசத்தினிட சித்தாந்தங்களை அனுசரித்து அவைகளைப் பிரத்தியேகப்படுத்தவும் ஆரம்பித்தார்கள். மனிதனில் தருமமும் விசுவாசமும் பிரிக்கப்பட்ட போது,

தருமமும் விசுவாசமும் அறியப்படாம லிருக்கின்றன; ஏனென்றால், தருமமானது விசுவாசத்தை உண்டாக்க வேண்டும்; விசுவாசம் அதைக் கற்பிக்கவேண்டும்; மேலும் தருமமானது விசுவாசத்தை வெளிச்சமாக்கும், விசுவாச மானது அதைப் பார்க்கும். ஆகையால் தருமமும் விசுவாச மும் பிரிக்கப்பட்டால், நீர் ஒரு மெழுகுதிரியை நீக்கும் போது, நீர் வெளிச்சத்தையும் கூட நீக்கி, இருட்டு சம்ப வித்தல் போல, மனிதனில் இதுவுமல்லாமல், அதுவுமல்லா மல், அவனிடமிருந்து இரண்டும் நீக்கப்படுகின்றன. விச்வாச மென்பதனால், (தற்காலத்தில்) ஒரு மனிதன் நம்புகிறதும், ஆனால் அறிந்துக் கொள்ளாதது என்று ஏன் அருத்தம் கொள்ளப்படுகிறது என்பதற்கு இதுதான் காரணம்; ஆகையினால், இது அல்லது அது நம்பப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது; எவனும் அபூர்வமாய் "எனக்குத் தெரியவில்லை" என்று சொல்லாமல், "நான் நம்பு கிறேன்" என்று சொல்லுகிறான். தான் நம்புவது உண்மை யானதா, பொய்யானதா என்று ஒருவனுக்கும் தெரியா தென்பது இதன் பலனாயிருக்கிறது; இம்மாதிரியாக குருடன் குருடனுக்கு வழி காட்டுகிறான், இருவரும் குழியில் விழுகிறார்கள். விசுவாசமானது உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை என்பது, உண்மை விசுவாசத்தை சேர்ந்ததென்றும், விசுவாசம் உண்மையினுடையதென்றும் சொல்லப்பட்டதில் நிஜமாகவே ஒத்துக் கொள்ளப்படு கிறது; ஆனால், இதுவா அல்லது அதுவா உண்மையான தென்று கேட்கப்பட்டால், "அது விசுவாசத்தினுடையது" என்று உத்திரஞ் சொல்லப்படுகிறது, அப்புறம் எந்த விமரிசையும் செய்யப்படுகிறதில்லை. இம்மாதிரியாக, தான் பிறந்தது முதல் மனதில் படிந்த ஒவ்வொன்றையும், கண் களை மூடிக்கொண்டும், புத்தியை மூடிக்கொண்டும், நம்பு

தில, விசுவாசத்தின் உண்மையென்று அங்கீகரிக்கப்படுகிறது. அவ்விதமான குருட்டுத்தனம், பூர்வீகர்களால் எக்காலத்திலும் விசுவாசம் என்று சொல்லப்படவில்லை. ஆனால், சிந்தனையில் எந்த வெளிச்சத்தினாலாவது உண்மையானதென்று அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதை விசுவாசம் என்று சொன்னார்கள். எபிரேய பாஷையில், "ஆமென்," "ஆமுனா" என்கிற ஒரு வார்த்தையினால் உண்மையும் விசுவாசமும் ஏன் அறிவிக்கப்படுகிறதென்பதற்கு இதுதான் காரணம்.

(b)2. அது உணரப்பட்டு அன்பு பாராட்டப்பட்டால் உண்மையானது உண்மையாகிறது ; அது அறியப்பட்டு, சிந்திக்கப்பட்டால், விசுவாசம் என்று சொல்லப்படுகிறது.

விசுவாசத்தை ஆதரிப்பவர்கள், ஞானப் பொருள்கள் மானிடபுத்தியை கடந்து இருப்பதால், அவைகள் அதினால் கிரகிக்க முடியாதென்று அவர் சொல்லுகையில், நம்பப்படும்பொருட்டு இச்சையைப் பிரித்தார்கள் ; ஆனாலும், அவர்கள் ஞானம் உண்டாக்குதலை இல்லை என்று சொல்லுகிறதில்லை. அவர்கள் இல்லை என்று சொல்லாத ஞானம் என்பது உணர்ச்சி என்பதனால், அதாவது, அது அறியப்பட்டு அன்பு பாராட்டப்பட்டால் உண்மையாகிறது என்கிற இதினால் அருத்தம் கொள்ளப்படுகிறது. என்றாலும், உண்மையிடத்து அன்பு, அது உயிரைக் கொடுக்கிறபடியினால், உணரப்பட்ட உண்மை, உண்மையாகச் செய்கிறது. அவ்வித திர்ஷ்டாந்தம் ஏன் உணர்ச்சியாயிருக்கிறதென்பதற்கு காரணம், எல்லா உண்மையும் வெளிச்சத்திலிருக்கிறதென்பதும், மனிதனிட புத்தி அந்த வெளிச்சத்துக்கு உயர்த்தப்பட சக்தியுள்ளதென்பதுமாயிருக்கிறது. எல்லா உண்மையும் ஏன் வெளிச்சத்திலிருக்கிறது என்பதற்கு காரணம், கர்த்தரிடமிருந்து சூரியனாக புறப்

படும் வெளிச்சம் அதே உண்மையாகிற தென்பதாயிருக்கிறது. இந்த காரணத்துக்காக தான் சுவர்க்கத்தில் எல்லா உண்மையும் பிரகாசமாயிருக்கிறது; தெய்வீக உண்மையான வேதமானது, அங்கிருக்கும் தேவர்களுக்கு ஒரு பொதுவான வெளிச்சத்தைத் தருகிறது; ஆகையால் கூட, கர்த்தரும் வார்த்தை என்றும் வெளிச்சமென்றும் சொல்லப்படுகிறார் (யோவான் I. 1—3).

மானிட புத்தியானது அந்த வெளிச்சத்துக்கு உயர்த்தப்பட சக்தியுள்ளதென்பதும், அத்துடன் உண்மையிடத்து அன்பில் இல்லாதவர்களிட புத்தியுடனும், அறிந்து கொள்ளும் வாஞ்சையில் அல்லது, அதிலிருந்து உண்டாகும் பிரதாபத்தின் அன்பில் அவர்களிருப்பார்களாகில், உண்மையினிடத்து அன்பிலிருக்கப்பட்டவர்கள், சுவர்க்கத்தின் வெளிச்சத்தில் மெய்யாய் இருந்து, இதன் நிமித்தம், அவர்கள் வேதத்தை வாசிக்கும்போது ஞானத்திலும், உண்மையை அறிந்து கொள்வதிலும், இருக்கிறார்களென்பதும் அப்படி யிருக்கையில், வேறு யாரும் ஞானத்திலும் உண்மையை உணர்தலிலும் இல்லாமல், அவைகள் உண்மையானதென்றும் பொய்யானதென்றும் தெரிந்து கொள்ளாமல் தங்களிட சொந்த மார்க்கங்களையே உறுதிப்படுத்துதலில் மாத்திரம் இருக்கிறார்கள் என்பதுமாகிய இந்த வித்தியாசத்தோடு இதுதான் விஷயமென்று மிகுந்த அனுபவத்திலிருந்து தெரிந்துகொள்ள எனக்கு சக்தி கொடுக்கப்பட்டது. அத்துடன் உண்மையினிடத்து அன்பில் இருக்கப்பட்டவர்கள் வேதத்தை வாசித்து, அந்த அன்பிலிருந்து நினைக்கும்போது, கோட்பாட்டிலேயே தங்கள் புத்தியின் திர்ஷ்டியைப் விடாபூட்டாய் வைத்து, அது உறுதிப்படுத்தப்படுவதற்கு முன், அது நிஜமாவென்று இம்மாதிரியாக விசாரிக்கிறார்கள் என்கிற இன்னும் இந்த வித்தியாசத்துட

னும். ஆனால், மற்றவர்கள் எல்லாம், அது நிஜமா என்பதை தெரிந்து கொள்ள கவனிக்காமல், ஞாபகத்திலிருக்கிற அறிவிலிருந்து ஒரு கோட்பாட்டை வகிக்கிறார்கள்; அவர்களுக்கு பாண்டித்திய நற்பெயர் இருந்தால் அந்த கோட்பாட்டை வேதத்தினாலும் அறிவினாலும், அவர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். தனக்கும் மற்றவர்களுக்கும் நிஜமாகத் தோன்ற அவ்வளவு அளவு பொய்யாயிருக்கிற ஒவ்வொரு பொருளையும் அது உறுதிப்படுத்தக் கூடியதாக அகங்காரமாயிருக்கிற கல்வியின் மனோசக்தி அவ்விதமாயிருக்கிறது. இதுதான் சமய பேதங்களுக்கும் பிரிவினைகளுக்கும், சபையில் எதிரிடையான கோட்பாடுகளின் காவலுக்கும், உற்பத்தி ஸ்தானம். உண்மையினிடத்து அன்பி விருக்கப்பட்டவர்கள் புத்திசாலிகளென்கிறதும், ஞானிகளாகிறார்களென்கிறதும், அப்படி யிருக்கையில், மற்றவர்கள் எல்லாம் ஸ்தூலமாய் இருக்கிறார்களென்கிறதும், ஞான விஷயங்களில் உன்மத்தர் என்கிறதுமான இந்த வித்தியாசம் இதிலிருந்துகூட உண்டாகிறது. உண்மையானது அறியப்பட்டு சிந்திக்கப்பட்டபோது ஏன் விசுவாசம் என்று சொல்லப்படுகிறது என்பதற்குக் காரணமானது, அறிந்துகொண்ட உண்மை, நம்பப்படவேண்டியதா யிருக்கிற ஞாபக சங்கதியாக பின்னிட்டு ஆகிறது என்பதாயிருக்கிறது; ஆகையால் விசுவாசமானது உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை என்பது விசதமாகிறது.

(b) 3. விசுவாசத்தின் உண்மைகள் ஒரு விஷயத்தில் கர்த்தரையும், மற்றதில் அயலானையும் எதிர்பார்க்கின்றன.

எல்லா உண்மைகளும், தங்களுக்கு மேலே கர்த்தரும் சுவர்க்கமும், அவைகளுக்கு அடுத்து உலகமும் அயலானும், அவைகளுக்குக் கீழே பிசாசும் நரகமும் என்கிற இந்த மூன்று பொருள்களையும் தங்களிட சர்வ வியாபக

மானவைகளென்று எதிர் பார்க்கின்றன. அவன் எப்படி பிசாசினிடத்திலிருந்தும், நரகத்திலிருந்தும் பிரிக்கப்பட்டு, அவனிருக்கிற உலகத்தின் வாழ்க்கையினுலும், அவன் கூடி வாழும் அயலானுடன் வாழ்க்கையினுலும், கடவுளுடனும் சுவர்க்கத்துடனும் சேர்க்கப்படக் கூடுமென்று, உண்மைகள் மனிதனுக்குக் கற்பிக்கும்; இந்த இரண்டு விதமான வாழ்க்கையின் வழிவகையால், எல்லா பிரிவினையும் சேர்க்கையும் உண்டாக்கப்படுகின்றன.

ஒரு மனிதன் பிசாசினிடத்திலிருந்தும் நரகத்தினிடமிருந்தும் பிரிக்கப்பட்டு, கடவுளுடனும்,சுவர்க்கத்துடனும் சேர்க்கப்படும் பொருட்டு, இவைகள் பிசாசாயும் நரகமாயுமிருப்பதால், அவைகளிலிருந்து உண்டாகிற தீமைகளையும் பொய்களையும் அவன் தெரிந்திருக்கவேண்டும்; இவைகள் கடவுளாகவும் சுவர்க்கமுமாகிறபடியினுல், அவைகளிலிருந்து உண்டாகிற நன்மைகளையும் உண்மைகளையும் அவன் தெரிந்திருக்கவேண்டும். தீமைகளும் பொய்களும் ஏன் பிசாசும் நரகமுமாயிருக்கின்றன என்பதற்குக் காரணமானது, இது அவைகளின் உற்பத்தியாயிருக்கிற தென்பதாயிருக்கிறது; அம்மாதிரியே, அவைகள் அங்கிருந்து வருகிறபடியினுல், நன்மைகளும் உண்மைகளும், கடவுளாகவும் சுவர்க்கமுமாயிருக்கின்றன. மனிதனுனவன் பின் சொன்னதுடனும் முன் சொன்னதுடனும் பரிச்சயமுள்ளவனுயிருந்தாலொழிய, நரகத்திலிருந்து புறப்படவும், சுவர்க்கத்தில் பிரவேசிக்கவும், எந்த வழியையும் பார்க்கமுடியாது. உண்மைகள் இதைக் கற்பிக்கும், கற்பிக்கிற உண்மைகள் வேதத்திலும் வேதத்திலிருந்தும் மனிதனுக்குக் கொடுக்கப்படுகின்றன. மேலும், சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் இரண்டுக்கும் வழி உலகத்திலிருந்து வருகிறபடியினுலும், மனிதனிட வாழ்க்கை உலகத்திலும், அங்கே அவனிட அயலானுட

னும் இருக்கிறபடியினுலும், அந்த வாழ்க்கை தான் உண்மை காண்பிக்கிற வழியாயிருக்கிறது. ஆகையால், மனிதனிட வாழ்க்கை வேதத்திலுள்ள உண்மைகளுக்குத் தக்கபடி இருந்தால், நரகத்துக்கும், நரகத்திலிருந்து வரும்வழி மூடப்பட்டு, கடவுளுக்கும் கடவுளிடமிருந்தும் வரும்வழி திறக்கப்பட்டு, அவனிட வாழ்க்கையானது, அவனில் கடவுளிட வாழ்க்கையாகிறது. "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்று யோவானில் சொல்லப்பட்ட கர்த்தரிட திருவசனத்தால் இதுதான் அருத்தம் கொள்ளப்படுகிறது (XIV. 6). ஆனுல், மற்றப்படி, மனிதனிட வாழ்க்கையானது வேதத்தின் உண்மைகளுக்கு எதிரிடையாயிருந்தால், அப்பொழுது சுவர்க்கத்திலிருந்தும் சுவர்க்கத்துக்கும் போகும் வழி மூடப்பட்டு, நரகத்துக்கும், நரகத்திலிருந்தும் வரும்வழி திறக்கப்பட்டு, அவனிட உயிர் உயிரல்லாமல் மரணமாகிறது.

மனிதனில் கர்த்தரிட உயிர், அயலானுக்குச் செய்யும் தருமத்தின் உயிரென்பதும், உபயோகங்களிடத்து அன்பு பாராட்டுதலில் ஐக்கியம் உண்டாகிறதென்பதும், தரும விஷயத்தைப்பற்றிக் கூறியதில் மேலே காண்பிக்கப்பட்டது; உண்மைகள் இந்த வாழ்வைக் கற்பிக்கிறபடியினுல், ஒரு விஷயத்தில் அவர்கள் கர்த்தரையும், மற்றதில் அயலானையும் எதிர்பார்க்கிறார்களென்று விசதமாகிறது.

(b) 4. உண்மைகள், எப்படி கர்த்தரைச் சமீபிக்கப்பட வேண்டுமென்றும், பின்னிட்டு மனிதன் மூலமாய் எப்படி கர்த்தர் உபயோகங்களைச் செய்கிறரென்றும் கற்பிக்கின்றன.

எப்படி கர்த்தர் சமீபிக்கப்படுகிறுர் என்பது வேறு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, தசாக்ஞையின் விவரணத்தில் முழுமையும் காண்பிக்கப்படும்; ஆனுல் அப்

பொழுது கர்த்தர், மனிதனோடு உபயோகங்களை எப்படிச் செய்கிறார் என்று இப்பொழுது காண்பிக்கப்படவேண்டும். மனிதனானவன் தன்னிடமே இருந்து தானே நன்மையாயிருக்கிற நன்மையானது எதையும் செய்யமாட்டானென்றும், ஆனால் அவன் கர்த்தரிடமிருந்து அப்படிச் செய்யக்கூடுமென்றும், ஆதலால், உபயோகம் நன்மையானபடியினால், தானே உபயோகமாயிருக்கிற எந்த உபயோகத்தையும் அவன் செய்ய மாட்டானென்றும், தெரிந்திருக்கிறது; கர்த்தரானவர், நன்மையாயிருக்கிற ஒவ்வொரு உபயோகத்தையும் மனிதன் மூலமாய்ச் செய்கிறாரென்று இதிலிருந்து ஏற்படுகிறது. கர்த்தரானவர், மனிதனானவன், தன்னிடமிருந்தேபோல், நன்மையைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறாரென்று, வேறு இடத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. மனிதனானவன், மேலும், தன்னிடமிருந்தேபோல், எப்படி நன்மையைச் செய்கிறதென்று, வேதத்தின்உண்மைகள் கூட கற்பிக்கின்றன. மேலும் உண்மைகள் அதைக் கற்பிக்கிறதினால், உண்மைகள் அறிவுக்கும் சிந்தைக்கும், நன்மைகள் சித்தத்திற்கும் செய்கைக்கும் சார்ந்ததென்றும்—ஒரு மனிதன் இச்சித்துச் செய்கிறதை, நன்மை என்றும், அவன் தெரிந்துகொண்டு நினைக்கிறதை உண்மை என்றும், அவன் சொல்லுகிறபடியினால்—இம்மாதிரியாக உண்மைகள் அவைகளை இச்சிப்பதினாலும் செய்வதினாலும் நன்மைகளாகின்றனவென்றும், செய்கையில், இம்மாதிரியாக நன்மையில், இச்சித்தலும், சிந்தித்தலும், அறிந்து கொள்ளலுமிருக்கின்றனவென்றும், விசதமாயிருக்கிறது. ஆகையினால் இது தன்னிலேயே, சிந்தையிலிருக்கும் உண்மைகளிலிருந்து ஒரு புறம்பான உருவத்தையும், சித்தத்தின் அன்பிலிருந்து ஒரு அந்தரங்கமானதையும் உடைத்தாயிருப்பதின் நிமித்தம், இறுதியானவைகளில் இவைகளின் சமஸ்தமும், நன்மை

யாயிருக்கிறது. ஆனால், கடவுளானவர், நன்மைகளாயிருக்கிற உபயோகங்களை மனிதனுடன் எப்படிச் செய்கிறாரென்று, அவரிட தெய்வீக பராமரிப்பின் சட்டங்களிட விவரணத்தில் சொல்லப்பட்டும், காண்பிக்கப்பட்டும்கூட இருக்கிறது.

(b) 5. ஒவ்வொரு மனிதனும், பரமார்த்தமானதும், சன்மார்க்கமானதும், தேசாசாரமானதுமான உண்மைகளால் கற்பிக்கப்படுகிறன்.

முதலாய், உண்மைகள் ஞானமானதும், சன்மார்க்கமானதும், தேசாசாரமானதும் என்றும்; இரண்டாவதாய் ஞானமுள்ள மனிதன் ஒரு சன்மார்க்கமானவனும் தேசாசாரத்தை அனுசரிப்பவனுமென்றும்; மூன்றாவதாய் பரமார்த்தமானது, சன்மார்க்கமானதிலும் தேசாசாரமானதிலும் இருக்கிறதென்றும்; நான்காவதாய், அவைகள் பிரிக்கப்பட்டால், கடவுளுடன் ஐக்கியம் இல்லையென்றும் காண்பிக்கப்படும்.

முதலாய், ஞானமானதும் சன்மார்க்கமானதும், தேசாசாரமானதுமான உண்மைகள் எவைகளாயிருக்கின்றன.

ஞான உண்மைகள், கடவுளைக்குறித்து, அவர் பிரபஞ்சத்தின் சிருட்டி கர்த்தாவாகிய ஒருவர் என்றும், அவர் முடிவற்றவரென்றும், நித்தியமானவரென்றும், சர்வவல்லமையுள்ளவரென்றும், சர்வஞானமுள்ளவரென்றும், சர்வவியாபகமானவரென்றும், பூர்வீக விவேகமுள்ளவர் என்றும், மனுஷத்தன்மை சம்பந்தப்பட்ட வரையில் கர்த்தர் அவரிட குமாரரென்றும், சிருட்டிகர்த்தாவாகிய கடவுளும் அவரும் ஒருவரென்றும், அவர் மீட்பவரும் மார்க்க சீர்திருத்தக்காரரும், குணப்படுத்துபவரும், இரக்ஷகருமாயிருக்கிறார் என்றும், அவர் சுவர்க்கத்துக்கும் உலகத்துக்கும் கடவுள் என்றும், அவர் பரம இச்சா சத்தியும், பரம ஞான சத்தியுமா

யிருக்கிறார் என்றும், அவர் நன்மையேயாகவும் உண்மையே யாகவும் இருக்கிறார் என்றும், அவர் உயிரேயாகவு மிருக்கி றார் என்றும், அன்பினிடவும், தருமத்தினிடவும், நன்மையி னிடவும், ஒவ்வொன்றும், மேலும் ஞானத்தினிடவும், விசு வாசத்தினிடவும் உண்மையினிடவும் ஒவ்வொன்றும் அவ ரிட மிருந்து வருகிறது, மனிதனிடமிருந்து ஒன்றும் வரு கிறதில்லை என்றும், ஆகையினால், எந்த அன்பினாலும், தரு மத்தினாலும், நன்மையினாலும், எந்த மனிதனுக்கும் சுகிரு தம் இல்லை என்றும், எந்த ஞானத்தினாலும், விசுவாசத்தின லும், உண்மையினாலும் அது இல்லை என்றும், ஆகையினால் அவர் மட்டும் பூஜிக்கப்பட வேண்டும் என்றும், இன்னும், பரிசுத்த வேதம் தெய்வீகமானது என்றும், இறந்த பிறகு ஓர் உயிர் இருக்கிறது என்றும், நன்றாய் ஜீவிக்கிறவர் களுக்கு சுவர்க்கமும், தீமையாய் ஜீவிக்கிறவர்களுக்கு நரகமுமாக, ஒரு சுவர்க்கமும் நரகமுமிருக்கின்றனவென்றும் வேதம் கற்பிக்கிறவைகளா யிருக்கின்றன. இன்னும் ஞான ஸ்நானத்தைப் பற்றியும், இராப்போஜனத்தைப் பற்றியும் போல், வேதத்திலிருக்கும் கொள்கைக்கு சம்பந்தப்பட்ட அநேக இதர விஷயங்கள் கற்பிக்கப்படுகின்றன. இவை களும், இவைகளைப் போன்றவைகளும் சரியாய் ஞான உண்மைகள். ஆனால் வேதமானது தன்னிட அயலானுடன் மனிதனிட வாழ்க்கையைக் குறித்து, கற்பிக்கிறவைகள், சன்மார்க்க உண்மைகளாயிருக்கின்றன; இந்த வாழ்க்கை தருமமென்று சொல்லப்படுகிறது; உபயோகமாயிருக்கிற அதினிட நன்மைகள், சாதாரணமாய், நீதிக்கும், நேர்மைக் கும, உண்மைக்கும், சத்திய நடத்தைக்கும், கற்புடைமைக் கும், மிதானுபோகத்துக்கும், உண்மைக்கும், புத்திக்கும், பரோபகாரத்துக்கும் மாட்டேற்று உடைத்தா யிருக் கின்றன. சன்மார்க்க வாழ்வின் உண்மைகளுக்கு, தருமத்

னைத அழிக்கிறதும், சாதாரணமாய் அநீதிக்கும், நேர்மை இன்மைக்கும், நாணயக் கேட்டுக்கும், மோசத்துக்கும், விரகதாபத்துக்கும், பெருந்தீனிக்கும், பொய் பேசுதலுக்கும் தந்திரத்துக்கும், வன்மைக்கும், அருவருப்புக்கும், பழி வாங்குதலுக்கும், துர்குணத்துக்கும் மாட்டேற்று உள்ளது மானவைகளுக்கு எதிரிடையான பொருள்களும் கூட சார்ந்திருக்கின்றன. பின் சொன்னவைகள் சன்மார்க்க வாழ்வின் உண்மைகளென்றும் கூட ஏன் சொல்லப்படுகிறது என்பதற்குக் காரணமானது, நல்லதானாலும் கெட்டதானாலும், சன்மார்க்க வாழ்வின் உண்மைகளென்று ஒரு மனிதன் நினைக்கிற ஒவ்வொன்றையும் அவன் உண்மைகளில் வகுப்பு வரையறை செய்வதாலாகிறது ; ஏனென்றால், இது தீங்கானதென்றும், அது நல்லதென்றும், சொல்வது உண்மையென்று அவன் சொல்லுகிறான். இவைகள் சன்மார்க்க உண்மைகள். ஆனால் தேசாசாரமான உண்மைகள், செய்யவேண்டிய அநேக கடமைகளுக்கும் மற்றபடி, செய்கையில் இருக்கிற நானாவிதமான, அலங்கோலங்களுக்கும், சாதாரணமாய் சுட்டுள்ள இராச்சியங்களிடவும் குடியரசு நாடுகளிடவும் தேசசட்டங்கள், தேசாசார உண்மைகளாயிருக்கின்றன.

2) இரண்டாவதாய், பரமார்த்தமானவன், சன்மார்க்கமானவனாகவும், தேசாசாரமானவனாகவும் கூட இருக்கிறான்.

மேலே விரித்துச் சொல்லிய ஞானமான உண்மைகள் தெரிந்தவர்களும், முக்கியமாய் அவைகளைப்பற்றிப் பேசுகிறவர்களும், இன்னும் அதிகமாய் கொஞ்சம் பரிமாண அறிவுடன் அவைகளைப் பார்க்கிறவர்களும் ஞானிகளென்று அநேகரால் எண்ணப்படுகிறது ; ஆயினும், அப்பேர்ப்பட்டவர்கள் ஞானிகளல்ல. ஏனென்றால், சும்மாய் தெரிந்து

கொள்ளலும், அப்படி அறிந்து கொள்ளுகிறதிலிருந்து நினைத்தலும் பேசுதலும், ஒவ்வொரு மனிதனுக்குமிருக்கும் புத்தி மனோசக்தியிலிருந்து பார்த்தலுமாகிய இது மனிதனை ஞானியாக்குகிறதில்லை; ஏனென்றால், இவ்விதமானவர்கள், கர்த்தரிடமிருந்து அன்பில்லாமலிருக்கிறார்கள், கர்த்தரிடமிருந்து வரும் அன்பு, தருமம் என்று சொல்லப்பட்ட உபயோகங்களை நேசித்தலாகிறது. தருமத்தில் கர்த்தரானவர் தாமே மனிதனுடன் சேர்ந்து அவனை ஞானியாக்குகிறார்; ஏனென்றால் அவன் அப்பொழுது தான் தன்னிடமிருந்தல்லாமல் கர்த்தரிடமிருந்து உபயோகங்களைச் செய்கிறான். இதை வேதத்தில் அநேக வாக்கியங்களிலும், யோவானில் இம்மாதிரியாகவும், கர்த்தர் கற்பிக்கிறார்: "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திராவிட்டால், அது தானாய்க் கனி கொடுக்க மாட்டாததுபோல், நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்க மாட்டீர்கள். நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்;' என்னை அல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (XV. 4, 5). கனிகள், உபயோகங்கள் அல்லது தருமத்தின் நன்மைகளாகின்றன. தருமத்தின் நன்மைகள், சன்மார்க்க நன்மைகள் **தவிர** வேறல்ல. ஆகையினால் ஞானியானவன் சன்மார்க்கமானவனாகவுமிருக்கிறானென்பது விசதமாகிறது. ஒரு சன்மார்க்கமானவன் தேசாசாரமானவனாகவும் கூட இருக்கிறானென்பதற்குக் காரணம், சாதனைகளென்றும், பணிவிடைகளென்றும் கிருத்தியங்களென்றும் சொல்லப்பட்ட கிரியையில், தேச சட்டங்களே உபயோகங்களாயிருக்கின்றன என்பதாயிருக்கிறது.

"நீ களவு செய்யாதிருப்பாயாக" என்கிற ஏழாவது கற்பனையை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். இந்த கற்பனையின் ஞானபோதம், மனிதனுனவன் கர்த்தரிடமிருந்து எதையும் எடுத்துக் கொண்டு, தன்தாக ஆரோபித்து, தன்னுடையதென்று சொல்லக் கூடாதென்பதும், மேலும், எவனிடமிருந்தும் அவனிட விசுவாசத்தின் உண்மைகளை, பொய்களைக் கொண்டு, எடுத்துக் கொள்ளக் கூடாதென்பதுமா யிருக்கிறது. மனிதனுனவன் தன்னிட அயலானிடத்தில் உண்மையில்லாமலும், அநீதியாயும், மோசமாயும் நடக்கக்கூடா தென்பதும், கள்ளத்தனமாய் அவனிட சொத்துக்களைப் போக்கடிக்கக்கூடா தென்பதும் இந்த கற்பனையின் சன்மார்க்க உபதேசமாயிருக்கிறது; ஆனால் இந்த கற்பனையில் தேசாசார உபதேசம், மனிதன் திருடக்கூடா தென்பதாயிருக்கிறது. கர்த்தரால் நடத்தப் பட்டு, அந்த ஏதுவினுல் ஞானியாயிருக்கிறவன், சன்மார்க்க மானவனும் தேசாசார மானவனுமாயிருக்கிறனென்று யார் பார்க்க முடியாது? நீ "கொலை செய்யாதிருப்பாயாக" என்கிற ஐந்தாவது கற்பனையிலிருந்து ஒரு உதாரணத்தை கூட எடுத்துக் கொள்ளலாம். கர்த்தரை மறுத்தல், அவரையே கொன்று சிலுவையில் அறைதலாயிருக்கிறபடியினுல், மனிதனுனவன் கடவுளை, இம்மாதிரிய கர்த்தரை மறுக்கக் கூடாதென்பது இந்த கற்பனையின் ஞானபோத மாயிருக்கிறது; மேலும் அப்படிச் செய்வதால் அவனிட ஆன்மாவை நீ கொல்லுகிறபடியினுல், நீ ஒரு மனிதனிட ஞானவாழ்க்கையை நாசம் செய்யக்கூடாது; வன்மமும், பழிவாங்குதலும், இவைகளிலே அவனைக் கொல்லுதலைக் கொள்ளுகிறபடியினுல், நீ உன்னிட அயலானை வெறுத்து, அவனுக்கு விரோதமாய் பழிவாங்குதலைச் சீராட்டக்கூடா தென்பது இந்த கற்பனையின் சன்மார்க்க போதமாயிருக்கிறது.

அவனிட சரீரத்தைக் கொல்லக்கூடா தென்பது இந்த கற்பனையின் தேசாசார சட்டமாயிருக்கிறது. மேலும், இந்த உதாரணத்திலிருந்து, கர்த்தரால் நடத்தப்பட்டவனாயிருக்கிற ஞானியானவன் சன்மார்க்க மானவனும் தேசாசார மானவனுமாயிருக்கிறனென்று அறியப்படுகிறது; நாம் உடனே பேசப்போகும் தன்னைத் தானே நடத்திக் கொள்பவனிடம் அது வேறு விதமாயிருக்கிறது.

3) மூன்றாவதாய், பரமார்த்தமானது சன்மார்க்கமானதிலும் தேசாசாரமானதிலுமிருக்கிறது.

கர்த்தரானவரே மனிதனுடன் உபயோகங்களிடத்து அன்பில் அல்லது அயலானுக்குச் செய்யும் தருமத்தில் சேருகிறரென்று மேலே சொல்லியதிலிருந்து இதுபின் தொடருகிறது. ஞானமானது கர்த்தரிட ஐக்கியத்திலிருந்தும், சன்மார்க்கமானது தருமத்திலிருந்தும், தேசாசாரமானது அதின் சாதனையிலிருந்தும் உண்டாகிறது. இரக்ஷிக்கப்படும் பொருட்டு, பரமார்த்தமானது மனிதனில் இருக்க வேண்டும். மனிதனுக்கு மேலும் அல்லது வெளியிலுமல்லாமல், அவனுக்குள்ளே, கர்த்தரிட மிருந்து இது இருக்கிறது; இது மனிதனிட அறிவிலும் மட்டும், அதிலிருந்து அவனிட சிந்தனையிலும் பேச்சிலும் இது இருக்க முடியாது; அது அவனிட வாழ்விலிருக்க வேண்டும்; அவனிட வாழ்வானது இச்சிப்பதிலும் செய்வதிலுமாயிருக்கிறது; ஆகையினால், அறிதலும் நினைத்தலும் இச்சித்தலும் செய்தலுமாக கூட இருக்கிறபோது, பரமார்த்தமானது சன்மார்க்கமானதிலும் தேசாசாரமானதிலு மிருக்கிறது. எவனாவது ஒருவன், "நான் எப்படி இச்சித்துச் செய்யக் கூடும்" என்று சொன்னால், "நரகத்திலிருந்து வரும் தீமைகளுடன் சண்டை செய், உன்னிடமிருந்தல்லாமல், கர்த்தரிடமிருந்து நீ இச்சிக்கவும் செய்யவும் கூடும்; ஏனென்றால், தீமைகள்

நீக்கப்பட்டபோது, கர்த்தரானவர் எல்லாவற்றையும் செய்கிறார் " என்பது உத்திரமாயிருக்கிறது.

4) நான்காவதாய், இவைகள் பிரிக்கப்பட்டால் கர்த்தருடன் ஐக்கியமில்லை. இது அறிவிலிருந்தும் அனுபவத்திலிருந்தும் அறிந்துகொள்ளலாம். அறிவிலிருந்து.—

ஒரு மனிதனானவன் சுவர்க்கத்தினிடவும் திருச்சபையினிடவும் எல்லா உண்மைகளையும் தெரிந்து கொண்டு பார்க்கும்படியாக அவ்வித ஞாபகத்தையும் புத்தியையும் உடைத்தாயிருந்தும், அவைகளில் எதையும் செய்ய மனதில்லாதிருந்தால், அவன் விவேக முள்ளவனாயிருந்தாலும், துன்மார்க்கன் என்றும் அத்துடன் நிஜமாகவே தெண்டனைக்கு அதிகமாக பாத்திரமாயிருக்கிறானென்றும் அவனைப் பற்றிச் சொல்லப்படாதா? ஆகையினால், சன்மார்க்கமானதும் தேசாசாரமானதுமானதிலிருந்து பரமார்த்தமானதைப் பிரிக்கிறவன், ஞானியுமல்லவென்றும் சன்மார்க்கமானவனல்லவென்றும் தேசாசாரமானவ னல்லவென்றும் பின் தொடருகிறது. அனுபவத்திலிருந்து.—உலகத்தில் அவ்வித நடத்தையுள்ள மனிதர்கள் இருக்கிறார்கள், நான் அவர்களுடன் இறந்த பிறகு பேசியிருக்கிறேன் ; அவர்கள் பூரணமாய் வேதத்தையும் ஆகையினால் அநேக உண்மைகளையும், தெரிந்துகொண்டு, இந்தக் காரணத்துக்காக பரமண்டலத்தில் நட்சத்திரங்களைப்போல், அவர்கள் பிரகாசிக்க வேண்டுமென்று நம்பினார்களென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆனால் அவர்களிட வாழ்வு பரிசோதனை செய்யப்பட்டதில், அது ஸ்தூலமானதென்றும் உலக சம்பந்தமானதென்றும், தங்களுக்குள்ளே நினைத்து இச்சித்த தீமைகளுக்காகவும் துன்மார்க்கத்திற்காகவும், நரகத்துக்கு அடுத்ததென்றும் கண்டுபிடிக்கப்பட்டது. ஆகையினால், வேதத்திலிருந்து அவர்கள் கற்றுக்கொண்ட ஒவ்வொன்றும் அவர்களிடமிருந்து

எடுக்கப்பட்டு, தங்களிட சொந்த இச்சைகளின் சரிரமாய், அவர்கள், தங்களிட உலக சிந்தைகளுடன் ஒத்து, உன் மத்தமாய்ப் பேசியதும் தங்களிட உலக ஆசைகளுக்குத் தக்கபடி இழிவாய் நடந்ததுமான நரகத்தில் தங்களைப் போன்ற வர்களுடன் இருக்க தள்ளப்பட்டார்கள்.

(b) 6. விசுவாசமானது உண்மைகளைத் தெரிந்துகொண்டு நினைப்பதிலும், தருமம் அவைகளை இச்சித்துச் செய்வதிலும் இணங்கி இருக்கிறது.

உண்மையானது, மனிதன் அதைத்தெரிந்து நினைக்கும் போது விசுவாசமென்று சொல்லப்படுகின்ற தென்பது மேலே காண்பிக்கப்பட்டது; ஆனால் அந்த உண்மை யானது, மனிதன் இச்சித்து அதைச் செய்யும்போது தரும மாகிறதென்பது இப்பொழுது ஸ்தாபிக்கப்பட வேண்டும். பூமியில் இல்லாதபோது விதையாக மாத்திரம் இருக்கிற தும், ஆனால் அது பூமிக்குள் வந்தபோது ஒருசெடி அல் லது மரமாய், தன்னிட சொந்த உருவத்தைப் போட்டுக் கொண்டு, ஆகையால் வேறு பெயரை எடுத்துக்கொள்ளு கிறதுமான விதையைப்போல உண்மையானது இருக்கிறது. மனிதனுக்குப் பிரத்தியேகமாய், சரீரத்துக்குச் சரிப்பட்ட ஒரு துணி துண்டாக மாத்திரம் இருக்கிறதும், ஆனால் போட்டுக்கொண்டபோது அதில் மனிதனிருக்கிற ஆடையா கிறது மாகிய ஆடையைப்போலவும், உண்மை கூடயிருக்கி றது, விஷயம் உண்மையுடனும் தருமத்துடனும் அதைப் போன்றிருக்கிறது. உண்மையானது, அறியப்பட்டு, நினைக் கப்படும்போது மாத்திரம், உண்மையாக மாத்திரம் இருந்து, விசுவாசமென்று சொல்லப்படுகிறது; ஆனால், அது மனித னால் இச்சித்துச் செய்யப்படும்போது, ஒரு விதையானது ஒரு செடியாக அல்லது மரமாக ஆகிறதுபோல அல்லது ஒரு துணியின் துண்டு ஆடையாய், ஒரு மனிதனை மூடுகிறது

மபோல, தருமமாகிறது. தெரிந்துகொள்ளலும், அதிலிருந்து நினைத்தலும், சித்தத்துக்கு வேருய், ஆதலால் செய்கைக்கும் வேருய் இரண்டு மனேசக்திகளாகவும் கூட இருக்கின்றன; மேலும் அவைகள் பிரிக்கப்பட தகுந்ததாகவும் கூட இருக்கின்றன•; ஏனென்ருல், தான் இச்சிக்காததும், ஆகையால் செய்யாததுமான அநேக பொருள்களை ஒரு மனிதன் தெரிந்துகொண்டு நினைக்கலாம்; ஆனல், பிரிக்கப்பட்டபோது, மனிதனிட உயிராக ஏற்படுகிறதில்லை. ஆனல் சேர்க்கப்பட்டபோது அவைகள் அப்படியாகிறது. விசுவாசத்துடனும் தருமத்துடனும் விஷயம் அப்படியே இருக்கிறது.

இந்த நீரீட்சணங்கள் தாரதம்மியம் பார்ப்பதினல் இன்னும் கொஞ்சம் திருஷ்டாந்தப் படுத்தப் படலாம். உலகத்திலுள்ள ஒளியும் சூடும் பிரிக்கப்படவும் சேர்க்கப்படவும் தகுதியான இரண்டு பிரத்தியேகமான பொருள்களாயிருக்கின்றன. உண்மையில், கார் காலத்தில் அவைகள் பிரிக்கப்படுகின்றன, வேனிற் காலத்தில் சேர்க்கப்படுகின்றன; ஆனல் பிரிக்கப்பட்ட போது கந்தமூல உயிரின் உற்பத்திக்கு இடம் கொடுக்கிறதில்லை, அதாவது, அவைகள் ஒன்றையும் விளைவிக்கிறதில்லை; ஆனல் சேர்க்கப்பட்டபோது அவ்வித உயிரையும், விளைவையும் உண்டாக்குகிறது. மறுபடியும், மனிதனில் சுவாசா சயங்களும் இருதயமும், அதனிட சலனங்கள் வேறு செய்யப்படவும் இணங்கப்படவும் கூடிய இரண்டு வேருன பொருள்களாயிருக்கின்றன; அவைகள் மூர்ச்சையிலும் திக்குமுக்கிலும் பிரிக்கப்படுகின்றன, ஆனல், பிரிக்கப்பட்ட போது மனிதனிட சரீரத்தின் உயிரை அவைகள் ஆதரிக்கிறதில்லை: மற்றபடி அவைகள் இணங்கசெய்யப்பட்ட போது அவைகள் அவைகளை ஆதரிக்கின்றன. மனிதனிட அறிவுடனும்,

விசுவாசம் அடங்கியிருக்கிறதும், அதினின்று வருகிறது மான சிந்தையுடனும், தருமம் அடங்கியிருக்கிற சித்தத்துடனும் செய்கையுடனும் விஷயம் அதைப் போன்றேயிருக்கிறது.' சுவாசாசயங்கள் கூட சிந்தையுடனும் அதிலிருந்து விசுவாசத்துடனும் காரண காரிய சம்பந்தமாயிருக்கிறது. அம்மாதிரிதான் வெளிச்சமும் செய்கிறது; மேலும் இருதயமானது சித்தத்துடனும் அதிலிருந்து தருமத்துடனும் காரண காரிய சம்மந்த மாயிருக்கிறது. சூடும் அப்படியே செய்கிறது. இந்த உதாரணங்களால், தருமத்திலிருந்து பிரிக்கப்பட்ட விசுவாசத்தில், இச்சித்தலிலிருந்தும் செய்தலிலிருந்தும் பிரிக்கப்பட்ட அறிந்து கொள்ளுதலிலும் நினைத்தலிலும் பார்க்கிலும் உயிரின் அதிகம் இல்லையென்று அறியப்படலாம்; அதிலிருக்கும் உயிரானது, மனிதன் நினைக்க இச்சிக்கிறானென்பதும், தானே பேசவும், இம்மாதிரியாக நம்பவும் செய்கிறானென்பதுமாகிய இதில் முழுமையும் அமைந்திருக்கிறது.

(b) 7. ஆதலால், மனிதனோடு இருக்கும் கர்த்தரின் இச்சா சத்தி உண்மைகளை இச்சித்து செய்வதில் அமைந்திருக்கிற தருமத்தில் இருக்கும் போது, கர்த்தரின் ஞானசத்தி, உண்மைகளைத் தெரிந்து கொண்டு நினைக்க இருக்கிறதாகிய விசுவாசத்தில் மனிதனுடன் இருக்கிறது.

கடவுளின் இச்சா சத்தி என்னவென்றும் அவரிட ஞான சத்தி என்னவென்றும் மேலே காண்பிக்கப்பட்டது. நாம் தருமத்தையும் விசுவாசத்தையும், மனிதனில் தருமமாயிருக்கிற உபயோகங்களின் ஆசையில் கர்த்தரின் ஐக்கியத்தையும் பற்றிப் பேசினோம்; மனிதனில் விசுவாசத்துடன் கர்த்தரின் ஐக்கியத்தைப் பற்றிகூட இப்பொழுது பேசுவோம். கர்த்தரானவர், விசுவாசத்திலும், தருமத்திலுள்ள விசுவாசத்திலிருந்தும் அல்லாமல், தருமத்திலும் விசுவா

சுத்திலுள்ள தருமத்திலிருந்தும் மனிதனோடு தானே சேருகிறார்; காரணமானது, அவனிட உயிராகிற அவன் சித்தத்தின் அன்பில், இம்மாதிரியாக அவன் ஞான உயிராகிற தருமத்தில், மனிதனுடன் கர்த்தரிட ஐக்கியம் இருக்கிற தென்பதாயிருக்கிறது; இந்த அன்பிலிருந்து, விசுவாசத்தின் உண்மைகள் என்று சொல்லப்படுகிற, சிந்தையின் உண்மைகளை உயிர்ப்பித்து, அவைகளை உயிருடன் கர்த்தர் சேர்க்கிறார். அவைகள் ஞாபகத்தினிடவும், அதிலிருந்து சிந்தையினிடவும், பேச்சினிடவும் உடைமைகளாய் மாத்திரம் இருக்கிறபடியினாலும், அறிவிற்கும் பாண்டித்தியத்திற்கும் பேர் பெற ஒரு ஆசையிலிருந்து, அவைகளைப் பற்றி அவன் நினைக்கவும் அல்லது பேசும்படியாக, தெரிந்து கொள்ளும் பொருட்டு, அதன் விருப்பத்திலிருந்து அவைகளை உட்கொள்ளுகிறதும், அவைகளைத் தேடுகிறதுமான அவனிட ஸ்தூல அன்புக்கு சேர்க்கப்பட்டிருக்கிறபடியினாலும், விசுவாசமென்று சொல்லப்படுகிற மனிதனில் உண்டாகும் தொடக்க உண்மைகள் இன்னும் உயிரோடிருக்கிறதில்லை. ஆனால் உண்மைகளின்படி வாழ்வதினால் காரிய சித்தியாக ஒரு மனிதன் குணப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அந்த உண்மைகள் முதலில் உயிர்ப்பிக்கப்படுகின்றன. மேலும் இந்த வாழ்வு தருமமாயிருக்கிறது. மனிதனுடன் கர்த்தரிட ஐக்கியம் சம்பவிக்கிற மனிதனிட ஞானமனது பிறகு திறக்கப்படுகிறது. இதன் பயனாக இளம் பிராயத்தினிடவும், பிள்ளை பிராயத்தினிடவும், ஆரம்ப காலத்து வாலிபத்தினிடவும் உண்மைகள் உயிர்ப்பிக்கப்படுகின்றன.

அவ்விதமான நிலைமையில் மனிதனில் தருமத்துடன் பரம இச்சா சத்தியினிடவும், பரம ஞான சத்தியினிடவும் ஐக்கியமும், அவனிட விசுவாசத்தில் பரம ஞான சத்தியி

னிடவும், பரம இச்சா சத்தியினிடவும் ஐக்கியமும், கர்த்தரில் பரம இச்சா சத்தியும், பரமஞானசத்தியும் ஒன்றுயிருக்கிறது போல், தருமமும் விசுவாசமும் மனிதனில் ஒன்றுயிருக்கச் செய்து, சம்பவிக்கிறது. ஆனால் தசாக்ஞையின் விவரணத்தில் இந்த விஷயத்தைப்பற்றி இன்னும் சொல்லப்படும்.

(b) 8. தருமத்தினிடவும் விசுவாசத்தினிடவும் ஐக்கியமானது அன்னியோன்னியமா யிருக்கிறது.

அன்பினிடவும் ஞானத்தினிடவும் பரஸ்பர ஐக்கியத்தைப்பற்றி பேசியபோது, இது மேலே விவரிக்கப்பட்டது; இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் பரஸ்பர ஐக்கியத்துடன், அதன் அன்னுவயத்தால் அது திருஷ்டாந்தப் படுத்தப்பட்டது.

XII. கர்த்தரானவர், தன்னிட பரம இச்சா சத்தியாலும் பரமஞானசத்தியாலும், சுவர்க்கத்திலுள்ள எல்லாப் பொருள்களையும், உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும், அவைகளின் இறுதியானவைகள் வரையில் சிலவற்றை உயிரோடிருக்கவும், சிலவற்றை இருந்து, ஜீவிக்கவும் செய்து, உயிர்ப்பிக்கிறுர்.

கண்ணானது பிரபஞ்சத்தைப் பார்க்கிறது, அதைப் பற்றி நினைக்கும்போது, மனது, அது சிருட்டிக்கப்பட்டதென்று முதலில் தீர்மானிக்கிறது. பிறகு, அதை யார் சிருட்டித்தார் என்று ஆச்சரியப்படுகிறது. கண்ணைக் கொண்டு நினைக்கிற மனது, அது பிரகுருதியால் சிருட்டிக்கப்பட்டதென்கிற முடிவுக்கு வருகிறது. ஆனால் கண்ணைக் கொண்டு நினைக்காத மனது, அது கடவுளிடமிருந்து வருகிறதென்று நினைக்கிறது. மத்திய வழியில் செல்லும்

மனது; சூனியத்திலிருந்து யாதொன்றும் வரமாட்டா தென்று உணருகிறபடியினால், அதைப் பற்றி, அதற்கு மனோபாவனை இல்லாத ஒரு பொருளிலிருந்து அது உண்டாகிற தென்று நினைக்கிறது. ஆயினும், முடிவற்றதைப்பற்றி அது இட அபிப்பிராயம் கொள்வதாலும், நித்தியமானதைப்பற்றி கால அபிப்பிராயம் கொள்வதாலும், அவ்விதமான மனது பிருகுருதியில் விழுகிறது; அவ்வித மான மனிதர்கள் உள்ளான—ஸ்தூல மனிதர்கள். மறுபடியும், பிரகுருதியை சிருட்டி கர்த்தாவாக மாத்திரம் நினைக்கிறவர்கள், புறம்பான—ஸ்தூலமான மனிதர்கள்.

ஆனால், மதம் விஷயத்தில், பேதமையில் கடவுளை, பிரபஞ்சத்தின் சிருட்டிகர்த்தாவாக நினைக்கிறவர்கள், புறம்பான—ஞானிகள்; அப்படியிருக்கையில், மத விஷயத்தில் விவேகத்துடன் கடவுளை, பிரபஞ்சத்தின் சிருட்டிகர்த்தா வென்று நினைக்கிறவர்கள், உள்ளான—ஞானிகள்; பின் சொன்ன இருவகுப்பாரும் கர்த்தரிடமிருந்து நினைக்கிறார்கள். சதாகாலம் கர்த்தராயும், பரம இச்சா சத்தியேயாயும், பரம ஞானசத்தியேயாயும் இம்மாதிரியாக உயிரேயாகவும் இருக்கிற கடவுளால், எல்லாப் பொருள்களும் சிருட்டிக்கப் பட்ட தென்று உணர்ந்து, ஆதலால் தெரிந்திருக்கப்படும் பொருட்டு, வேறு வேறான அம்சங்களாகவும் பின் தொடரும் ஒழுங்கில் இந்த விஷயம் இப்பொழுது தர்க்கித்து அறியப்பட வேண்டும்.

1. கர்த்தரானவர் தேவதா சம்பந்தமான சுவர்க்கத்தில் சூரியனாக இருக்கிறார்.

2. அந்த சூரியனிலிருந்து, எல்லாப் பொருள்களின் அந்த உற்பத்தி யிருக்கிறது.

3. அந்த சூரியனிலிருந்து, கர்த்தரின் சந்நிதி எங்குமிருக்கிறது.

4. எல்லா சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களும், கர்த்தரோ யிருக்கிற உயிரோடேயே இசைய சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

5. உயிரினிட ஆன்மாக்களும், உயிரோடிருக்கிற ஆன் மாக்களும், முளைத்து வளரும் ஆன்மாக்களும், கர்த்தரிடமிருந்து வரும் உயிரால், உபயோகங்களின் வழிவகையாலும், உபயோ கங்களுக்குத் தக்கபடிக்கும், உயிர்ப்பிக்கப்படுகின்றன.

1. கர்த்தரானவர் தேவதா சம்பந்தமான சுவர்க்க லோகத்தில் சூரியனாக இருக்கிறார்.

*ஸ்தூல லோகத்துக்கு வேறாய் ஒரு ஞானலோக மிருப்பதாகவும், பின் சொன்னது முன் சொன்னதற்கு மேலிருப்பதாகவும், முந்தியதும் பிந்தியதும் போன்றும், காரணத்தையும் காரியத்தையும் போன்றும் தவிர, அவை களுக்குள் பொதுவானது ஒன்றுமில்லையென்றும், அறியப் படாமல் இருப்பதினால், இது, இதுவரையில், தெரியாமல் இருந்திருக்கிறது. ஆகையால், பரமார்த்தமானதின் சுபா வமும், அந்த உலகத்தில் தேவர்களும், சூக்கும சரீரமுள்ள ஆவிகளும் இருக்கிறார்களென்கிறதும், அவர்கள் பரமார்த்த மானவர்களென்கிறதும், மனிதர்கள் ஸ்தூலமானவர்கள் என்கிறதுமாகிய இந்த வித்தியாசத்தோடு மாத்திரம் உலகத்திலிருக்கும் மனிதர்களைப் போல, இவர்களும் சரியாய் மனிதர்களா யிருக்கிறார்களென்றும்கூட தெரியாம லிருக்கிறது. அந்த உலகத்திலிலுள்ள எல்லாப் பொருள் களும் ஞான உற்பத்தியிலிருந்து மாத்திரம் இருக்கின்றன வென்றும், அப்படியிருக்கையில், இந்த உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும், ஞானமுள்ளதாகவும் ஸ்தூலமான தாகவும் இருக்கிற ஒரு உற்பத்தியிலிருந்து இருக்கின்றன வென்றும்கூட தெரியாமலிருக்கிறது. இந்த விஷயங்கள் தெரியாமலிருக்கிறதினால், தேவர்களோடும், சரீரமில்லாத ஆவிகளுடனும் இருக்கும், ஒளியும் சூடும், மனிதர்கள்*

உட்டைத்தாயிருப் பவைகளிலிருந்து வேறான தாயிருக்கிற தென்றும், ஸ்தூல உலகத்தில் இருக்கும் ஒளியும் சூடும் நம்ம சூரியனிட மிருந்து தங்களிட சத்தை அடைகிறது போல, ஞான உலகத்தில் ஒளியும் சூடும்' அவர்களிட சூரியனிட மிருந்து தங்களிட சத்தை அடைகிற தென்றும் கூட தெரியாமலிருக்கிறது. ஆதலால், பின் சொன்ன சூரியனிலிருந்து வரும் ஒளியினிடவும் சூட்டினிடவும் சத்து ஞான மானதென்றும், ஸ்தூலமானது அவனிட கண்ணை வெளிச்சம் காட்டும்போது, மனிதனில் அவனிட புத்தியை வெளிச்சமாக்குகிற அவர்களிட சூரியனிட மிருந்து வரும் ஞானமானது அத்துடன் சேர்க்கப்படுகிற, நம்மிட சூரிய னிடமிருந்து வரும் ஒளியினிடவும், சூட்டினிடவும் சத்து ஸ்தூலமானதென்றும் தெரியாமலிருக்கிறது. ஞான லோகத்து சூரியன் தன்னிட சாரத்தில், ஞானமான ஒவ் வொன்றும் உற்பத்தியாகிற பொருளென்றும், ஸ்தூலலோக சூரியன் தன்னிட சாரத்தில் ஜடமான ஒவ்வொன்றும் உற்பத்தியாகிற பொருளென்றும், இவைகளினுல் விசத மாகிறது. நேசிக்கிறதும், விவேகமாய் இருப்பதும், ஞான மானதால், ஞானமானது, பரம இச்சா சத்தியும், பரம ஞான சத்தியும் காட்டிலும் வேறு எந்த மூலத்திலிருந்தும் தன்னிட சத்தை அடைய முடியாது; அப்படியிருக்கையில், ஸதூல மானது, சுத்தநெருப்பையும், சுத்த ஒளியையும் காட்டிலும் வேறு எந்த மூலத்திலுமிருந்து தன்னிட சத்தை அடைய முடியாது. ஆகையால் ஞானலோகத்து சூரியன், தன்னிட சொரூபத்தில், சதாகாலம் கர்த்தராயிருக்கிற கடவுளென்றும், அந்த சூரியனிடமிருந்து வரும் சூடு, அன்பென்றும், அந்த சூரியனிட மிருந்து வரும் ஒளி, ஞான மென்றும், ஏற்படுகிறது. வேதத்தில் சூரியன் என்று சொல்லப்பட்ட, அநேக வாக்கியங்களில் அது அருத்தம் கொள்ளப்பட்டி

ருந்தும், அந்த சூரியனைப் பற்றி ஏன் இது வரையில் யாதொன்றும் வெளிப்படுத்தப்பட வில்லை என்பதற்கு காரணம், கடைசியான தெய்வ தீர்ப்பு முடிந்து, புதுஎருசலே மாகிய, ஒரு 'புதுதிருச்சபை கர்த்தரால் ஏற்படுத்தப்படுகிற வரையில், அது வெளிப்படுத்தப்படாததாயிருந்தது என் பதாயிருக்கிறது. இது ஏன் முன்னமே வெளிப்படுத்தப் பட வில்லை என்பதற்கு அநேக காரணங்களிருக்கின்றன. ஆனால் அவைகளைச் சொல்ல இது இடமல்ல. தேவர்களும் சரீரமில்லாத ஆன்மாக்களும், மனிதர்களென்றும், அவர்கள் உலகத்திலிருக்கும் மனிதர்களைப் போல் கூடி சஞ்சரிக்கிறார் களென்றும், மனிதர்கள் பிரகுருதிக்குள்ளிருக்கையில், அவர்கள் பிரகுருதிக்கு மேலே முழுதும் இருக்கிறார் களென்றும், ஒரு முறை தெரியும்படி செய்யப்பட்டால், அவர்களுக்கு வேறு சூரியன் உண்டென்றும், அன்பின் ஒவ்வொன்றினிடவும், ஞானத்தின் ஒவ்வொன்றினிடவும், ஆதலால், உயிரினிட நிஜமாய் மனுஷத் தன்மையான ஒவ்வொன்றினிடவும், மூலம் இது தான் என்றும், பிறகு அறிவிலிருந்து தீர்மானிக்கப்படலாம். நான் அந்த சூரியனை யும் அத்துடன் அதில் கர்த்தரையும், பார்த்திருக்கிறே னென்பது சுவர்க்கமும் நரகமும் (கெ. 116—140) எனும் நூலிலும், கிரகங்களையும் பிரபஞ்சத்திலுள்ள பூமிகளையும் பற்றிய சிறிய நூலிலும் (கெ. 40—42) அறிந்து கொள்ளலாம்.

2. அந்த சூரியனிட மிருந்து எல்லாப் பொருள்களின் உற்பத்தியும் இருக்கிறது.

பிரபஞ்சமானது சதாகாலமிருக்கிறதாகவும், அபா வத்திலிருந்து சிருட்டிக்கப்பட்டதாகவும் யாரும் நினைக்க முடியாது. ஆகையினால், அது சிருட்டிக்கப்பட்டதென்றும், யாரோ ஒருவரால் சிருட்டிக்கப்பட்டதென்றும், தன்னி

மேன்மை முடிவற்று நித்தியமாயிருக்கிற அவர் சத்தே என்றும், அன்பே என்னும், ஞானமே என்றும், உயிரே என்றும், அதிலிருந்து, ஆதரித்து, அதிகாரம் செலுத்தி, இருக்கிற படி எல்லாப் பொருள்களையும் பராமரிக்கிறதும்; தன்னுடன் ஐக்கிய முடையவரும், அந்த ஐக்கியத்தின்படி அன்பினிட வும், ஞானத்தினிடவும், தேவ அருளினிடவும், சுகத்தினிட வும் வாழ்வும், இருக்கிறதென்றும், பொதுவான மூல இட மாக அவர் இருக்கிறாரென்றும், இந்த மூலமான இட மானது அனலுள்ளதும் எரிகிறதுமான சூரியனைக தேவர்கள் முன்பாக தோன்றுகிற தென்றும், கடவுளிட மிருந்து புறப்படுகிறதும், பூலோக சூரியன் இடையிலுள்ள உபகரணமாயிருப்பதால், அவைகளிலிருந்து ஞானமானது ஒவ்வொன்றும், ஞானமானதிலிருந்து, ஜடமான ஒவ் வொன்றும், நிலைத்திருக்கிறதுமான இச்சா சத்தியிலிருந்தும் ஞான சத்தியிலிருந்தும் இந்தத் தோற்றமும் உண்டாகிற தென்றும், மறுக்க முடியாது. ஒளியின் உண்மைகளாக உயர்த்தக் கூடியதாயிருக்கிற புத்தியிலிருந்து, மானிட மனதானது, இஷ்டப்பட்டால் அவ்வித சுபாவமுள்ளவரா யிருப்பவரும் அத்துடன் ஒருவராயிருப்பவருமாகிய கடவு ளால் பிரபஞ்சம் சிருட்டிக்கப்பட்ட தென்று, அறிந்து கொள்ளலாம். முதன்மை யானதிலிருந்து இறுதியானவை களை ஞானலோக சூரியன் பார்த்துக் கொண்டும், நடுவானதி லிருந்து இறுதியானவைகளை ஸ்தூலலோக சூரியன் பார்த்துக் கொண்டும், ஒன்று ஞானலோகத்திலும், மற்றொன்று ஸ்தூலலோகத்திலுமாக இரண்டு சூரியர்கள் இருக்கிற படியினால், கடவுள் இருக்கிறதும், உயிராக வேயிருக்கிற கடவுளிடத்திலிருந்து வருகிறதுமான ஞான லோக சூரியன், தன்னிடமிருந்து எல்லாப் பொருள்களும் செய்யப்பட்டு, சிருட்டிக்கப்பட்ட பொருள் என்றும்,

நெருப்பு இருக்கிறதும், நெருப்பிலிருந்து வருகிறதும், உயிராயில்லாததுமாகிய உலகத்து சூரியன், தன்னால் மாத்திரம் நடுவிலுள்ளதற்கு கீழிருப்பதும், தங்களுக்குள்ளே இறந்துபோனதுமான பொருள்களைச் சிருட்டிக்கப்பட்டவர் என்றும் விசதமாயிருக்கிறது. ஆகையினால், தன்னிலே இறந்ததாயிருக்கிற பிரகுருதியை ஒத்துக்கொள்ளலானது, உலக சூரியனிலிருக்கிற நெருப்பை ஆராதனை செய்தலாகிறது ; இதைச் செய்கிறவர்கள் இறந்தவர்களா யிருக்கிறார்கள் ; ஆனால், சிருட்டிக்கும் ஒரு உயிரை ஒத்துக்கொள்ளலானது, சுவர்க்கலோக சூரியனிலிருக்கும் கடவுளை ஆராதனை செய்கிறதாயிருக்கிறது ; இதைச் செய்கிறவர்கள் உயிரோடிருக்கிறார்கள். நரகத்திலிருப்பவர்கள் இறந்தவர்களென்று சொல்லப்படுகிறார்கள், ஆனால் சுவர்க்கத்திலிருப்பவர்கள் உயிரோடிருப்பவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

3. அந்த சூரியனிலிருந்து, கர்த்தரிட சந்நிதி எங்குமிருக்கிறது.

கர்த்தரானவர் எங்கும் நிறைந்திருக்கிறார் என்பது, வேதத்திலிருந்து திருச்சபையில் தெரிந்திருக்கிறது ; அவரிட சர்வ வியாபகத்துவமும் அதன் சுபாவமும் என்னவென்பது மேலே காண்பிக்கப்பட் டிருக்கிறது. இங்கே அது எப்படி கிரகிக்கக்கூடுமென்று நாம் காண்பிப்போம். அன்னுவயம், தாரதம்மியம் பார்த்தலுக்கும் கூட உதவுகிறதின் நிமித்தம் உலக சூரியனுக்கு சவர்க்கலோக சூரியனோடும் அதிலிருந்து பிரகுருதிக்கு உயிருடனும் இருக்கும் அன்னுவயத்திலிருந்து அது கிரகிக்கப்படலாம். உலக சூரியன், அதன் சொந்த உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் இருக்கிறதென்றும், இந்த சமுகமானது, சூரியன் வெகுதூரத்திலிருந்தாலும், அது அவைகளிலிருந்ததுபோல அவ்விதமாயிருப்

பதின் நிமித்தம், தன்னிட ஒளியினுலும் சூட்டினுலும் அது இருக்கிறதென்றும், ஒவ்வொருவனும் தெரிந்திருக்கிறுன் ; அது வெளியே விடும் சூடு, அதன் தொடக்கத்தில் நெருப்பு என்பதும், அதுகூட சொரியும் ஒளி, அதன் மூலத்தில் அதிலிருந்து வீரும் சுவாலே என்பதும், அந்த சூரியனுல் சிருட்டிக்கப்பட்ட ஒவ்வொன்றும் உருவங்களுக்கும் தூரங்களுக்கும் தக்கபடி ஏறக்குறைய பூரணமாயிருக்கிற அதைக் கொள்வதுமா யிருக்கிறதென்பதும் வித்தியாசமா யிருக்கிறது. இந்த காரணத்துக்காக, ஸ்தூல லோகத்திலுள்ள எல்லாப்பொருள்களும் சூரியனிட அபிமுகத்துக்குத்தக்கபடி விர்த்தியாகிறது. அதன் இன்மைக்குத்தக்கபடி குறைகிறது; சூடானது ஒளியுடன் ஒன்றுகிற அளவு அவைகள் வளர்ந்து விர்த்தியாகின்றன ; சூடானது ஒளியுடன் ஒன்றுகாத வரையில் அவைகள் குறைகின்றன. ஆனபோதிலும், இந்த சூரியனனவன்,ஸ்தூலமானதென்று சொல்லப்படுகிற அதன் கீழிருக்கும் பொருள்களின் பேரில் இந்தவிதமாய் செயல்படுகிறது ; ஆனல் ஞானமானதென்று சொல்லப்படுகிறதும், அதற்கு மேலிருப்பதுமான பொருள்களின் பேரில் ஒரு செயலுமே இல்லே. அதிலிருந்துவரும் பொருள்களின் பேரில் இது செயல்பட யிருக்கிறதினுல், தாழ்ந்த பொருள்களின்பேரில் செயல்படுதல் ஒழுங்குக்குத்தக்கபடி யிருக்கிறது ; ஆனல் உயர்ந்த பொருள்களின்பேரிலும், அல்லது அவைகள் உற்பத்தியாகிற பொருள்களின்பேரில் செயல்படுகிறது, ஒழுங்குக்கு எதிரிடையா யிருக்கிறது. உலக சூரியனிருப்பது சுவர்க்க சூரியனிலிருந்துதான். ஸ்தூல பொருள்களிருப்பது ஞானப் பொருள்களிலிருந்து தான்.

2) இந்த உவமானத்தால், சூரியன் மூலமாய் கர்த்தரிட சந்நிதி கொஞ்சம் அறிந்துகொள்ளலாம்.

ஆனல் சுவர்க்கலோக சூரியனிட சந்நிதி, தேவர்களும் சூக்கும சரீரமுள்ள ஆவிகளும் இருக்கப்பட்ட ஞான லோகத்தில் மாத்திரம் அல்லாமல், மனிதர்கள் இருக்கப் பட்ட ஸ்தூல லோகத்திலும் சர்வ வியாபகமாயிருக்கிறது ; ஏனென்றால், அவர்களிட சித்தத்தின் அன்பையும், அவர்க ளிட புத்தியின் ஞானத்தையும் மனிதர்கள் வேறு எந்த மூலத்திலிருந்தும் அடைகிறதில்லை. மேலும், அந்த சூரிய னில்லாமல் எந்தப்பிராணியும் உயிரோடிருக்க முடியாது. எந்தச்செடியும்கூட இருக்கமுடியாது ; அவ்விஷயத்தைப் பற்றி மேலே முன் சொன்னதையும் காண்பித்ததையும் பார்க்கவும். இந்த சூரியனானவன், சூட்டினாலும் ஒளியி னாலும் கூட நிலைக்கிறது. ஆனல் அதினிட சூடு அதன் சாரத்தில் அன்பாயிருக்கிறது. அதன் ஒளி அதன் சாரத் தில் ஞானமாயிருக்கிறது ; உலகத்து சூரியனிட ஒளியும் சூடும் இவைகளுக்குக் கீழிருந்து, பிரகுருதியில் அதனால் அது நிலைத்திருக்கிறதும், அங்கே ஜீவிக்கிறதுமானதைச் சேர்க்கிறது. ஆனல், ஞான சூட்டைக்கொண்டும், ஞான ஒளியைக்கொண்டும் இருக்கிற சுவர்க்கலோக சூரியனிட சந்நிதி, ஜடமான சூட்டைக்கொண்டும், ஜடமான ஒளியைக் கொண்டுமிருக்கிற உலக சூரியனிட சந்நிதியிலிருந்து, சுவர்க்கலோக சூரியனிட சந்நிதி, சர்வவியாபகமாயிருந்து, ஞானலோகத்திலும் ஸ்தூல லோகத்திலும் இரண்டிலும் அரசாட்சி செய்கிறது என்கிறதும், அப்படி யிருக்கையில், உலக சூரியனிட சந்நிதி ஸ்தூல உலகத்து எல்லைக்குள் அடைக்கப்பட்டு, அங்கே ஒரு பணிவிடைக்காரனாக இருக் கிறது என்பதுமாகிய இதிலே பேதப்படுகிறது. இடவரை யின் விரிவும் காலமும் பிரகுருதியுடன் சிருஷ்டிக்கப்பட் டிருப்பதினால், சுவர்க்கலோக சூரியனிட சந்நிதி இடவரை யின் விரிவிலும் காலத்திலும் இல்லை என்கிறதும், அப்படி

யிருக்கையில் உலகத்து சூரியனிட சந்நிதி அவ்வித விரிவிலும் இருக்கிறது என்கிறதுமாகிய இதிலும் கூட வித்தியாசப்படுகிறது. ஆகையினால், சுவர்க்கலோக சூரியனிட சந்நிதி சர்வ வியாபகமா யிருக்கிறது.

3) சுவர்க்கலோக சூரியன் எப்பொழுதும் அதன் ஏற்றத்திலும், வல்லமையிலும் யிருக்கிறபடியினால், சுவர்க்கலோக சூரியனிட சந்நிதி, அதையே நோக்கினால், நிலையானதாயிருக்கிறது. ஆனால், முக்கியமாய் தேவர்களாகவும், சூக்கும சரீர ஆவிகளாகவும், மனிதர்களாயுமிருக்கிற ஏற்றுக் கொள்ளுபவர்களோடு, அது ஏற்கைக்குத்தக்கப்படி பேதப்படுகிறபடியினால், நிலையற்றதாயும் தன்னிட வல்லமையில் இல்லாததாயுமிருக்கிறது. அதன் இடம் நிலைப்படுத்தப்பட்டிருப்பதாலும், அதன் வல்லமை நிலையானதாலும், இந்த விஷயத்தில் உலகத்து சூரியன் அந்த சூரியனோடு அன்னுவயப்படுகிறது; அதின் நிலையிலும் வல்லமையிலும் நேரிடும் மாறுதல்கள், அதினிட ஏற்றுக்கொள்வதாகிய பூமிக்கு உரியது; அவ்வித சுழற்சிகள் இரவையும் பகலையும் உண்டாக்குகிறபடியினால் வேறுபாடுகள், அதன் மையத்தைச்சுற்றி பூமியின் சுழற்சிகளுக்கும், அதனுடன், வசந்த காலத்தையும், வேனிற்காலத்தையும், இலையுதிர் காலத்தையும், கார்காலத்தையும், உண்டாக்குகிற சூரியனைச் சுற்றி அதன் கதிக்கும் உரியது. இந்த ஆலோசனைகளால், உலகத்தின் ஸ்தூலப் பொருள்களுக்கும் சுவர்க்கலோகத்து ஞானப் பொருள்களுக்கும் உள்ள அன்னுவயம் தெளிவாயிருக்கிறது. ஸ்தூல லோகத்தில் சுவர்க்கலோக சூரியன் சந்நிதிகூட மனிதனிட சரீரத்தில் புத்தியினிடவும் சித்தத்தினிடவும் சந்நிதியினால், கொஞ்சம் சொற்பமான அளவு திருஷ்டாந்தப்படுத்தப்படலாம். ஏனென்றால், மனிதனிட மனது அவனிட ஞான லோகமாகவும், அவ

னிட சரீரம் அவனிட ஸ்தூல லோகமாகவுமிருப்பதால், அங்கே புத்தி நினைப்பதை, வாயானது உடனே பேசுகிறது, சித்தம் கருதுகிறதை, சரீரம் உடனே நிறைவேற்றுகிறது. இந்தக் காரணத்துக்காகத் தான் மனிதனானவன் பூர்வீகர்களால் சிற்றண்டம் என்று சொல்லப்பட்டான். தீர்க்கமாய் அறிந்து கொள்ளப்பட்ட இந்தப் பொருள்களிலிருந்து, ஒரு ஞானமுள்ளவன், அதன் பழத்தோடு ஒரு மரத்தினிடவும் அல்லது, அதன் விதையுடன் செடியினிடவும், அல்லது அதிலிருந்து வந்த எரிபுழுவுடனும் வண்ணத்திப் பூச்சியுடனும் ஒரு குறும்புழுவினிடவும், அல்லது அதன் தேனுடனும் மெழுகுடனும் ஒரு தேனீயனிடவும் அல்லது வேறு எந்தப் பிராணியினிடவும் விஷயத்தில், பிரகுருதியின் பொருள்களில் தெய்வீக கிரியையும், ஞான உட்பெருக்கையும் பார்த்து அறியலாம். இவ்வித பொருள்களில் பிரகுருதியைத் தவிர வேறொன்றையும் பார்க்காதவர்களிடவும் உணராதவர்களிடவும் பைத்தியத்தைப்பற்றி அவன் சிரிக்கவும்கூட கூடும்.

4. எல்லா சிருட்டிக்கப்பட்ட பொருள்களும், கர்த்தராயிருக்கிற உயிருடனேயே இணங்க சிருட்டிக்கப்பட்டிருக்கின்றன.

முதலில் உயிரைப்பற்றியும், பிறகு உயிருக்குத் தாழ்ந்த எல்லாப் பொருள்களின் சிருட்டியைப்பற்றியும் சிலது சொல்லப்பட வேண்டும். மனிதனுவன் ஞானத்தினால், கடவுளையும் தன்னிட அயலானையும் எவ்வளவு தூரம் நேசிக்கிறானோ அவ்வளவு தூரம் உயிரோடிருக்கிறபடியினால், உயிரானது அன்பாகவும் ஞானமாகவுமிருக்கிறது; ஆனால் எல்லாப் பொருள்களுக்கும் உயிராயிருக்கிற உயிரே, பரம இச்சாசத்தியும் பரம ஞானசத்தியுமாயிருக்கிறது. பரம இச்சாசத்தி, உயிரின் சொரூபம், பரமஞானசத்தி அதன் தடத்தம்; பின் சொல்லியது முன் சொன்னதுடன் பரஸ்

பரிமாய் சேர்ந்தபோது கர்த்தராகிறது. பரம இச்சாசத்தி யானது முடிவற்றதும் நித்தியமானதுமாயும்; பரமஞான சத்தியானது முடிவற்றதும் நித்தியமானதுமாயும் இருக்கிற படியினால், பரம சொரூபத்துடன் பரம தட்த்தமும்கூட, இவைகளில் ஒவ்வொன்றும்முடிவற்றதும் நித்தியமானதுமா யிருக்கிறது. அப்படி யிருந்தாலும் முடிவுள்ளதற்கும் முடிவற்றதற்கும் எந்த விகித சமத்துவமும் இருக்க முடியாதாயினும், இவைகள் இரண்டும் தேவர்களோடும் மனிதர்களுடனும் ஐக்கியத்தில் பிரவேசிக்கலாம். ஆனால் விகித சமத்துவமில்லாத இடத்தில் எந்த ஐக்கியமும் எப்படி யிருக்கக் கூடுமென்று புத்தியானது சுலபமாய் நினைக்க கூடாதபடியினால், அது விஸ்திரிக்கப்பட வேண் டும். ஸ்தூலமானதற்கும் ஞானமானதற்கும் எந்த விகித சம்பந்தமும் இருக்க முடியாது, ஆனால், அன்னுவயங்க ளால் ஐக்கிய மிருக்கிறது; இறுதியான சுவர்க்கலோகத்து தேவர்கள் இருக்கப்பட்ட ஞானமானதற்கும், எல்லாவற்றி லும் உயர்ந்த சுவர்க்கலோகத்தின் தேவர்கள் இருக்கப் பட்ட சுவர்க்க சம்பந்தமானதற்கும் கூட எவ்வித விகித சமத்துவமும் இல்லை, ஆனால் அன்னுவயங்கள் மூல மாய் ஐக்கிய மிருக்கிறது. அம்மாதிரியே, எல்லாவற்றி லும் உயர்ந்த சுவர்க்க லோகத்தின் தேவர்கள் இருக்கப் பட்ட சுவர்க்க சம்பந்தமானதற்கும், கர்த்தரின் தெய்வ சக்திக்கும் விகித சமத்துவம் கிடையாது, என்றாலும், அன்னுவயங்கள் மூலமாய் ஐக்கிய மிருக்கிறது. அன்னு வயங்களினால் உண்டாகும் ஐக்கியத்தின் சுபாவத்தை வேறு இடத்தில் சொல்லி, காண்பிக்கப்பட்டிருக்கிறது.

2) அவர் ஒவ்வொன்றிலும் எல்லாமாயிருக்கிறபடியினா லும், தேவர்களிலும், மனிதர்களிலும், அன்பினிடவும் ஞானத்தினிடவும் உயிராயுமிருக்கிறபடியினாலும், தெய்வீக

மானது முடிவற்றதும் நித்தியமானதுமாயிருக்கிறது; பின் சொன்னதும் முன் சொன்னதுமாகிய இரண்டும், கர்த்தரிடமிருந்து உயிரைப் பெற்றுக் கொள்பவர்களாக, இம் மாதிரியாக முடிவுள்ளவர்களாக, சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி யிருக்கையில், கர்த்தரானவர், சிருட்டிக் கப்படாதவராகவும், தன்னில் தானே உயிராகவும், ஆகையினால் உயிரேயாயும் இருக்கிறார். ஆகையினால் மனிதர்களும், அவர்களிலிருந்து தேவர்களும், சூக்கும சரீர மனிதர் களும் சதாகாலம் வரையில் விருத்தியாக்கப்பட்டாலும், கர்த்தரானவர் அந்த உயிரைக் கொடுத்து, அவரிட தெய்வீக பராமரிப்பைப் பற்றி சொல்லிய இடத்தில் மேலே காண்பித்தபடி, அவர்களை தன்னிடமிருந்தே ஒவ்வொன்றிலும் மிகவும் நுட்பமான விவரணத்துக்கு வழி காட்டுவார்; இதில் நித்தியமானதிருக்கிறது, நித்தியமானதிருக்கிற இடத்தில், முடிவற்றதும் கூட இருக்கிறது. முடிவற்றதற்கும் முடிவுள்ளதற்கும் விகித சமத்துவமில்லாதபடியினால், முடிவற்றது சூனியமென்று நினைக்காமல் எச்சரிக்கையாயிருங்கள்; ஏனென்றால், "முடிவற்றதென்பதும்" "நித்தியமென்பதும்," சூனியத்துக்குச் சொல்லக் கூடாது, எந்த பொருளுடனும் ஐக்கியமும் அவைகளுக்குத் சொல்லக்கூடாது; எந்தப் பொருளும் சூனியத்திலிருந்து வருகிறதுமில்லை. ஆனால், அதிலிருந்து முடிவுள்ளது சிருட்டிக்கப்பட்டதும், அத்துடன் ஐக்கிய முள்ளதுமான முடிவற்றதும் நித்தியமானதுமாக தெய்வம் சத்தாவாகவே இருக்கிறார். ஸ்தூலமான பொருள்களை ஞானமான பொருள்களோடு தாரதம்மியம் பார்த்தால், விஸ்தாரமாய் இது திருஷ்டாந்தப்படுத்தப்படலாம்; இவைகளுக்குள் விகித சமத்துவம் கிடையாது. என்றாலும் அன்னுவயங்களினால் ஐக்கியமிருக்கிறது. ஒவ்வொரு காரணத்தோடும் காரியத்தோடும்,

மூந்தினுடனும் பிந்தினதுடனும், மேலும் அதிகம் உயர்ந்த பிரமாணத்துடனும் அதிகம் தாழ்ந்த பிரமாணத்துடனும், மேலும் மனிதர்களிடவும் தேவர்களிடவும் அன்பினுடனும் ஞானத்துடனும், விஷயம் இவ்விதமாயிருக்கிறது; அப்படியிருந்தாலும், தேவர்களின் அன்பும் ஞானமும், மனிதனிட வாக்குக்கு எட்டாததாயும் கிரகிக்க முடியாததாயுமிருந்த போதிலும், முடிவுள்ளதாகவும், அனுவயங்களால் தவிர முடிவற்றதை கிரகிக்க சக்தியயற்றதாகவும் இருக்கின்றன.

கர்த்தராயிருக்கிற உயிருடன் இணங்க எல்லா பொருள்களும் சிருட்டிக்கப் பட்டிருக்கின்றன என்பது, மனிதர்களும், அவர்களிலிருந்து தேவர்களும், கர்த்தரிடமிருந்து உயிரை ஏற்றுகொள்ள சிருட்டிக்கப்பட்டார்கள் என்கிறதும், மேலும் பெற்றுக் கொள்பவர்களைத் தவிர வேறொன்றுமில்லை என்கிறதுமாகிய இதிலிருந்து அதன் ஒழுங்கில் ஏற்படுகிறது. கர்த்தரால் அவர்கள் வைக்கப்பட்டிருக்கிற சுவேச்சையில், பெற்றுக் கொள்பவர்களைப் போல அவர்கள் தோன்றுவிடினும், அவர்கள் நல்லவர்களானாலும் கெட்டவர்களானாலும், பெற்றுக் கொள்பவர்களாயிருக்கிறார்கள்; ஏனென்றால் அவர்கள் வைக்கப்பட்டிருக்கிற சுதந்தரம் கூட கர்த்தரிடமிருந்து வருகிறது, மனிதர்களும் தேவர்களுமாகிய இருவகையாரின் உயிரானது, அறிந்து கொள்ளுதலிலும், அதிலிருந்து நினைத்தலிலும், பேசுதலிலும், மேலும், இச்சிப்பதிலும், அதிலிருந்து செயல்படுவதிலும், அமைந்திருக்கிறது; ஆகையால் இந்த பொருள்கள், உயிரின் காரியங்களாக இருப்பதால், கர்த்தரிடமிருந்து வரும் உயிரின் காரிய சித்திகளாகவும் கூட இருக்கின்றன. உலகத்தில் சிருட்டிக்கப்பட்ட ஒவ்வொன்றும் மனிதனிட உபயோகத்துக்கும் உபகாரத்துக்கும் சந்தோஷத்துக்கும் சிருட்டிக்கப்பட்டி-

ருக்கின்றன; சிலது விஷயத்தில் இது தெளிவாயிருக்கிறது; மற்றவைகள் விஷயத்தில் அம்மாதிரி தூரமாய் மாத்திரமிருக்கிறது. இப்பொழுது, இவ்வித பொருள்கள் மனிதனுக்காக சிருட்டிக்கப்பட்ட படியினால், அவைகளில் உயிராயிருக்கிற கர்த்தருக்கு அவைகள் தாழ்ந்தவை என்று ஏற்படுகிறது. நல்லவர்கள் விஷயத்தில், அப்பேர்பட்டவர்கள் கர்த்தரிடமிருந்து ஜீவிக்கிற படியினால், அவர்கள் தாழ்ந்த துணைவர்களென்று தோன்றுகிறது; ஆனால் தீயவர்கள் விஷயத்தில் அப்படியில்லை; அப்படியிருந்தாலும், அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப் பண்ணி, நீதி உள்ளவர்கள் மேலும் அநீதி உள்ளவர்கள் மேலும் மழை பெய்யப் பண்ணுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிற படியினால், சிருட்டிக்கப்பட்டிருக்கிற பொருள்கள், நல்லவர்கள்கூட தீயோர்கள் உபயோகத்துக்கும், உபகாரத்துக்கும் சந்தோஷத்துக்கும் சமமாய் இருக்கின்றன (மத்தே-V-45). தீயோர்கள் தங்களிடமேயிருந்து உயிரின் யாதொன்றையும் பெற்றிருக்கிறதில்லை என்பதும் அப்படியிருந்தாலும், அந்த உண்மை தெரியாமலும் வழிகாட்டப்பட இஷ்டமில்லாத போதிலும், அவர்கள் கர்த்தரால் வழிகாட்டப்படுகிறார்களென்பதும், நரகத்திலிருக்கிறவர்களின் ஜீவியத்தைப்பற்றி பேசிய வாக்கியங்களில் அறிந்து கொள்ளலாம்.

5. உயிரினிட ஆன்மாக்களும் உயிரோடிருக்கிற ஆன்மாக்களும் முளைத்து வளரத்தக்க ஆன்மாக்களும், உபயோகங்களின் மூலமாயும், அவைகளுக்குத் தக்கபடியும் கர்த்தரிடமிருந்து வருகிற உயிரினால் உயிர்ப்பிக்கப்படுகின்றன.

உயிரின் ஆன்மாக்கள் என்பதால் மனிதர்களும் தேவர்களும், உயிருள்ள ஆன்மாக்கள் என்பதால், வேதத்தில் உயிருள்ள ஆன்மாக்களென்று சொல்லப்படுகிற

பிராணிகளும், முளைத்து வளருகிற ஆன்மாக்கள் என்பதால், ஒவ்வொருவித மரங்களும் செடிகளும் அருத்தம் கொள்ளப்படுகின்றன. உயிரின் ஆன்மாக்கள் அல்லதுமனிதர்களும் தேவர்களும், கர்த்தரிடமிருந்து வரும் உயிரினால் உயிர்ப்பிக்கப்படுகின்றார்கள் என்பது, முன் சென்ற பக்கங்களில் காண்பிக்கப்பட்டது. உயிருள்ள ஆன்மாக்கள் அல்லது பிராணிகள் கர்த்தரிடமிருந்து உயிரினால் உயிர்ப்பிக்கப்படுகிறதென்று கர்த்தரிடமிருந்து வந்த முந்திய பக்கங்களில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. உயிருள்ள ஆன்மாக்கள், ஞான லோகத்திலுள்ளவர்களின் உயிருடன் அன்னுவயப்படுகிற நானாவிதங்களான ஆசைகளாயிருக்கையில், இவைகள் உயிரின் இறுதியான பலன்களாயிருக்கிற உபயோகத்தின் ஆன்மாக்களாயிருப்பதின் நிமித்தம், முளைத்து வளரும் ஆன்மாக்களுக்கும் அதே உண்மையாயிருக்கிறது; இந்த அன்னுவயத்தால், அவைகள் நடுத்தரமான உயிர்களென்று சொல்லப்படலாம். உயிர்ப்பு என்பதால், அவைகள் உயிரோடிருக்கிறது என்பது மாத்திரமல்லாமல், அவைகள் இருக்கின்றனவென்றும் நிலைகின்றனவென்றும் அருத்தம் கொள்ளப்படுகிறது.

அவைகள் ஏன் தொடர்ச்சியாய் உயிர்ப்பிக்கப்படுகிறது அதாவது கர்த்தரிடமிருந்து, ஜீவித்து, இருந்து, நிலைக்கிறது என்பதற்கு காரணம், சிருட்டியானது ஒருதரம் பூர்ணமாக்கப்பட்டால், சுவர்க்கலோக சூரியனிடமிருந்து உட்பெருக்கினால் இன்னும் தொடரப்படுகிறது என்பதாயிருக்கிறது. இந்த சூரியனிடமிருந்து உட்பெருக்கு தொடர்ச்சியா யிருந்தாலொழிய, ஒவ்வொரு பொருளும் நாசமாகும்; ஏனென்றால், முன் சொன்னது, முதல் காரணமாயிருக்கையில், பின் சொன்னது துணை காரணமாயிருப்பதால் உலகத்து சூரியனிட உட்பெருக்கு முன் சொன்னது

இல்லாவிட்டால் சூனியமாகிறது. கர்த்தரின் அன்பினிட உயிரோடு சூட்டினிடவும் அதன் காரியத்தினிடவும் ஒரு அன்னுவயமிருக்கிறது ; கர்த்தரிட ஞானத்தின் உயிரோடு ஒளியினிடவும் அதன் காரியத்தினிடவும் ஒரு அன்னுவயமிருக்கிறது ; ஏனென்றால், சுவர்க்கலோக சூரியனிடமிருந்து புறப்படும் பரம இச்சாசத்தியானது, ஞானலோகத்தில் சூடாயிருக்கிறது, அந்த சூரியனிடமிருந்து புறப்படும் பரம ஞானசத்தி, அங்கே ஒளியாயிருக்கிறது ; ஒவ்வொன்றும் அன்னுவயமாயிருப்பதால், இவைகளுக்கு உலகத்து சூரியனிட சூடும் ஒளியும் அன்னுவயப்படுகிறது.

2. ஆனால், உயிராயிருக்கிற அவரிட இச்சா சத்தியிலிருந்தும், ஞான சத்தியிலிருந்தும் கர்த்தரானவர் எப்படி சிருட்டிமுழுதும் பாய்ந்து, உயிர்ப்பிக்கிறாரென்பதும் கூட சுருக்கமாய் விளக்கப்படவேண்டும். புறப்படும் சிவசத்தி அவரை சூழ்ந்திருக்கிறதும், தேவர்களுக்கு சூரியனாக தோன்றுகிறதுமா யிருக்கிறது. ஒளியிலிருந்து விவேகத்தை அடையவும், அத்துடன் பார்க்கவும், மனிதர்களைப் போல் தேவர்களும் சுவாசம் வாங்கி விடுகிறபடியினால், அன்னுவயத்துக்கு தக்கபடி அவர்கள் சுவாசிக்கும் பொருட்டும், சூட்டிலிருந்து அவர்கள் அன்பை அடையவும், இந்திரிய ஞானம் உடைத்தாயிருக்கவும், மனிதர்களிட இருதயங்கள் போல், தேவர்கள் இருதயங்கள் துடிக்கிறபடியினால், அதனுடன் அன்னுவயத்தின்படி அவர்கள் இருதயங்கள் துடிக்கும் பொருட்டும், தேவர்களுக்கும்கூட ஒளியும் சூடும் அனுப்ப அவர் சிருட்டித்திருப்பதும், அவர்களிட மனதுக்கும் சரீரத்துக்கும் இரண்டினிட உயிருக்கும் அவர் வசதி செய்திருக்கிறதுமாகிய ஞானாகாசங்கள் மூலமாய் இதிலிருந்து அவரிட தெய்வீக சத்தி புறப்படுகிறது. அவர்களுக்கு அவைகள் இந்த விதமாக வசதியாகிற எல்லா

வற்றிலும், தாழ்ந்த சுவர்க்கலோகத்து தேவர்களுக்குகூட அந்த ஞானுகாசங்கள் மேல் சொல்லிய பின்னமாற்றங் களால் அடர்த்தியில் அதிகரிக்கின்றன. இந்த காரணத்துக் காக, எல்லாவற்றிலும் உயர்ந்த சுவர்க்கலோகத்து தேவர்கள் சுத்தமான மிகுந்த சூக்குமமான ஆராஎனும் ஆகாசத்திலும், மத்திய சுவர்க்கலோகத்து தேவர்கள் ஆகா சத்திலும், எல்லா வற்றிலும் தாழ்ந்த சுவர்க்கலோகத்து தேவர்கள் காற்றிலும், வசிக்கிறுர்கள். தேவர்களுடன் கர்த்தரிடமிருந்து அன்பினிடவும் ஞானத்தினிடவும் ஏற்கைக் குத் தக்கபடி, அதனுடைய மிகவும் சிறியதான விவரணங் களுடன், ஒவ்வொரு காலேயிலும், புதிதாயிருக்கிற சாகுபடி செய்யும் நிலங்களும், செடித்தோட்டங்களும், செழிப்பான இடங்களும் தவிர, இன்பத்தைத்தரும் தோட்டங்களுடன் அவர்கள் தங்களிட அரமனைகளேயும் வீடுகளேயும் உடைத் தாயிருக்கிறதும், அதின் பேரில் வசிக்கிறதுமான நிலங்கள், ஒவ்வொரு சுவர்க்கலோகத்திலும் உள்ள இந்த ஆகாயங் களுக்கு கீழ் இருக்கின்றன. இந்த பொருள்கள் எல்லாம் ஞானமான மூலத்திலிருந்து வருகின்றன, ஸ்தூல மூலத்தி லிருந்து யாதொன்றும் வருகிறதில்லே. ஞான மூலம் என்பது கர்த்தரிட மிருந்து வரும் உயிராயிருக்கிறது.

3. இந்தப் பொருள்களின் அன்னுவயத்திற்கு, இதன் நிமித்தம் அதைப் போன்ற பொருள்கள் இருக்கிற ஸ்தூல லோகத்தில் தோன்றுகிற எல்லா பொருள்களும், பின் சொன்னது அம்மாதிரியே ஞான மூலத்திலிருந்து வருகிற தென்பதும், ஆனுல் அதே காலத்தில் ஸதூல மூலத்தி லிருந்தும் வருகிறது என்பதுமாகிய இந்த வித்தியா சத்தோடு சிருட்டிக்கப்பட்டிருக்கின்றன. சம்பூர்ண மிருக்கிற இறுதியானவைகளில் தவிர இருக்கமுடியாத, மானிடவமிசத்தை ஜனிப்பிக்கை நோக்கமாக, அவர்கள்

அதே காலத்தில் ஸ்தூலமாகவும், ஆகையினால் ஸ்திரமாகவும் இருக்கும் பொருட்டும், வித்தியாலயமாக மானிடவமிசத்தி லிருந்து தேவர்களாயிருக்கிற ஞானலோகத்து குடிகள் ஏற்படும் பொருட்டும் அவைகளுக்கு ஸ்தூலமான மூலம் அதிகமாயிருக்கிறது ; இது சிருட்டியின் முதன்மையானதும் முடிவானதுமான நோக்கமாயிருக்கிறது. ஆனால், சிருட்டி யைப்பற்றியும், அல்லது கர்த்தராயிருக்கிற உயிரிலிருந்து அவைகளின் ஒழுங்குபடி எல்லா பொருள்களின் நிலைமை யைப்பற்றியும் ஒரு பூர்ண அபிப்பிராயம், சுவர்க்கலோகத் தில் தெரிந்திருக்கிறதும், உண்மையில் எனக்கு தெரியப் படுத்தியிருக்கிறதுமான, இரகசியத்தின் நிமித்தம், வெளி படுத்தமுடியாது. ஆனால் எல்லா வற்றிலும் ஆழமான அறிவில் அகப்பட்டிருக்கிற அவ்வித பொருள்களால் இவை கள் நிறைந்திருக்கிற படியினால், அநேக புஸ்தகங்களால் தவிர, அப்பொழுதும் கூட கிரகிப்புக்கு எட்டும் படியாக விவரிக்கமுடியாது. அப்படியிருந்தாலும், இந்த விஷயங் களைப்பற்றி அடியில் வருபவை சுருக்கம் :—கர்த்தர் இருக்கப் பட்ட, சுவர்க்கலோக சூரியன் பிரபஞ்சத்தின் பொதுவான மூல இடமாயிருக்கிறது ; பிரபஞ்சத்திலுள்ள எல்லா பொருள்களும் வட்டங்களாகவும், கடைசி வரையில் கூட வட்டங்களாகவு மிருக்கின்றன. இறுதியிருப்பவைகளி லிருந்து மத்தியிலிருப்பவைகள் தவிர, அவர், ஒரு தொடர்ச்சி யான பொருளாக இந்த வட்டங்களை தன்னிடமிருந்தே மாத்திரம் அரசுபுரிகிறார். மனிதனுடைய புத்தியிலிருந்தும் சித்தத்திலிருந்தும் தன்னிட சரீரத்தை சுலபமாய் உயிர்ப் பித்து பிரவர்த்திக்க செய்கிறபடி, அவர் எப்பொழுதும் அவைகளை உயிர்ப்பித்து, பிரவர்த்திக்க செய்கிறார் ; முடிவாய், உபயோகங்களிலும், இவைகளிலிருந்து அவை களிட உருவங்களிலும் உட்பெருக்கு இருக்கிறது.

கிரந்த கர்த்தாவின் ஞாபகக்குறி :—இங்கே வைக்க வேண்டியதும் அல்லது அனுபந்தமாக அல்லது ஞாபகக் குறியாக சேர்க்கவேண்டியதுமான "தேவதா சம்பந்தமான அபிப்பிராயம்". இங்கே பின் தொடருகிறது.

## கர்த்தரால் உண்டாகும் பிரபஞ்ச சிருட்டியைக் குறித்து தேவதாசம்பந்தமான அபிப்பிராயம்.

கர்த்தரால் சிருட்டிக்கப்பட்ட பிரபஞ்சத்தைக் குறித்து தேவதா சம்பந்தமான அபிப்பிராயம் பின் தொடருகிற மாதிரி யிருக்கிறது. கடவுள்தான் மூலம், அவர் ஒரு மனிதன்; கடவுள் ஒரு மனிதனாக இல்லா விட்டால், சிருட்டி உண்டாக முடியாது; நித்தியமான கர்த்தர் அந்த கடவுளாயிருக்கிறார். சிருட்டியைப்பற்றி, சதாகால கர்த்தர் அல்லது கடவுள், தன்னிடமிருந்து வெளி படும் தெய்வசத்தியால், பிரபஞ்சத்தையும், அதிலுள்ள எல்லா பொருள்களையும் சிருட்டித்தாரென்றும், வெளிபடும் தெய்வசத்தி உயிராகவே கூட இருக்கிறதினால், எல்லா பொருள்களும் உயிரிலிருந்தும், உயிராலும் சிருட்டிக்கப் பட்டதென்றும், சமீபமான வெளிபடும் தெய்வசத்தி, தேவர்கள் முன்பாக சூரியனாக தோன்றுகிறதாயிருக்கிற தென்றும், இந்த சூரியன் அவர்கள் கண்கள் முன்பாக அனலுள்ளதாகவும், சுவாலிக்கிறதுமாகவும் தோன்றுகிற தென்றும், இதுவும், வெளிபடும் தெய்வசத்தியானது அவை களின் தூரதோற்றம் அவ்விதமாயிருக்கிற பரம இச்சாசத்தி யும், பரமஞான சத்தியுமாயிருக்கிறபடியினால் அப்படி இருக்கிறதென்றும், அவர்கள் சொன்னார்கள். வெளி படும் தெய்வசத்தியானது, கடவுளின் சிரசைசுற்றி பிரகாச மான பொன்போன்ற அல்லது துலக்கமான வட்டங்களால் பூர்வீகர்கள் சித்திரித்ததும், நவீன வர்ணக்காரர் பூர்வீக

அபிப்பிராயத்திலிருந்து இன்னும் வைத்திருக்கிறதுமா யிருக்கிறதென்றும் அவர்கள் இன்னமும் சொன்னார்கள். அவைகளின் முடிவு இருக்கிறதும், அவைகள் அசலனத்தில் உறைகிறதுமாகிய இறுதியானதற்கும் கூட, ஒன்றின் பின் ஒன்றாயும், ஒன்றிலிருந்து ஒன்றாயும், அந்த சூரியனிடமிருந்து, ஒரு விசாலமான மூல இடமாக, வட்டங்கள் புறப்படுகிறதென்றும், அவைகளில் ஒன்றிலிருந்து ஒன்றும் ஒன்றின் பின் ஒன்றும் உண்டாகிறதும் பக்கமாயும், கெட்டாயமாகவும் விரித்திருக்கிறதாக தோன்றுகிறதுமான அந்த வட்டங்கள், அதினால் இறுதியான வட்டத்துக்கு, தாங்களே பரவுகிற அவைகளின் சூரியனிடமிருந்து ஒளியினாலும் சூட்டினாலும் நிரப்பப்படுகிற ஞானகாசங்களா யிருக்கின்றனவென்றும், அவர்கள் சொன்னார்கள். பூமியினிடவும், உபயோகத்துக்கு இருக்கிற அதின் பேரிலிருக்கும் எல்லா பொருள்களிடவும் சிருட்டியானது, இறுதியானதில் அந்த ஆகாசங்களாலும், பின்னிட்டு, உலகத்து சூரியனிடமிருந்து வருகிற ஸ்தூல ஆகாயங்களாலும் சம்பவித்ததென்றும், அந்த சிருட்டியானது, விதைகளிலிருந்தும், கருப்பையிலும் அல்லது முட்டையிலும் ஜனிப்பதினால், பின்னிட்டு தொடர்ச்சியாய் நடக்கிறதென்றும்கூட அவர்கள் சொன்னார்கள். அப்படி சிருட்டிக்கப்பட்ட பிரபஞ்சமானது சிருட்டி கர்த்தாவிடமிருந்து கீழே இறுதியானவைகள் வரையில் ஒரு தொடர்ச்சியான வேலை யென்றும், தொடர்ச்சியான வேலையாயிருக்கிறபடியினால், அது, ஒரு சேர்ந்த சமஸ்தமாக, அதின் பொதுவான மூல இடமான கர்த்தரால் பிரவர்த்திக்கப்பட்டு, ஆளப்பட்டதென்றும், அவர் பேரில் பாரம் போட்டதென்றும், தெரிந்திருந்த அந்த தேவர்கள், ஒரு முடிவு, காரணங்களால் காரியங்களில் விரிக்கப்படுகிறது போலும், அல்லது விளைவிக்கிற

ஏதோ ஒன்றையும் ஒரு தொடர்ச்சியான வரிசையிலுள்ள அதன் விளைவுகளையும் போலும், முதல் வெளிபடுவது கீழே இறுதியானவைகள் வரையில் பின்ன மாற்றங்களால் தொடர்ச்சியாய் நடத்தப்படுகிறதென்றும், அந்த தொடர்ச்சி, முதன்மையானதிலிருந்து உள்ளே மாத்திரமல்லாமல், சுற்றிலும் கூடவும், அங்கிருந்து ஒவ்வொரு முந்தியதிலிருந்து ஒவ்வொரு பிந்தியதிலும் கீழே கடைசியானது வரையிலும் இருந்ததென்றும், இம்மாதிரியாக முதன்மையானதும், அதிலிருந்து பிந்தியவைகளும், கடைசியானதில் தங்கள் ஒழுங்கில் ஏககாலத்தில் நிலைக்கின்றனவென்றும் சொன்னார்கள். இந்த தொடர்ச்சியிலிருந்து, ஒரு ஏகமாக, கர்த்தரைக் குறித்து அவர்கள் அபிப்பிராயமானது, அவர் எல்லாவற்றிலும் எல்லாமாயும், சர்வ வல்லமையுள்ளவராயும், சர்வ வியாபக முள்ளவராயும், சர்வ ஞான முள்ளவராயும், முடிவற்றவராயும், நித்தியமானவராயும் இருக்கிறாரென்பதாயிருக்கிறது; அதன்படி, கர்த்தரானவர் தன்னிட பரம இச்சாசத்தியாலும், தன்னிட பரம ஞானசத்தியாலும், எல்லா பொருள்களையும் விட்டு விடுகிறதும், முன் சேகரிக்கிறதும், ஆளுகிறதுமான ஒழுங்கைப்பற்றி அவர்கள்கூட ஒரு மனோபாவனையை உடைத்தாயிருக்கிறார்கள்.

"அப்படியானால், நரகம் எங்கிருந்து வருகிறது" என்கிற கேள்வி கேட்கப்பட்டது. "அது இல்லாமல் ஒரு மனிதன் மனிதனாகாத மனிதனிட சுதந்திரத்திலிருந்து" என்றும், மனிதனானவன் அந்த சுதந்திரத்திலிருந்து, தன்னிலே தொடர்ச்சியை உடைத்தானென்றும் அவர்கள் சொன்னார்கள்; இது உடைக்கப்பட்டபடியினால், பிரிவினை சம்பவித்தது; சிருட்டி முதல் அவனிலிருந்த அந்த தொடர்ச்சியானது, கொக்கிகள், மேலே உடைக்கப்பட்டு அல்லது கிழிக்கப்பட்டபோது, கீழே விழுந்து, பின்னிட்டு மெல்லிய

நூல்களால் தொங்குகிற ஒரு சங்கிலி வளையத்தி செய்யப்பட்ட் ஒரு துண்டு அல்லது சங்கிலிபோல . விட்டது. பிரிவினை அல்லது பிளவு, கடவுளை மறுத்தலி உண்டாக்கப்பட்டது அல்லது உண்டாக்கப்படுகிறது.

## காரிய சித்தாந்தம்

## முற்றிற்று.

P. R. Rama Iyar & Co., Printers, Madras.